தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண்: 166

கமலை வைத்தியநாத தேசிகர் இயற்றிய

# திருநல்லூர்ப் புராணம்

( குறிப்புரையுடன் )

பதிப்பாசிரியர் :

பேராசிரியர், பாவலரேறு திரு. ச. பாலசுந்தரம்

துணை முதல்வர் கரந்தைப் புலவர் கல்லூரி தஞ்சாவூர்

தஞ்சை சரசுவதிமகால் நிருவாகக் குழுவினருக்காக

கௌரவ காரியதரிசி

வித்துவான் அ. வடிவேலன் அவர்களால்

வெளியிடப்பட்டது

கி. பி. 1979 ]

விலை ரூ. 16—00

ஜெமினி அச்சகம்,
கும்பகோணம்.
( போன் : 835 )

# வெளியிடுவோர் உரை

ஆன்மாக்கள் இம்மை வாழ்வையும் மறுமைப் பயனையும் இனிதாகவும் எளிதாகவும் பெறும்பொருட்டும், வேதாகமங்களின் சாரத்தைப் பருப்பொருட்டாக்கிச் சமய சமுதாய நெறிகளை உணர்ந்து ஒழுகவும் சான்றோர்களால் முறையாகப் படைத்தளிக்கப் பெற்றவையே பதினெண் புராணங்களாகும். இவற்றை முற்றக் கற்றுணர்தல் சில்வாழ்நாள் பல்பிணியுடைய மக்கள் யாவர்க்கும் அரிதாகும் என உணர்ந்த நல்லறிஞர்கள், யாவரும் பயின்று பயன்பெறத்தக்க வகையில் ஆக்கப்பெற்றவையே தலபுராணங்களாகும்.

தலபுராணங்கள் அவ்வத் தலங்களின் அருமைபெருமைகளைத் தெய்வீகத்தோடும் சமயக் கொள்கைகளோடும் இணைத்துச் சுவைபட உயர்வு நவிற்சியாக நல்லிசைப் புலவர்களால் பாடப் பெற்றவையாகும். தலபுராணங்கள் அவ்வத் தலத்தைப்பற்றி உரிமையோடு கூடிய ஒரு பற்றினை உண்டாக்கி அதன்வாயிலாக அங்கெழுந்தருளியுள்ள மூர்த்திகளின் மகிமைகளையும் தீர்த்தங்களின் மாண்புகளையும் அறியச்செய்கின்றன.

இம்முறையால் இந் நல்லூர்ப் புராணமும் இத்தலத்திலுள்ள திருக்கோயிலின் வரலாற்றினையும் அமைப்பினையும் சிறப்பினையும் மூர்த்திகளின் விசிட்டங்களையும் தீர்த்தங்களின் பெருமைகளையும் சுவையாகவும் செம்மையாகவும் விளக்குகிறது. இத் தலம் நமது தஞ்சை மாவட்டம் குடந்தை வட்டத்தைச் சார்ந்து காவிரியின் தென்பால் அமைந்து விளங்குகின்றது.

இப்புராணத்தைச் செந்தமிழ்ச் செய்யுட்களால் ஆக்கியருளிய பைந்தமிழ்ப் பாவலர் கமலை வைத்தியநாத தேசிகர் என்பவராவார், இவர் பதினேழாம் நூற்றாண்டிற் பல சிறப்புக்களோடு வாழ்ந்த சிறந்த கல்வியாளர், சைவச் சான்றோர். பழந்தமிழ் இலக்கண மரபுகளும் புராண அமைப்பு முறைகளும் நன்கு விளங்க இப் புராணத்தை இவர் அருளியுள்ளமையைக் காணலாம்.

பழஞ் சுவடிகளையும் அரும் பெரும் நூல்களையும் பேணிக்காத்து அரிய நூல்களைப் பதிப்பித்துவருதலை ஒரு பகுதியாகக்கொண்டு பல்வேறு கல்வி கலைப்பணிகளை ஆற்றிவரும் வரலாற்றுச் சிறப்பு மிக்க நமது சரசுவதிமகால் நூல் நிலையத்தில் இருந்த இந் நல்லூர்ப் புராணச் சுவடியைச் சமய உலகமும் தமிழுலகமும் கற்றுணர்ந்து பயன்பெறும் வகையில் அச்சிட்டு வெளியிடும் பொறுப் பினைக் கரந்தைப் புலவர் கல்லூரித் துணை முதல்வர் பாவலரேறு திரு. ச. பாலசுந்தரம் அவர்களிடம் ஒப்பித்தோம். அவர்கள் இப் பொறுப்பினை ஏற்றுச் சீரிய முறையில் சுவடியையும் கையெழுத்துப் படியையும் நன்கு ஆராய்ந்து செப்பனிட்டு மூலபாடங்களை அமைத்துப் பொருள் தொடர்பினைக் கற்போர் எளிதின் அறிதற் பொருட்டுச் சிறு தலைப்புக்களையும் அரும்பதங்களுக்குப் பொருளை யும் எழுதிச் சேர்த்து புராணத்தில் வரும் சருக்கங்களின் கருத்துக்களைச் சுருக்கமாக வரைந்து இப்புராணத்தைப் பயில் வோருக்குப் பெரிதும் துணைபுரியும் வண்ணம் நன்முறையிற் பதிப்பித்துள்ளமையைப் பாராட்டி நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இப்புராணம் செம்மையும் பொலிவும் திகழ வெளிவரத்தக்க முறையில் செயலாற்றிய மகால் நூலக அலுவலர்களுக்கும் கவினுற அச்சிட்டுத்தந்த குடந்தை ஜெமினி அச்சகத்தாருக்கும் எங்கள் அன்புசான்ற நன்றியுரியவாகும்.

இத்தகு பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துப் பேணிவரும் தமிழக அரசினை நன்றியோடு போற்றுகிறோம்.

இங்ஙனம்

**வித்துவான் அ. வடிவேலன்**

*கௌரவ காரியதரிசி*

*சரசுவதிமகால் நூல் நிலையம்*

*தஞ்சாவூர்*
*25-4-1979*

# சருக்கங்களின் அடைவு


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பாயிரச் சருக்கம் | 1 |
| 2. | நைமிசாரண்யச் சருக்கம் | 9 |
| 3. | கைலாயச் சருக்கம் | 56 |
| 4. | சுந்தராசலச் சருக்கம் | 72 |
| 5. | பிரமதேவர் அருச்சனைபுரிந்த சருக்கம் | 86 |
| 6. | பிரம தீர்த்தச் சருக்கம் | 99 |
| 7. | பஞ்சாக்கரச் சருக்கம் | 110 |
| 8. | அக்கினி தீர்த்தச் சருக்கம் | 130 |
| 9. | அகத்தியர்க்கு மணவாளக்கோலங் காட்டின சருக்கம் | 155 |
| 10. | சத்தசாகரம் வரவழைத்த சருக்கம் | 165 |
| 11. | சமுத்தரராசன் செப்பேசுரம் பணிந்துமீண்ட சருக்கம் | 184 |
| 12. | பிரமதேவர் வரம்பெற்ற சருக்கம் | 191 |
| 13. | ஐராவத சாப விமோசனச் சருக்கம் | 205 |
| 14. | சுமதி காந்தனையடைந்த சருக்கம் | 215 |
| 15. | சங்குகன்னச் சருக்கம் | 232 |
| 16. | கிராத மோட்ச சருக்கம் | 238 |
| 17. | தருமசேனச் சருக்கம் | 247 |
| 18. | தீர்க்க துண்டச் சருக்கம் | 260 |
| 19. | எக்கினுகுத்த சருக்கம் | 267 |
| 20. | கோபிதாரத்துவாசச் சருக்கம் | 272 |
| 21. | பிரமதேவர் நாரதர்க்கு தலவிசிட்டமுரைத்த சருக்கம் | 381 |
| 22. | மாயவனருச்சனைச் சருக்கம் | 289 |
| 23. | தேவர்கள் அருச்சனைச் சருக்கம் | 298 |
| 24. | பிரமதேவர் நாரதர்க்குத் தீர்த்த விசிட்டமுரைத்த சருக்கம் | 302 |
| 25. | கமுகு மோசனச் சருக்கம் | 314 |
| 26 | வீதிவிடங்கச் சருக்கம் | 319 |
| 27. | அமர்நீதிச் சருக்கம் | 327 |

சிவ சிவ

# முன்னுரை

நினைந்துருகும் அடியாரை நையவைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்கவைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வைவைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்துவானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத்துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்லவாறே.

[ திருநாவுக்கரசர் ]

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய பரம்பொருளை அவன் அருளாலே அவன்றாள் பணிந்து மெய்தானரும்பி விதிர்விதிர்த்துக் கைதான் நெகிழ விடாது உள்ளுருகிக் கண்டுணர்ந்த மெய்த்தவ ஞானியார், வினைவயத்தாற் பிறவி எடுத்து மாயையிற் சுழன்று மாழாந்து கிடக்கும் ஆன்மாக்கள் உய்திபெறத் தாங்கள் மெய்யறிவான் உணர்ந்து திருவாய்மலர்ந்தருளிய நூல்களுள் ஒருவகையே புராணங்களாகும்.

இறைவனருளிய வேதப்பொருளை ஒலிவடிவாம் மொழியுருவிற் செய்தளித்த மாமுனிவர்தம் மந்திர மொழிகளின் செம்பொருளைத் தெற்றென உணரவியலாதாரும் உணர்ந்து உய்திபெறப் பேரருளாளர்கள் அதனை ஆகமங்களாக விரித்து விளக்கினர். ஆகமங்களின் பொருளையும் பிழிவையும் அறிந்துணரும் ஆற்றல் வளரப்பெறுதார் அவற்றை உணர்தற்குக் கருவியாக நுண் பொருளைப் பருப்பொருட்டாக்கி உலகியல் வாழ்வின் அடிப் படையில் உருவகமாக்கிச் செய்யப்பெற்றவையே பதினெண் புராணங்களாகும்.

அங்கிங்கெனாதபடி எங்கும் ஒளியாய் நிலவும் ஆனந்தவடிவை இப்பூவுலகில் வாழும் மக்கள் உணர்ந்து வழிபடச் சான்றோர்கள்

அமைத்துத் தந்தவையே ஆலயங்கள். ஆலயங்களை அமைப்பதற்குத் தேர்ந்து கண்ட இடங்களே தெய்வத் தலங்கள் ஆகும். ஆலயத்தின் மையப்பொருளாகிய மூர்த்தியைச் சரியை முதலாய நெறிகளில் நின்று வழிபடுதற்கேற்ற சூழ்நிலைகளையும் இயற்கை வாய்ப்புக்களையும் கொண்ட தலங்களே சிறப்புடைய வாகும். ஆதலின் நீர்நிலைகளும் சோலைகளும் வளமலைகளும் இயல்பாக அமைந்த இடங்களில் தத்தம் கொள்கைகளுக்கேற்ற மூர்த்திகளைத் தோற்றுவித்து ஆலயங்களை அமைத்தனர். இதனால் ஒரு தலத்தின் சிறப்பு மூர்த்தியாலும் தீர்த்தத்தாலும் விளக்கமுறுதலின் மூர்த்தி தலந் தீர்த்தம் முறையாய் வணங்கினர்க்கோர் வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே என அருளாளர்கள் அறைந்து போந்தனர்.

இம்முறையினாற்றான் இப்பரத கண்டத்தில் தென்னகத்தில் தெய்வத் தலங்கள் மிக்கு விளங்குகின்றன. ஒரு கோணத்தில் "தென்னாடுடைய சிவனே" என்று பெரியோர்கள் மொழிவதும் இது கருதியே எனலாம். தென்னகத்தில் அரசியல் வரலாற்றுக் காலத்திற்கு முன்பே திருக்கோயில்கள் தோன்றி மக்களை நெறிப் படுத்தி வந்துள்ளன என்பதை மக்கள் வரலாற்றாய்வுகள் புலப்படுத்துகின்றன.

தென்னகம் பண்டு சேர சோழ பாண்டியர் என்னும் முப் பெரும் வழியினரால் ஆளப்பெற்று வந்ததென்பது யாவரும் அறிந்ததே. இவ்வேந்தர் தம் குடிப்பெயர்கள் நில அடிப்படையில் அமைந்தனவாகும். ஆக, தென்னகம் சேரநாடு சோழநாடு பாண்டி நாடு என மூன்று பிரிவாக விளங்கி வந்திருக்கிறது. சமய குரவர் காலத்தில் ஐந்து மண்டலங்களாக விளங்கியுள்ளது. காலப் போக்கில் முடியரசுகள் மாறி இப்பொழுது நீங்கிப் பல்வேறு பிரிவுகளாக விளங்கினும் பழம்பெயர்கள் மறைந்துவிடாமல் நிற்கின்றன.

இடைக்காலத்து வழங்கிய ஐந்து மண்டலங்களுள் சோழ மண்டலத்தில் ஏனை மண்டலங்களைக் காட்டிலும் திருத்தலங்கள் மிகுதியாகும். மேலும் சோழ வளநாட்டின் குருதி ஓட்டமாக விளங்கும் காவிரியின் இரு கரைகளிலுமே பெரும்பாலான தெய்வத் தலங்கள் அமைந்துள்ளன. பிற வேந்தர்களினும் சோழர்களே மிகுதியான கோயில்களை எடுத்துள்ளமை வரலாற்றால் தெரியலாம். "பாங்கினொடு பல தளிகள் இல்லாத ஊர்கள் அடவிகாடே" என அப்பரடிகள் கூறிய அடிப்படையில்

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டா" என்பது போன்ற நீதி மொழிகள் தோன்றலாயின. இற்றைக்கும் தென்னாட்டில், அதனுள்ளும் சோழ மண்டலத்தில் கோயிலில்லாத ஊர்களைக் காணமுடியாது. புதிதாகத் தோன்றுகின்ற ஊர்களுக்கும் இது ஒக்கும்.

இனித் தமிழகத்தின் தொன்மையான சைவ வைணவத் தலங்களுள் சைவத் தலங்களே சோழ நாட்டில் மிகுதியாகக் காணப்படுபவை. இவற்றுள் பெரும்பாலன சமயகுரவர்களால் பாடப்பெற்றவை. இம்முறையில் இத் திருநல்லூர் மூவர் முதலிகளாலும், அருணகிரியாராலும் பாராட்டி வழிபடப்பெற்ற தலமாக விளங்குகின்றது. மேலும் நாயன்மார் அறுபத்துமூவருள் ஒருவரான அமர்நீதி நாயனார் திருத்தொண்டு நிகழ்ந்தது இத் திருத்தலத்திலேயாம். அதனால் பன்னிரண்டாந் திருமுறையாகிய பெரிய புராணத்தில் இத்தலம் சேக்கிழாரால் சிறப்பிக்கப் படுகிறது.

அருளாளர்களால் போற்றப்பெற்ற இத்தகு தலங்களின் சிறப்பைப் பாமர மக்களும் தெரிந்துணர்ந்து வழிபடுதற்காக அவ்வத்தலங்களின் சிறப்புக்களைத் தொன்மையான வரலாறுகளை வைத்துச் சமயத் தத்துவங்களையும் நெறிகளையும் கோட்பாடுகளை யும் கதைப்போக்கில் விளக்கி அமைத்துப் பெரும்புலவர்கள் புராணங்களைச் செய்தருளினர். இப்புராணங்களெல்லாம் தொன்மையானவை. தெய்வ நலஞ்சான்ற முனிவர்களால் அருளப்பெற்றவை என்பதை வலியுறுத்துமுகத்தான் ஒவ்வொரு தலபுராணமும் சிவபெருமான் உமையம்மைக்கோ, முருகனுக்கோ நந்தியெம்பெருமானுக்கோ அருளிச்செய்ய நந்தி சனற்குமாரற்கும், அவர், அவர்தம் மாணாக்கருக்கும் கூற, இறுதியாகச் சூத முனிவர் இப்பூவுலக முனிவர்களுக்கு அறிவித்ததாகக் கூறுகின்றன. திருமால் பிரமன் முதலாய தேவர்களும் நாரதர் அகத்தியர் முதலான முனிவர்களும் சூரியன் சந்திரன் முதலான கோள்களும் பூசித்துப் பெருமையடைந்தனர் என்றும், பல்வேறுபட்ட மக்களும் விலங்குகளும் பறவைகளும் பூசித்துப் பேறுபெற்றனர் என்றும் கூறி அற்புத நிகழ்ச்சிகள் பலவற்றை அமைத்துப் பெரும்பாலும் எல்லாப் புராணங்களும் கூறும். கூறினும் ஒவ்வொரு புராணத்திலும் சில பல சிறப்புக் கூறுகள் விளங்குவதைப் பயிலுவோர் நன்கறிவர். இவ்வகையில் இந்தத் திருநல்லூர்ப் புராணம் பல சிறப்புக்களை உடையதாகத் திகழ்வதைக்காணலாம்.

**திருநல்லூர் :**

சுந்தர நகரம் எனப்பெறும் இந்தத் திருநல்லூர் சோழவள நாட்டின் இடைப்பகுதியில் பிற்காலச் சோழர்களுக்குத் தலைநகராக விளங்கிய தஞ்சை மாவட்டத்தின்கண் குடமூக்கு என்னும் கும்பகோணத்திற்குத் தென்மேற்கில் காவிரியின் தென்கரையில் மருதவளஞ் சிறந்து விளங்கும் ஒரு நன்னகராகும். சோழர் காலத் திருப்பணிச் சிறப்போடு விளங்கும் இவ்வூர் பண்டு ஒரு பெருநகராக விளங்கியிருக்க வேண்டுமென்று தெரிகிறது. இவ்வூரின் கண் உள்ள செற்பேசுரம் எனப்படும் சுந்தரநாதர் திருக்கோயில் சோழ மன்னர்களால் வழி வழி புரக்கப்பெற்று இந்நாள் திருக் கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனத்திற்கு உரிமை உடையதாய் அவ் ஆதீனத்தாரால் புரந்து வரப்படுகிறது.

பாடல் பெற்ற தலங்களுள் காவிரியின் தென்கரையில் உள்ள இஃது இருபதாவது தலமாகும். இது மாடக்கோயில் அமைப்பைச் சார்ந்து விளங்குகிறது. இக்கோயில் தொடர்பாக இருபத்து மூன்று கல்வெட்டுக்கள் படி எடுக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் இருபத்திரண்டு கல்வெட்டுக்கள் சோழர்கள் செய்தவை. முதலாம் இராசராசன் காலத்தில் நாராயணன் ஏகவீரன் என்பவன் ஒரு மண்டபம் கட்டியுள்ளான். அகோர வீரன் என்பவன் நிலக்கொடையளித்துள்ளான், அகம்படி விநாயகப் பிள்ளையாருக்கு வீட்டு நிலமும் அகம்படியார் கட்டின வீடுகளும் எட்டுத்தென்னை மரங்களும் கோயிலுக்குத் தரப் பட்டுள்ள செய்தி ஒரு கல்வெட்டிற் கூறப்படுகின்றது. அக்காலத்து இவ்வூர் பஞ்சவன்மாதேவிச் சதுர்வேதி மங்கலம் என வழங்கப்பட்டுள்ளது. எல்லாக் கல்வெட்டுக்களும் வெளி வரின் இன்னும் பல செய்திகள் புலனாகும். பண்டு இத்தலத்தில் வைகாசித் திங்களில் ஏழூர் திருவிழா நடைபெற்று வந்துள்ளது.

சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த இத்திருக்கோயிலில் பெரிய-தொரு நெற்களஞ்சியமும், சோழர்கள் அமைத்த இரகசியமான ஒரு சுரங்கமும் இருக்கின்றன. அமர்நீதி நாயனார், அவர் மனைவியார் இவர் தம் சிற்பப்படிவங்கள் உள்ளன. இக்கோயிலின் எதிரே மிகப் பெரிதாக சத்தசாகரம் என்னும் பிரம தீர்த்தம் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலின் ஏனைய சிறப்புக்களையும் பல்வேறு தீர்த்த நிலைகளையும் புராணத்திற் காணலாம். அமர்நீதி நாயனார் மடம் இன்றைக்கும் உள்ளது.

" நண்ணும் புனல்வேலி நல்லூர் "

" திண்ணமரும் பைம்பொழிலும் வயலுஞ் சூழ்ந்த
திருநல்லூர் "

" தேர்வு மருவு நெடுவீதிக் கொடிகளாடும் திருநல்லூர் "

" தேன்றேயும் பைம்பொழிலின் வண்டுபாடுந் திருநல்லூர் "

" நண்டிரிய நாரையிரை தேரவரை மேலருவிமுத்தந்
தெண்டிரை கண் மோதவிரி போதுகமழுந் திருநல்லூரே "

" சேடுலவு தாமரைகள் நீடுவயலார் திருநல்லூரே "

" முருகுவிரி பொழிலின் மணம் நாறமயிலால மரமேறித்
திருகுசின மந்திகனி சிந்துமதுவார் திருநல்லூரே "

" திரைகளிரு கரையும்வரு பொன்னி நிலவுந் திருநல்லூர் " என்று இவ்வூரின் இயற்கை வளத்தையும் நலத்தையும் திருஞான சம்பந்தர் உவந்துரைப்பதையும், ஆண்டு வாழும் அந்தணர் முதலிய சான்றோர்களைத்,

" தீதிலா அந்தணர்கள் தீமூன்றோம்பும் திருநல்லூர் "

" அடியார்கள் போற்றோவா நல்லார்கள் அந்தணர்கள்
நாளும் ஏத்துந் திருநல்லூர் "

" தேறு மனவாரமுடையார் குடி செய்யுந் திருநல்லூர் " என்று போற்றுவதையும் காணலாம்.

இவ்வாறே திருநாவுக்கரசரும்,

" திருவமர் தாமரை சீர்வளர் செங்கழு நீர் கொள் நெய்தல்
குருவமர் கோங்கம் குராமகிழ் சண்பகம் கொன்றைவன்னி
மருவமர் நீள்கொடி மாடமலி மறையோர்கள் நல்லூர் "

" மன்னிய மாமறையோர் மகிழ்ந் தேத்த மருவியெங்கும்
துன்னிய தொண்டர்கள் இன்னிசை பாடித்தொழுதநல்லூர்" எனப் போற்றியுரைப்பதையும் அவர் திருமுறைகளிற் காணலாம்.

இத்திருத்தலத்தில்தான் இறைவன் திருநாவுக்கரசுக்குத் திருவடி தீக்கையருளினன். இதனை அப்பரடிகளே " நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார் நல்லூர் எம்பெருமானர் நல்ல வாறே " எனக் கூறுவார். இத்தலத்தின் பெருமையைத் திருஞான சம்பந்தர் புராணத்திலும், திருநாவுக்கரசர் புராணத்திலும், ஏயர்கோன் கலிக்காம நாயனர் புராணத்திலும், அமர்நீதி நாயனர் புராணத்திலும் மிகச் சிறப்பாகச் சேக்கிழார் பெருமான் விளம்பியுள்ளார்.

இத்தலம் 1, 2, 3, 4, 6, 7, 11, 12 ஆகிய 8 திருமுறைகளில் பேசப்படும் சிறப்பைப் பெற்றிலங்குகிறது. திருஞான சம்பந்தர் அருளிய பதிகம் மூன்றும் திருநாவுக்கரசர் அருளிய திருத் தாண்டகப் பதிகம் ஒன்றும் தேவாரப் பதிகம் ஒன்றும் பயின்று பயன் கொள்ள வேண்டியவை. சுந்தரநாதர் திருக்கோயிலை, "மலைமல்குகோயில்", "மறைநவின்ற கோயில், "வானமருங் கோயில்" என ஞானசம்பந்தரும், வெள்ளிமால் வரையைநேர் விரிசுடர்க்கோயில் எனச் சேக்கிழாரும் கூறுவர். இத்தலத்தின் சிறப்பை இப்புராண ஆசிரியர்

வளப்பமார் நல்லூர் தானே
வான்கயி லாயம் அவ்வூர்க்
குளப்படி நீர்க ளெல்லாம்
குரைபுனற் கங்கை யாங்கண்
அளப்பறு மணல்க ளெல்லாம்
அற்புத லிங்க மென்றால்
துளக்கிலத் தலத்தின் மேன்மை
தொடுத்தியான் உரைக்கற்பாற்றே

எனச் சூதமுனிவர் கூற்றில் வைத்து விளம்புகின்றார்.

### புராண அமைப்பு:

இந்நல்லூர்ப் புராணம் பாயிரச் சருக்கம் முதலாக அமர்நீதிச் சருக்கம் ஈறாக இருபத்தேழு சருக்கங்களாக அமைந்து ஆயிரத்துப் பதினைன்கு பாடல்களைக்கொண்டு விளங்குகின்றது. இரண்டாவது சருக்கமாகிய நைமிசாரண்யச் சருக்கத்திலேயே நாட்டுச் சிறப்பு நகரச்சிறப்பு ஆற்றுச்சிறப்பு ஆயவற்றை அமைத்துப் பேசுகிறது. மூர்த்தி, தலம், தீர்த்தப் பெருமைகளும் வழிபடுவோர், பணி புரிவோர் எய்தும் பயன்களும் இச்சருக்கத்திலேயே சுருக்கமாகக் கூறப்பட்டுள. பாடல்கள் பல்வகை விருத்தங்களால் ஆற்றொழுக் காக அமைந்துள்ளன. இத்தலச் சிறப்பு நைமிசாரணியச் சருக்கத்திலும், பிரமதேவர் நாரதர்க்குத் தல விசிட்டமுரைத்த சருக்கத்திலும் சிறப்பாகவும் ஏனைய சருக்கங்களில் சிறுபான்மை யாகவும் கூறப்பட்டுள்ளது. மூர்த்திச் சிறப்பு கைலாயச் சருக்கத்திற் சிறப்பாகவும் ஏனையவற்றுள் ஏற்றபெற்றியும் கூறப் பட்டுள்ளது. தீர்த்தச் சிறப்பே இப்புராணத்துள் மிகுதியாக அமைந்துள்ளது. பிரமதேவர் நாரதர்க்குத் தீர்த்தமான்மிய

முரைத்த சருக்கத்தில் பெரும்பான்மையான தீர்த்தங்கள் தொகுத்துக் கூறப்பட்டுள. இவற்றைப் புராணத்துள்ளும் சருக்கங்களின் சுருக்க வரலாற்றினும் காண்க.

இந்த நல்லூர்ப் புராணம் சிவபுராணம் பத்தினுள் பவுடிகம் காருடம் பிரமாண்டம் என்னும் மூன்றனுள்ளும் கூறப்படும் சுந்தர நகர மான்மியத்தை மூலமாகக்கொண்டு தமிழ் மொழியில் விரிவாகச் செய்யப்பட்டுள்ளது. இதனை

" அறிதொறும்பெற லரும்பொருள் பயக்குநான் மறையிற்
செறிதரும் பொருள் விரித்துரை செய்வனவாகும்
முறைபயின்றன புராணம் மூவாறென்பர் அவைதாம்
குறிகொள் மேலவர் இலக்கம்நான் காமெனக்குறிப்பர்

பாதிமாமதிக் கண்ணியான் புராணம்பத் தவைதாம்
மூதுணர்ந்தவர் இலக்கம் மூன்றுமென மொழிவர்

..............................................................

பவுடிகோத்திரம் பரவுகாருடம் பிரமாண்டம்
இவையொர் மூன்றினும் ஓதுவதிசை கெழுநல்லூர்
நவையில் மான்மியம் அன்னது நலங்கொள் செவ்வேளுக்
குவகையாற் சிவன் முன்னம் ஓதியதென உரைப்பார்"

எனவரும் நைமிசாரணியச் சருக்கப் பாடற் பகுதிகளால் தெரியலாம். இதனைத் தமிழ் மொழியிற் செய்தவர் கமலை வைத்தியநாத தேசிகராவார். இப்புலவர் பெருமான் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவரைப்பற்றிய வரலாற்றை நூலாசிரியர் வரலாற்றில் காணலாம். இந்நூல் 1908ஆம் ஆண்டில் வெளிவந்ததாகவும் ஒரே ஒரு படி மட்டும் திருவாவடுதுறை ஆதீன சரசுவதி மகால் நூல்நிலையத்திலிருந்து கிடைத்ததாகவும் நூலின் அருமை நோக்கி அதனை உரைநடைப்படுத்தி வெளியிட்டதாகவும் திருவாளர் பொன். சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் ஒரு உரைநடை நூலை வெளியிட்டுள்ளார். இப்புத்தகம் திருவாவடுதுறை ஆதீனம் 21ஆவது குருமகா சந்நிதானத்தின் பரணி நாள் குருபூசை விழா மலராக வெளிவந்துள்ளது. இதுதவிர இப்புராணம் வேறு எங்கும் உள்ளதாகத் தெரியவில்லை.

பழஞ்சுவடிகளைப் போற்றிக் காத்து அச்சாகாதவற்றையும் அருகிக் கிடைக்காதவற்றையும் அச்சிட்டு வழங்குவதில் நம்

நாட்டில் தலைசிறந்து விளங்குவதும் வடமொழி தென்மொழிகளில் அமைந்துள்ள மருத்துவம் சோதிடம் இலக்கண இலக்கியம் ஆயபல துறை நூல்களைத் தன்னகத்தே கொண்டு உலகப் பேரறிஞர்களால் பாராட்டப் பெற்றிலங்குவதுமான தஞ்சை சரசுவதி மகால் நூல்நிலைய வாயிலாக இப்பொழுது அச்சாகி வெளிவந்துள்ளது.

மகாலில் உள்ள இச்சுவடி எழுதுவோரால் நேரும் பிழைகளால் குறைவின்றி இருப்பதோடு பாடல்களின் சீர், அடி அமைப்புகளும் ஆங்காங்கே பிறழ்ந்தும் உள்ள நிலையில் சிறிதும் மாறாமல் இதன் கையெழுத்துப்படியும் உள்ளது. யாப்பமைதியையும் ஓசை இலக்கணத்தையும் கருவியாகக் கொண்டு நன்கு ஆராய்ந்து மூல பாடத்தைச் செப்பம் செய்துகொண்டு படிப்போருக்குத் துணைபுரியும் வகையில் பொருள் தொடர்ச்சிக்கு ஏற்ப ஆங்காங்கே சிறு சிறு தலைப்பினையும் எழுதிச் சேர்த்து விளக்கத்தினை அடைப்புக்குறிக்குள் வைத்து அமைத்தேன்.

பாக்களின் வகைகளையும் குறித்து இன்றியமையாத திரிசொற்களுக்கும் வட சொற்களுக்கும் பொருள் எழுதி அடிக்குறிப்பில் சேர்த்துள்ளேன். புராணக் கருத்தைச் சுருக்கமாக அறிந்துகொள்ளுதற்கு வாய்ப்பாகச் சருக்கங்களின் பொருட் சுருக்கத்தை நூலின் முன்பு எழுதிச் சேர்த்துள்ளேன்.

இப்புராணத்தை நல்ல முறையில் அச்சேற்றி வெளியிடக் கருதிப் பெரும் புலமை சான்றவரும் தமிழ்த் தொண்டினையே வாழ்வாகக் கொண்டுள்ளவரும் மேற்கொண்ட பொறுப்பை நேர்மையோடும் சிறப்போடும் செயற்படுத்தி வருபவருமான இம்மகாலின் மதிப்பியற் செயலாளர் வித்துவான் திரு அ. வடிவேலனார் அவர்கள், முன்பு யான் அரிதின் முயன்று வெளியிட்ட திருப்பெருந்துறைப் புராணப் பதிப்பைக் கண்டு அவ்வாறே இதனையும் வெளியிட வேண்டும் என்ற கருத்தால் இப் பொறுப்பினை ஏற்குமாறு பணித்தார்கள். என் சிறுமையை யான் அறிவேனாயினும் இறைவன் திருவருளை எண்ணி இதனை ஏற்று ஒருவாறு இப்பணியை நிறைவு செய்துள்ளேன்.

இந்நூல் சிறந்த முறையில் வெளிவர அவ்வப்போது வேண்டிய கருத்துரைகளைக் கூறி ஊக்கமளித்த மதிப்பியற் செயலாளர் அவர்கட்கும், இம்மகால் தமிழ்ப்பண்டிதர், துணை நூலகர் ஆகியோருக்கும் சீரிய முறையில் செம்மையாக அச்சிட்டு உதவிய குடந்தை ஜெமினி அச்சகத்தார் அவர்கட்கும் என் அன்புசான்ற நன்றி என்றென்றும் உரியதாகும்.

என்னையும் இத்தகைய நற்பணிகளில் ஈடுபடுத்தி அருள் வழங்கும் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சிப் போற்றி வணங்குகின்றேன்.

அன்பன்

**ச. பாலசுந்தரம்**

# நல்லூர்ப் புராண ஆசிரியர் வரலாறு

பொன்னெடுஞ் சடிலத் தெம்பிரான் நல்லூர்ப்
புராணமாக் காதைசெந் தமிழாற்
கன்னலுந் தேனும் அமுதமும் மதுரக்
கனியும்போற் கட்டுரை செய்தான்
பன்னுமெய்ப் புகழான் தவவணை முதல்வன்
பாரெலாம் வணங்குதென் கமலை
மன்னவன் கல்விக் கடலெனச் செழித்த
வயித்திய நாததே சிகனே.

இந்நல்லூர்ப் புராணத்தின் இறுதியிற் காணப்பெறும் இப் பாடலால் இவர்தம் வரலாற்றுச் செய்திகள் ஓரளவு புலப்படு கின்றன. இவர் இயற்றிய பிற நூல்களான் மற்றைய செய்திகள் ஓரளவு புலப்படுகின்றன. இவற்றை இந்நூலாசிரியரின் மரபில் வந்த பெரும் புலவர் திரு. ச. சோமசுந்தர தேசிகர் அவர்கள் பதினேழாம் நூற்றாண்டுத் தமிழ்ப்புலவர்கள் வரலாறு என்னும் நூலில் விரிவாக வரைந்துள்ளார். அதன் சுருக்கத்தையும் இவர்தம் புலமைத் திறத்தையும் ஈண்டுக் குறிப்பிடுகின்றேன்.

திருவாரூரில் தொன்றுதொட்டு வந்த சைவாசாரியர் மரபில் தவவணைக்குடி (கோத்திரம்)யில் தோன்றிப் பதினேழாம் நூற் றாண்டில் விளங்கிய வன்மீகநாத தேசிகரின் முதல் மனைவியின் அருமைமகனாகத் தோன்றியவர் இவர். இவருக்குப் பெற்றோரிட்ட திருப்பெயர் வைத்தியநாதன். திருவாரூரின் மற்றொரு பெயராகிய கமலை என்பதனை அடையாக்கிக் குலப்பெயரை இறுதியிற் சேர்த்துக் கமலை வைத்தியநாத தேசிகர் எனச் சான்றோர் வழங்குவர்.

இவர் இளமையிலேயே தாயை இழந்தமையால் வன்மீகநாத தேசிகரின் மாணவருள் ஒருவராகிய அகோர முனிவரிடம் தங்கிக் கல்வி பயின்று வந்தார். வடமொழி தென்மொழிகளில் நல்ல புலமையும் சமய வழிபாட்டு ஒழுக்கமும் உடையவராய் விளங்கினர். அக்காலை காசி யாத்திரை செல்ல முற்பட்ட

அகோர முனிவருடன் இவரும் புறப்பட்டுச் சென்று திருவண்ணாமலையில் தங்கியிருந்தபோது வைத்தியநாத தேசிகர் கையிற் பாட நூலை வைத்துக்கொண்டு அமர்ந்தவர் இறைவனிடம் சிந்தையைச் செலுத்தியிருந்தார். தன்னை மறந்த யோக நிலையில் இவர் இருத்தலைப் பூசை முடித்துப் பின் வந்து கண்ட அகோர முனிவர் அவர் பக்குவ நிலையையுணர்ந்து இனி நான் உங்கள் சீடன் என்று அவரை வணங்கிக் குருவுக்குரிய சிறப்புக்களைச் செய்து இனித் தன்னுடன் காசி யாத்திரைக்கு வரவேண்டாம் என்று இல்லறத்தை மேற்கொள்ளுமாறு வேண்டிக்கொண்டு தன்னுடன் பயின்றவரும் செல்வருமாகிய திருநெல்வேலியில் இருந்த ஒருவருக்கு முடங்கல் கொடுத்து அனுப்பிவைத்தார்.

திருநெல்வேலி நோக்கிச் சென்ற வைத்தியநாத தேசிகர் கயத்தாற்றில் திருமலை நாயக்கரின் காரிய கர்த்தராக விளங்கிய திருவேங்கடநாதரின் வேண்டுகோளுக்கிணங்கி அவர் தம் மக்களுக்குக் கல்வி கற்பிக்கும் பொறுப்பை ஏற்று அங்குத் தங்கியிருந்தார். இக்காலையில்தான் இலக்கண விளக்கம் என்னும் நூல் உருப்பெற்றது.

பின்னர் மலையாள நாட்டிற் சென்று அம்மன்னவன் மேல் பல பிரபந்தங்களைப் பாடிப் பரிசில் பலவற்றைப் பெற்றார். அக்காலை அங்குள்ள அவையினரால்

" ஓதும் பிரபந்தங்கள் ஒருகோடி நிமிடத்து
    ரைக்கும் ப்ரசண்டவாக்கி
உத்தண்ட அமிர்தரச சித்ரவித் தாரகவி
    யுபயகவி ராசராசன்
போதும் பசுந்தமிழ் பலகையும் குடிபுகப்
    புலமகள் எனுங்குமாரி
புதுநலந் தனைநுகர்ந் தவனும்நீ யாகிலுன்
    புலமையை வழுத்தவசமோ
காதுங் கடுங்கொலைப் பாகடுங் கடதடக்
    களியானை யரசவெள்ளம்
களிகூவைப் பரணிமடல் அந்தாதி தூதுலாக்
    காதல்செய ஓதவல்லாய்
மோதுந் தனிக்கொற்ற வாயிலாய் மூதண்ட
    முழுதும் பரந்தகீர்த்தி
முருகுகமழ் தருகமலை வருவைத்ய நாதகுரு
    முத்தமிழ்க் கவிராசனே "

எனப் பாராட்டப்பெற்றார். பின்னர் திண்டிவனத்தையடுத்து விளங்கும் மயிலாசலத்தில் எழுந்தருளியிருந்த சிவஞான பாலையர் மீது பாசவதைப்பரணி என்னும் பிரபந்தமும் மயிலாசல முருகன் மீது ஒரு பிள்ளைத்தமிழும் இயற்றி பாலையரால் சிறப்பிக்கப் பெற்றுப் பரிசிலும் பெற்றார்,

திருவாரூரில் தங்கியிருந்தபோது திருவாரூர்ப் பன்மணிமாலை-கமலாலய அம்மன் பிள்ளைத்தமிழ் என்னும் நூல்களை இயற்றி அருளினார். பின்னர் கருவூர்ப்பாக்கத்தில் வாழும் ஒருவகை வணிக மரபினரின் வேண்டுகோட்கு இணங்கி திருவாட்போக்கிப் புராணத்தைப் பாடியருளினார். இவர்தம் கவிதைப் புலமையைத் திருநல்லூர்ப்புராண இறுதிச் செய்யுள்

தவிர்ப்பார்க் குறுதுணை வன்மீகநாதன் றனயனிந்தப்
புவிப்பாற் புலவன் வயித்தியநாதன் புகன்ற செஞ்சொற்
கவிப்பாகந் தேவர்க் கவிப்பாகம் போலின்பங்
காட்டுங்கற்றோர்
செவிப்பா லுள்ளேசென்று சித்தத்திலே நின்றுதித்திக்குமே

எனப் புகழ்ந்து கூறுகின்றது. இப்பாடலையும் "பொன்னெடுஞ் சடிலத் தெம்பிரான்" என்று தொடங்கும் பாடலையும் செய்தவர் சிவ ரகசியம் என்னும் நூலைப்பாடிய ஒப்பிலாமணி தேசிகர் என்பது தெரிகின்றது. இப்புலவர் இவர்தம் மாணாக்கர் என்பதும் புலப்படுகின்றது.

"அவமொழித் தென்னுளத் தமுத மூறுதீஞ்
சுவையெனத் தமிழ்வளம் சுரந்து நல்குமே
தவமெனக் கமலையில் இருந்த தேசிகன்
தவவணை வயித்திய நாதன் றாள்களே."

என்னும் பாடலாற் குடந்தைப் புராணம் பாடிய அரசூர் சொக்கப்ப நாவலரும் இவர்தம் மாணாக்கர் எனத் தெரிகிறது.

இவர் நூலாசிரியராகவும் போதகாசிரியராகவும் மிகச்சிறந்து விளங்கினார். எழுத்து முதலாய ஐவகை இலக்கணங்களையும் தொல்காப்பிய இலக்கண முறைக்கேற்ப இவர் தொகுத்துப் பாடஞ்சொன்ன இலக்கண விளக்கம் இவர் பாடஞ்சொல்லும் ஆற்றல் மிக்கவர் என்பதைக் காட்டும். மேலும் இவர் போதிக்கும் திறனை,

" கூடுஞ் சபையிற் கவிவா ரணங்களைக் கோளரிபோற்
சாடுஞ் சதாசிவ சற்குருவே முன்னின் தந்தைதம்மாற்
பாடும் புலவர்க ளானேமின் றிச்செம்மர் பட்டியெங்கும்
காடும் செடியு மென்றோ தமிழ்க் காரிகை கற்பதுவே"

வைத்தியநாத தேசிகரின் புதல்வருள் ஒருவராகிய சதாசிவ தேசிகரைப் பாராட்டிப் படிக்காசுப்புலவர் பாடிய இச்செய்யுளால் உணரலாம். இப்பாடலால் படிக்காசுப் புலவரும் இவர்தம் மாணவர் என்பது தெரிகின்றது. இடைவிடாது பாடஞ் சொல்லுவதால் வாயின் இரு தாள் பகுதிகள் வலியெடுக்கும்போது தவிட்டை வறுத்து ஒத்தடம் கொடுக்கச் சொல்லுவாராம். அப்போதும் தமிழ் நயத்தோடு தன் மனைவியிடம்,

" தகதகதங்கம் தாளை வலிக்குது
தவிடு வறுத்துத் தா"

என ஒரு பாவாற் கூறுவராம். சைவமும் தமிழும் இரு கண்ணெனப் போற்றி வாழ்ந்த இப்புலவர் பெருந்தகை தான் வரைந்த இலக்கண விளக்க நூலுக்கு தாமே எளிய விளக்க உரையும் எழுதியளித்த சிறப்பை

" என்கண் காணத் திருவா ரூரிற்
சிறப்புற் றிலகும் வைத்திய நாதன்
இலக்கணவிளக்கம் வகுத்துரை யெழுதினன்"

என இலக்கணக் கொத்துரை எழுதிய சுவாமிநாத தேசிகர் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

இவருடைய ஒப்பற்ற புலமையை தெரிந்துணர்ந்த அந்தகக் கவி வீரராகவ முதலியார்

" ஐம்பதின்மர் சங்கத்தா ராகிவிடா ரோநாற்பத்
தொன்மதின்ம ரென்றே உரைப்பரோ — இம்பர்புகழ்
வன்மீக நாதனருள் வைத்தியநா தன்புடவி
தன்மீதங் நாட்சரித்தக் கால்"

எனப் பாராட்டியதாக ஒரு கவிதை காணப்படுகிறது. அந்தகக்கவி வீரராகவ முதலியார் காலம் இவருக்கு முற்பட்டதாகலின் இப் பாடல் அவர் மாணவருள் ஒருவர் பாடியதாக இருக்கலாம்.

வைத்தியநாத தேசிகரின் இல்லத்தரசியின் பெயர் தங்கம்மாள் என்பது தகதகதங்கம் எனும் பாவால் புலனாகின்றது. இவர்கட்குச் சதாசிவம், தியாகராசன், சிதம்பரநாதன், வடுகநாதன், வன்மீகநாதன் என ஐவர் மக்கள் இருந்தனர் எனக் கூறுவர்.

திருவேங்கடநாத ஐயரால் இவர் போற்றப்பெற்றிருப்பதனால் இவர் காலம் பதினேழாம் நூற்றாண்டு எனத் தெரிகிறது. சீரிய ஒழுக்கமும் நிறைந்த கல்வியும் ஆழ்ந்த புலமையும் உடையவர் என்பதை இவர்தம் நூல்களான் நன்குணரலாம். வடமொழிப் பயிற்சியையும், தேவார திருவாசக முதலிய திருமுறைகளிலும் சைவசித்தாந்த சாத்திரங்களிலும் இவருக்குள்ள புலமையைத் திருநல்லூர்ப் புராணத்தில் பரக்கக் காணலாம்.

# சருக்கங்களின் பொருட் சுருக்கம்

## 1. பாயிரச் சருக்கம் :

தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும் அவையடக்கமும் உடையதாக விளங்கும் இம்முதற் சருக்கத்தில் முதலாவதாகக் காசி விநாயகருக்கு வணக்கங் கூறி இத்தலத்துக்குரிய மூர்த்தியாகிய சவுந்தர நாயகருக்கு அடுத்துப் பின் சொக்கநாயகி அம்மைக்கும் வணக்கங் கூறுகிறார் இந்நூலாசிரியர். பின்னா விநாயகர் முதலாக முருகன், நந்தியங் கடவுள் ஆகியோருககும் சமயகுரவர் நால்வர்க்கும் வணக்கங்கூறிப் பின் இத்தலத்திற சிறப்புப்பெற்ற அமர்நீதி நாயனுர்க்கும் அறுபத்து மூவர்க்கும் கூறியுள்ளார். பிற புராண ஆசிரியர்கள் பெரும்பாலும் நூலிறுதியிற் கூறும் அறுமுறை வாழ்த்தினை இவர் பாயிரத்துள் கூறியுள்ளார். பின்னர்ப் புராண வரலாறும் செய்த காரணமும் அவையடக்கமும் கூறுகின்றார்.

## 2. நைமிசாரண்யச் சருக்கம் :

நூற்றைம்பத்து நான்கு பாடல்களைக் கொண்ட இச்சருக்கத் துள்ளேயே ஆற்றுச் சிறப்பு, நாட்டுச் சிறப்பு, நகரச்சிறப்பு ஆயவற்றை அமைத்துக் கூறுகின்றார் ஆசிரியர்.

முதற்கண் மாதவம்புரி முனிவர் தம் பண்பு நலங்களையும் அவர் தம் புறத்தோற்றத்தையும் தூய்மையையும் உருவக அணி சிறப்ப விளக்கிக் காமவெகுளி மயக்கங்களை வென்று ஐயபுலன் களையும் அடக்கித் திருநீறும் அக்கமணியும் அணிந்து பஞ்சாக்கர சிந்தையராய்த் தவயோக நிலையில் அவர்கள் இருக்கும் காட்சியும எய்தும் ஆனந்தமும்பற்றிக் கூறி, இவர்கள் பிரமதேவனிடம் சென்று தாங்கள் தவம், நோன்பு முதலிய புரியச் சிறந்தவோரிடம் பெறவேண்டி நின்றதையும், பிரமன் குசைப்புல்லைச் சக்கரமாக உருட்டி அதுநிற்குமிடமே உங்களுக்கு மேலான இடமென்று கூறிவிடுக்க, முனிவர்கள் பின்தொடர்ந்து வந்து அது நின்ற

இடத்தைத் தவம் புரியிடமாகக் கொண்டனர் என்று கூறுகின்றார். நேமி சம்பந்தமாக ஏற்பட்டமையின் இத்தலம் நைமிசாரண்யம் எனப் பெயர் பெற்றது.

கூறுதற்கரிய பெருமையுடைய இந் நைமிசாரண்யம் சிவபெருமானையும், திருமாலையும், பிரமதேவனையும் ஒத்தது என ஆசிரியர் சிலேடையணியில் வைத்துக் கூறுவது சிறப்பாக உளது. இதன்கண் உள்ள பல்வேறு வளங்களையும் ஆரண்யத்தில் உள்ள விலங்குகளையும், மான், மயில் முதலியவற்றையும், குழிகளில் விளங்கும் நவமணிப் பெருக்கங்களையும் மரஞ்செடி கொடிகளின் செழிப்புக்களையும் நயம்படப் புனைந்து கூறுகிறார் ஆசிரியர். முனிவர்கள் வேள்விகள் செய்தும் தவம் புரிந்தும் ஒழுகுகின்றனர்.

அக்காலை சூதமாமுனிவர் அங்கு வருகிறார். முனிவர்கள் அவரைச் சிறப்பாக வரவேற்று வழிபாடு செய்து அளவளாவிப் புராணங்களைப்பற்றி விளக்க வேண்டுகின்றனர். முன்னர்த் திருவலஞ்சுழிப் புராணம் கேட்டோமாகலின் அவ்வாறே இப்பொழுது திருநல்லூர்ப் புராணத்தைத் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்கின்றனர்.

சுந்தர நகராகிய நல்லூர்ப் புராணத்தைக் கூறுமுன் அந்நகரின் சிறப்பையும் காவிரியின் பெருமையையும் சோழ நாட்டின் மாண்பையும் கூறுவேன் எனச் சூதமுனிவர் சவுனகாதி முனிவர்களை நோக்கி விளம்புகின்றார்.

காவிரிநதி சையமால் வரையிற்றோன்றிக் கோள் நிலைமாறினும் பொய்யாது வழங்கும் எனவும் மலைபடுபொருள்கள் பலவற்றையும் தன் திரைக் கரங்களால் வாரி வந்து இருகரையும் குவித்து வளஞ் செய்யும் எனவும் குஞ்சராரணியம், திருசிராப்பள்ளி முதலிய தலங்களை அணைந்து தெய்வத் தன்மையோடு ஒழுகுவதெனவும் கூறி, இந்நதி செந்தமிழோடும், கற்புடைப் பெண்டிரோடும் ஒக்குமெனச் சிலேடை வகையால் விளக்கிக் கங்கை முதலாய தெய்வ நதிகளெல்லாம் தம் மாசு நீங்க வந்து காவிரியிற் படிந்து தூய்மையுறுமென்றும் விளம்புகிறார்.

பின்னர் நாட்டுவளங் கூறத் தொடங்கிச் சோணாடு தெய்வத் தலங்களால் மாட்சிமையுடையதென்றும், நில மடந்தையின் மங்கல நாண் போன்றது என்றும், பயனற்ற காடுகள் இல்லாமல்

வளங்கொழிக்கும் மரஞ்செடி கொடிகளாலும், வயல் வளத்தாலும் நிறைந்ததென்றும் காமதேனுவை ஒத்துப் பல்வளத்தையும் நல்குவதென்றும், எண்ணான்கு அறங்களும் திகழ்தலான் பார்வதியையும், வளத்தால் இலக்குமியையும், உணர்வால் அருமறையையும் ஒக்கும் என்றும் நால்வகை வருணத்தாரும் தத்தமக்கு வகுத்த அறநெறி ஒழுகலான் காவினும் கலத்தினும் மல்கும் பொருள்களால் நிறைந்ததென்றும் வள்ளுவர் கூறும் நாட்டின் இலக்கணங்கள் யாவும் பொருந்தியதென்றும் கூறு-கின்றார். சோலைகளின் வளம் புனைந்துரைக்கப்படுகின்றது. உழவரோதையும், விழவரோதையும், மழவரோதையுமாய் நிறைந்து விளங்குவது என நயமிக விளக்கப்படுகிறது. வயல்கள் வருணனையும் உழவர்கள் செயல்கள் முதலிய வருணனையும் சிறப்பாக உள்ளன.

பின்னர் நகர்வளங்கூறத் தொடங்கிப் பூசுரர்களாற் பொலிவுறும் இந்த நல்லூர் சோழ நாட்டிற்கு மணிமுடியாகத் திகழ்கிறது. புத்தியும் பத்தியும் முத்தியும் அளிப்பது எனச் சிறப்பித்து, இங்குள்ள நீர்த்தடங்கள் பூமிதேவி சுந்தரநாயகற்கு ஏந்தும் சித்திரப்படமென விளங்குகின்றதென்றும் எழுநிலை மாடங்கள் சூரிய மண்டலத்திற்கும் மேலும் உயர்ந்தன என்றும், கோபுரமும் மதிலும் பாற்கடலைக் கடைந்த மேருவையும் வாசுகியையும் ஒக்கும் என்றும் தெருக்கள் நதிகளை ஒக்கும் என்றும் கூறிப் பின் இந்நகரத்தை யானையோடும் கடலோடும் ஓமகுண்டங்களோடும் மேருமலையோடும் ஒப்பிட்டு வருணிக்கின்றார். மாடங்களின் சிறப்புக்களை நயமாகப் புனைந்திருக்கின்றார் ஆசிரியர். இவ்வருணனைகளால் இல்லறத்தாரின் சிறப்பும் வாழ்வும் குறிப்பாகப் புலப்படுத்தப்படுகின்றன.

மக்களின் அறஞ்சார்ந்த சீரிய வாழ்வும் அவர்களின் கலை நலமும் கல்விச் சிறப்பும் பண்பாடுகளும் தெய்வ வழிபாடும் விளக்கப்படுகின்றன. நல்லூர் இறைவனை வணங்குவார் எய்தும் பயனும் இக்கோயில் திருப்பணிபுரிவார் எய்தும் நலனும் – திருக்குளங்களைச் செப்பனிடுவோர், பூசனைவிழா முதலியவை புரிவோர் ஆடை அணிகள் தானம் புரிவோர் பூசனைக்குரிய பொருள் வழங்குவோர் எய்தும் பயனும் விளக்கமாகக் கூறப்படுகின்றன.

விழா நாட்களில் வழிபடுவோர் எய்தும் பேறும் அறச்சாலைகள் வைத்துத் தொண்டு புரிவோர் எய்தும் மேன்மையும்

பிறவும் விரிவாகக் கூறப்பெறுகின்றன. நல்லூரே கயிலாயம் தீர்த்தங்களை யாவும் கங்கை, மணல்கள் சிவலிங்கம் என விளக்கி நல்லூரின் வரலாறு கூறத் தொடங்குகின்றார் சூதமுனிவர். இதன்கண் பதினெண் புராணங்களின் சுலோக அளவையும் நல்லூர் மான்மியங் கூறும் நூல்களின் பெயர்களும் கூறப் படுகின்றன.

## 3. கைலாயச் சருக்கம் :

அறுபது பாக்களையுடையது இச்சருக்கம். கைலாயம் விண்கடலிற் பூத்த தாமரை மலர் போன்றது. இதன் சிகரம் இறைவனது முடிபோன்றது. அருவிகள் தும்பை மாலைகள் போன்றன எனத் தொடங்கி சிலேடை வகையில் சிவபெருமானை ஒத்தது என விளக்கப்படுகிறது. கைலாயம் எப்பொழுதும் ஒளியுடையதாகத் திகழ்கின்றதென்றும் சாரல்களால் சிறப்புடைய தென்றும் தேவர்கள் ஆடிப்பாடிக் களிப்பர் என்றும் ஆனந்தக் கண்ணீரும் அருவியும் மழையென வழியும் என்றும் கூறி இறைவன் செவ்வேளோடும் உமையோடும் வீற்றிருக்கும் காட்சியையும், இறைவனிடம் செவ்வேள் வினவுவதும் நல்லூரின் சிறப்பை இறைவன் கூறுவதும் பேசப்படுகின்றது.

இத்தல மான்மியத்தை இன்னின்னவரிடம் கூறலாகாது என விளக்கும் பகுதியில் அறத்தின் வழுவியோர், ஒழுக்கமில்லாதவர் சமயக் காழ்ப்புடையோர் ஆயவர்களை வரிசைப்படுத்திக் குறிப்பால் இகழ்ந்து கூறி இன்னின்னவர்க்குக் கூறத்தகுமென விளக்கும் பகுதியில் அறநெறிச் சான்றோர்களை அடையாளங் காட்டிப் பேசுகின்றார் ஆசிரியர்.

பின் இத்தலத்தின் அமைப்பையும் இது திருமகளை ஒத்தது எனவும் இதன் மான்மியத்தை முருகன் சனற்குமாரருக்கும் அவர் வியாசருக்கும் அவர் தனக்கும் அருளிய வரலாற்றைச் சூதர் கூறி நல்லூர்ப் புராணத்தை இவ்வகையால் பகுத்துக் கூறுவேன் என நிரல்படுத்துகின்றார். இதன்கண் அமைந்த சருக்கங்களை வரிசைப்படுத்துகின்றார்.

## 4. சுந்தராசலச் சருக்கம் :

இது நாற்பது பாடல்களையுடையது. முதற்கண் சுந்தராசலம் இப்புவிக்கண் வந்த வரலாற்றைக்கூறத் தொடங்குகின்றார்.

மேருமலையில் தேவர்கள் கூடியிருந்த ஒருகாலை நாரதர் ஆதிசேடனுடைய ஆற்றலைப் புகழ்ந்து கூறுதலைக் கேட்ட வாயு தேவன் பொறாது தன் ஆற்றலை எடுத்துச்சொல்ல, சேடன் தன் பெருமையைக் கூற இருவர்க்கும் பூசல் நேர்ந்தது. தேவர்கள் வாயுவை நோக்கி நீ இம்மலைச் சிகரத்தைப் பெயர்த்தெடுத்திடுக என்று கூற, அவன் அதனைப் பெயர்க்க முற்படும்போது சேடன் பேருருக்கொண்டு பொன் மலையைச் சுற்றிப் போர்த்துக்கொண்டு வாயுவின் செயலைத் தடுத்தான். சேடனின் செயலும் தோற்றமும் பற்றிய கற்பனை சிறப்பாக உளது. தேவர்கள் அஞ்சினர். வாயு மேலும் முயல சேடன் வாயுவை விழுங்கிக்கொண்டே கலக்கமின்றி இருந்தான். வாயுவின் வேகத்தால் உலகம் கறங்கெனச் சுழல்கிறது. தேவர்கள் அனந்தனை வேண்ட, அவன் பிடியைச் சிறிது தளர்த்த அவ்விடையில் வாயு சிகரத்தைப் பெயர்த்து விட்டான். தேவர்கள் வேண்டுகோளால் இருவரும் சீற்றந் தணிந்தனர்.

வாயுவால் பெயர்த்தெடுக்கப்பட்ட மேரு மலையின் சிகரம் காவிரியின் தென்பால் வந்து தங்கியது. அதன்கண் அமைந்திருந்த சிவலிங்கத்தை முனிவர்களும் காமதேனுவும் பூசித்து வந்தனர். இந்த லிங்கம் ஒளி மயமாய் விளங்குகின்றது. இங்கே இறைவனோடு மலைமகளும் உடன் உறைவாளாயினள். கூவிளம் தலவிருட்சமாக உள்ளது. தேவர்களும் முனிவர்களும் சித்தர்களும் வழிபட இறைவன் அருள்புரிந்து இங்கே உறைகின்றான். இத் தலத்தின் வடமொழிப்பெயர் சுந்தரமாபுரம். தமிழ்ச் சான்றோர் நல்லூர் என வழங்கி வழிபடுகின்றனர் எனச் சூத முனிவர் விளம்பினர்.

## 5. பிரமதேவர் அருச்சனை புரிந்த சருக்கம் :

நாற்பத்தொரு பாடல்களையுடைய இச்சருக்கத்தில் படைப்புத் தொழிலாற்றும் பிரமதேவன் தான் படைக்கின்ற உயிர்கள் அவையவை செய்த புண்ணிய பாவங்களுக்கு ஏற்ப இன்பதுன்பச் சூழலிற் சிக்கி வருந்துவதனையும் எழுவகை தோற்றமுற்று நாற்கதியிலும் பிறந்துழலுவதனையும் நோய் வறுமை முதலிய-வற்றால் இறந்தும் பின்பு பிறந்தும் எண்ணிலா இடுக்கண் எய்துவதனையும் எண்ணித் தன் தொழில் மீது வெறுப்புற்று இறைவனை நாடிப் போற்றி அவன் அருள்பெற்று அமைதியுற எண்ணுகிறான்.

இறைவன் எழுந்தருளும் தலங்களுள் சிறப்புடையதனை நாடிப் பல பகுதிகளையும் கண்டு இறுதியில் நல்லூரை அடைகின்றான். முறைப்படி இறைவனை அருச்சித்து வழிபாடு செய்கின்றான். இறைவன் உவந்து தன் தேவியோடும் பிரமனுக்குக் காட்சி தருகிறான். நவமணி லிங்கத்தின்கண் இறைவன் தேவியோடும் யானைமுகனும் ஆறுமுகனும் இருபால் விளங்கத் தோன்றியருளும் காட்சி சிறப்பாக வருணிக்கப்படுகிறது.

அக்காட்சியை உரகர் முதல் தேவர்கள் யாவரும் கண்டு போற்றி நிற்கின்றார்கள். தேவ வாச்சியங்கள் முழங்க நாரதர் வீணை இசை எழுப்ப வெள்ளி மலையின்மேல் ஒரு பொன்மலை தோன்றியதுபோல விளங்கும் இறைவனைக் கண்டு பிரமன் ஒப்பறும் மகிழ்ச்சியுறுகிறான். ஆனந்தக் கண்ணீர் பெருக இறைவன் புகழைப் போற்றித் துதிக்கிறான். போற்றிப்பாடல்கள் சைவசமயத் தத்துவங்களால் அழகுறப் புனையப்பட்டுள்ளன இறைவன் பிரமனை நோக்கி நீ வேண்டும் வரங்களைக்கேள் எனப் பணிக்கப் பிரமன் இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்னர் இற்றைக்கு எழுந்தருளியிருக்கும் இக்கோலத்தோடு இந்த லிங்கத்தின்கண் இருந்து என்றும் காட்சிதந்தருள வேண்டும் என்றும், அருச்சனை புரிவோர்தம் பாவங்களைத் துடைத்து இன்பத்தை அருள வேண்டுமென்றும் வழிபடுவர்க்குச் சிவகதியை நல்கவேண்டுமென்றும், யானமைத்த பிரமதீர்த்தத்தில் மூழ்கி வழி படுவோருக்கு இம்மையின்பமும் மறுமைப்பேறும் வழங்கவேண்டு மென்றும் இத்தீர்த்தத்தில் மூழ்கி ஐந்தெழுத்தோதுபவர்க்கு எல்லா இன்பமும் சேரும் தலமாக இது விளங்க வேண்டுமென்றும் இத்தலத்துறைவோர் எண்ணியவை எண்ணியாங்குப் பெற்று இன்புற வேண்டும் என்றும் உன் இணையடி போற்றி இராசத குணத்தின் சாந்தியை யான் எப்பொழுதும் பெற வேண்டும் என்றும் கேட்கிறான். இறைவன் அவ்வாறே அருள்செய்கிறான். இதனால் தன்னால் படைக்கப்பெறும் உயிர்கள், ஊழ்வினையான் எய்தும் துன்பங்களை இத்தலத்தில் வந்து வழிபடின் நீங்கிப் பேறு பெறவேண்டும் என்றும் பிரமன் வரம்பெற்றமை புலப்படுத்தப் பெறுகின்றது.

## 6. பிரமதீர்த்தச் சருக்கம்:

இருபத்தாறு பாடல்களையுடைய இச்சருக்கத்தில் பிரம தீர்த்தத்தின் அமைப்பும் இந்த இந்தக் காலத்தில் இதில் மூழ்கி வழிபடுவோர் எய்தும் பயனும் கூறப்பட்டுள. நல்லூரிறைவன்

சந்நிதிக்குமுன்பு பிரமன் நாற்சதுரமாக ஓர் இடம் அமைத்து ஆகாய கங்கையைக் கொணர்ந்து நிரப்பினன். இந்தத் தீர்த்தத் தடத்தின் இந்திர திசையில் இருக்கு வேதத்தையும், யமதிசையில் யசுர் வேதத்தையும் சன்னிதிக்கு நேரே சாம வேதத்தையும் வட திசையில் அதர்வண வேதத்தையும் துறைகளாக அமைத்து அகழ்ந்து நாற்றிசையிலும் பொன்மயமான படிகளை அமைத்து அதன் நடுவில் வேதங்களையும் பதினெண் புராணங்களையும் சத்த கோடி மகாமந்திரங்களையும் நிலைபெறச் செய்தான். இதனால் இது பிரம தீர்த்தம் எனப் பெயர்பெற்றது.

இத்தீர்த்தத்தில் ஆடுவோர் எல்லாவகையான மாசுகளும் நீங்கி இன்புறுவர் என்றும் அந்தணர்க்குத் தவறு செய்தோர் ஆசிரியனுக்குத் துன்பஞ்செய்தோர், கருச் சிதைத்தோர், பிறர்மனை விழைந்தோர் முதலாகக் கொடிய பாவங்களைச் செய்தோரும் இதனுள் மூழ்கி வழிபடுவாராயின் அத்தீவினைகள் நீங்கி நலமுறுவர் என்றும் இதன்கண் அமைந்துள்ள நான்கு வேதத் துறைகளிலும் இன்னின்ன மாதங்களில் இன்னின்ன விண்மீன் களில் நீராடுவோர் இன்னின்ன பாவங்கள் நீங்கி இன்னின்ன பயனைப் பெறுவார் என்றும், இந்நதியில் தருப்பணம்புரிவோர், சிரார்த்தம் செய்வோர் எய்தும் பலன் இவை என்றும், நால்வருணத்தார்க்கும் ஒப்ப இப்பலன்கள் எய்தும் என்றும், இத்தீர்த்தத்தில் ஆடியோரைக் காணினும் தீண்டினும் நற்பேறு கிட்டும் என்றும் இதன்கண் அமர்ந்து தானமுதலிய புரியின் அவை பன்மடங்காகப் பெருகிப் பலன் விளைவிக்கும் என்றும் சூத முனிவர் விளக்குகிறார்.

மேலும் கிரேதாயுகத்தில் பிரமபுட்கரணி என்றும் திரேதா யுகத்தில் வேதபுட்கரணி என்றும், துவாபரயுகத்தில் புண்ணிய புட்கரணி என்றும் கலியுகத்தில் சத்தசாகரம் என்றும் இத்தீர்த்தம் வழங்கப் பெறுமென்றும் கூறி இத்தலத்தின் தீர்த்தத்திற்கும் மூர்த்திக்கும் இவ்வுலகில் இணையே இல்லை என்றும் கூறுகின்றார்.

## 7. பஞ்சாக்கரச் சருக்கம்:

இச்சருக்கம் எழுபத்தேழு பாடல்களைக் கொண்டுள்ளது. இந்திரன் முதலாய தேவர்களும் எண்திசைத் தேவர்களும் வித்தியாதரர் முதலானோரும் காசிபன் அகத்தியன் முதலாய முனிவர்களும் சத்தியலோகத்தையடைந்து பிரமனை வணங்கி

முடிவில்லாத இன்பத்தையும் மாறாத முத்தியையும் அளிக்கவல்ல உறுதிப்பொருள் யாதென அறிந்து உய்ய வந்துள்ளோம். அதனை அருள வேண்டுமென்றனர்.

வேதங்களை வகுத்துணர்ந்து எல்லா உலகங்களையும் படைத்து வரும் பிரமதேவன் பரமனது திருஐந்தெழுத்தையும் மதித்தெண்ணிப் பஞ்சாக்கரமே உறுதி யாவையும் நல்கவல்லதெனக் கூறினன். தேவர் முதலானோர் அதனை அறியும் திறத்தினை அருளவேண்டினர். இதன் பெருமையைச் சிவபெருமானையன்றி உணர்த்தவல்லார் வேறு யாவரும் இலர் என்று கூறி அவர்களையும் அழைத்துக் கொண்டு சிவபெருமானிடம் செல்கின்றான்.

அப்பொழுது வாயுதேவன் பசும்பொன் சிகரத்தோடு விளங்கும் நல்லூரின் சிறப்பை எடுத்து விளக்கி இறைவனை அங்குக் காணவேண்டுமெனக் கூற எல்லோரும் நல்லூர் வந்து இறைவனை அருச்சனை புரிந்து வழிபடுகின்றனர். தேவர்கள் தங்கள் பெயரால் இலிங்கங்களைத் தாபித்துப் பன்னாள் பூசிக்க இறைவன் அருள்புரிய எண்ணுகின்றான்.

முருகன் விநாயகன் உமாதேவி மூவரோடும் இறைவன் காட்சி தர, தேவர்கள் போற்றி மகிழ்ந்து பஞ்சாக்கர நுட்பத்தை ஓத வேண்டினர். மேலும் தங்களால் அமைத்து வழிபடப்பெற்ற லிங்க மூர்த்திகளை வழிபடுவோருக்கும் இங்குள்ள தீர்த்தத்தில் ஆடுவோருக்கும் முத்தியளிக்க வேண்டுமெனவும் வரங்கேட்டனர்.

இறைவனும் அவ்வாறேயருளிப் பஞ்சாக்கர மந்திரம் சத்த கோடி மகாமந்திரங்களினும் உயர்ந்தது பெரியது என்றும் எல்லா நலங்களையும் தந்து பிறவிப்பிணியைத் தீர்ப்பது என்றும், எண் வகைச் சித்திகளையும் வீடுபேற்றையும் அளிப்பது என்றும், தான் பஞ்சாக்கர ரூபமாகவே விளங்குகின்றேன் என்றும், ஆறாதாரத் தத்துவங்கள் இதன் விளக்கமே என்றும், எத்தகைய பாவிகளும் இதனை உணர்ந்து ஓதின் அவர்களை உய்விப்பதென்றும் இதுவே தாரக மந்திரமென்றும் விளக்கி உபதேசம் செய்கிறான். அதனை ஓதி வழிபடும் முறையையும் கூறியருளுகின்றான்.

மேலும் ஏழு தீவுகளுள்ளும் இத்தலமே சிறந்ததென்றும், இதுவே சித்தித் தலமென்றும், இங்கிருந்து பஞ்சாக்கரத்தை ஓதின் அது பத்து நூறாயிரங் கோடியாகப் பெருகுமென்றும்

இதனை உருத்திராக்கம் பவழம் இவற்றால் எண்ணி உருச்செய்ய வேண்டுமென்றும் இன்ன காலங்களில் ஓதின் இன்ன பயன்களை நல்குமென்றும் மேலும் திருநீறு முதலிய சின்னங்களைத் தரித்துப் பஞ்சாக்கரமோதுவார் எய்தும் பயனையும் கூறி இத்தலத்தின் மேன்மையையும் விளக்குகின்றான். இந்திரன் முதலாய தேவர்கள் இம்மந்திரத்தால் பெற்ற சிறப்பினைச் சூத முனிவர் விளக்குகிறார்.

8. அக்கினிதீர்த்தச் சருக்கம் :

இஃது எண்பத்திரண்டு பாடல்களையுடையது. இயற்கை வளஞ்சான்ற பொருநை நதிக்கரையில் உள்ள மாதவியென்னும் மூதூரில் வசு என்னும் அந்தணன் வாழ்ந்து வந்தான். இவன் சிறந்த பண்புடையவன், நல்லொழுக்கமுடையவன். நான்கு வேதங்களையும் திரிபறப்பயின்றவன் குணநலஞ்சான்ற ஒருத்தியை மணந்து மக்களைப்பெற்று ஊரார் போற்ற வாழ்ந்து வந்தான்.

ஒருகாலை மலையத்துவச பாண்டியன் சிறந்த செங்கோன்மையும் கொடை வண்மையும் உடையனாய் விளங்குதலைக் கேட்டு அவனிடம் சென்று சிறந்த இலக்கணமுடைய ஒரு பசுவைக் கன்றோடு பரிசாகப் பெற்று வந்து அதனைத் தன் மக்களினும் மேலாகப் போற்றி வளர்த்து வந்தான். அதுகாலை தன் மக்களுள் ஒருவனுடைய திருமணத்தை முன்னிட்டு அயலூர் செல்ல நேர்ந்த போது தன் மாணவருள் ஒருவனிடம் பசுவை ஒப்பித்துப் பேணப் பணித்துச்சென்று மூன்றாம்நாள் கழித்து வந்து பார்த்தபோது பசு பட்டினியால் இறந்தமைகண்டு பெரிதும் மனங்கலங்கி வருந்திய போது மாணவர்கள், பசுவைப் பேணிய மாணவன் மூன்று நாளைக்கும் உரிய புல் முதலிய உணவுகளை இட்டுச் சென்றான். பசு அவற்றை ஒரு நாளிலேயே உண்டுவிட்டு இரண்டுநாள் பட்டினியாகக் கிடந்தது என்று கூறினார்கள். வசு அதுகேட்டுப் பாவங்களிலெல்லாம் கொடிய பாவமாகிய பசுவைப் புரக்காத பாதகத்திற்கு ஆளானமை கருதி நொந்து பசுவை ஓர் அந்தணனுக்குத் தானமாகக் கொடுத்துவிட்டு இறந்துவிடுகிறான்.

இயமனுலகு சென்ற வசு இருநூறு ஆண்டுகள் நிரயத்துள் கிடந்து மீண்டும் பூவுலகில் ஞாளியாகப் பிறந்துழல்கின்றான். பல பிறப்புக்கள் நாயாகப் பிறந்து ஒரு பிறப்பின்கண் அகத்தியர் வாழும் பொதிய மலைக்கண் அலைந்து திரிகின்றபோது முனிவருள் சிறந்தவராகிய கும்பமுனி வசுவாகிய நாயின் முற்பிறப்புக்களையும்

அதன் காரணத்தையும் தன் தவ வலியால் உணர்ந்து அறிந்து இப்பாவத்தை இவன் செய்யவில்லையாதலின் உய்திகூற எண்ணி வசுவையழைத்துப் பசுவைப் பட்டினியிட்டோர் அடையும் துன்பத்தையும் பசுவைத் தானமிட்டோர், இறைவனுக்குப் பாலாபிடேகம் செய்தவர் எய்தும் இன்பப்பயனையும் விளக்கி நீ சுந்தரகிரி சென்று அக்கினி தீர்த்தத்தில் நீராடி இறைவனை வழிபடின் உன் பாவம் நீங்கிப் பழைய வடிவம் பெறுவாய் எனக் கூறுகிறார்.

இறுதிக் காலத்துப் பசுவினைத் தானம் செய்த புண்ணியத்தால் அகத்தியர் இவ்வுபாயத்தைக்கூற நேர்ந்தமையுணர்ந்து வசு பொதியத்தினின்றும் புறப்பட்டுக் கடம்பாடவி இறைவனை வழிபட்டு வையையில் நீராடிச் சிராப்பள்ளி வழியாகத் திருவையாற்றினைக் கடந்து குடந்தை வந்து பின் நல்லூரை அடைகின்றான். அகத்தியர் கூறியவாறு அக்கினி தீர்த்தத்தில் மூழ்கி ஆண்டுள்ள அரசமரத்தின் கீழ் நிற்கின்றான். அப்பொழுது அக்கினி தீர்த்தத்தில் மூழ்கிவந்த ஒரு முனிகுமாரன் தன் சடையை உதறி முடிக்குங்கால் அச்சடையினின்றும் தெறித்த நீர்த்துளி வசுவின் மேற்பட ஞாளியுருவம் நீங்கித்தேசுடைய பழையஅந்தண வடிவத்தைப் பெறுகிறான். கண்டோர் வியப்புறுகின்றனர் பின்னர்ப் பிரமதீர்த்தத்தில் மூழ்கி இறைவனைப் பலவாறு போற்றித் துதிக்கிறான். விநாயகரையும் அம்பிகையையும் வழிபட்டுச் சிவராத்திரி நாளை எதிர்நோக்கியிருக்கிறான். சிவராத்திரி வந்தது. அந்நாளில் இறைவனுக்குப் பூசனை முதலியவற்றை விதிப்படி செய்து துதித்துப் போற்றுகிறான். இறைவன் காட்சி தந்து வரங்களைக்கேள் எனக்கூற அந்தணன் இறைவனிடம் நீங்காத அன்பு வேண்டிப் பின் இத்தலத்தில் சிவராத்திரியில் வந்து பூசிப்போர் யாவருக்கும் எல்லாப் பேறுகளையும் அருள வேண்டிக் கேட்கிறான். இறைவனும் அவ்வாறே வரந்தருகிறான். அற்றை நாள் முதல் நல்லூர் இறைவனுக்கு அபராதட்சமரர் என்னும் பெயர் விளங்குகின்றது எனச் சூத முனிவர் அந்தணர்களுக்குக் கூறி அக்கினி தீர்த்தத்தின் சிறப்பை விளக்குகிறார்.

இச்சருக்கத்தில் பசுவினைப் புரப்போர் பசுவின்பால் முதலியவற்றால் இறைவனுக்கு நீராட்டுவோர் எய்தும் பயனையும், அகத்தியரின் தவச்சிறப்பையும் பொதியமலையின் வருணனையையும், வசு இறைவனைப் போற்றிப் புகழ்தலையும் சிறப்பாகவும் சுவையாகவும் ஆசிரியர் கூறியுள்ளார் படித்து இன்புறத்தக்கன.

## 9. அகத்தியர்க்கு மணவாளக் கோலங் காட்டின சருக்கம்:

இச்சருக்கம் இருபத்து மூன்று பாடல்களைக் கொண்டுள்ளது. பிரமன் மக்களுள் தலைமை சான்ற தக்கன் தவத்தால் உமாதேவி இவனுக்கு மகளாகத் தோன்றினாள். இத்தாட்சாயணியை இறைவனுக்கு மணஞ் செய்தளித்தான். பின்னர் தன் செருக்கால் இறைவனை இகழ்ந்து செய்த வேள்வியை இறைவி தடுக்க, தக்கன் இறைவியை அவமதித்தான். அது பொறாத தேவி அவ் வேள்வியில் அவியாகிப் பின் இமவானுக்கு மகளாகப் பிறந்து இறைவனை அடைய நோற்றாள். இறைவன் முனிவர்கள் வாயிலாக மணம் பேசித் தேவகணங்களோடு இமயமால் வரைக்கு எழுந்தருளினான். தேவர் கூட்டத்தின் பொறையாற்றாது வடக்குத் தாழ்ந்து தென் திசை உயர்ந்தது. இதனைச் சமப்படுத்தும் ஆற்றல் அகத்திய முனிவனுக்கே உண்டெனக் கருதி இறைவன் கும்ப முனியைத் தென்னாடு செல்லப் பணித்தபோது அகத்தியன் இறைவன் பார்வதியை மணக்குங் கோலத்தைக் காண வேண்டினான். இறைவன் தங்கள் மணக்கோலத்தைத் திருநல்லூரில் காட்டுவதாக அருளினான். அகத்தியன் தென்னாடு நோக்கி வருங்கால் விந்தியமலையின் செருக்கையடக்கிப் பொதியமலையில் வந்து தங்கிப் பின்னர் நல்லூரரையடைந்து இறைவனை வழிபட இறைவன் தான் கொண்ட மணவாளக் கோலத்தையும் மணவிழா நிகழ்ச்சியையும் காட்டியருளி வேண்டும் வரத்தையும் கேளெனப் பணித்தான்.

பெருவகை பூத்துநின்ற அகத்தியன் இத் திருநல்லூரில் எப்பொழுதும் இம் மணவாளக் கோலத்தோடு அன்பர்களுக்குக் காட்சி தர வேண்டுமென்றும் இத் தலம் தென் கயிலாயமாகவும் காசியாகவும் விளங்க வேண்டுமென்றும் இவ்வூர் சுந்தரபுர மென்றும் இறைவன் சுந்தரநாதர் என்றும் திகழ வேண்டு மென்று வேண்டினான். அவ்வாறே இறைவன் அருளினான் இச் சருக்கத்தைக் கேட்போர் நன்மணம் பொருந்தி வாழ்வார் எனச் சூதமுனிவர் கூறி முடிக்கின்றார்.

## 10. சத்தசாகரம் வரவழைத்த சருக்கம்:

இச் சருக்கம் நாற்பத்தைந்து பாடல்களைக் கொண்டுள்ளது. இதனுள், பாண்டுவின் மனைவி குந்தி தேவி தான் கன்னியாக இருந்தபோது துருவாசர் தந்த மந்திர ஆற்றலால் சூரியனை வழி

பட்டு அவனுக்குரிய மந்திரத்தைச் செபித்துக் கருவுற்றுக், காதினல் கர்ணனை மகவாக உயிர்த்த வரலாற்றைத் தவுமிய முனிவரிடம் கூறிக் கன்னித் தன்மையிழந்தமைக்கு அஞ்சி அம்மகவை நீரில் வைத்துச் செல்லவிட்டமை உலகியல் நோக்கில் குற்றமுடைய தாகத் தன்னெஞ்சு வருந்துவதனைக் கூறி அதற்கு உய்தி கூற வேண்டுமென்று நின்றபோது தவுமிய முனிவர் குந்தியை அவள் மக்களிடத்தில் அனுமதி பெற்றுத் தீர்த்த யாத்திரை சென்று வரின் மன அமைதியுறுமென்று கூறித் தன் புத்திரனையும் உடன் அனுப்பி வைக்கின்றார்.

கங்கை முதலாய தீர்த்தங்களாடித் தென்னாடு போந்து பல தலங்களையும் வழிபட்டு இறுதியில் நல்லூரையடைந்து அக்கினி முதலாய தீர்த்தங்களில் படிந்து தங்கியிருக்கும்போது அங்கு வந்த உரோமச முனிவரை வணங்கித் தன் குறைகளைக் கூறினாள். அவர் நாளை மாசிமக நாள் ஆதலின் இந் நாளிற் கடலாடி இறைவனை வழிபட்டால் உன் பாவங்கள் யாவும் தீருமென நவின்றார். கடலாடுதற்குச் செல்லப் போதுமான நேரமின்மையால் வருந்தி இறைவனை நோக்கி முறையிட்டாள். இறைவன் நாளையே இப் பிரம தீர்த்தத்தில் ஏழு கடலையும் வந்து அமையுமாறு செய்வேன் நீ ஆடி உய்வுபெறலாம் எனக் கூறிக் கடலையழைக்க அலை பெருமுழக்கத்தோடு வந்து பிரம தீர்த்தத்தில் சங்கமமாயின. குந்தி அதனுள் மூழ்கித் தர்ப்பணம் முதலாயின செய்து தானங்கள் வழங்கித் தன் பதி சென்றடைந்தாள். அது முதல் இத்தீர்த்தம் சத்த சாகரம் என வழங்கி வருகிறது. இதனுள் ஆடினோர் எல்லாத் தீர்த்தங்களிலும் மூழ்கி வழிபட்ட பயனை அடைவார்கள் எனச் சூதமுனிவர் கூறுகின்றார்.

## 11. சமுத்திர ராசன் செப்பேசுரம் பணிந்து மீண்ட சருக்கம் :

இருபத்தாறு பாடல்களைக் கொண்ட இச் சருக்கத்தில் கடலரசன் இறைவன் எழுந்தருளும் தலங்களையெல்லாம் கண்டு வழிபட விரும்பி வேண்ட இறைவன் நீ இவ்வடிவிற் சென்றால் உலகம் தாங்காது ஆதலின் அடக்கத்தோடு சென்று நல்லூரை அடைந்து செப்பேசுரத்தைப் பணிந்தால் எல்லாத் தலங்களையும் வழிபட்ட பயனை எய்துவாய் என விளம்ப அவ்வாறே கடலரசன் சென்று ஒரு மேடையை அமைத்து லிங்கத்தைப் பிரதிட்டை செய்து வழிபட இறைவன் உவந்து வந்து காட்சி தந்து அருளினன்

கடலரசன் வந்து வழிபட்டதற்கு அடையாளமாக உலகில் உற்பாதங்கள் ஏற்படுங்கால் இச் சிவலிங்கத்தைச் சுற்றிச் சங்கு முதலிய கடற் பொருள்கள் தோன்றி விளங்கும் என்று சூத முனிவர் கூறுகின்றார். மேலும் இச்சருக்கத்தில் மாசித் திங்கள் வைகறையில் சத்தசாகரத்திற் படிந்து சென்று ஐயாற்றிறைவனை வழிபடுவார் சிவகணங்களாகி வீற்றிருப்பாரென்றும் தீர்த்த யாத்திரையே சிறப்புடையதென்றும், மலை, தரு, பசு, மந்திரம், மனிதர், பாத்திரம், மலர், தெய்வம் இவற்றுள் இது இது சிறந்தது என்றும் கூறி முடிக்கின்றார்.

## 12. பிரம தேவர் வரம்பெற்ற சருக்கம் :

இச்சருக்கம் முப்பத்து மூன்று பாடல்களைக் கொண்டுள்ளது. ஐந்தாவது பரியாயத்தில் வந்த பிரமன் ஓர் ஊழி முடிவின்போது அகிலத்தையெல்லாம் விழித்து நோக்கி யாவும் தன் ஆற்றலால் விளைந்தவை எனச் செருக்குற்று நிற்கும்போது திருமால் அவன் எதிரே வர, திருமாலை நீ யார்? எனப் பிரமன் வினவ அவன் நான் உன்னை ஈன்றவன் என, யாவற்றையும் படைக்கும் என்னை நீ படைத்தாய் என்பது வியப்பெனக் கூறி எள்ளினான். இருவரும் தம்முள் இகல் கொண்டு போரிடத் தொடங்கும்போது இறைவன் ஆண்டோர் அனற்பிழம்பாக அடிமுடி தெரியா அளவில் தூண் வடிவாகத் தோன்றி நிற்பக் கண்டு இருவரும் அதிசயத்து நோக்கியபோது இறைவன் என் அடியையும் முடியையும் கண்டு வந்தவரே நும்மிற் பெரியவர் எனத் தூணிற்குளிருந்து பேசியது கேட்டுப் பிரமன் அன்னப்பறவை வடிவெடுத்து முடியினைக் காண விசும்பிற் பறந்தான் திருமால் ஏன வடிவு கொண்டு திருவடியைக் காணப் பூமியை அகழ்ந்து கொண்டு சென்றான். பன்னாள் முயன்றும் அடியைக் காண வியலாமற்றிரும்பி வந்தபோது பிரமன் தான் முடியைக் கண்டு வந்ததாகப் பொய் கூறினான். அதற்குச் சான்று யாதென இறைவன் வினவத் தாழம்பூவைச் சான்று கூறுமாறு செய்தான். இறைவன் பொய் பேசிய பிரமனை உனக்கு பூமியில் கோயில் இல்லாது ஒழிக என்றும்-தாழம்பூவைத் தேவர் எவரும் சூடாதொழிக என்றும் சபித்தான். தான் தன் பெருமையை இழந்ததற்கு நாணி அஞ்சி இறைவனை வழிபட்டுச் சாப நீக்கம் பெறத் திருநல்லூர் வந்தடைந்து ஒரு தீர்த்தத்தை உண்டாக்கி ஆண்டு லிங்கத்தைத் தாபித்து வேத விதிப்படி அஞ்செழுத்தோதி வழிபட்டான்.

இறைவன் பஞ்சாக்கர வடிவமாய் பிரமனுக்குக் காட்சி தந்து வேண்டும் வரங்களைக் கேள் எனப் பிரமன் தன் சாபத்தையும் தாழம்பூவின் சாபத்தையும் நீக்க வேண்டுமென்றும் தான் இயற்றிய தீர்த்தத்தில் மூழ்கி வழிபடுவோர் செய்த பாவங்களையும் கரிபொய்த்தோர் பாவங்களையும் தீர்த்து ஜோதை வண்ணமாக விளங்கும் இக்காட்சியை என்றும் அடியவர் காண அருள் செய்ய வேண்டுமென்று கேட்க இறைவன் அவ்வாறே யருளினர். (இச் சருக்கத்துள் சொல்லால் வினையும் பாவங்களை ஆசிரியர் நுட்பமாக அமைத்துள்ளார்.) எனச் சூதமுனிவர் இசைக்கின்றார்.

## 13. ஐராவத சாப விமோசனச் சருக்கம்:

இச்சருக்கம் முப்பத்தொன்பது பாடல்களைக் கொண்டுள்ளது. இதனுள் இந்திரன் ஊர்தியாகிய ஐராவதம் தன் மதத்தாற் செருக்குற்று மேருமலையிற் றிரிந்து நாவலந் தண்பொழில் புக்கு அருவிகளில் திளைத்தாடி மரங்களை முறித்துக் கனிகளை நுகர்ந்து மன்மத பாணத்தால் காமுற்றுத் தன் பிடியொடு கூடிக் களித்துக் கிடந்தது. அது காலை தேவர்கள் அசுரரோடு போரிட எண்ணிப் படையெடுக்க முற்பட்டார்கள் நால்வகைப் படைகளுந்திரண்டன. மாதவர் ஆசி கூற அரமகளிர் வாழ்த்தெடுக்க உச்சைச் சிரவம் ஆர்ப்பெடுத்து நிற்க இந்திரன் போர்க் கருவிகளுடன் வந்து நின்று தன் ஊர்தியாகிய ஐராவதத்தைக் கொணரப் பணித்தான். வாதுவர்கள் யானைக் கூடஞ்சென்று அது ஆண்டில்லாமை கண்டுவந்து கூற இந்திரன் சினந்து அஃதுள்ள ஆணவ நிலையைத் தெரிந்து இனித் தேவலோகம் வரவியலாமல் மண்ணுலகத்திலேயே திரிவதாக எனச் சாபமிட்டான். சாபத்தை அறிந்து வருந்திய ஐராவதத்தின் முன் ஒருநாள் நாரதர் வர அது அவரைப் பணிந்து தன் நிலைமையைக் கூறியது. நாரதர் இரக்கமுற்றுக் காசி முதலாய நூற்றெட்டுத் தலங்கள் புவியில் சிறப்புடையவை அவற்றுள் மிக்க புகழுடையவை மதுரை, ஆவூர், நல்லூர் என்னும் மூன்று. நீ நல்லூர் சென்று இறைவனை வழிபடின் உன் சாபம் நீங்கி அருள் பெறுவாய் எனக் கூறினர். ஐராவதம் நல்லூர் வந்து ஐந்தெழுத்தோதி நீரும் மலரும் கொண்டு வழிபடப் பிரம தீர்த்தத்திற் படிந்து ஒரு தீர்த்தத்தை யுண்டாக்கிச் சிவலிங்கத்தைத் தாபித்துப் பூசித்தது. இறைவன் மகிழ்ந்து வந்து தோன்றி அதன் சாபத்தை நீக்கியருளினன்.

யானையின் வேண்டுகோளுக்கிணங்க நல்லூரிறைவன் 'ஐராவ தேசன்' என்னும் திருநாமம் பூண்டு விளங்குகிறான் என்றும் ஐராவதத் தீர்த்தத்தில் ஆடுவோர் தீவினை நீங்கி இன்புறுவார் என்றும் சூதமுனிவர் கூறுகின்றார்.

## 14. சுமதி காந்தனையடைந்த சருக்கம்:

இச்சருக்கம் நாற்பது பாக்களைக் கொண்டுளது. இதன்கண் நாகர் உலக வேந்தனாகிய சர்ப்பவேந்தன் தவமகளாகச் சுமதி என்பவள் பேரழகும் நற்பண்பும் உடையவளாகத் தோன்றினாள். [சுமதியின் வனப்புக்களை ஆசிரியர் மிக நயமாகவும் சிறப்பாகவும் வருணிக்கும் பாடல்கள் சுவையானவை] இவள் நல்லதோர் கணவனைப் பெறவேண்டி நல்லூர் வந்து இறைவனை வழிபட்டு உறைக்கின்றாள். அக்காலை சோழர் மரபில் வந்த ஆற்றலும் அறிவும் தோற்றமும் சான்ற அரித்துவசன் என்னும் வேந்தன் தான் ஒரு நல்ல மனைவியைப் பெறவேண்டி இறைவனை வழி பட்டுத் தீர்த்த யாரை செய்து கொணடு வருபவன் திருநல்லூர் மான்மியத்தைச் சான்றோர் கூறக் கேட்டுச் சுந்தராசலத்தின் பெருமையை அறிந்து நல்லூரை யடைகின்றான். இறைவனையும் உமையவளையும் ஐங்கரனையும் வழிபட்டு வருபவன் ஒருநாள் நந்தவனத்தின் பக்கம் செல்லுங்கால் சுமதியைக் கண்டு அவள் பேரழகை வியக்கின்றான். [களவியல் இலக்கண அமைதியோடு ஆசிரியர் இந்நிகழ்ச்சியைப் பாடியுள்ளார்.] இருவரும் உள்ளத்தால் ஒன்றுபடுகின்றனர். சுமதி தன் வரலாற்றையும் நோக்கத்தையும் கூற அவனும் தன் வரலாறு முதலிய கூறிக் கந்தருவ விதிப்படி நாம் மணம் புரியலாம் என்று கூறுகின்றான். அதற்கு உடன்பட்ட சுமதி நாகலோகஞ் சென்று தன்தமர் உடன் பாடுபெற்று உலகியல் முறைப்படி மணந்துகொள்ள அழைத்துச் செல்லுகிறாள். தன் காதலன் பிலத்தின் வழியே செல்லுதற்கு வேண்டும் உருவத்தையும் குளிகையையும் அவனுக்களிக்கிறாள். சுமதி தன் தந்தையிடம் நிகழ்ந்ததைக் கூற சேடனும் சோழ மன்னனைத் தன் சுற்றத்தோடு எதிர்கொண்டழைத்து அளவளாவி மகிழ்ந்து தன்மகளை விதிப்படி மணஞ்செய்து தருகிறான். பல்வேறு செல்வங்களையும் நாகமணி முதலியவற்றையும் தோழியர் பலரையும் சீதனமாக அளிக்கிறான். நாகர் உலகில் இருவரும் எட்டு நாட்கள் தங்கியிருந்து, பின் பூவுலகடைகின்றனர். நல்லூர் சென்று இருவரும் இறைவனை வழிபட்டு மகிழ்கின்றனர்.

மன்னன் நல்லூரிறைவன் திருக்கோயிலை நாவல் கிளிச்சிறை முதலிய பொன்னால் எழுப்பி மணிகளால் தூபியை யமைத்துத் தன் பெயரால் ஒரு மதாணியையும் வழங்கிச் சிறப்புச் செய்து பின் பல ஊர்களையும் பசுக்களையும் நாடகக் கணிகையரையும் மானியமாக அளிக்கிறான். தன் மனைவியோடு அவ்வூரில் அரசு வீற்றிருக்கிறான். சுமதி தன்பெயரால் ஒரு புண்ணிய தீர்த்தமமைக் கின்றாள். இருவரும் பன்னாள் வாழ்ந்து இறுதியில் வீடடை கின்றனர் என்றும் இக் கன்னி தீர்த்தத்தில் முழ்கி வழிபடுவோர் பேரரசராய் வாழ்ந்து எல்லா இன்பமும் அடைவார்கள் என்றும் சூதமாமுனிவர் கூறுகின்றார்.

## 15. சங்கு கன்னச் சருக்கம்:

இருபத்து மூன்று பாடல்களை யுடைய இச் சருக்கத்தில், மாளவ நகரையாண்ட சங்குகன்னன் என்னும் வேடர்குல வேந்தன் மூன்று மனைவிகளை மணந்து மகப் பேறின்றி வருந்திப் பல தானதருமங்களைச் செய்கிறான். தீர்த்த யாத்திரை புரிகிறான். அக்காலை நாரதரைக் கண்டு தன் குறையைக் கூறி வேண்டுகிறான். நாரதர் நீ முற்பிறவியில் அந்தணனாக இருந்து ஒரு பசுவைக் கோல்கொண்டு புடைத்த தீவினையால் வேடர் குலத்திற் றோன்றினை, கன்றிற்குப் பால்விடாது பசுவைக் கறந்தனை யாதலின் மகப்பேறின்றி உழல்கின்றாய் எனக் கூறி நல்லூர் சென்று பிரம தீர்த்தத்தில் ஆடி அந்தணர்கட்குப் பசு முதலிய தானங்களைச் செய்து இறைவனை வழிபடின் புத்திரப் பேறு வாய்க்கும் என்று அருளுகின்றார். சங்கு கன்னன் அவ்வாறே சென்று வழிபட்டு ஒரு திங்கள் பட்டினி விரதம் நோற்றுப் பின் தன் பதியடைந்தான். மனைவியர் மூவரும் நன்மக்கள் மூவரைப் பெறுகின்றனர். பின்னர் இவன் சுவர்க்கத்தில் பல்வேறு நலங் களையும் துய்த்து நல்லூரில் அந்தணனாய்ப் பிறந்து வாழ்ந்து இறுதியில் சிவகதியடைந்தான் எனச் சூதமுனிவர் விளம்புகின்றார் [இச் சருக்கத்தில் 17 முதல் 26ஆம் பாடல் வரை சிதைந்துள்ளன. இவற்றுள் சங்குகன்னன் மக்களின் பெயர் சிறப்பு முதலிய கூறியுள்ளார் ஆசிரியர்.]

## 16. கிராத மோட்ச சருக்கம்:

இது முப்பத்து மூன்று பாடல்களை யுடையது. இதனுள் கௌட தேசத்தில் ஓர் அந்தணன் தன் குல ஒழுக்கத்தோடு

வாழ்ந்து வரும் நாளில் பொருளாசையினல் பிதிரர்க்களிக்கும் பொருள் சிலவற்றை ஓர் அந்தணனில்லத்தினின்றும் கவர்ந்ததனல் இறந்து பதினுயிரம் ஆண்டு நரகத்திற் கிடந்து பின் வேடர் குலத்தில் பிறக்கின்ருன். [ஆசிரியர் இச்சருக்கத்தில் இன்னின்ன தீவினைகளைச் செய்வோர் வேடராகப் பிறப்பார்கள் என விளக்குகிருர். வாழ்கின்ற வீட்டிற்குத் தீயிடுதல் முதலாக முப்பத்திரண்டு பாவச் செயல்களைச் சுட்டியுள்ளார்] களவு முதலிய செய்து வாழ்ந்து வரும் இவ்வேடன் தீர்த்த யாத்திரை செல்லும் அந்தணர்களோடு தானும் அந்தணனைப்போல் வேடம் பூண்டு களவுபுரியச் செல்லுகிருன். காஞ்சி முதலாய பதிகளுக்குச் சென்று இறுதியில் அவர்களோடு நல்லூரையடைந்து ஆதிரை நாளில் அவ்வந்தணர்களோடு தானும் மந்திரங்களைக் கூறுவான் போல் உடனுறைந்து கோயில்புக்கு வழிபடுகின்ருன். வேடதாரி யாகிய இவன் இறைவனின் காட்சியைக் கண்டு தன்னிலை மறந்து பரவசனுய் இறைவனைப் பிரிய மனமில்லாதவனுய் பத்தி மேலிட மூன்று நாள் ஆண்டு உறைந்த அளவில் ஆயுள் முடிந்து உயிரை விடுகிருன். அக்காலை இறைவன் அவன் செவியில் திருமந்திரத்தை ஓத அவன் வெள்ளிமலை யடைகிருன். இறைவன் அவனுக்குக் கணுதிபப் பதவியை அளிக்கிருன். இயக்கர் முதலியோர் வியந்து வினவ ஆதிரை நாளில் பஞ்சாக்கரமோதி நல்லூர் இறைவனை மூல பலத்தோடு தரிசித்து அத்தலத்தில் இறப்பவர் இப்பலனை எய்துவர் என இறைவன் விளம்புகிருன். இவ் வேடன் ஒரு கற்ப காலம் கைலையில் வீற்றிருந்து பின் வீடடைகின்ருன் எனச் சூதமுனிவர் கூறுகின்ருர்.

## 17. தரும சேனச் சருக்கம் :

நாற்பத்தெட்டுப் பாடல்களைக் கொண்ட இச் சருக்கத்துள் மாளவபுரத்தை ஆண்ட தருமசேனன் என்னும் மன்னவன் சிறந்த பண்பும் செங்கோன்மையும் மறமும் வீறும் உடையவனுய் விளங்குகின்ருன். மகப்பேறின்றி வருந்தியிருக்கும் அவனிடம் ஒருகால் நாரதர் வருகின்ருர். அவரை வரவேற்று உபசரித்த மன்னன் தான் அசுவமேத யாகம்புரிய விரும்பியுள்ளதைக் கூற அவர் உன் மைந்தரைக் கொண்டு அவ்வேள்வியை இயற்றுக என்கிருர். மகப்பேறில்லாதவர் குறைபாடு பற்றி உவமை வாயிலாக விளக்கிப் புத்திரப் பேறடையும் உபாயத்தையும் நாரதர் கூறுகின்ருர். நாரதர் கூறிய வண்ணம் மாளவ மன்னன்

***

நல்லூரடைந்து ஐந்து வண்ணத்தோடு சுந்தராசலத்தில் விளங்கும் இறைவனை வணங்கித் தன் மனைவியோடு ஆண்டுள்ள சூரிய குண்டத்தில் முதற்கண் மூழ்கிப் பின் முறையே வேத புட்கரணி யிலும், கன்னிகா தீர்த்தத்திலும் மூழ்கி வழிபடுகின்றான். மூல பலத்தோடு இறைவனைக் கண்டு வழிபடுகின்றான். புரோகித ரோடும், சேனைப் பரிவாரங்களோடும் வந்த மன்னன் அந்தணர் முதலானோர்க்கு பசு முதலிய தானங்களைச் செய்து ஓர் பர்ணசாலை அமைத்துத் தங்கி மேற்கூறியவாறு வழிபட்டு நீராட்டு விழா முதலிய நிகழ்த்திப் போற்றினான். இறைவனருளால் அக்கினி வண்ணன், ஏமவண்ணன், இரத்தின வண்ணன் என மூவரை மக்களாகப் பெற்றுப் பின் பரிமாமகம் செய்து மகிழ்கிறான். நல்லூர் இறைவனுக்குப் பல்வேறு வண்ணப் பட்டாடைகள் பூசைப் பாத்திரங்கள் வாகனாதிகளை எல்லாம் மானியமாக அளித்துத் தென்மேற்குத் திசையில் ஒரு தீர்த்த வாவியை உண்டாக்கி வழி பட்டான். இத் தீர்த்தத்தில் தைப்பூச நாளிலும், வைகாசி பூரணை நாளிலும் படிந்து வழி பட்டோர் சிறந்த பயனை அடைவர் என்றும் சுந்தராசலமே பூலோக கயிலாயமென்றும் சூதர் தவமுனிவர்க்குக் கூறுகின்றார்.

## 18. தீர்க்க துண்டச் சருக்கம் :

இச் சருக்கம் இருபத்தைந்து பாடல்களையுடையது. இதனுள் நல்லூரில் ஈசான திசையில் உள்ள ஒரு பர்ணசாலையில் அமர்ந்து பலிக்கொடை செய்து வந்தார் அகத்தியர். அப்பலியைப் பெற ஒரு காக்கை அங்கமர்ந்திருந்து அதனைப் பெற்று வாயிற் கௌவிக்கொண்டு பறத்து சென்றது. மற்றொரு காகம் அதனை அடைய அதன் பின்னர் பறந்து சென்றது. காகந் தன் வாயி லிருந்த பலியை நழுவவிட அப்பலி அவ்வழியே பிச்சை பெறச் சென்ற ஓர் இரவலன் பிச்சைப் பாத்திரத்தில் விழுந்தது. அவன் அதனை உண்டு பசி நீங்கினான். அக் காகத்தை ஒரு வேடன் அம்பால் வீழ்த்தினான். அதன் உயிர் நீங்கும்போது தேவ விமானம் வந்து அக் காகத்தை ஏந்திச் சென்றது. தேவ கணங்கள் அதனைக் கயிலைக்குக் கொண்டு சென்றனர். இறைவன் நீ நல்லூரில் ஓராற்றான் அன்னதானம் செய்தமையின் கணங்களின் தலைவனாய் வாழ்க என அருளித் தேவர்களிடம் நல்லூரில் அன்னதானம் செய்வோர் எய்தும் பயனை விளக்கி இக் காகம் வீழ்ந்த இடம் தேவ தீர்த்தமாக விளங்குவதையும் சுட்டி இத்

தீர்த்தத்தில் மூழ்கி வழிபடுவோர் எய்தும் பயனையும் தை அமாவாசையில் மூழ்குவோர் எய்தும் சிறப்பையும் இத் தீர்த்தத்திலாடி யானைமுகனை வழிபடுவோர் அடையும் பலனையும் கூறுகிறான் எனச் சூதமுனிவர் சொல்லுகின்றார்.

## 19. எக்ஞ குத்தச் சருக்கம் :

பன்னிரண்டு பாடல்களையுடைய இச் சருக்கத்தில் சுந்தராசலத்திற்கு ஈசான திசையில் கந்தமாபுரத்தை ஒத்த சிறப்புடையதோர் நகர் உளது. அந் நகர் முருகன் கோவிலுக்கு வடதிசையில் ஒரு தீர்த்தம் உண்டு. அஃது எல்லா நோய்களையும் போக்க வல்லது. அக்கினித் திசையில் பிரம தீர்த்தம் ஒன்றுண்டு அந் நகரின்கண் யக்ஞகுப்தன் என்னும் ஒரு வணிகன் வாழ்ந்தான். இவன் ஒரு திருவாதிரைத் திருநாள் விழாவில் நல்லூரில் வந்து வாணிகம் செய்யும் பொருட்டுப் பண்டங்களோடு வந்து தங்கினான். அவ்விழாவில் ஓர் பால் நடைபெறும் வினோதக் கூத்துக்களைக் காண எண்ணி வருபவன் அம்பாள் சந்நிதியில் நிகழ்ந்த புராணச் சொற்பொழிவில் தீர்க்கதுண்டன் சரிதத்தைக் கேட்டு அச் சிந்தனையோடு தன் இருப்பிடம் வந்து உணவு உண்டவன் புரைக்கேறி விக்கி உயிர் நீத்தான். அவனைச் சிவ கணங்கள் விமானத்தில் அழைத்துச் சென்று கைலையில் விட்டனர். கால தூதர்கள் இயமனிடம் நிகழ்ந்ததைக் கூறி முறையிட்டனர். இறைவன் அவ் வணிகனுக்கு உருத்திர வடிவ மீந்து காரணத்தையும் தேவர்களுக்கு விளக்கினான் எனச் சூத முனிவர் கூறுகின்றார்.

## 20. கோபிதாரத் துவாசசச் சருக்கம் :

இச் சருக்கம் இருபத்திரண்டு பாடல்களைக் கொண்டுள்ளது. இதனுள் கௌதம நதிக்கரையில் வாழும் காலவன் என்பவன் ஒருநாள் தேவதுதி என்னும் முனிவர் அங்கு வர அவரை வரவேற்று எழுந்தருளிய காரணத்தை வினவ அவர் தீர்த்த யாத்திரை புரிந்து வருவதாகக் கூறித் தான் சென்று வந்த தலங்களையும் அவற்றின் சிறப்புக்களையும் கூறினார் அவர். [தலங்களைப் பற்றி ஆசிரியர் சிறப்பாக விளக்குகிறார்.] சுந்தராசலத்தில் தான் உறைகின்ற காலத்தில் நிகழ்ந்த ஓர் அதிசயமான நிகழ்ச்சியைக் கீழ்வருமாறு கூறுகின்றார்.

வைகைக் கரையிலுள்ள விசாலே என்னும் நகரை ஆண்டு வந்த மன்னன் கோவிதாரத்துவசன் என்பவன் ஓர்நாள் தன்னிடம் வந்த அகத்தியரை ஊழ்வினை காரணமாக வரவேற்று உபசரிப்பதை மறந்திருந்தான். அது கண்ட அகத்தியர் தன் மாணவனை அழைத்து இப் பாண்டிய மன்னனைச் சபிக்கக் கூறினர். அவன் மன்னன் தொழுநோயுற்று வருந்துமாறு சபித்தான். அரசன் தன்னிலே கருதியும் தனக்கு மகவின்மை கருதியும் பெரிதும் கலங்கிக் குடமுனிவரிடம் தன் பிழை பொறுத்தருள வேண்டினன். அவர் நீ நல்லூர் சென்று சூரிய தீர்த்தத்தில் மூழ்கி இறைவனை வழிபடின் இச் சாபம் நீங்குமென இயம்ப அவ்வாறே அவன் வழிபட்டு நல்லுடல் பெற்றான். சூரிய தீர்த்தத்தின் பெருமை அளவிடற்கரிது என்று கூறினர் எனச் சூதமுனிவர் சொல்லுகிருர்.

## 21. பிரம தேவர் நாரதருக்குத் தலவிசிட்டமுரைத்தச் சருக்கம் :

இச் சருக்கம் 20 பாடல்களேக் கொண்டுள்ளது. இதனுள் நல்லூரில் நிகழும் அதிசயங்களேக் கண்ட நாரதர் அதன் பெருமைகளேக் கேட்கப் பிரமனிடம் செல்ல, பிரமதேவன் அவுணர்கள் போருக் கெழுந்தபோது தேவர்கள் திருமாலிடம் சென்று வேண்டிக்கொள்ளத் திருமால் பூவுலகில் கைலாயமென விளங்கும் நல்லூர் சென்று வழிபடுங்கள் ஆண்டு இறைவன் லிங்க மூர்த்தியாய் எழுந்தருளியுள்ளான் ஆண்டுள்ள உயிர்கட்குப் பிரணவ மந்திரத்தை ஓதி ஆட்கொள்வான் என்றும் தான் இரணியனை வெல்ல அங்குச் சென்று வழிபட்டதையும் கூறி வழிபடற்கு வேண்டும் மந்திரங்களேயும் கூறினர். தேவர்கள் அவ்வாறே சென்று வழிபட்டு அசுரர்களே வென்றூர்கள் எனப் பிரமதேவன் கூறுவதாகச் சூதமுனிவர் புகல்கின்றூர்.

## 22. மாயவனருச்சனேச் சருக்கம் :

இதனுள் இருபது பாடல்கள் உள. அவற்றில் தேவர்களே வென்றடக்கி விளங்கிய இரணியனை வெல்லத் திருமாலிடம் தேவர்கள் முறையிடுகின்றூர்கள். இரணியன் தன் நாமத்தையே மந்திரமாக ஓத வேண்டுமெனவும் தன்னையே வழிபட வேண்டுமெனவும் ஆணையிட்டுக் கொடுங்கோல் புரிவதாகவும் கூறுகின்றனர். திருமால் தான் நரசிங்கமாகச் சென்று அவனை

அழிப்பதாகக் கூறி நல்லூரையடைந்து ஆயிரம் ஆண்டுகள் பூசித்து ஒரு தீர்த்தமமைத்து வழிபடுகின்றார். இறைவன் மகிழ்ந்து காட்சி தந்து நரசிங்க வடிவத்தை அளித்து வேண்டும் வரங்களைக் கேள் எனத், தான் அமைத்த தீர்த்தத்தைச் சக்கர தீர்த்தம் என வழங்கவேண்டும். இதில் மூழ்கி வழிபடுவோர் துயர்களை நீக்க வேண்டுமென்றும் கூறி இரணியனை வென்று வந்து நல்லூர் இறைவன் கோயில் விமானத்தில் நரசிங்க வடிவத்தோடு எழுந்தருளியுள்ளார் என்றும் வைகாசிச் சதுர்த்தசி நாளில் உபவாசமிருந்து இத்திருமாலை வழிபடுவோர் உயர்கதியை அடைவார்கள் என்றும் சூதமுனிவரால் சொல்லப்படுகிறது.

## 23. தேவர்கள் அருச்சனைச் சருக்கம்:

இதனுள் பதினொரு பாடல்கள் உள. இதனுள் தேவர்கள் அவுணர்களை வெல்லுதற் பொருட்டு அமிழ்த கலசங்களைக் கொண்டுவந்து அபிடேகஞ் செய்து வழிபட்டு வரம்பெருகின்றனர் [தேவர்கள் இறைவனைப் போற்றித் துதிக்கும் பாடல்கள் சுவையுடையன] அவுணர்களை வெல்லவும் பிரம தீர்த்தம் அமிழ்தத் தடமென விளங்கவும் வரங்கேட்கின்றனர். இறைவன் அவ்வாறே அருளினன். அதனால் நல்லூரிறைவனுக்கு விசயநாயகர் என்னும் பெயரும் வழங்கலாயிற்று என்று சூதமுனிவர் கூறுகிறார்.

## 24. பிரமதேவர் நாரதர்க்குத் தீர்த்த விசிட்டம் உரைத்த சருக்கம்:

இருபத்தெட்டுப் பாக்களையுடைய இச் சருக்கத்துள் பிரமதேவர் நாரதருக்கு நல்லூரில் எட்டுத் திசைகளிலும் உள்ள தீர்த்தங்களின் பெயர்களையும் அவற்றின் சிறப்புக்களையும் கூறுவார், பிரம தீர்த்தத்தில் எக்காலத்திலும், கன்னிகா தீர்த்தத்தில் உச்சிப்போதிலும் சாமவேதத் துறையில் கேட்டை நாளிலும், ஞான தீர்த்தத்தில் ஆடிப் பூரத்திலும், கங்கைத் தீர்த்தத்தில் ஆடி, ஆவணித் திங்களிலும் ஆயிரம் முறை பஞ்சாக் கரத்தை ஓதி தீர்த்தமாட இறைவன் காட்சி தருவான் என்றும் புரட்டாசியில் [illegible]த் தீர்த்தங்களிற் படியினும் உவா நாளில் தென் புலத்தார் கட[illegible] புரியினும் சிறந்த பயன் உண்டாகுமென்றும் ஐப்பசித் திங்[illegible]ளில் தேவ தீர்த்தத்திலும் காவிரியிலும் மூழ்கி வழிபடுவோர் எய்தும் பயன் இதுவென்றும் கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நாளில் ஆடுவோர், மார்கழித் திங்கள் ஆதிரை நாளில்

மூழ்குவோர், மாசித் திங்களில் பிரயாகைத் தீர்த்தத்தில் படிவோர், மாசித் திங்கள் மக நாளில் தீர்த்தமாடுவோர், அக்கினி தீர்த்தத்தில் ஆடுவோர் நிருதி தீர்த்தத்தில் மூழ்கினோர், வருண தீர்த்தத்தில் ஆடினோர் குபேர தீர்த்தம், ஈசான தீர்த்தம் இவற்றில் மூழ்கினோர் வைகாசி விசாக நாளில் உரக தீர்த்தத்தில் படிவோர் எய்தும் பலன்கள் இவையென்றும் இவற்றின் சிறப்புக்கள் முழுதும் ஓத அரிதென்றும் பிரமன் கூறுவதாகச் சூதமுனிவர் புகல்கின்றார்.

இத் தீர்த்தங்களின் அட்டவணையைப் பட விளக்கத்திற் காண்க.

## 25. கழுகு விமோசனச் சருக்கம்:

இச்சருக்கம் பத்துப் பாடல்களைக் கொண்டுள்ளது. இதனுள் மாளவ தேசத்தில் வாழ்ந்த வேதநிதி என்னும் அந்தணனுக்குச் சத்திய விரதன் என்றொரு மைந்தன் பிறந்தான். இவன் தீய நெறியாளர் தம் உறவால் தன் குல ஒழுக்கத்தினின்று இழுக்கிப் படிப்படியாகப் பஞ்சமகா பாபங்களைச் செய்யத் தொடங்கினன். ஒருநாள் ஓர் உத்தம வைணவனைப் பகைத்து அவன்மேல் புலாலை வீசி எறிந்தான். அவன் இவனைக் கழுகாகி வருந்தச் சபித்தான். கழுகுருப்பெற்ற சத்திய விரதன் மீனைக் கவர்ந்துண்ணும் விருப்பால் பிரம தீர்த்தத்துள் பாய்ந்து மூழ்க அத் தீர்த்த விசேடத்தால் கழுகு உருவம் நீங்கித் தேவ வடிவு பெற்றுப் பொன்னுலகெய்தினன் எனப் பிரமன் நாரதர்க்குக் கூறியதாகச் சூதமுனிவர் சொல்லுகிறார்.

## 26. வீதிவிடங்கச் சருக்கம்:

இருபத்தெட்டுப் பாடல்களையுடைய இச் சருக்கத்துள் கிரேதா யுகத்தில் ஆண்ட முசுகுந்தன் என்னும் வேந்தன் தேவர்களின் வேண்டுகோளால் அசுரர்களை வென்று இந்திரன் வாகைசூட உதவினன். மகிழ்ந்த இந்திரன் கைம்மாறாக எது வேண்டினும் தருவதாகக் கூற முசுகுந்தன் இந்திரனிடமிருந்த உமையோடும் கந்தவேளோடும் விளங்குகின்ற வீதிவிடங்க மூர்த்தியைத் தான் வழிபட வேண்டி அதனைக் கேட்டான். செய்வதறியாது திகைத்த இந்திரன் மறுக்க இயலாமல் அம் மூர்த்தியை அளித்தான்.

அதனைப் பெற்றுக்கொண்டு ஆரூர் நோக்கிவரும் முசுகுந்தன் நல்லூரையடைந்து மூன்று நாள் அங்குத் தங்கி இறைவனை வழிபட்டபோது வீதிவிடங்க மூர்த்தியை இங்கே எழுந்தருளச் செய்க என ஆகாயவாணி எழுந்து கூறியது. அது கேட்ட மன்னன் இஃது இறைவன் கட்டளையே என்று தெளிந்து இந்திரன் செய்திருந்ததைக் காட்டினும் ஏழு மடங்கு சிறப்போடு வீதிவிடங்கரை நல்லூரிற் பிரதிட்டை செய்தான். இறைவன் அந்தப் பீடத்திலிருந்து நடம்புரிந்து அருளினன். அந்தணர் ஆரவாரித்தனர். நல்லூரில் சித்திர வீதிவிடங்கர் என்னும் திருநாமத்தோடு விளங்கும் இப் பெருமானுக்கு முசுகுந்தன் பல்வேறு பணிகளைக் செய்து பூசனைக்குரிய யாவையும் நல்கி உவந்தான். அமராவதியினும் நல்லூரை உவந்து இறைவன் தங்கினன் எனின் இதன் சிறப்பை யாராலும் உரைக்க இயலாது எனச் சூதமுனிவர் கூறுகின்றார்.

## 27. அமர்நீதிச் சருக்கம்:

இறுதிச் சருக்கமாகிய இதனுள் இருபத்தேழு பாடல்கள் உள. இறுதியாக இப் புராணத்தின் அமைப்பும் சுவையும் பற்றிச் சிறப்பிக்கும் ஒரு பாடல் உளது. இதனுள் பதினெட்டாம் பாடல் முதல் இருபத்தாறும் பாடல் வரை புராண வரலாறு பற்றியும் நூலாசிரியர் கூறும் வாழ்த்துக்களுமாக உள. இருபத்தேழாம் பாடல் இந்நூலாசிரியரின் வரலாற்றையும் புலமையையும் கூறுகின்றது. முதல் பதினேழு பாடல்களில் கூறப்பெறும் அமர்நீதி நாயனர் வரலாறு கீழ்வருமாறு கூறப்பெறுகிறது.

நல்லூர்க்குத் தென்கிழக்கில் உள்ள பழையாறை நகரில் வணிகர் குலத்தில் தோன்றிய அமர்நீதியார் வாழ்ந்து வந்தார். தான் ஈட்டும் பொருளைச் சிவனடியார்களுக்கு உடையும் உண்டியும் அளித்து மகிழச் செலவிட்டு வந்தார். அடியார்கட்கு உணவளித்துத் தொண்டாற்ற நல்லூரில் ஒரு மடத்தை அமைத்து ஆண்டுத் தங்கி வாழும்போது இறைவன் இவர் பெருமையை உலகுக்குத் தெரிவிக்க எண்ணி ஒரு பிரமசாரியாய் எழுந்தருளி நல்லூர் வந்து அமர்நீதியார் மடத்துக்குச் சென்றார். அவர் இவரைப் போற்றி நல்லூரிறைவன் திருவிழா முடியும் வரை தங்கியிருக்க வேண்டினர். இறைவன் ஒப்பித் தான் நீராடி வருவதாகவும் அதுவரைத் தன் கோவண

உடையில் ஒன்றைப் பாதுகாத்து வைத்திருக்கும்படியும் கூறி ஒப்பித்துச் சென்று மீண்டு வந்து தன் கோவண உடையைக் கேட்கிறார். அதனை அவர் வைத்தவிடத்திற் காணாமையால் எங்குந் தேடி இளைத்து வருந்தி வேறு ஒன்று தருவதாகக் கூற பிரமசாரியாக வந்துள்ள இறைவன் சினந்து தன் உடைக்கு எதுவும் ஒப்பாகாது, எனக் கூறித் தன்னிடமுள்ள கோவணத்தைக் காட்டி இதற்குச் சரிநிகர் பொருள் தருவையேல் கொள்வேன் என அதனைத் துலையின் ஒரு தட்டிலே இட்டார். நாயனார் தன்னிடம் உள்ள பொருளை எல்லாம் மற்றொரு தட்டில் வைத்தும் நேராகாமையால் தன் மனைவி மக்களோடு அத் துலைத் தட்டில் ஏறச் சமனாயிற்று, அத் துலையே தேவ விமானமாய் மாறி விண்ணெய்தியது. இறைவன் உமையோடும் காட்சி தந்தருளிப் பின் வீடு பேறடையச் செய்தான் எனச் சனகாதி முனிவர் கட்குச் சூதமுனிவர் நல்லூர் மான்மியம் முழுதும் கூறினார். யாவரும் மகிழ்ந்தனர்; சூதரைப் போற்றி இறைவனை வணங்கி உவந்தனர்.



வடதிசை
வடமேற்கு
வடகிழக்கு
ஞான தீர்த்தம்
அதர்வண தீர்த்தம்
கங்கா தீர்த்தம்
ஐராவத தீர்த்தம்
மானச தீர்த்தம்
சாமவேத தீர்த்தம்
அதர்வணத்துறை
சாமவேதத்துறை
பிரம தீர்த்தம்
சத்தசாகரம்
ஆகாய கங்கை
சக்கர தீர்த்தம்
இருக்வேதத்துறை
யசுர்வேதத்துறை
பிரயாகை
இந்திர தீர்த்தம்
மேற்குத்திசை
மணிகர்ணிகை
கிழக்குத்திசை
தருப தீர்த்தம்
சூரிய தீர்த்தம்
கயை தீர்த்தம்
நாக தீர்த்தம்
கன்னி தீர்த்தம்
யசுர்வேத தீர்த்தம்
அக்கினி தீர்த்தம்
தேவ தீர்த்தம்
தென்மேற்கு
தென்கிழக்கு
தென்திசை

சிவ சிவ
திருச்சிற்றம்பலம்

# நல்லூர்ப் புராணம்

## பாயிரச் சருக்கம்

### கடவுள் வாழ்த்து

#### காசிவிநாயகர் வணக்கம்

[அறுசீர் ஆசிரிய விருத்தம்]

1 இருவினைவெண் டிரைமாயக் கருங்கடலைத்
தனித்தேற்றி எண்ணி லாற்றற்
பொருவருமா ணவச்சேற்றைக் கருணைநீ
ராற்கழுவிப் போக்கிப் போகா
நிரதிசயா னந்தநெடு நிலவெறிப்ப
உயர்முத்து நெடிய தாமம்
மருவதனத் தணியாக மகிழ்காசி
வாரணத்தை வணங்கி வாழ்வாம் 1

---

முதற்சருக்கத்திற்குரிய பெயர் ஏட்டுச் சுவடியில் காணப்பெறவில்லை. ஒன்று முதல் பதினன்காம் பாடல் வரைக் கடவுள் வாழ்த்தும் வணக்கங் களுமாகவும் பின்னர்ப் பதினேழாம் பாடல் வரை புராண வரலாறும் அவையடக்கமுமாகவும் உள்ளமையின் இதற்குப் பாயிரச் சருக்கம் எனப் பெயரிடப்பட்டுளது.

1 இருவினை - நல்வினை தீவினைகள் - பசுவினை பாசவினைகளுமாம். ஈண்டு ஆணவத்தையும் கன்மத்தையும் குறித்து நிற்கிறது. மாயக் கருங்கடல் - மாயாமலமாகிய இருட்கடல், பொரு - ஒப்பு, நிரதி சயானந்தம் - தனக்கு மேற்பட்டு ஒன்றில்லாததாகிய பேரின்பம், வாரணம் - யானை - ஈண்டு விநாயகக் கடவுளை உணர்த்திற்று.

### சவுந்தரநாயகர் வணக்கம்

2 உலகெல்லாம் படைத்தருளி நிலைபெறுத்தி
இளைப்பொழிய வொடுக்கி, மீட்டுந்
தொலைவில்லா வினைப்பயன்கள் துய்ப்பவெதிர்
திரோபவித்துத் தொடர்ந்து, நீங்கா
அலகில்லா ணவசத்தி யாவரணம்
விடநீக்கி யருளா நிற்குந்
தலைவர்மே தகுநல்லூர்ச் சவுந்தரநா
யகரவர்தாள் தலைமேற் கொள்வாம். 2

### சொக்கநாயகியம்மை வணக்கம்

3 பரையாகி .............. கையா யருளாகி
ஆனந்தப் பாவை யாகி
உரைசாலும் விந்துமோ கினி........
கானிவ ... முதி ... ச்சார்ந்து
புரைதீர்சத் தியும்வடிவும் கரணாதி
யனைத்துமுக்கட் புனிதற் காகி
வரு (மேன்மை) நல்லூர்வாழ் திருமலைச்சொக்
கியைநாளும் வழுத்தல் செய்வாம். 3

### விநாயகக்கடவுள் வணக்கம்

4 கங்கைநெடும் புனற்றிரையிற் காளிந்தி
யெனக்கரடக் கலுழி சாய்த்தும்
திங்களிளம் பிறைமுரிந்த மருப்பாமென்
றயிர்த்தெடுத்துச் சேர்த்து மிவ்வா

---

2 இளைப்பு – வருத்தம், துய்ப்ப – நுகர, திரோபவித்து – மறைத்து, ஆவரணசத்தி – பசுபதிபாசம் மூன்றையும் வேறுபாடு தெரியாமல் மறைக்கும் ஒரு சக்தி, விட நீக்கி – முழுதும் அகலப் போக்கி.

3 பரை – பராசக்தி, உரை – புகழ், புரை – குற்றம், கரணம் – அக உறுப்புக்கள், முக்கட்புனிதன் – சிவபெருமான், சொக்கி – அழகி – சவுந்தரநாயகி என்றபடி,

றங்கணர்செஞ் சடிலநெடுங் கானில்விளை
யாடியுமை யம்மை நோக்கிப்
பங்கயவாண் முகமலர வருமொருவா
ரணத்திருதாள் பணிதல் செய்வாம். 4

### முருகக் கடவுள் வணக்கம்

5 தோட்டிளம்பூந் தார்கொழுதித் துதைந்தாடி
யஞ்சிறைய சுரும்பி னோடும்
பாட்டிளவண் டினமுரலும் மலர்க்கானி
லொருகுறத்தி பணைத்தண் ணைந்த
கோட்டிளமென் முலையுழக்க முகையுடைந்து
நறவூற்றுங் ... ... ... ... ...
மோட்டிளம்பன் னிருதடந்தோள் முருகனிரு
பதமுளரி முடிமேற் கொள்வாம். 5

### நந்தியங் கடவுள் வணக்கம்

6 மந்தார நறுந்தெரியற் செழுமணமும்
பங்கயப்பூ மணமும் வாசக்
கொந்தாரும் பசுந்துழாய்த் தொடைமணமும்
மணந்துகுடி கொண்டு சோதிப்

---

4 கரடக்கலுழி – மதநீர்வெள்ளம், முரிந்த மருப்பு - ஒடிந்த கொம்பு, அயிர்த்து - ஐயமுற்று, அங்கணர் – நெற்றிக்கண்ணையுடையவர் – சிவபெருமான், சடிலம் – சடைமுடி, கானில் - காட்டினில், பங்கயம்- தாமரை.

5 தோடு - தொகுதி – கொத்து, கொழுதி - கோதி, துதைந்து - நெருங்கி, சுரும்பு – வண்டு, முரலும் - இசைபாடும், குறத்தி - வள்ளிநாயகி, முளரி – தாமரை.

பைந்தாமங் கொண்டதொரு பொற்பிரம்பு
தனதுசெங்கைப் பதுமங் கொண்டு
சந்தாருங் கயிலைமலை காவல்கொள்வோன்
பதமுளரி தலைமேற் கொள்வாம். 6

## திருஞானசம்பந்தர் வணக்கம்

7 முள்ளரைய முளரிமலர் தவசிருக்கும்
நான்முகனும் முகுந்தன் தானும்
உள்ளரிய சோதிமய மாகியநம்
பெருமானை யொருபொய் கைக்கே
கள்வனிவ னெனத்தனது கண்மலர்கள்
பிசைந்தழுது காட்டா நிற்கும்
பிள்ளைமலர்த் தாள்பிறவிப் பெருங்கடற்குப்
புணையாகப் பிடித்து வாழ்வாம். 7

## திருநாவுக்கரசர் வணக்கம்

8 கொற்பயிலும் வெள்ளிலைவேற் கருந்தடங்கட்
பசுங்கிளியோர் கூற்றின் வைகும்
சிற்பரன்நா மத்தெழுத்தே நாத்தழும்பு
திறமேத்திச் சிக்க யாத்த

---

6 மந்தாரம் – தெய்வ மரங்களுள் ஒன்று, துழாய் – துளசி, மணந்து – சேர்ந்து, செங்கைப்பதுமம் – கையாகிய தாமரை, சந்தாரும் – சந்தன மணங்கமழும், சந்தம் – வேத ஒலியுமாம், பதமுளரி – பாத தாமரைகள்.

7 முள்ளரைய – முள்ளமைந்த தண்டு, முகுந்தன் – திருமால், உள்ளரிய – நினைந்து தெளிதற்கரிய, பொய்கை – குளம் (சீகாழிப் பிரமதீர்த்தக் குளம்) பிள்ளை – ஞானசம்பந்தப்பிள்ளையார், புணை – தெப்பம்.

கற்புணையாற் கருங்கடலைக் கடந்துபோந்த
வன்,கருணைக் கடலின் மூழ்குஞ்
சொற்பயில்நா வலன்கமலத் துணைப்பதங்கள்
சென்னிமிசைச் சூடி வாழ்வாம். 8

### சுந்தரமூர்த்திகள் வணக்கம்

9 பொருவேலைக் கடற்படுத்த நாகணைப்பள்
ளியினானும் போதின் மீது
வருவானும் இன்றளவும் காணாத
பதயுகள வனசஞ் சேப்பத்
தரைமீதி லரையாமத் தொருபரனைப்
பரவைமனை தனக்குச் செல்கென்
றிருகாலும் நடத்துதிரு (வாரூர்வாழ்)
நாவலன்றா ளிறைஞ்சி வாழ்வாம். 9

### மாணிக்கவாசகர் வணக்கம்

10 எக்கதியிற் புக்குழன்று திரிந்தாலும்
எமைமேற்கொண் டிருப்போர் தம்மை
அக்கதியிற் பெயர்த்தும்மே லருங்கதியில்
உய்ப்பேமென் றறிவிப்பார் போல்
தொக்கநரிக் குலமனைத்தும் துரங்ககதி
செலநடத்தித் தொடர்ந்து போற்றி
முக்கணனைப் பரசுமொரு கவியரசின்
இருசரணம் முடிமேற் கொள்வாம். 10

---

8 கொல் – கொல்லன் உலை – கொல்லுதல் தொழிலுமாம், இலைவேல்- இலை வடிவாக அமைந்த முனையுடையவேல், பசுங்கிளி – (ஈண்டு) உமாதேவி. சிற்பரன் – சிவபெருமான், எழுத்து – பஞ்சாக்கரம் (நமசிவாய) சிக்க – நெருங்க, நாவலன் – திருநாவுக்கரசர், சென்னி – தலை.

9 பொருவேலை – கரையில் மோதும் அலைகளையுடைய கடல், நாக அணைப்பள்ளியினான் – திருமால், போதின்மீது வருவான் – பிரமதேவன், பதயுகளம் – இணையடிகள், வனசம் – தாமரை, சேப்ப – சிவக்க, அரையாமம் – நள்ளிரவு, பரவை – பரவை நாச்சியார், நாவலன் – சுந்தரமூர்த்தி நாயனார், இறைஞ்சி – வணங்கி.

10 கதி – மக்கள் தேவர் விலங்கு முதலிய பிறப்புக்கள், உய்ப்போம் – செலுத்துவோம், தொக்க – கூட்டமாகக்கூடிய, துரங்கம் – குதிரை, முக்கணன் – சிவபெருமான், கவியரசு – மாணிக்க வாசகர், சரணம் – பாதம்.

### அமர்நீதிநாயனர் வணக்கம்

11 தன்னையே கோவணமாய்ச் சாத்தினன்காண்
என்பதனற் றூனு மந்தப்
பொன்னைநேர் கோவணத்திற் கிணையாகச்
சித்தாந்தப் பொருளீ தென்ன
முன்னைவா னவனிறுத்து முத்திநலங்
கொடுத்தருளும் முறைமை பெற்ற
மன்னவராம் அமர்நீதி நாயனர்
அடிக்கமலம் வணங்கி வாழ்வாம். 11

### அறுபத்துமூவர் வணக்கம்

12 எவராலும் செயற்கரிய திதுவிது வென்
றதிசயித்தே யெவரும் போற்றக்
கவராத அன்பதனற் பலவேறு
பத்திமையின் கடமை பூண்டே
உவராழி நஞ்சமுதுண் டும்பரைக்காத்
தருள்புரிந்த வொருவர்க் காளாந்
தவராச ரொன்பதிற்றேழ் தலைவர்பதப்
புண்டரிகந் தலைமேற் கொள்வாம். 12

### சிவனடியார் வணக்கம்

13 எக்காலத் தினுமிருப்பான் பரவைகடைந்
தமுதருந்த விமையோ ரோடுந்
தொக்காலத் தினுநாகப் பள்ளியினும்
துயிலுமவன் சூழ்ந்த நாளில்

---

11 சிந்தாந்தப் பொருள் – முடிந்த முடிவாகிய மெய்ப்பொருள் – நிறுத்து- துலையிலிட்டு நிறுத்து, அமர்நீதி நாயனர் இத்தலத்தில் தோன்றிய நாயனர்.

12 கவராத – பிளவுபடாத, உவராய – உப்புநீராகிய கடல், உம்பர் – தேவர், ஒருவன் – சிவபெருமான், ஒன்பதிற்றேழு – அறுபத்து மூன்று, தலைவர் – நாயன்மார்கள், புண்டரிகம் – தாமரை (பாதங்களை உணர்த்திற்று.)

புக்காலத் திலுமமிர்த மாக்கியகோ
னடித்தொழும்பு பூண்டு பார்மேல்
முக்காலத் தினுமுளராம் அடியார்சே
வடிக்கமலம் முடிமேற் கொள்வாம். 13

## அறுமுறை வாழ்த்து

14 அந்தண ளர்கள்வாழ்க ! வாலினங்கள்
பெருகுக ! வா னமரர் மல்க !
வந்துமா மழைபொழிக ! வேந்தனுமோங்
குக ! வுலகம் மலிக ! நாளும்
எந்தையா ரைந்தெழுத்தும் வெண்ணீறும்
விளங்குகபா ரெவையு மாகி !
முந்தைநான் மறைநெறியுஞ் சைவநெறி
யுந்தழைக முறையா னன்றே ! 14

## இப்புராண வரலாறும் இதனைச் செய்த காரணமும்

15 சூதமுனி வரன்றெளிய, வடமொழியாங்
கடலினிடைத் தொகுத்துத் தூக்கி
வேதவியா தன்பகர்ந்த நல்லூர்மான்
மியமிதனை விருப்பி னாலே
ஆதிமறை யவர்சைவர் தலந்தான
மாகியுளோர் அன்பு பூண்டோர்
ஓதுகெனப், பசுந்தமிழால் யானுமவர்
பணிமேற்கொண் டுரைக்க லுற்றேன். 15

---

18 இருப்பான் - இருப்பதற்காக, பரவை - கடல் (பாற்கடல்), தொக்காலம் - ஆலிலை, நாகப்பள்ளி - பாம்புப்படுக்கை, துயிலுமவன் - அறிதுயில் கொள்ளும் திருமால், ஆலத்திலும் - ஆலகால நஞ்சிலும், கோன் - சிவபெருமான்.

14 ஆனினம் - பசுக்கூட்டம், பாரெவையும் - எல்லா உலகங்களும்.

15 தூக்கி - ஆராய்ந்து எடுத்து, தலம் தானம் - பதிகள் ஊர்கள்.

## அவையடக்கம்

(கலிவிருத்தம்)

16 ஆசில் வண்டமிழ் ஆரிய முற்றுணர்
மாச னம்பலர் வாழும்நல் லூரில்யான்
பேச வந்துற்ற பெற்றிகொற் சேரியின்
ஊசி விற்பதற் குற்றதொப் பாமன்றே? 16

## இதுவும் அது

17 நல்ல சொற்பொருள் நான்புல வோர்க்கெதிர்
சொல்ல லுற்ற துணிவையென் சொல்லுகேன்
மெல்ல மின்மினி வெய்ய வற்கெதிர்
அல்லை நீக்கற் கமைந்ததொப் பாமரோ! 17

பாயிரச் சருக்கம் முற்றிற்று.

---

16 கொற்சேரி – கொல்லர்கள் வாழும் ஊர்.

17 பொருள் – பொருளை, துணிவு – முடிவு வெய்யவன் – கதிரவன், அல்லை – இருளை. அரோ அசை.

இரண்டாவது

# நைமிசாரண்யச் சருக்கம்

**[ முதல் பதினொரு பாடல்களில் தவமுனிவர்தம் பண்பும் செயலும் தோற்றமும் கூறத்தொடங்கி முதற்கண் இம்முனிவர்கள் சிவபெருமானின் அருளைப்பெற்ற பெருமையர் என்கிறார் ]**

[ *கலிவிருத்தம்* ]

*18 செற்றம் நீங்கிய சிந்தையர் செய்கையி*
*னற்ற மில்லவர் ஐம்புலன் வென்றவர்*
*பெற்ற மூர்திதன் பேரருள் பெற்றவர்*
*முற்று மோதி யுணர்ந்த முனிவரர்* 1

**[ இம்முனிவர்கள் தவம்புரிந்த முறையும் நிறையும் ]**

*19 வெய்ய வேனில் வெதுப்புமந் நாளிடை*
*ஐவ கைநெருப் பின்னழு வத்தினும்*
*பெய்யும் மாரியிற் பேருத கத்தினும்*
*செய்யும் மாதவம் முற்றிய செய்கையார்* 2

**[ சடைமுடியோடு விளங்குமிவர் வடிவச்சிறப்பு ]**

*20 பாரும் விண்ணும் பழிச்சும் படிமையர்*
*ஆரும் ஒப்ப அருள்புரி மேலவர்*
*மேரு வெற்பு விழுதுவிட் டாலென*
*வாருஞ் செய்ய சடைமுடி வாய்ந்துளார்* 3

---

18 *செற்றம் - வெகுளி, அற்றம் - மறதி, பெற்றம் ஊர்தி - இடபத்தை வாகனமாகக் கொண்ட இறைவன்.*

19 *ஐவகை நெருப்பு - பஞ்சாக்கினி. அழுவம் - காடு. உதகம் - நீர்.*

20 *பழிச்சும் - வாழ்த்தும். படிமை - தவவேடம். வெற்பு - மலை. வாரும் - நீண்ட. செய்ய - சிவந்த.*

[ திருநீற்றுப் பொலிவோடவர் மிளிரும் சிறப்பு ]

21 பேறு பூத்த பிராட்டி பிரிவிலாக்
கூறு பூத்த குழகனுக் கன்பினர்
வீறு பூத்தவெண் பூதி மிளிர்தலால்
நீறு பூத்த நெருப்பன்ன மேனியார் 4

[ பஞ்சாக்கரம் பதிந்த சிந்தையர் என்பது ]

22 பஞ்ச முத்தினும் வாடும் பதயுக
வஞ்சி பங்குடை வள்ளல் வடிவமாய்
விஞ்சி வெம்பவ வேலை வடவையாம்
அஞ்செ ழுத்தும் அழுந்திய சிந்தையார் 5

[ அக்கமணியணிந்து திகழும் அவர் சிறப்பு ]

23 நக்க னருள் நோக்கம் நயந்திலா
இக்கு வேளை யிகந்தமை காட்டல் போல்
தக்க னார்மகம் சாய்த்தவர் தண்ணணி
அக்க மாமணி யாரம் புனைந்துளார் 6

[ மானுரிவை பூண்டு விளங்கும் அவர்தம் மாட்சிமை ]

24 திங்கள் மாசு திரைத்திடல் போலவும்
கங்கை காளிந்தி பாய்தல் கடுப்பவும்
துங்க மானின் உரிவை துயல்வரப்
பொங்கும் நீறணி மார்பிடைப் பூண்டுளார் 7

---

21 **பூத்த** - விளங்குகின்ற. குழகன் - உருவினன். பூதி - திருநீறு. **நீறு** - சாம்பல்.

22 **பதயுகம்** - இணையடிகள், வஞ்சி - உமாதேவி, விஞ்சி - மிகுந்து, வேலை - கடல், வடவை - வடவைத்தீ.

23 **நக்கன்** - சிவபெருமான், இக்கு - கரும்பு, வேளை - மன்மதனை, மகம் - வேள்வி, அக்கமாமணி - உருத்திராக்க மணி.

24 **திரைதல்** - திகழுதல் கங்கையின்கண் காளிந்திநதி பாய்தல்போல துங்கமான் - மேலான மான், உரிவை - தோல்.

[தண்டுகுண்டிகை தாங்குமவர் உண்டிடும் உணவு இவைஎன்பது]

25 உண்டி காய்கிழங் கூழிலை யாதிய
கொண்டு நீள்பகல் போக்கிடு கொள்கையர்
மண்டு தண்ணளி யோடுசன் மார்க்கம்போற்
றண்டு குண்டிகை தன்னொடுந் தாங்கினர் 8

[அவர்தம் தவயோக நிலையின் காட்சி]

26 புருவ நாப்பணிற் கண்கள் புகச்செய்து
மருவு நாசி நுனிவயின் வைத்துகந்
தருவ மானவான் மாவை யான்மிக
உருவ, ஓவிய மொப்ப வுறைகுவார் 9

[தவநிலையில் அவர்எய்தும் ஆனந்த நிலை]

27 பருகு வாரிற் பரன்கழல் சிந்தைவைத்
துருகி யுண்ணெக் குரோமஞ் சிலிர்ப்புறக்
கருணை வாரி திளைத்திரு கண்கணீர்
அருவி பாய வகமகிழ் வெய்துவார் 10

[காமவெகுளி மயக்கத்தை இவர் வெல்லும் உபாயம்]

28 அழிவில் லாதவ வித்தைவன் சேதகம்
வழுவின் ஞான வானதி வாரியாற்
கழுவிச் சச்சிதா னந்தக் கடலிடை
முழுகு வாரடல் முப்பகை வென்றுளார் 11

---

25 ஊழிலை – முதிர்ந்த சருகுகள், குண்டிகை – நீர்க் குடுக்கை.

26 யோகநிட்டை கூடியிருக்கும் தோற்றத்தை இப்பாடல் தெளிவிக்கிறது.

27 பருகுவாரின் – அள்ளி உண்பவர்போல, வாரி – கடல்.

28 சேதகம் – சேறு, ஞானவானதி ஞானவாரி எனத் தனித்தனியே கூட்டி ஞானமாகிய ஆகாயகங்கை ஞானமாகிய ஆகாயக் கடல் எனக் கொள்க. அடல்முப்பகை – கொடுமை செய்யும் காமம் வெகுளி மயக்கமாகிய பகை.

[முனிவர்கள் பிரமனிடம் தாம் தவம் செய்தற்குரிய இடம் வேண்டிடப் பிரமலோகம் புறப்படல்]

29 இன்ன தன்மை முனிவரர் யாவரும்
அன்ன வூர்தி அமர்ந்துறை நாட்டகந்
தன்னை யுற்றிரு தாமரைத் தாண்மலர்
முன்னி றைஞ்சி முறைமையிற் போற்றினார் 12

[பிரமதேவன் முனிவர்களை உசாவ அவர்கள் கூறுதல்]

30 போற்றி நிற்றலும் புண்டரி கத்தவன்
ஏற்றம் மிக்குளிர் ! எய்திய தியாதென
நோற்ப தற்கிடம் நோர்க்கிவந் தாமெனச்
சாற்றி னாரெதிர் நான்முகன் சாற்றுவான் 13

[பிரமதேவன் ஒருகுசைப்புல்லைச் சக்கரமாக வளைத்துவீசி இது விழுமிடமே தவம் செய்யத் தக்கதலம் எனக் கூறிவிடுதல்]

31 நன்று நன்றுநீர் நாடிவந் துற்றமை
என்று நேமி இருங்குசை யாலவன்
ஒன்று கண்டினி தூரவிட் டதுபோய்ச்
சென்று வீழ்தல மேதவஞ் செய்தலம் 14

[முனிவர்கள் விடைகொண்டு அதன்பின் செல்லுதல்]

32 ஆமி னேமி யடுத்துமெய் யந்தணிர் !
போமி னென்று புராதனன் கூறலும்
காம மாதி கடிந்தவர் அத்தகை
நேமி யோடும் விடைகொண்டு நீங்கினார் 15

---

29 **அன்னவூர்தி** - பிரமதேவன், நாடு – சத்தியலோகம்.

30 புண்டரிகத்தவன் - பிரமதேவன், நோற்பதற்கு – தவஞ்செய்வதற்கு, **சாற்றினார்** – (விடையாகக்) கூறினார்.

31 **நேமிஇருங்குசை** – தருப்பைப் புல்லைச் சக்கரமாக வளைத்த உருளை, **தலம்** – இடம்.

32 **ஆமினேமியடுத்து** – ஆரும் இந்தச் சக்கரத்தைத் தொடர்ந்து, புராதனன் – பிரமன், நேமி – (தருப்பைச்) சக்கரம்.

[நேமிசென்று வீழ்ந்ததலத்தை முனிவர்கள் தவஞ் செய்தற்குரிய இடமாகக் கொண்டனர்; அதனால் அத்தலம் நைமிசம் என வழங்கலாயிற்றெனல்]

33 நீங்கி யந்தணர் நேமிபோய் வீழ்தலம்
ஆங்கு வைகி யதற்கபி தானந்தான்
ஓங்கு நைமிசம் என்றினி தோதியே
பாங்கின் மெய்த்தவம் பற்பல வாற்றினர் 16

[நைமிசாரணியத்தின் பெருமை உரைப்பரிது எனினும் சிறிது சொல்லுவேனெனக் கூறுதல்]

(கலித்துறை)

34 அனைய தன்மையந் நைமிசத் தணிநலந் தன்னை
இனைய தன்மைய தெனவுரைப் பவரெவர் எனினும்
கனைக ருங்கடல் நிலையினைக் காண்பவர் கடுப்பத்
துனிவி லாதர வாற்சில சொல்லுது மன்றே 17

[தவப்பயிர் விளைக்கும் பலவளம் சான்றது நைமிசாரணியம் எனல்]

35 செற்ற மில்லது சிறுமையிற் றீர்ந்தது தேர்முக்
குற்றம் நீக்குவ தருள்நலங் கொழிப்பது நாளும்
அற்ற மில்லது பற்பல அணிநலம் தழைத்து
நற்ற வப்பயிர் விளைப்பது நைமிசா ரண்யம் 18

---

33 அபிதானம் - பெயர், நைமிசம் - நேமி சம்பந்தத்தாலானது.

34 கனைகருங்கடல் - ஆரவாரமிக்க கரியகடல், கடுப்ப - ஒப்ப, துனிவில் - வெறுப்பில்லாத, ஆதரவு - அன்பு.

35 செற்றம் - பகை, தேர் - தேர்ந்த, முக்குற்றம் - ஆணவம் கன்மம், மாயை - காமம் வெகுளி மயக்கமும் ஆம், அற்றம் - அழிவு, தவப்பயிர் - தவமாகிய பயிர்.

[ நைமிசாரணியம் சிவபெருமானை ஒத்தது எனல் ]

36 சீத மாமதி சென்னியின் மிலைச்சிய திறத்தால்
போது லாங்கணைக் காமனைப் புறங்கண்ட பொலிவால்
வேத பாரகர் வியந்தடி நிழல்மிடை தலினால்
நாத னூரெனச் செழித்தது நைமிசா ரண்யம் 19

[ நைமிசாரணியம் திருமாலை ஒத்தது எனல் ]

37 சங்க மேந்திய தன்மையால் திகிரிதாங் குதலால்
பொங்கு பாசொளி தழைத்தலாற் புவிபுரந் திடலால்
துங்க மாமணி வயங்கலாற் றொடுகடற் பிறந்த
நங்கை காந்தனை ஒத்தது நைமிசா ரண்யம் 20

[ நைமிசாரணியம் பிரமதேவனை ஒத்துளது எனல் ]

38 தேன்மு கத்தல றுதலால் செவ்விய நிலையால்
வான்மு கத்தொடு திசைமுகம் மணந்திடு மாண்பால்
நூன்மு கத்தலர் மறையொடு விளங்குநோன் மையினால்
நான்மு கத்தவன் ஒத்தது நைமிசா ரண்யம் 21

[ நைமிசாரண்யத்தின் பொழில் வளங்கூறல் ]

39 மறுவில் வெண்டிங்க ளாமெனப் பளிக்கறை வயங்க
உறுபு னற்புளி னங்கள் வெண்ணிலா வொக்கக்
கறுவொ டுந்துரந் தடுமிருட் படலங்கள் கடுப்ப
நறும லர்ப்பொழில் செழித்தது நைமிசா ரண்யம் 22

---

36 சீதளம் - குளிர்ச்சி, மிலைச்சிய - சூடிய, போது - மலர், கணை - அம்பு, நாதன் - சிவபெருமான்.

37 சங்கம் - சங்கு, திருக்கூட்டம், திகிரி - சக்கரம், பாசொளி - பச்சைநிற ஒளி, தொடுகடற் பிறந்த நங்கை - இலக்குமி, காந்தன் - கணவன்.

38 தேன் - வண்டு, தேன், செவ்வி - மலர்ச்சி, திசைமுகம் - திக்கு - நான்கு முகம்.

39 மறு - குற்றம் - களங்கம், புளினம் - திட்டு.

[ பற்பல நதிவளங்களால் நிறைந்தது நைமிசாரணியமெனல் ]

40 கதிர்கொள் மாமணி கையரிக் கொண்டுபொன் கொழித்து
முதிய காரகில் முரித்திரு மருங்கினும் திரைத்துப்
புதிய நாண்மலர்க் குங்குமம் சாந்தொடு பொருது
நதிக ளீறில பொலிந்தது நைமிசா ரண்யம் 23

[ தாமரை நீரோடைகளால் விளங்குவது நைமிசாரணியமெனல் ]

41 அண்ண லன்புறு மாதவர் சிந்தையி னாழ்ந்து
வண்ண வாரிச மவர்முக மாமென மலர்ந்து
திண்ணி தாமவர் செயலென லாகியே தெளிந்து
நண்ணும் ஓடைகள் மலிந்தது நைமிசா ரண்யம் 24

[ நைமிசாரணியப் பூந்தடங்களின் வளம் ]

42 அளிப யின்றதி சீதள மாகியே கண்ணீர்த்
துளிப யின்றக மலர்ந்தஞ்ச மதனொடு துவன்றித்
தெளிப யின்றுறு தவரென நினைந்துநீர் சிறந்து
நளிப யின்றபூந் தடத்தது நைமிசா ரண்யம் 25

[ யானையும் அரியேறும் தோகையும் நாகமும் களித்தாடும் சிறப்புடைய தெனல் ]

43 வாகை மாயனு மவன்முனை யவனும்போல் மகிழ்ந்து
வேக யானையும் முடங்குளை மடங்கலும் மேவத்
தோகை யாடலும் துத்தியம் பணம்விரித் தடுத்து
நாக மாடுதல் புரிவது நைமிசா ரண்யம் 26

---

40 கதிர் - ஒளி, அகில், குங்குமம், சாந்தம் — இவை மரங்கள்.

41 அண்ணல் — இறைவன், வாரிசம் — தாமரை.

42 அளி — தேன்வண்டு, சீதளம் — குளிர்ச்சி, கண்ணீர் — கள்ளாகியநீர், அஞ்சம் — அம்சம் (அன்னங்கள்) தெளி — தெளிவு, நீர் — நீர்மை, நளி — செறிவு.

43 மாயன் — கண்ணன், அவன்முனையவன் — பலராமன், மடங்கல் — சிங்கம், தோகை — மயில், துத்தி — (படத்திலுள்ள) புள்ளிகள், பணம் — படம்.

[பருவகாலம் ஆறும் வசந்தகாலமே போல் விளங்குமெனல்]

44 பருவ மாறுந்தம் பண்பினில் வழாநிலை பயப்ப
வருதல் கூடினும் வசந்தகா லத்தியல் மான
உருவ நீண்முடி யும்பர துலகமே யொக்கும்
திருவ நீள்பொழில் செறிந்துயர் நைமிசா ரண்யம் 27

[பளிக்கறைகள் விளங்குதலும் நவமணிகள் ஒளி வீசுதலும்]

45 ஒளிக்க வின்பெறு மதியிடைப் படிநிழ லொப்பப்
பளிக்க றைத்தல மடுத்துமான் கன்றுகண் படுக்கும்
உளக்கண் நோக்குடை உறுதவர் சாலைகள் தோறும்
விளக்கம் ஆமென மாமணி வயின்வயின் மிளிரும் 28

[கோங்க முதலிய மலர்கள் பூத்து முத்தேவர்கள்போல் விளங்குதல்]

46 பூத்த கோங்கமும் பூந்துணர்ப் பூவையும் சிவந்து
மாத்த ளிர்த்தவும் மாதவர் வழிபடல் புரியும்
மூத்த தேவனும் முகுந்தனும் புராரியு மாகும்
ஆத்தர் மூவரும் என்னவே யணிநலங் கவினும் 29

[செண்பக மலர் பூத்திருக்கும் வருணனை]

47 அரத்த முட்டிய தெனத்தளிர் குழைத்துயர் அசோகம்
புரத்தல் செய்தருள் புராந்தகன் பொருவவன் னவற்கு
விருத்த வேதியர் எடுத்திடும் தீபம்போல் விளங்கும்
திருத்த மீக்கொள நிரைநிரை பூத்தசெண் பகங்கள் 30

---

44 உம்பர் – தேவர், திருவ – செல்வமுடைய.

45 கவின் - அழகு, படிநிழல் – படிந்துள்ள களங்கம், உறுதவர் - மிக்க தவமுடையவர், சாலை – பர்ணசாலை, விளக்கம் – விளக்கு, வயின் வயின் – இடந்தோறும்.

46 முத்ததேவன் – பலராமன், முகுந்தன் – கண்ணன், புராரி – சிவ பெருமான், கோங்கம், பூவை, மாந்தளிர்களுக்கு இவை உவமை. ஆத்தர் – அடையத்தக்கவர் (ஆப்தர்)

47 அரத்தம் – செம்பஞ்சுக்குழம்பு, புராந்தகன் – சிவபெருமான், பொருவ – ஒப்ப.

[தேனிறால் கசிந்தொழுகும் வருணனை]

48 அடுத்த செந்தளிர்ச் சூதமே யுதயவெற் பதனில்
தொடுத்த தேனிறாற் பருதிமண் டிலமதிற் சோர
விடுத்த தாரைகள் இருளினைப் பருகிய வெய்யோன்
மடுத்த தன்னுடைக் கிரணங்க ளுமிழ்வதை மானும் 31

[முல்லையும் பூவையும் வேங்கையும் மலரும் வருணனை]

49 பறத்தல் செய்கலாக் குளவியும் பூவையும், பாயாத்
திறத்த வேங்கையும், வாணியும் உமையும் திருமால்
நிறத்து வாழ்தரு செல்வியும் போன்மென நிறைதேம்
புறத்து வண்டினங் கூட்டுண மலர்வன பொதும்பர் 32

[குழிகளில் கிழங்கும் மணிகளும் விளங்குமெனல்]

50 காடு கொள்வன சமிதையும் காழகிற் குறடும்
மாடு கொள்வன தருப்பையும் பரப்பும் வாலுகமும்
கோடு கொள்வன வலரியுங் கனிகளும், குழியின்
ஊடு கொள்வன கிழங்கும்நீ டொளிமணி விளக்கும் 33

[தேனிறால் ஒழுகிக் குளங்களை நிறைக்குமெனல்]

51 மடல் விரிந்தலர் பூந்துணர் மலிவன வெங்கும்
கடல்விளைந்தவின் னமுதநேர் கனிவகை யெங்கும்
உடைதி ரைக்கட லெனநறு வொழுகுவ தெங்கும்
குடைந றும்புனல் நிறைவன குளம்பல வெங்கும் 34

---

48 சூதம் – மாமரம், தேனிறால் – தேனடை.

49 பறத்தல்செய்கலாக்குளவி – காட்டுமுல்லைமலர், பூவை – காயாமலர் வேங்கை – வேங்கை மலர், வாணி – கலைமகள், உமை – பார்வதி நிறத்துவாழ்தருசெல்வி – மார்பினில் வாழும் இலக்குமி, தேம் – தேன். பொதும்பர் – சோலை.

50 சமிதை – வேள்விக்குரிய சுள்ளிகள், அகிற்குறடு – அகிற்கட்டை, மாடு – பக்கம், வாலுகம் – வெண்மணல், கோடு – மரக்கொம்பு, அலரி – பூ, ஊடு – இடை.

51 நறு – தேன், குடைநறும்புனல், குடைந்தாடுதற்குரிய நீர்.

[ ஆங்குத் தவமுனிவர்கள் வேள்வி முதலிய செய்து வாழ்கின்றனர் எனல் ]

52 இன்ன நல்வளந் துவன்றிய நைமிச மென்னும்
அன்ன நல்வனத் தருந்தவ முனிவரர் அன்பான்
முன்னை நான்முறை சாத்திர மகவினை முற்றிக்
கன்னி பாகனைப் போற்றினர் உறைகின்ற காலை 35

[ இதுவும் அடுத்த பாடலும் சூதமாமுனிவர் வருகையையும் அவர் சிறப்பையும் கூறும் ]

53 மானி னங்களும் மரைகளும் வழிவந்து காட்ட
ஈன மற்றுயர் மாதவி பூம்பந்த ரெடுப்பத்
தேனி றைத்தலர் பாதவஞ் சேவடி சிந்துங்
கானி டைப்படர் கருணைகூர்ந் தாவமே கடுப்ப 36

[ சூதமுனிவர் வருகை ]

54 வெள்ளை நீற்றொளி குலவிய மேனியன் மிளிரும்
வள்ள லக்கமா மணிவடந் துயல்வரு மார்பன்
கொள்ளை வெம்பவக் குறும்பெறி தவரொடுங் குழுமி
தள்ள ருந்தவச் சூதன்வந் தவரொடுஞ் சார்ந்தான் 37

[ நைமிசவனத்து முனிவர்கள் சூதமாமுனிவனை வரவேற்றல் ]

55 சார்ந்த சூதனை எதிர்கொண்டு தவத்துறை புரப்போர்
ஆர்ந்த ஆதர வுவட்டெடுத் தொழுகவாங் கவற்கு
நேர்ந்த பாத்தியம் முதலிய நெறிமையி னீந்து
வார்ந்த நீடொளி யாதனம் மகிழ்ந்தனர் வழங்கி 38

---

52 துவன்றிய - நிறைந்த, மகவினை - வேள்விச்செயல், கன்னிபாகன் - சிவபெருமான்.

53 மாதவி - குருக்கத்தி, பாதவம் - மரங்கள், ஆவம் - அம்பறாத்தூணி

54 பவக்குறும்பு - பாவமாகிய காடு, தவர் - முனிவர்கள்.

55 ஆர்ந்த - நிறைந்த, பாத்தியம் - பாதபூசை.

[சூதனோடு இன்னுரையாடி அன்புகூர்ந்தனர் முனிவரெனல்]

56 வந்த சூதமா முனிவரன் வதனபுண் டரிகத்
தந்த ணாளர்கள் விழியளி யினங்கள்வீழ்ந் தளவச்
சிந்தை யின்புற நன்னய மொழிபல செப்பித்
தந்த மன்பினா லளவளா யாதரந் தழைத்தார் 39

[முனிவர்கள் சூதனுக்கு முகமன்கூறி இறைவன் பெருமையைக் கேட்க எண்ணுதல்]

57 துங்க வாரிதி மாமதிக் காண்டலுந் தழங்கிப்
பொங்கு மாறுபோல் மாதவ ருடலகம் பூரித்
திங்கு நீவர வெத்தவம் புரிந்தனம் என்று
மங்கை பங்கினன் மான்மியம் வினவுவான் வலித்தார் 40

[நான்மறைப் பொருளின் சீர்த்தியையும் புராணங்களின் பெருமையையும் முனிவர்கள் போற்றிக் கூறுதல்]

58 பாச வேரரி யுங்கூன் புள்ளமாய்ப் பார்மீ
தூசல் போன்றுழல் பிறந்தைமாக் கடலுக்குத் தரமாய்
ஆசை போகிய அவிச்சைவல் லிருட்கா தபமாய்
மாசி லாதநான் மறைப்பொருள் விரிப்பன வாகி 41

[இதுவுமது]

59 காயும் வெங்கலிக் கலுழிக் குதகமா யின்பம்
ஏயும் வீட்டுல கேறுதற் கேணியாய் இசைந்த
ஆயும் மூவறு புராணமும், வியாதனும் அருள்கூர்
நீயு மன்றிமற் றியாவரே நெறிதெரிந் துணர்வார் 42

---

56 வதனபுண்டரிகம் - முகமாகிய தாமரை, விழியளி - கண்களாகிய வண்டு, ஆதரம் - மகிழ்ச்சி.

57 வாரிதி - கடல், மான்மியம் - புகழ், வலித்தல் - முடிவுசெய்தல்.

58 கூன்புள்ளம் - வளைந்தவாள், பிறந்தை - பிறப்பு, அவிச்சை - அறியாமை, ஆதபம் - சூரியன்.

59 கலுழி - கலங்கல், உதகம் - நீர், வியாதன் - வியாச முனிவன்.

[சூதரிடம் முனிவர்கள் புராணம் கூறுமாறு வேண்டல்]

60 ஆத லாலுன தானன மலரினு லனைத்துங்
காதல் கூர்தரக் கேட்குமா றுவந்தனங், கனிவால்
வாத ராயணன் மலரடி வணங்கிய சூத
ஓது வாயென வோதியே பின்னரொன் றுரைப்பார் 43

[முனிவரர் முன்னர் திருவலஞ்சுழிப் புராணங் கேட்டு மகிழ்ந்தமை கூறல்]

61 நிலஞ்செய் மாதவ மெனவரும் நெடுந்தவச் சூத!
வலஞ்சு ழித்தல மான்மியம் முன்னர்நீ வகுத்தாய்
புலங்கொள் அஞ்செவிப் படைத்ததற் குப்பயன் பூப்பக்
கலங்க லின்றியாங் கேட்டுளங் களித்தன மிப்பால் 44

[அவர்கள் நல்லூர் புராணத்தை இப்பொழுது அருள்க என வேண்டல்]

62 பள்ள நோக்கிய புனலெனப் பரம்பர நல்லூர்
எள்ள ரும்புகழ்ப் புராணம்யா மின்றுகேட் பதனுக்
குள்ள மாதர வுற்றதால் மற்றத னுண்மை
வள்ளல் நீமொழி வாயென; வகுத்தவன் மொழிவான் 45

[நல்லூர் மான்மியம் உரைப்பதற்கரிதாயினும் அறிந்த வாறுரைப் பேனெனச் சூதமுனிவன் சொல்லத் தொடங்குதல்]

63 துனிவின் மெய்த்தவத் தந்தணீர் தூநெறிப் படர்வான்
வினவு மித்திரம் நன்றுநன் றுலென விளம்பி
இனைய தித்துணைத் தென்னயா னியம்புமத் தகைத்தோ
அனைய தாயினும் அறிந்தவா றியம்புவ னன்றே 46

---

60 ஆனனம் - முகம், வாதராயணன் - வியாசமுனிவன்.

61 வலஞ்சுழி - திருவலஞ்சுழி, திருநல்லூருக்கு அண்மையில் உள்ள சிவத்தலம், வகுத்தாய் - வகுத்துரைத்தாய்.

62 பரம்பரம் - மிகமேலான, எள்ளரும் - குற்றமற்ற.

63 துனிவில் - வெறுப்பில்லாத, இத்துணைத்து - இவ்வளவினது.

[ சவுனகன் முதலான முனிவரை நோக்கிச் சூதன் கூறுகிறான் ]

64 என்ன மாதவச் சூதனும் இயம்பியன் பதனன்
முன்னம் மேவிய சவுனகன் முதலியோர் முகம்பார்த்
தன்ன வூர்திநேர் அந்தணீர் ! கேண்மினென் றுய்ந்து
கன்னல் மென்றெனக் கட்டுரை புரிதல்மே வினனல் 47

[ முதற்கண் சுந்தரநகரின் வளங்கூறிப்பின் மான்மியம்
உரைப்பேன் எனக்கூறிச் சூதன் நல்லூரின்
வளங் கூறத் தொடங்குதல் ]

65 நற்ற வத்தினீர் நலங்கெழு சுந்தர நகரின்
உற்ற நல்வள முரைத்தபின் மான்மிய முரைப்பன்
பெற்ற மூர்தரு பிஞ்ஞகன் அருளினு லென்ன
அற்ற மின்றிய வதன்வளம் உரைப்பதற் கமைந்தான் 48

[ சுந்தரநகரின் மாண்பு உரைத்தற்கரிதெனினும்
சிறிது உரைப்பேன் எனல் ]

66 ஓது மங்கநகர் சுந்தர நகரென உலகம்
மாத வத்தினீர் ! உரைக்குமால் மற்றதன் மாண்பு
பேதை யேனறிந் துரைப்பதோ ? ஆயினும் பெரிதுங்
காத லாற்சிறி தியம்புவ னென்றுகட் டுரைத்தான் 49

[ முதற்கண் காவிரி நதியின் பெருமை கூறத்தொடங்கிக்
கோள்நிலை மாறினும் தானிலை மாறாது பெருகும்
பொன்னி எனக் கூறல் ]

( எழுசீ ராசிரிய விருத்தம் )

67 செய்யமால் வரையின் இடத்தினிற் றோன்றித்
தராதலந் தனக்கொரு தாயாய்ப்
பெய்யுமா மழைதான் மறுப்பினுங் கோள்கள்
பிறழ்ந்துதன் நிலைபெயர்ந் திடினும்

---

64 சவுனகன் – சவுனக முனிவன், அன்னவூர்தி – பிரமதேவன், நேர் – ஒத்த, கன்னல்மென்றென – கரும்பினை மென்று சுவைத்தலைப்போல.
65 சுந்தரநகர் – நல்லூர், பிஞ்ஞகன் – சிவபெருமான்.
66 கட்டுரைத்தான் – விரிவுரை செய்தான்.

உய்யுமா தவத்தோர் உறையெனப் பொய்யா
துறுசுவை யமிர்தென லாகி
வையமீ துதவிக் கடலகம் நிறைப்ப
வருவது காவிரி நதியே 50

[ சந்தன முதலாய மரங்களையும் குலமணிகளையும் வாரிக்கொண்டு இருகரையும் ததும்ப களியானைபோல் வருமெனல் ]

68 சந்தனக் குறடும் ஏலமும் வரன்றித்
தடஞ்சினைக் குங்குமம் சாய்த்துச்
சிந்துர மருப்பும் கவரியும் வீசித்
தேக்கெரிந் திலவங்கம் சிந்தி
இந்திரத் திருவில் லெனக்குல மணிகள்
இருகரை மருங்கினுங் கொழித்து
மைந்துடைக் களிநல் யானைபோற் கலித்து
வருவது காவிரி நதியே 51

[ குஞ்சராரணிய முதல் பல இடங்களைக் கடந்து சிவபெருமான் அருள்போலச் செழித்து வருமெனல் ]

69 குஞ்சரா ரணியந் திருசிரப் பொருப்புக்
குலவுமை யாறுவண் குடந்தை
மஞ்சுசூழ் சோலை இடைமரு தோங்கும்
வளங்கொள்மா யூரம்வெண் காட்டோ
டெஞ்சலி லினைய பற்பல தானம்
இருகரை மருங்கினுந் தழைப்பச்
செஞ்சடைப் பெருமான் அருளெனப் பெருகிச்
செழித்தது காவிரி நதியே 52

---

67 செய்யமால் வரை – மேருமலை, தராதலம் – உலகம், உறையென – மழைபெய்வாயாக என்று கூற.

68 ஏலம் – ஏலக்காய், வரன்றி – வாரி, சிந்துரம் – யானை, இந்திரத் திருவில் – வானவில், மைந்து – வலிமை.

69 குஞ்சராரணியம் – யானைக் காடு, திருசிரப்பொருப்பு – திருச்சிராப் பள்ளி மலை.

[காவிரி நதி செந்தமிழோ டொக்குமெனல்]

70 சங்கமே வுதலாற் பற்பல துறைகள்
சார்தலாற் சந்தமார் தலினாற்
பொங்கொலி யியம்போல் தரங்கநண் ணுதலால்
பொன்மணிப் பூமலிந் திடலால்
வங்கநீள் வெள்ளக் கடன்மடுத் தலினால்
வடித்தசெந் தமிழென லாகி
எங்கணு நிலவி யணிநலங் கனிய
இயல்வது காவிரி நதியே 53

[காவிரிநதி மாதரை யொக்குமெனல்]

71 தெள்ளுபூந் தரங்கம் பொலிதலாற் குழைபாய்
செங்கயல் குமிண்மறி தலினால்
கள்ளுலாங் கமல மலர்தலாற் பவளக்
கடிகையால் நித்தில நிரையால்
அள்ளல்பாய்ந் திலங்கும் வலம்புரி யதனால்
ஆழியம் புட்குல மவற்றால்
ஒள்ளிய வராலால் யாமையால் மாதர்
ஒத்தது காவிரி நதியே 54

[கங்கை முதலாய நதிகளெல்லாம் தம் மாசுநீங்க வந்து காவிரியிற் படிவதால் இதன் மேன்மை கூறவரிதெனல்]

72 கங்கைகா ளிந்தி வாணிபற் குனிவான்
கவுதமை வைகைதண் பொருநை
இங்கிவை முதலாம் நதிகளுந் தங்கள்
எத்துணைக் கோடியும் வந்து

---

70 சங்கம் – சங்கு – முச்சங்கம், துறை – நீர்த்துறை – அகத்துறை புறத்துறைகள், சந்தம் – சந்தனம் – ஓசை, தரங்கம் – அலை – செய்யுளுறுப்பு, பொன், மணி, பூ – தமிழுக்கு மங்கல முதன்மொழிகள் அணி – அழகு – செய்யுளணி.

71 குழை – தழை, காதணி, கயல் – மீன், விழி, குமிழ் – குமிழி, மூக்கு, வரால், யாமை – மகளிர் கால், பாதங்களுக்கு உவமை.

தங்கண்மா சகலப் படியுமா லெனநூல்
சாற்றுமாற் காவிரி மேன்மை
அங்கண்மா நிலத்தில் யாவர்கட் டுரைப்பார்
அனந்தனும் அனந்தம்நா விலனே 55

[ இதுமுதல் நாட்டுவளம் கூறத்தொடங்கிச் சோழநாடு இறைவன் திருப்பதிகள் பல உடையது; நிலமடந்தையின் மங்கல நாண்போல் நிறைந்தது என அதற்குத் தோற்றுவாய் செய்கிறது இப்பாடல் ]

73 அளவிலாப் பெருமைத் தாயவிப் பொன்னி
அணிநதி பாய்தலின் நாளும்
வளமெலாங் கனிந்த திருநில மடந்தை
மங்கல வணியின்மல் கியது
தளவவாள் நகையாள் பங்கின னமருந்
தானம்பற் பலதழைத் துளது
துளவமா லுதரம் நிகர்த்தது வானுந்
தொழுவது சோழநன் னடு 56

[ கமுகு முதலாய மரங்களாலும் கரும்பு வாழை நெல் முதலியவற்றாலும் நிறைந்து பயனற்ற காடுகள் இல்லாதது சோழநாடு எனல் ]

74 பாளைவாய்க் கமுகும் தூக்குறிக் குடக்காய்
பருமுடத் தாழையும் பராரைக்
கோளுலாம் பசுமுட் புறக்குடக் கனிகள்
கொம்பினிற் பழுத்தவண் பலவும்
நீளிருஞ் சினைய கொழுங்கனி மாவும்
நெட்டிலைக் கரும்பும்வா ழைகளும்
ஆள்வழக் கறுக்கும் சாலியு மல்லா
அடவியொன் றில்லதந் நாடு 57

---

72 வாணி – சரசுவதிநதி, மாசு – குற்றம், அனந்தன் – ஆதிசேடன்.

73 மங்கலவணி – தாலி, தளவம் – முல்லை, தானம் – பதி, துளவமால் – துழாய் மாலையணிந்த திருமால், உதரம் – வயிறு, வானும் – தேவர்களுலகமும்.

74 குடக்காய் – தேங்காய், பராரை – பருத்த அடிமரம், குடக்கனி – பலாக்கனி, சாலி – நெல், அடவி – காடு.

[நெல் வயலினின்றும் பிறழ்ந்து துள்ளும் வாளைமீன் வாழை முதலாயவற்றை உழக்குமென அதன் வளங் கூறுகின்றது இப்பாடல்]

75 கொழுங்கதிர்ச் சாலி வேலிசாய்த் தரம்பைக்
கூன்புறப் பழக்குலை குலுக்கிச்
செழுஞ்சுவைக் கரும்பின் காடலைத் துந்தித்
தேன்பொதி மாங்கனி சிதறி
எழுந்துமேல் வெடிபோய் முப்புடைக் குடக்காய்
எற்றிநீள் வருக்கைமேற் றாவிப்
பழம்படு சடைத்தாற் றிளம்பெருங் கமுகின்
பாளைவாய் வாளைபாய்ந் துழக்கும் 58

[நால்வகை யமிர்தும் சுரக்கும் சுரபிபோல் பல்வளம் நிறைந்தது சோழநாடு எனல்]

76 போற்றுநற் றருமா திகள்கவை யடியாய்ப்
போகமும் வீடும்நன் மருப்பாப்
பாற்கடல் வயிறு சூற்கொழுஞ் செருத்தல்
பழனமும் பழம்பதி களுமாம்
நாற்றிசை முகமும் முலையொரு நான்காம்
நாடொறும் வரைமுத லவற்றிற்
றோற்றுநால் வகைய வமிர்தமும் சுரக்கும்
சுரபிவண் சோழநன் னாடு 59

[எண்ணான்கு அறங்கள் நிகழ்தலான் பார்வதியையும் வளத்தால் திருவையும் உணர்வால் அருமறையையும் ஒக்குமிந்நாடு எனல்]

77 தணவுத லரிய வறங்கள் எண்ணான்கும்
தாம்தளிர்த் திடுதலாற் பசும்பொன்
கணமலை யரசன் பாவையும் போலும்;
காட்சியாற் றிருவையும் மானும்

---

75 அரம்பை – வாழை, வருக்கை – குறும்பலா, தாறு – குலை, வாளை – மீன்.

76 கவையடி – பிளந்த குளம்புள்ள கால்கள், மருப்பு – கொம்பு, செருத்தல் – பால்மடி, சுரபி – காமதேனு.

நணுகுதல் புரிந்திட் டுழத்தொறும் வளங்கள்
நவநவ மாகநல் குதலால்
உணர்தொறும் முணர்வு தருமரு மறையும்
ஒக்குமாற் சோழநன் னாடு 60

**[வேளாளர் அந்தணர் வணிகர்தம் கடமை தவறாத செயலால் கலத்தினும் காலினும் மல்கும் பொருள்களால் நிறைந்தது எனல்]**

78 வேண்டுநல் லுணவு பயந்திடும் விளையுள்
விளைக்குநர் அந்தணர் துறந்தோர்
காண்டகு சிறப்பிற் றொலைவிலாப் பொருள்கள்
கலத்தினுங் காலினுந் தருவோர்
ஈண்டுவ தளப்பில் வளங்களால் விரும்பி
ஏனைநாட் டவருமெய் துவது
தூண்டுவாம் பரியிற் றிரையெறி பொன்னி
சூழ்வரு சோழநன் னாடு 61

**[மிக்கபெயல் விட்டில் கிளிமுதலிய வின்மையால் விளைவுமிக்கு நாடொருங்கு வந்துறினும் சுமக்கும் சால்பினதெனல்]**

79 நனிபெயல் பெயல்மற் றின்மைமூ டிகந்தீ
நவைதரு பதங்கம் பைங்கிள்ளை
முனிவுசெய் யரசென் றினையதீ துகள்தீர்
முறைமையா லாற்றவும் விளைவ(து)
இனிதலாப் பகைவந் திருத்தலால் நீதி
இலாமையால் உண்டியின் மையினால்
துனிவுகூர்ந் தேனை நாடொருங் குறினும்
சுமப்பது சோழநன் னாடு 62

---

77 **தணவுதல்** - நீங்குதல், பாவை - பார்வதி, மானும் - ஒக்கும்.

78 **பயந்திடும்** - உண்டுசெய்யும், விளைக்குநர் - வேளாளர், கலம் - **கப்பல்**, கால் - வண்டி, வாம்பரி - தாவிச் செல்லுங் குதிரைகள்.

79 நனிபெயல் - பெருமழை, இன்மை - மழையின்மை, முடிகம் - எலி, பதங்கம் - விட்டில் பூச்சிகள், முனிவுசெய்யரசு - கொடுங்கோலரசன். ஆற்றவும் - முழுமையும், உண்டி - உணவு, துனிவு - வறுமை.

[ உறுபசி ஓவாப்பிணி பகை முதலியவை
இன்மையாற் சிறந்து விளங்குவதிந் நாடு எனல் ]

80 உறுபசி ஓவாப் பிணியுட னொருவி
யொருபுடை யதன்கணின் றிறுத்துச்
செறுபகை சோரர் ஆறலைப் போர்கள்
தீத்தொழிற் குறளைகூ றுநர்கள்
மறமிகு கேழல் குடாவடி வேங்கை
வஞ்சனைக் குறும்புமில் லது, நீர்த்
துறைதொறும் பொன்னி பொன்கொழித் தென்றும்
சூழ்வரும் சோழநன் னடு 63

[ இயற்கையின் முனிவாற் கெடாதது இயற்கை முனியினும்
கடல் வளத்தாலும் மலை வளத்தாலும் விளங்கும்
பல நகரங்களை உடையது எனல் ]

81 அடுபகை யதனற் கெடுவதை யறியா
தரிதினிற் கெடுவதை யுறினும்
கடிமலர்ப் பழனம் தண்டலை களினு
கரங்களின் விளைவெனப் படுவ
உடையது, துரவு கேணியாற் றிகழ்வ,
தொருபுடை யாய்வளம் பெருக்கும்
தடவரை யழியா நகரிபற் பலவுந்
தழைப்பது சோழநன் னடு 64

[ பிணியின்மை ஏமம் முதலியவற்றுற் சிறந்து செம்பியர்
புரப்பச் செழிப்பதிச் சோழநாடு எனல் ]

82 வெம்பிணி யிலாமை செல்வமிக் குடைமை
விளைவின்ப மேமமென் றின்ன
ஐம்பெருக் கவினும் கெழீஇயது வாழ்வோர்
அலம்வந்து வருந்துறு வகையாற்

---

80 உறுபசி – மிக்கபசி (பட்டினி), ஓவா – நீங்காத, ஒருவி – நீங்கி, சோரர் – கள்வர், ஆறலைப்போர் – வழிப்பறி புரிவோர், குறளை – புறங்கூறல், கேழல் – பன்றி, குடாவடி – கரடி, வஞ்சனைக்குறும்பு – தீயவர் கூட்டம்.

81 அடுபகை – அழிவுசெய்யும் பகை, பழனம் – நன்செய், தண்டலை – சோலை,

றம்பமா கியநல் வளங்கள்தாம் தாமே
சார்வதித் தகையன பிறவும்
செம்பியர் புரப்பச் சுரப்பது நாளும்
செழிப்பது சோழநன் னாடு 65

இதுமுதல் சோலைவளங் கூறுகிறார்

[ உலகெலாம் அளக்கும் அளவற்ற செழித்த சோலைகள் எனல் ]

( கலித்துறை )

83 வான ளப்பன மாதிர மளப்பன வாசக்
கான ளப்பன கார்வள மளப்பன அளிக்குத்
தேன ளப்பன திகிரிமா லெனவுல கெல்லாந்
தான ளப்பன அளப்பில தண்டலை நிலையே 66

[ சண்பகம் வகுளம் முதலிய மரங்களின் காட்சி ]

84 சந்த நீடுவ சண்பகம் வகுளங்கள் தழைப்பக்
கொந்து லாமலர் பாடலஞ் சரளங்கள் குழைப்பக்
கந்தி சூதநீள் வருக்கைகா கோளிபுன் னாகம்
மந்தி பாய்ந்துகள் வன ;தே மாவிவை மலிவ 67

[ இந்திராதி தேவர்களும் விரும்புந்தகைய சோலைகள் எனல் ]

85 கொந்து லாமலர் துதைவன குரையளி குமிறச்
சந்த நீடிசை மாங்குயில் மிழற்றுவ, தவழ்ந்து
மந்த மாருதங் குலவுவ மஞ்ஞைகள் நடிப்ப
இந்தி ராதிபர் உறைவதற் கேக்கறுந் தகையே 68

---

82 ஏமம் – இன்பம், பாதுகாப்பு, கவின் – அழகு, கெழீஇயது – பொருந்தியது, அலம்வந்து – மனங்கலங்கி, தம்பம் – தூண், செம்பியர் – சோழர்.

83 மாதிரம் – திக்குகள், கான் – சோலை, கார் – மழை, திகிரிமால் – சக்கரத்தையுடைய திருமால்.

84 சந்தம் – சந்தன மரம், சூதம் – மா, வருக்கை – பலா.

85 துதைவன – அடர்ந்திருப்பன, குரையளி – இசைபாடும் வண்டு, சந்தம் – ஓசை, மந்தமாருதம் – மெல்லிய காற்று (தென்றல்) ஏக்கறும் – ஏங்கும்.

[மாதர் கூந்தலுலர்த்தும் புகையும் கரும்படுபுகையுமே புயல்கள் எனல்]

86 பாங்கு யிற்குலம் எழிசை எழுப்பலும், மயில்கள்
பாங்கி னுடல்செய் பனிமலர்த் தண்டலை தவழ்வ
தேங்கொள் கூந்த லுக்கிடும் புகையது செறிந்த
பூங்க ரும்படு நறும்புகை யல்லதில் புயல்கள் 69

[வண்டுகள் நீங்காது மொய்க்கும் மலர்களையுடையவச் சோலைகள் எனல்]

87 கயலுற் றோடரிக் கண்ணியர் கண்ணியி லகப்பட்
டயலுற் றோடுத லறிகலா ஆடவர் கடுப்பப்
புயலுற் றுடுபூம் பொதும்பரிற் புனைமலர் மடலின்
மயலுற் றேறுவ வரிமிடற் றளியினம் மாதோ 70

[மன்மதனுக்கு அத்தாணி மண்டபமாகும் சோலைகள் எனல்]

88 தென்ற லஞ்சிறு குழவிக்கு முன்றிலாச் செழிப்ப
மன்றல் வேனிலான் அமருமத் தாணியா யமர்வ
ஒன்றி யாடுமா மஞ்ஞைகட் கரங்கமா யுறுவ
வென்றி வேள்பசும் புரவிக்குப் பந்தியாய் மிளிர்வ 71

[கதிரவன் தேர்ப் பரிகளுக்குக் காவணமாகத் திகழ்வதிது எனல்]

89 மடுத்து நோக்கிய நாட்டங்கள் வாங்கொணா வளத்த
அடுத்த வெய்யவ னெழுபரிக் காவண மாவ
விடுத்த தேன்மழை மலிற்றுவ வேள் ... ... ...
தொடுத்த தாரெனப் பூந்துணர் நாலுவ சோலை 72

---

86 அடுநறும்புகை - காய்ச்சும் அடுப்பின் புகை, புயல்கள் - மேகங்கள்.

87 பொதும்பிற் - சோலைகளில், வரிமிடற்றளி - புள்ளிகளையுடைய வண்டுகள்.

88 முன்றிலா - மனைமுற்றமாக, மன்றல் - நறுமணம் பந்தி - குதிரைக் கொட்டில், மிளிர்வ - விளங்குவ.

89 காவணம் - பந்தர், வேள் - மன்மதன்.

[ வயல்கள் எங்கும் எழும் பல்வேறு ஓசைகளின் வருணனை ]

90 உழவ ரோதையும் ஒழுகுநீ ரோதையுப் நாட்கொள்
விழவ ரோதையும் மதகுபா யோதையு விளையுட்
கிழவ ரோதையும் குரவையி ேனாதையுங் கெழீஇய
மழவ ரோதையும் மலிவன வளனுடை வயல்கள் 73

[ பல்வேறு ஆரவாரங்களின் வருணனை ]

91 ஆலை பாயுநர் அரவமும் அகன்பணை யுழுநர்
மாலை யேருரப் பரவமும் பின்முடி நடுமார்
காலை யெய்துநர் குரவையி னரவமுங் கலித்து
வேலை யேழினும் எழுமடங் கெழுவன விம்மி 74

[ கரும்பினை ஆலையிலிடும் உழவர் தம் செயல் ]

92 மணக்கும் ஓதியர் மழலையைக் கவர்ந்தன வென்னுத்
தணப்பி லாதவை தண்டித்துக் கொள்ளுநர் கடுப்பக்
கணக்க ரும்புகள் கழித்தியாப் புறுத்துகண் ணுடைய
இணக்கும் ஆலையிட் டொறுக்குந ரிடந்தொறும் மாதோ 75

[ கமுகமரங் குலைகளுடன் விளங்கும் வருணனை ]

93 ஆலு மாதரார் மிடற்றினுக் கஞ்சிய பூகம்
காலும் முத்துடன் மாணிக்கங் கையுறை யாக
ஏலு மாறுகொண் டேந்துபு நிற்பது மானச்
சூலு பாளைக ளுடன்பழுக் காய்குலை சுமக்கும் 76

---

90 ஓதை - ஓசை, நாட்கொள் – திருவிழா நாள்கொள்ளும், குரவை - குரவைக் கூத்து, மழவர் – வீரர்.

91 பணை - (பண்ணை) வயல்கள், உரப்பரவம் - மிக்க ஒலிகள், வேலை - கடல், விம்மி – ஆரவாரித்து.

92 ஓதியர் – மகளிர், தணப்பு – நீங்குதல் – பிரிதல், தண்டித்து – வெட்டி (தண்டனை கொடுத்து என்னும் பொருள் தோன்ற நின்றது) கணக்கரும்பு - கூட்டமாக வளர்ந்த கரும்பு, ஒறுக்குநர் - பிழிபவர் (தண்டிப்பவர் என்பது குறிப்பு.)

93 ஆலும் – நடனம் செய்யும், மிடறு - கழுத்து, பூகம் - பாக்கு மரம், காலும் – கொட்டிச் சொரியும், கையுறை – காணிக்கை, ஏலும் - ஏற்கும், மான – ஒப்ப, சூலுபாளை - சூல்கொண்ட பாளை, பழுக்காய்-பாக்கு.

[ வாழைமரங்கள் குலைசாய்த்து நிற்பதன் வருணனை ]

94 கலிகொள் வண்டினம் நறவுகூட் டுண்டன விடுத்தே
ஒலிசெய் யோதியர் உருவிற் குடைந்தன மென்னுப்
புலிய டிக்கொடுங் காய்க்குலை பூவொடுங் கதலி
தலைவ ணங்குநர் போன்மென விடந்தொறும் சாய்க்கும் 77

[ பலாவும் மாவும் மாதுளமும் கமுகும் பழுத்து நிற்கும் காட்சி ]

95 குலவு வான்முடி நடுபவர் குரவைக்கு வியந்து
பலவு மாவுமா துளங்கமும் பசும்பொனு மறவைத்
துலவு செம்பொன்மா ணிக்கமு முதவுதல் போல
நிலவு மென்பழங் கனிந்தன நிறைநிறை சிந்தும் 78

[ நதிகளில் வெள்ளம் இந்திரவில்லைப்போலப்
பரவிஓடும் எனல் ]

96 கான லம்புசெங் கமலத்தம் பூமடல் காலும்
தேன லம்பியும் தீங்கனித் தேறலுட் டிளைத்தும்
பூந றுந்துக ளாடியும் பொருபுனல் வெள்ளம்
வானி லிந்திர வில்லென வளைந்துமேல் வாவும் 79

[ சோணாட்டில் வயலும் சோலைகளுமன்றி
வெற்றிடமொன்றில்லை எனல் ]

97 தேன்க னூறிய செந்நெலும் வெண்ணெலுஞ் செறிந்து
வான்க ணீடிய கன்னலும் வாழையும் கமுகும்
கான்கொள் மாவுடன் வருக்கையுங் கானமு மல்லால்
மீன்கண் அத்துணை யாயினும் வெற்றிட மின்றால் 80

---

94 கலி – ஆரவாரம், நறவு – தேன், உருவிற்கு – கூந்தல் அழகிற்கு உடைந்தனம் – தோற்றுப்போயினேம், கதலி – வாழை

95 குலவு – விளங்கும், முடி – நாற்றுமுடி, குரவை – வயற்பாட்டு.

96 கான் – நறுமணம், அலம்பும் – வீசும், அலம்பி – கலக்கி, தேறல் – தேன் வாவும் – விரைந்து செல்லும்.

97. தேன்கனூறிய – இனிதுமுற்றிய, கான் – சோலை, வருக்கை – பலா மரம், மீன்கண்ணின் அளவுகூட வெற்றிடம் இல்லை என்றபடி

[ குரம்பிலும் பரம்பிலும் வரம்பிலும் கரம்பிலும் காந்துவன இவையெனல் ]

98 குரம்பிற் காந்துவ கொழித்திடும் பசும்பொன்,செம் பவளப்
பரம்பிற் காந்துவ இடறிய பன்மணித் தொகைகள்
வரம்பிற் காந்துவ வலம்புரி யுயிர்த்தவெண் முத்தம்
கரம்பிற் காந்துவ களையெனக் களைந்தசெங் கழுநீர் 81

[ எங்கெங்கும் பாலும் தேனுமே பெருகிவழியும் எனல் ]

99 எருமைப் போத்துடன் ஏற்றினஞ் சிலம்பப்பண் ணுறுத்தி
உரிமை மள்ளர்கள் உழுந்தொறும் பாய்வன வெழுந்து
வரிவ ரான்முடி முட்டலும் வருமுலை சுரந்து
சொரியும் பாலலாற் கமலங்கள் தோடுடைந் துகுதேன் 82

[ சங்கீன்ற முத்தினை அன்னப் பேடைதன் சினையென ஐயமுற்றடை காக்கும் எனல் ]

100 சங்கு சூலுளைந் தலரிசெந் தாமரைப் பொகுட்டில்
அங்க ணீன்றவெண் முத்தினைக் கருவென வயிர்த்துப்
பொங்கு நீடொளிப் பொலஞ்செய் தோலடிச் செவ்வாய்ச்
செங்க ணோதிமப் பேடைகள் சென்றடை கிடக்கும் 83

[ உழுவோர் முதலானோர் எழுப்பும் சும்மையும் அரவமுமே எங்கும் நிறைந்திருக்கும் எனல் ]

101 உழவர் சும்மையும் உறுபக டுரப்புநர் கலிப்பும்
குழுமி வான்முடி நடுபவர் குரவையும் குயங்கைத்
தொழுவர் நெல்லரி அரவமும் அரிபல தொகுக்கும்
மழவ ரோதையும் மாறுமா றுய்த்தலை மயங்கும் 84

---

98 குரம்பு – செய்கரை, காந்துவ – ஒளிவீசுவனவாய், பரம்பு – வயல் வரம்பு – வரப்பு, கரம்பு – வறுநிலம்.

99 போத்து – காளை, ஏறு – ஆனேறு, சிலம்ப – ஆரவாரிக்க.

100 அங்கண் – தாமரைப்பொகுட்டிடத்து, கரு – முட்டை, அயிர்த்து – ஐயுற்று, ஓதிமம் – அன்னப்பறவை.

101 சும்மை – ஆரவாரம், உரப்புநர் – செலுத்துபவர், கலிப்பு – ஒலி குயம் – அரிவாள், ஓதை – ஓசை.

[மலைபோன்ற நெற்குவியலை மேருமலை எனக்கருதி
மதிவலஞ்செயவரும் எனல்]

102 இட்ட போரழித் தருமைவன் பகட்டினுற் றெளித்துங்
கட்ட மாகவை களைந்துகா லுறுத்துநெல் லமலை
நெட்டை மேருமால் வரையெனக் கதிருடன், நிலவார்
வட்ட மாமதி வலஞ்செய்வான் நினைந்தவண் வருமால் 85

[பல்வேறு பொருள்களை ஏற்றிச்செல்லும் வண்டிகளின் வருணனை]

103 பழங்கொள் பண்டியும் பகவிலைப் பண்டியும் பழுக்காய்த்
தழங்கு பண்டியும் மெல்லிலைப் பண்டியுந் தாழைச்
செழுங்கு லைப்பண்டி தன்னொடு முதிரை நேர்சிறப்ப
வழங்கு பண்டியும் இடந்தொறுந் தலைத்தலை மயங்கும் 86

104 ஆர மாமுலை யந்நலா ருணக்கி.........
ஒரு நீடுகிர் வாரண மோப்புவ வுலவாச்
சார லோங்கிய தூம்புடை வான்றொடுந் தகைய
வேரல் பாங்கரின் விண்டுகண் சொரிமுத்த மாதோ! 87

[ஆய்ச்சியர் தயிர்கடையும் மத்தொலியைப் புலி முழக்கெனக்
கருதிச் சிறுவர்கள் அஞ்சி அழாமலிருப்பர் எனல்]

105 இளைக்கு நுண்ணுசுப் புறுவலி புலிமுழக் கென்று
அளிக்கும் பாலரை அழாவகை யச்சுறுத் துவன
பளிக்குப் பாறையிற் பட்டவெண் டயிருடைந் தழுங்க
வளைக்கை யாய்ச்சியர் மதித்திடும் மத்தொலி மாதோ 88

---

102 போர் – நெற்சூட்டின்போர், வை – வைக்கோல், காலுறுத்து – காற்றில்தூற்றி, நெட்ட – நெடிய, நிலவு – ஒளி, அவண் – அவ்விடத்திற்கு.

103 பண்டி – வண்டி, பகவிலை – வாழையிலை, தழங்கு – விளங்கும், மெல்லிலை – வெற்றிலை, தாழை – தென்னை, முதிரை – துவரை.

104 ஆரம் – சந்தனம், ஒரும் என்பது ஆசை. உகிர் – நகம், வாரணம் – கோழி, வேரல் – மூங்கில், விண்டுகண் – கணுஉடைந்து.

105 உறுவலி – மிக்கவலிமை, பாறையின் – பாறையைப்போல, பட்ட – உறைந்த, மதித்திடும் – கடையும்.

[பவளக்கொடிகளை நெருப்பென அஞ்சித் தடம்பணைகளில் உள்ள அன்னங்கள் வெருவுமெனல்]

106 நீர்த்த டம்பணை நிலவிய பேட்டிள வன்னம்
பார்ப்பி னந்தழீஇ வெருக்கொள நெருப்பெனப் படர்வ
கார்த்த டங்கடற் கானலங் கழிக்கரைக் கிளைத்த
வார்ச் செழுங்கிளை வளர்பவ ளக்கொடி மன்னோ 89

[இப்பாடல் முதலாக நகர்வளங் கூறத்தொடங்கி முதற்கண் பூசுரர்பொலியும் இந்த நல்லூர் சோழநாட்டிற்கோர் மணிமுடியாகத் திகழ்ந்து பத்தியும் புத்தியும் முத்தியும் அளிப்பது எனச் சிறப்பிக்கப்படுகின்றது]

(ஏழுசீர் ஆசிரிய விருத்தம்)

107 அத்தகை வளங்கொள் சோழநன் னாட்டுக்
கரும்பெற லணிமணி முடியாய்
வித்தக முலவா மேதகு சிறப்பின்
விழுப்பொரு ளனைத்துநல் குவதாய்ப்
பத்தியும் முத்தி பணைத்தெழும் பரிசும்
படிமையுங் கொடுப்பது வாகிப்
புத்தியும் வீடும் அளிப்பதாய் ஓங்கும்
பூசுரர் பொலிதரு நல்லூர் 90

[நல்லூரின் நீர்த்தடங்கள் அவனிமாது சுந்தரநாயகர்க்கு ஏந்தும் சித்திரப்படமென விளங்குமெனல்]

(கலித்துறை)

108 முத்த வெண்மணி யிருவிளிம் பெறிந்திடு முறையால்
பத்தி செம்பது மங்களே மலர்ந்திடும் பண்பால்
அத்தர் சுந்தர நாயகர்க் கவனிமா தேந்தும்
சித்தி ரப்படா மொத்தன தீர்த்தநீர்த் தடங்கள் 91

---

106 பணை - வயல், பார்ப்பு - குஞ்சு, வெருக்கொள - அச்சமுற, வார் - நீண்ட.

107 வித்தகம் - அறிவுஞானம், உலவா - நீங்காத, பரிசு - தன்மை, படிமை - தவவேடம், பூசுரர் - அந்தணர்.

108 விளிம்பு - கரை, பத்தி - வரிசை, அத்தர் - இறைவர், அவனிமாது - பூமிதேவி, தடங்கள் - குளங்கள்.

[நீர்த்தடங்கள் எங்கும் கடலெனத் ததும்பி நிற்கின்ற சிறப்பு]

109 கடவு ளர்க்கமு தளித்துமை காதலற் கனலும்
விடம ளித்திடு தவற்றினைப் பொறுத்திட வேண்டி
மடல்செ றித்தபூ வாரிசக் கைத்தலங் கூப்பிக்
கடல்ம டுத்தெனக் குலவுவ கயம்படு தடங்கள் 93

[இத்தலத்து நீர்த்துறைகளில் வெள்ளிக் குடங்கள்
பொற்குடங்களன்றி மட்குடங்கள் காணப்படா என்பது]

110 விரும்பு வெள்ளியங் குடங்களும் மேதினி விற்கும்
அரும்பொ னாடகக் குடங்களும் அவிர்மணி ததும்பும்
சுரும்பு லாவரு துறைதொறும் தோய்வன வன்றிக்
கருங்க லம்படி யாதன கன்னியந் துறைகள் 93

[எழுநிலை மாடங்கள் சூரியமண்டலத்திற்கும்
மேலும் உயர்ந்தன என்பது]

111 விலகி வில்லுமிழ் விரிகதிர்க் கடவுள் மண்டிலத்தை
திலக மாமெனத் தீண்டுவ தெண்டிரை யாடை
உலக ளந்தவன் ஒப்பன, உலக மேழனைய
நிலையொ ரேழினை உடையன நெடிய கோபுரங்கள் 94

[கோபுரமும் நெடுமதிலும் பாற்கடலைக் கடைந்த
மேருவும் வாசுகியும் ஒப்பன என்கிறது]

112 மேரு மால்வரைச் சிகரத்து விளங்குபொற் றூவி
ஆரு மந்தரப் பொருப்பினை யொப்பமற் றதனைத்
தேரு மாமணி குயிற்றிய நெடுமதில் சேரின்
காரு நீளுடல் உரகநாண் சூழ்ந்ததொப் பாமால் 95

---

109 கனலும்விடம் – ஆலாலம், வாரிசம் – தாமரை, கயம் – நீர்நிலை.

110 மேதினிவிற்கும் – உலகையே விலையாகப் பெறும், ஆடகம் – உயர்ந்த பொன், சுரும்பு – வண்டு, கருங்கலம் – மண்பாண்டங்கள், **துறை** – நீர்த்துறை.

111 வில்லுமிழ் – ஒளிவீசும், உலகளந்தவன் – திருமால், (நெடியோன்)

112 தூவி – (ஸ்தூபி) சிகரம், முடி, குயிற்றிய – பதித்த, உரகநாண் – பாம்பாகிய கயிறு.

[ மதில் சூழ்ந்து விளங்கும் வெண் சுதைமாடங்களின் வருணனை ]
( கலிவிருத்தம் )

113 தீற்றுவெண் சுதையுடைச் செறிந்த மாடங்கள்
மேற்படப் புரிசையுள் விளங்கித் தோன்றுவது
கார்ப்பமுத் தன்னமட் கலத்தின் அட்டதீம்
பாற்குமி ழிகளெழுந் தனைய பண்பிற்றே 96

[ ஆவணத்தெருக்கள் நதிகளை ஒத்துள்ளன என்கிறது இப்பாடல் ]

114 கூறுகூ றினமணி குலவு நீர்மையான்
மாறுமா றுயெதிர் மலிந்த வோசையால்
வேறுவே றிடந்தொறு மிகுந்த சங்கத்தால்
ஆறுநே ராமெனக் கிடந்த தாவணம் 97

[ இந்நகரம் யானை யோடிணையாகுமென வருணித்தல் ]

115 கொண்டலைத் தொடுவன கும்ப மேய்ந்தன
வெண்டர ளத்தவான் கோடு விஞ்சின
தண்டுத லின்றிய தான நீரின
மண்டுதோட் டிய,மத மலையு மல்லன 98

[ கடலோடிணையாக வருணித்தல் ]

116 மருங்குவீழ் திரையின மணியின் மல்கின
பொருந்துநீள் வேலையும் புடைகு லாவுவ
திருந்திய மாதரை யடுத்த செவ்விய
கருங்கடல் அல்லன களபந் தீற்றின 99

---

113 தீற்றுவெண்சுதை – பூசியமைத்த சிற்பம், புரிசை – மதில், அட்ட – சமைத்த.

114 சங்கம் – சங்கு, கூட்டம், ஆறு – நதி, ஆவணம் – அங்காடிவீதி.

115 கொண்டல் – மேகம், கோடு – குவடு (உச்சி) தண்டுதல் – தடைப் படுதல், தானநீர் – மதநீர்.

116 மருங்கு – பக்கம், திரை – அலை, வேலை – கடல், மா + தரை, மாதர் + ஐ.

[ குண்டங்களோடு ஒப்ப வருணித்தல் ]

117 பாட்டளி துதைந்தன பதுமம் பூத்தன
மோட்டுடல் வலம்புரி முழக்கம் விம்மின
தோட்டிடைக் கருங்கயல் துள்ளும் நீரின
கோட்டக மலர்வன குண்டம் போல்வன 100

[ மேருமலையோடொப்ப வருணித்தல் ]

118 எண்டரு சிகரத்த இலங்கு பானுவின்
மண்டிலம் மதியுடன் வலஞ்செய் கிற்பன
கண்டவர் வியப்பசெங் கனக மாவன
விண்டலைத் தொடுவன மேரு வல்லன 101

[ நவமணிகளாலும் நிறைந்த மாடங்களின் வருணனை ]

119 வச்சிர மிழைத்தன மணியின் வேய்ந்தன
பச்சையிற் குயின்றன பவழங் கொட்டின
முச்சகம் விற்கும்வெண் முத்தின் மொய்த்தன
கச்சமில் லனவளங் கனிந்த மாடமே 102

[ கோமறுகின் மாடங்கள் பற்றிய வருணனை ]

120 தூமலர் மழையொடுந் தவழ்ந்து சூழ்வன
மாமணி புனைந்தன மடந்தை மார்முகத்
தாமரை மலர்ந்தன தவள மாடங்கள்
கோமறு கிடந்தொறும் கோடி யென்பவே 103

---

117 பாட்டளி - பாடும் வண்டுகள், துதைந்தன - நெருங்கியன, பதுமம் - தாமரை, மோட்டுடல் - பெரிய வயிற்றையுடைய உடம்பு, தோடு - காதணி, கயல் - விழி, மீன், கோடு கொம்பு.

118 பானு - சூரியன், கனகம் - பொன்.

119 வச்சிரம் - வைரம், பச்சை - மரகதமணி, கச்சம் - அளவு.

120 தவளமாடங்கள் - வெண்சுதைபூசிய பெருமாளிகைகள், கோமறுகு - அரசர் தெரு.

[ துகிற்கொடிகள் வானநதியின் திரையென விளங்குமெனல் ]

121 பூசல்வண் டுழுகுழற் பொன்ன னூர்பயில்
தேசுலாம் மேனிலை நுடங்கும் செவ்விய
மாசில்வெண் டுகிற்கொடி வான நீணதி
வீசுதெண் டிரையென விளங்கித் தோன்றுமே 104

[ மாடங்களில் மேகங்கள் படிவதற்குக் கற்பனை ]

122 நங்கைமா ரோதிக்கு நாணி யோஅலாற்
சிங்கவே றனையவர் கொடைக்குத் தேம்பியோ
தங்கணீர் பனிப்பபோ லசும்பு தண்ணென
மங்குன்மே னிலையலம் வந்து தாழுமே 105

[ வளம் நிறைந்த மாடங்களின் உயர்ச்சி பற்றிய வருணனை ]

123 பளிங்குபோழ்ந் தடுக்கிய பசும்பொற் பித்திய
விளிம்புமூத் தெறிந்தவே திகைய மேனிலத்
தளங்கள்விண் டொடுவன தாவில் பல்வளம்
அளந்தறி வதற்கெழு மமைதி யொப்பன 106

[ இல்லந்தொறும் பூரண கும்பங்கள் விளங்கும் காட்சி வருணனை ]

124 சுரர்க்கமு தளித்தமால் தூய பூசுர
வரர்க்கும்வண் கடங்கொடு வழங்க வுய்த்தென
பரக்குவண் மாமணி வாசற் பாங்கெலா
நிரப்புபூ ரணகும்பம் நிலவித் தோன்றுமே 107

---

121 பூசல் - ஆரவாரம், தேசு - ஒளி, வானநீணதி - ஆகாய கங்கை.

122 ஓதி - கூந்தல், கொடை - வள்ளன்மை, அசும்பு - நீர்த்துளி, மங்குல் மேனிலை - மேகந்தவழும் மேல்மாடங்கள்.

123 பித்திய - திண்ணைகளை உடையவை, வேதிகை - மேடை,

124 சுரர் - தேவர், மால் - திருமால், பூசுரவரர் - அந்தணர்கள் கடம் - குடம், உய்த்தென - செலுத்தியதுபோல.

[மதிக்கண் உள்ள மறுவிற்குக் கற்பனைக் காரணம்]

125 புடைதவழ் மதிமிசை பொன்ன னார்முலைக்
கொடிபட எழுதிய கொண்ட கோலினைக்
கடைபுடைத் திடுந்தொறும் கதுவு நானநீர்
இடைசிந் தினதைமறு வென்னும் வையமே 108

[தூண்களில் கட்டப்பெற்றிருக்கும் பொருள்களின் வருணனை]

126 கன்னலுங் காய்க்குலைக் கமுகும் வாழையும்
பொன்னினும் மணியினும் குயின்ற பொற்பின
முன்னிய நறுமணி முகப்பிற் சேர்த்தன
துன்னிய வச்சிரத் தூணந் தோறுமே 109

[கடலுக்கு முந்நீர் எனப் பெயர் வந்ததுபற்றி ஒருகற்பனை]

127 சந்திர காந்தமேற் றலங்கள் காலுநீர்
மைந்துடை மன்னவர் வழங்குந் தானநீர்
சிந்துரங் கவுண்மடை திறந்து பாயுநீர்
முந்தலிற் பரவைமுந் நீரென் றாயதே! 110

[அந்நகரத்து அணிமணிகள்
மாலைகள் அன்றிக் குப்பைகள் இல்லை எனல்]

128 பத்திசெய் மணிப்பணி யலது, பானிலா
நித்திலத் தாமங்கள் நிழல்வ டங்களும்
கத்திகைக் கோதையர் கடியும் குப்பைபூங்
கொத்துகள் அல்லது குழாங்கள் மாலையே 111

---

125 எழுதியகொண்ட - எழுதுவதற்காகக் கொண்ட. கதுவும் - தெறிக்கும் நானநீர் - நறுமணச்சாந்து, மறு - களங்கம், வையம் - உலகம்.

126 கன்னல் - கரும்பு, குயின்ற - செய்த, தூணம் - தூண்.

127 காலும் நீர் - வெளிப்படுத்தும் நீர், மைந்து - வலிமை, தானநீர் - தானம் கொடுப்பதற்காக விடும் நீர், சிந்துரம் - யானை, கவுள் - கன்னம், பரவை - கடல்.

128 பணி - ஆபரணம், தாமங்கள் - வடங்கள், கடியும் - நீக்கும்.

**[ தாமரைத் தடாகங்கள் கழுநீரால் நிரம்பியுள எனல் ]**

129 வளையறை யணையவா லரிசி மண்ணுநீர்த்
தளையவிழ் தாமரைத் தடங்க ளாகியே
விளைவயற் பாய்ந்தபின் மிகுந்த வாரி கொய்
யுளையுவா வமிழ்த்தலி னுயர்ச்சி சொல்வதே? 112

**[ தேரோடுங் குழிகள் கலன்களாலும் சந்தனக் குழம்பாலும் நிறையும் எனல் ]**

130 வேந்தர்தேர் குழித்தவும் விடுத்த வாம்பரி
தாந்தடங் கிளைத்தவும் சமஞ்செய் கிற்பன
காந்துபன் மணிக்கலங் கடிந்த குப்பையும்
சாந்தமு மல்லது தாம மென்பவே 113

**[ பாட்டொலி முதலிய ஆரவாரம் கடலினும் மிகும் எனல் ]**

131 மறையொலி வளமனை வள்ளைப் பாட்டொலி
துறைதொறுந் பல்லியம் துவைக்கும் நல்லொலி
கறையடிக் கலினமாக் கலிக்கும் பேரொலி
அறைகட லொலியினை யடக்கு மென்பவே 114

**[ விருந்தினரையல்லாது அங்கு அரிய பொருள் யாதுமில்லை எனல் ]**

132 திருந்திய கல்வியும் செல்வம் யாவையும்
பொருந்திய வண்ணம்யா வர்க்கும் பூத்தலால்
இருந்துளார்க் கப்பதி யெல்லை வந்தெதிர்
விருந்தலா லரியன வேறொன் றில்லையால் 115

---

129 வளையறை – சங்கின் பொடித்துண்டுகள், மண்ணுநீர் – கழுவும் நீர், வாரி – வெள்ளம், கொய்யுளை – கத்தரித்த பிடரியுடைய குதிரைகள் உவா – யானை, சொல்வதே – சொல்லமுடியுமோ.

130 குழித்த – பள்ளம் செய்த, வாம்பரி – தாவிச்செல்லும் குதிரைகள் தடம் – வழி, மணிக்கலம் – இரத்திநாபரணம், குப்பை – திரள், சாந்தம் – சந்தனம், தாமம் – மாலைகள்.

131 மறை – வேதம், வள்ளைப்பாட்டு – உரற்பாட்டு, துவைக்கும் – ஒலிக்கும், கறையடி – யானை, கலினமா – குதிரை, கலிக்கும் – ஆரவாரிக்கும்.

132 இருந்துளார் – வாழ்பவர், விருந்து – விருந்தினர்,

[ மாடங்களின் உலவும் மகளிரின் வருணனை ]

133 விதுச்சிலா வட்டமும் விதுவும் வேரியங்
கதுப்பும்வந் தயர்தரு காள மேகமும்
புதுக்கடி மகளிரும் புனைந்த பாவையும்
மதிப்பதற் கரியன மாடந் தோறுமே 116

[ பல்வகைப் புகைகளினால் மேகமும் வானும் நிறையும் எனல் ]

134 ஆள்வினைக் குய்ப்புகை யாலைத் தீம்புகை
வாள்விழி யவர்குழற் கூட்டும் வண்புகை
வேள்வியி னெழும்புகை விரைகொள் மென்புகை
மீளிய வானையும் விழுங்கும் நீர்மைய 117

[ மேனிலை மாடங்கள், வீதிகளின் வருணனை ]

135 விண்ணினு மகன்றன விளங்கு மேனிலை
யெண்ணினும் பெரியன ஈண்டும் பல்வளம்
பண்ணினும் இனியன பாடன் மாதரார்
கண்ணினும் நெடியன காமர் வீதியே 118

[எங்குக் காணினும் வளஞ்சார்ந்த இடங்களால் மிளிரும் எனல் ]

136 அந்தண ரில்ல மெங்கும்
அருந்தவர் மடங்க ளெங்கும்
இந்திர திருவி னார்தம்
ஏந்தெழி லிருக்கை யெங்கும்
பந்தணை விரலி னார்கள்
பயிலுமா ளிகைக ளெங்கும்
கந்தெனத் திரண்ட தோளார்
கலைபயில் கழக மெங்கும் 119

---

133 விது – சந்திரன், சிலாவட்டம் – வட்டக்கல், கதுப்பு – கூந்தல், புதுக்கடி – புதிதாக நிகழ்ந்த மணம், பாவை – சித்திரப்பாவை.

134 ஆள்வினை – வேள்வி, விருந்தோம்பல், வண்புகை – அகிற்புகை, விரை நறுமணம், நீர்மைய – தன்மையுடையவை,

135 எண்ணினும் – எண் அளவையினும்.

136 கந்து – கட்டுத்தறி, கழகம் – மன்றம்.

**[ ஆடலும் பாடலும் உண்டாட்டும் எங்கும் விளங்குமெனல் ]**

*137* வண்டுமு கோதை யெங்கும்
வளைகறங் கோதை யெங்கும்
பண்டரு பாட லெங்கும்
பயிலும்பொற் பாட லெங்கும்
உண்டிடு மமலை யெங்கும்
ஓதன வமலை யெங்கும்
முண்டக முகங்க ளெங்கும்
முழங்குக முகங்க ளெங்கும் *120*

**[ கலையும் கல்வியும் எங்கும் நிறைந்துதிகழும் எனல் ]**

*138* ஓதுவே தங்க ளெங்கும்
ஒழிந்த வேதங்க ளெங்கும்
மாதரார் தெருக்க ளெங்கும்
மாற்றுசாந் தெருக்க ளெங்கும்
சூதர்பொற் பணிக ளெங்கும்
துலங்குபொற் பணிக ளெங்கும்
நீதிசால் வளங்க ளெங்கும்
நீத்தபால் வளங்க ளெங்கும் *121*

**[ கோயிலும் குன்றுகளும் அரங்கங்களும் எங்கும் விளங்குமெனல் ]**

*139* இமையவர் கோயி லெங்கும்
யாகமண் டபங்க ளெங்கும்
சிமையமொத் தெழுந்த சோதி
செம்பொற்செய் குன்ற மெங்கும்

---

137 கோதை - மாலை, வளை - சங்கு, ஓசை - ஓசை, பொற்பு ஆடல் - அழகிய நடனம், அமலை - சோற்றுத்திரள், ஆரவாரம், முண்டகம் - தாமரை, கமுகம் - பாக்கு.

188 ஒழிந்த + ஏதங்கள், சாந்து + எருக்கள் - சந்தனக் குப்பை, பணி - தொழில், கலம்.

அமையுறு தோளி நல்லார்
ஆடல்சா லரங்க மெங்கும்
தமைநிகர் வண்மை யாளர்
தருமறச் சாலை யெங்கும் 122

[ உலகமென்னும் தாமரையில் விளங்கும் திருவை ஒத்துத்திகழும் இந்நல்லூர் எனல் ]

140 இன்னநீள் வளங்கள் மல்கி
இணைதனக் கெங்கு மின்றி
மன்னிய நல்லூ, ராழி
மலர்த்தட மாக வையம்
பொன்னிறக் கமல மாகப்
பொகுட்டுக்கா விரிநா டாக
அன்னதில் வாழும் நங்கை
யாமெனப் பொலிந்த தன்றே 123

[ இப் புண்ணியத்தலத்தில் தானம் முதலிய செய்யின் ஒன்று நூறாகப் பெருகிப் பயன்தரும் எனல் ]

141 இத்திரு நல்லூர் தன்னில்
யாதொரு தரும மேனும்
பத்துநூ றதிக மாகப்
பலிக்குமப் பரிசு தன்னாற்
சித்தசுத் தியுமுண் டாகும்
தீயமுப் பகையுந் தீரும்
முத்தியும் நெறிவி னாவி
முறைமையி னடையு மன்றே 124

---

139 இமையவர் – தேவர், அமை - மூங்கில், வண்மை - கொடை

140 மல்கி - பெருகி, ஆழி - கடல், தடம் – குளம், நங்கை – இலக்குமி

141 பலிக்கும் - பெருகிவாய்க்கும், முப்பகை - ஆணவம், கன்மம் - மாயை நெறி – வழி.

142 சோருநீர் அருவி யொப்பத்
துப்புவார்ந் தொழுக வின்பம்
ஆருமுப் பழமும் நாறு
முதிரையும் அருகிற் சேர்த்தி
மேருவை நிகர்ப்ப நல்கும்
மிகுபல நல்லூர் தன்னில்
.................. கொவ்வா
தென்னின்மற் றுரைப்ப துண்டோ 125

**[தவத்தாலும் நோன்பாலும் எய்தும் பயன்கள் நல்லூர் இறைவனை ஒருகால் வணங்கி ஒருபகல் ஆண்டுறைவார்க் கெய்துமெனல்]**

143 பற்பல பருவ மெல்லாம்
பட்டினி விட்டும் பார்த்தோர்க்
கற்புத மாகச் செய்தற்
கருந்தவம் புரிந்தும் எய்தும்
பொற்புடைப் பலன்கள் நல்லூர்ப்
புனிதனைப் போற்றல் செய்தோர்
நற்பகல் வசித்தோர்க் குண்டா
மென்னில்யான் நவிலற் பாற்றே 126

**[சுந்தரநாதர் கோயில் திருப்பணி செய்வோர் எய்தும் பலன் கூறல்]**

144 சுந்தர நாதர்க் கன்பால்
தூவிகோ புரங்க ளாதி
அந்தமில் பணிக ளாற்றி
ஆலயங் கண்ட தூயோர்

---

142 துப்பு – பவழம், ஆரும் – நிறையும், நாறு – பல, முதிரை – தானியம்.

148 பட்டினி – உண்ணுநோன்பு, விட்டும் – நோற்றிருந்தும், பகல் – ஒரு பொழுது.

இந்திரச் செல்வ மெய்தி
எண்ணில்பல் லூழி வைகிச்
சந்திர மௌலி செய்ய
தாண்மலர் நீழல் வாழ்வார் 127

[தீர்த்தநீர் வாவிகுளங்கள் செப்பனிடுவோர் அடையும் பயன்கூறல்]

145 தீர்த்தநீர் வாவி தொட்டோர்
தெளிந்தநீர்க் கூவல் கண்டோர்
ஆர்த்தருக் குறையு ளுய்த்தோர்
அன்னசா லைகள் வைத்தோர்
பாற்கர னனைய சோதிப்
பனவருக் கிருக்கை யீந்தோர்
நீர்க்கட லுலகாண் டும்பர்
நெடும்பக லாள்வ ரன்றே 128

[பூசனை, விழாப்புரிவோர் அடையும் பயன் கூறல்]

146 நாலுதிக் கெவரும் போற்றும்
நல்லூராண் டாருக் கன்பால்
ஆலயம் புதுக்கி னோர்கள்
அணிவிழா நடத்தி னோர்கள்
காலமுன் றினுமெய்ப் பூசை
கனிவுடன் புரிந்த மேலோர்
ஞாலமுற் றூண்டுப் பின்னர்
நம்பன துலகில் வாழ்வார் 129

---

144 தூவி – ஸ்தூபி, சந்திரமௌலி – சிவபெருமான்.

145 கூவல் – கிணறு, ஆர்தர் – ஞானிகள் சிவனடியார், பாற்கரன் – சூரியன், பனவர் – முனிவர், அந்தணர், உம்பர் – சுவர்க்கம்.

146 நல்லூராண்டார் – நல்லூர் இறைவன், நம்பன் – சிவபிரான்.

[ ஆடை அணிகலன் தானம் செய்வோர் உறும் பலன் கூறல் ]

147 தூசுநல் லனகள் ஈந்தோர்
தூயபட் டாடை யுய்த்தோர்
மாசில்வான் மணியாற் செய்த
வண்பணி வழங்கும் நல்லோர்
நாசமில் லாத நல்லூர்
நம்பன தருளி னாலே
காசினி யாண்டுப் பின்னர்க்
கற்பக நாட்டில் வாழ்வார் 130

[ நெய்விளக்கிடுவோர் பெறும்பேறு கூறுகின்றது ]

148 கன்னியர் நூற்ற நூலால்
கடிகொள்தா மரையின் நூலால்
துன்னிய திரியி னெய்
சொரிந்துதீ பங்கள் நல்லூர்
முன்னவன் கோயி லெங்கும்
முறைமையி னேற்றுந் தூயோர்
தன்னிகர் ஞான மெய்த்
தற்பதப் பொருளைச் சார்வார் 131

[ பஞ்சகவ்வியம், பல்வகை அபிடேகப் பொருள் நல்குவோர்
அன்னதானம் செய்வோர் எய்தும் பேறு கூறல் ]

149 வெண்டயிர் நறுநெய் யான்பால்
விளம்புமை வகைய தாகக்
கொண்டிடு மமிர்தந் தூய
கொழுங்கனிச் சாறு செந்தேன்

---

147 தூசு – ஆடை, மாசில் – குற்றமில்லாத, பணி – அணிகலன், காசினி – உலகம், கற்பகநாடு – அளகாபுரி, ( இந்திரலோகம் )

148 கன்னியர் – சிறுமகளிர், தற்பதபொருள் – மெய்ப்பொருள் (வீடுபேறு)

தண்டுத லிகந்த கன்னற்
சாறுநல் லிளநீர் வில்வத்
தொண்டளிர் குழம்பு சாலி
யோதன முதலி னூட்டி 132

**[இறைவனுக்கு அணிகலம் முதலியோர் சார்த்துவோர் எய்தும் பயன் கூறல்]**

150 குங்குமக் கலவைச் சாந்தக்
குழம்பவி டேகித் தன்பாற்
பொங்கொளிப் பளிதம் வாசப்
புழுகுநெய் லேப னஞ்செய்
தங்கணர் சுந்த ரேசர்க்
கணிபல சார்த்தி னோர்கள்
எங்கணும் புகழ வைகி
யின்பவீ டடைவ ரன்றே 133

**[மலர் மாலைகள் முதலியன இறைவனுக்குச் சூட்டி வழிபடுவோர் எய்தும் பேறு கூறல்]**

151 இண்டையுஞ் சூட்டும் பந்தோ
டேந்துபூந் தாருஞ் சார்த்தி
அண்டர்நா யகனுக் கன்பால்
அணிநலம் புனைவித் தோர்கள்
எண்டிசை வளாக மெல்லாம்
இயல்புளி யொருகோ லோச்சி
முண்டகன் வாழ்நா ளெய்தி
முத்தியும் முறையிற் சேர்வார் 134

---

149 ஆன்பால் – பசுவின் பால், தண்டுதல் – தாழ்தல், ஒண்தளிர். சாலி – நெல், ஓதனம் – சோறு.

150 அவிடேகித்து – அபிடேகம் செய்து, பளிதம் – உணவு, அங்கணர் – நெற்றிக்கண்ணையுடைய சிவபிரான். லேபனம் – மணத்தைலம்.

151 இண்டை – முடிமாலை, தார் – கழுத்துமாலை, முண்டகன் – பிரமதேவன்.

[பஞ்சான்னம் முதலிய நிவேதனம் செய்வோர்
அடையும் பயன் கூறல்]

152 ஓகரை வகைகள் சாலி
யோதன வகைக ளின்பப்
பாகுறும் பூபவர்க்கம்
பாங்குட னிவேதித் தோர்கள்
தோகையோர் பங்கி னெங்கோன்
தொடர்ந்தருள் பொருளி னாலே
போகமும் வீடு மெய்திப்
புண்ணியர் போற்ற வாழ்வார் 135

[தூபதீபம் இடுவோர் எய்தும் பயன் கூறல்]

153 கொம்பென நுடங்கு செம்பொற்
கோற்றொடி யுமையா ளோடும்
நம்பனுக் கன்பால் வாச
நறும்புகை யேந்தும் நல்லோர்
பம்புநீர்க் கடலந் தானை
பார்முழு தாண்டுப் பின்னர்
உம்பர்நா டெய்தி மீளா
உயர்கதி சேர்வர் மாதோ 136

[வாகனாதிகள் செய்துவைப்போர் பெறும் பயன் கூறல்]

154 நாடகக் கணிகை மாதர்
நம்பனுக் குவந்த வாறே
பீடுசால் வாக னங்கள்
பிறங்குநீ டாழித் திண்டேர்

---

152 ஓகரை - ஓர் உணவு வகை, பூபவர்க்கம் - பணியார வகை, புண்ணியர் - தேவர்கள்.

158 கடலந்தானை - கடலாகிய ஆடை, உம்பர்நாடு - தேவலோகம்,

நீடுவான் கவிகை செம்பொன்
நெடுங்கொடி யாதி யுய்த்தோர்
வீடுசேர்ந் துய்வ ரிந்த
மேதினி யாண்டு மாதோ 137

[ ஆனிரைகள் அளிப்போர் நிலதானம் புரிவோர் எய்தும் பேறு கூறல் ]

155 குடம்புரை செருத்தல் நல்லான்
கொய்யுளைப் புரவி வேழம்
தடம்படு விளையு ளாதி
சவுந்தர நாதர்க் கீந்தோர்
இடம்படு ஞால மெல்லாம்
ஏத்தவீற் றிருந்து பின்னர்
உடங்குதஞ் சுற்றத் தோடும்
உம்பர்நா டெய்தி வாழ்வார் 138

[ விழாநாளில் தெரிசிப்போர் எய்தும் பயன் கூறல் ]

156 மேதகு சிறப்பின் மிக்க
விழாவணி சேவித் தோர்கள்
தீதுதீர் பிரதோ டத்திற்
றெரிசனம் புரிந்த மேலோர்
நாதனை யினைய வாய
நற்றினத் திறைஞ்சி னோர்கள்
பூதலத் தரசாய் வைகிப்
புரந்தரன் போகந் துய்ப்பார் 139

---

154 நீடாழி - பெரியசக்கரம், கவிகை - குடை, மேதினி - உலகம்.

155 செருத்தல் - பால்மடி, உடங்கு - ஒன்றுபட்ட.

156 பிரதோடம் - சந்திக்காலம்.

[ புண்ணியநாட்களில் வழிபடுவோர் எய்தும் பயன் கூறல் ]

*157* சாந்திரா யணமுன் ஞகச்
சாற்றுநல் விரதம் நல்லூர்
போந்தனுட் டித்த மேலோர்
புண்ணிய னருளி ஞலே
வேந்தர்தம் வேந்த ஞகி
மேதினி யாண்டுப் பின்னர்
பூந்துணர்த் தருநா டெய்த்திப்
பொருவரு முத்தி சேர்வார் *140*

[ தண்ணீர்ப்பந்தல், நந்தவனம் வைப்போர் அடையும்பலன் கூறல் ]

*158* வேனில்வந் திறுத்த மாந்தர்
விடாயொழித் திடுதற் கேற்ற
பூநறுந் தண்ணீர்ப் பந்தர்
புதுமலர் நந்த வானம்
[illegible]ளமி லன்பாற் கண்டோர்
உலகில் வீற்றிருந்து பின்னைக்
கான்மலி பசும்பொன் பூத்த
கற்பக நீழல் வாழ்வார் *141*

[ இத்தலத்துச் செய்யும் வேள்விகள்
அசுவமேத யாகத்தின் பலனைத் தருமெனல் ]

*159* சுந்தர நாதர் வைகும்
தூயவிந் நல்லூ ரின்கண்
அந்தண ராற்றும் வேள்வி
அனைத்தும்வண் புரவி மேதம்

---

157 சாந்திராயணம் - ஒரு திங்கள் நாள்விரதம்,

158 விடாய் - நீர்வேட்கை, வானம் - வனம், கான் - நறுமணம்.

தந்திடும் பயன்கள் நல்கும்
பொன்னிலத் தலத்தின் மேன்மை
எந்தையே புகல்வ தல்லால்
யாவரே இசைக்க வல்லார். 142

[இத்தலத்தில் தென்புலத்தார்கடன் செய்யின் அவர்கள் பெறும் நிலையைக் கூறல்]

160 தென்புலத் தவரை நோக்கித்
திருத்தகு நல்லூ ராங்கண்
அன்புடன் குடங்கை யால்நீர்
அள்ளியோர் முறையுய்த் தாலும்
மன்பெரு நூல்கள் சொன்ன
மரபுளி வாழ்ந்து செய்யும்
இன்பம தடைவா ரென்றால்
யாரதன் பெருமை சொல்வார் 143

[தானம் பதினாறும் செய்பவர் எய்தும் பயன் கூறல்]

161 எண்ணிரு திறத்த வாக
இயம்புமெய்த் தானம் அன்பாற்
புண்ணிய நல்லூர் தன்னிற்
புரிந்தவர் பேறும் இன்பும்
வெண்ணிலா வரும்புங், கொன்றை
விரிமலர்த் தொடையுஞ் சூடும்
கண்ணுதற் கடவி னல்லால்
யாவர்கட் டுரைக்கற் பாலார்? 144

---

159 புரவிமேதம் - இராசசூய யாகம்.

160 குடங்கை - உள்ளங்கை, பெருநூல் - ஆகமம்.

161 எண்ணிரு - பதினாறு, தானம் - தருமம்.

[முப்பத்திரண்டு அறங்களும் செய்வார் பெறும் பேறு கூறல்]

162 அறங்கள் எண்ணான்கும் மேலாம்
அத்திரு நல்லூ ராங்கட்
டிறம்படப் புரிந்த மேலோர்
செல்வங்க ளனைத்து மெய்திக்
கறந்தபா லனைய நீற்றுக்
கடவுள்தன் னருளி னாலே
பிறந்தைவே ரரிந்து மீளாப்
பேரின்ப வீட்டில் வாழ்வார் 145

[நல்லூரையடையின் பாவங்கள் விலகுமெனல்]

163 நலஞ்செயும் நல்லூர் தன்னுள்
நண்ண[முற் பவங்கள் நீங்கும்
வலஞ்செயின்] உலக மூன்றும்
வலஞ்செய்த பலனுங் கெய்தி
நிலந் தனக் கரசாய் [வாழ்ந்து
நெடும்புகழ்ச் செல்வந் துய்த்துக்]
குலங்கள்மு வேழோ டையன்
குரைகழல் நீழல் வாழ்வார் 146

[இத்தலத்தில் மேலோர்க்கொன் றீவதன் பயன் கூறல்]

164 ......... ......... ......... .........
ளணிமறு கலங்க ரித்தோர்
கோலுநீர்த் தீர்த்த வாவிக்
கூலங்கள் விளக்கி [ னோர்கள்]
மேலவ ரின்னல் தீர்த்து
[வேண்டுவ] துபக ரிப்போர்
ஞாலமுற் றாண்டு முக்கண்
நாயகன் உலகில் வாழ்வார் 147

---

162 நீற்றுக்கடவுள் – சிவபிரான், பிறந்தை – பிறவி, வேர் – மூலவினை.
164 மறுகு – வீதி, கூலம் – அவரை துவரை போன்றவை.

[முக்கரணங்களாலும் தூயராய் அடியார்க்குப் பணிபுரிவோர்
எய்தும் பயன் கூறல்]

165 [மனமொழி] மெய்கள் தாம்மால்
மரபுளி யிணைய வண்ணம்
தனதன மேயத் தோழர்க்
காற்றுவார் தவத்தாற் சூழும்
புனிதவே தியர்க ளாதி
புண்ணியர்க் குதவி செய்தோர்
பனகன் [மே ற்றுயிலும் செல்வன்
பதமெலாம் பெறு]வா ரன்றே 148

[நல்லூரே கயிலாயம் தீர்த்தங்கள் யாவும் கங்கை,
மணல்கள் சிவலிங்கம் எனல்]

166 வளப்பமார் நல்லூர் தானே
வான்கயி லாயம் நன்னீர்க்
குளத்தொடு வாவி யெல்லாம்
குரைபுனற் கங்கை யாங்கண்
அளப்பறு மணல்கள் எல்லாம்
அற்புத லிங்க மாகும்
துளக்கறு தலத்தின் மேன்மை
தொகுத்துயா னுரைக்கற் பாற்றே 149

[நல்லூரின் வரலாறு கூறுவேன் கேண்மின்
எனச் சூதமுனிவன் கூறுதல்]

167 என்மதிக் கிசைந்த வாற்றான்
இத்துணைப் புகன்றே னிப்பால்
முன்னவன் நல்லூர்க் குள்ள
முதுமொழிச் சரித மெல்லாம்

---

165 பனகன் – பாம்பு, செல்வன் – திருமால்.

166 துளக்கு – நடுக்கம்.

பின்னலஞ் சடிலந் தாங்கும்
பெற்றியீர் கேண்மி னென்னுக்
கன்னலுந் தேனும் போலக்
கட்டுரை செய்ய லுற்றான் 150

[பதினெண் புராணங்களின் சுலோக அளவை கூறுதல்]

(கலித்துறை)

168 அறிதொ றும்பெற லரும்பொருள் பயக்குநான் மறையிற்
செறித ரும்பொருள் விரித்துரை செய்வன வாகும்
முறைப யின்றன புராணமூ வாறென்ப வவைதாம்
குறிகொள் மேலவ ரிலக்கம்நான் காமெனக் குறிப்பார் 151

169 பாதி மாமதிக் கண்ணியான் புராணங்க ளவைதாம்
மூது ணர்ந்தவர் இலக்கமூன் றாமென மொழிவார்
சீத ரன்கதை நான்கிரண் டயன்கதை தீயோ
டாத பன்கதை யிரண்டவை இலக்கமொன் றறைவார் 152

---

167 மதி - அறிவு.

168 இலக்கம்நான்கு - நான்குலட்சம்.

169 பாதிமாமதிக்கண்ணியன் - சிவபிரான், சிவபுராணம் மூன்றுலட்சம் பாடல். சீதரன் - திருமால், விட்டுணுபுராணம். நான்கிரண்டு - எட்டு, தீ - அக்கினி, ஆதபன் - சூரியன்.

[நல்லூர் மான்மியம் கூறும் நூல்கள் இவையெனல்]

170 பவுடி கோத்திரம் பரவுமா
ரூடம்பிர மாண்டம்
இவையொர் மூன்றினும் ஓதுவ
திசைகெழு நல்லூர்
நவையில் மான்மிய மன்னது
நலங்கொள்செவ் வேளுக்
குவகை யாற்சிவன் முன்னரோ
தியதென உரைப்பார் 153

171 அனைய வாகிய வத்தல
மேன்மையந் தணிர்காள்!
முனைவன் கூறுவ தன்றியார்
முறைவிரித் துரைப்பார்
இனைய வாயினும் என்மதி
விபுலத்தின் காறும்
கனைகடி கலசத் தியலாற்
கழறுவ னதனல் 154

நைமிசாரணியச் சருக்கம் முற்றும்

---

170 பவுடிகோத்திரம், காருடம், பிரமாண்டம் இவை புராண நூல்கள்.

171 முனைவன் – இறைவன், விபுலம் – பெருமை.

மூன்றாவது

# கைலாயச் சருக்கம்

[ கைலாயம் விண்கடற்பூத்த வெண்டாமரை போலுமெனல் ]

172 தஞ்சம் நீயெனப் பணிதலும்
தண்ணளி சுரந்து
நஞ்சம் ஆரமு தாமென
நுகர்ந்தருள் நம்பன்
விஞ்சு வான்புகழ்க் கடலிடை
மலர்ந்தமே தகுவெண்
கஞ்ச மாமலர் போன்றது
கைலையஞ் சிகரம் 1

[ கைலாயத்தின் சிகரம் இறைவன் முடிபோன்றதெனல் ]

173 நம்ப னார்தமை நற்றவர்
தாபித்துப் போற்றும்
கும்ப மொத்தது கைலையஞ்
சிகரமக் கும்பத்(து)
உம்பர் மாமதி வயங்குவ
திண்டையொப் பாகத்
தும்பை மாலைக ளொத்தன
தூங்குவெள் ளருவி 2

---

172 தஞ்சம் – அடைக்கலம், தண்ணளி – இறையருள், நஞ்சம் – ஆலகாலவிடம், நம்பன் – விரும்பத்தக்கவன், விஞ்சு – அளவிடற் கரிய, கஞ்சம் – தாமரை.

173 தாபித்து – (பிரதிட்டை செய்து) எழுந்தருளப்பண்ணி. உம்பர் – மேலிடம், இண்டை – முடிமாலை, தூங்குவெள்ளருவி – தொங்கி வழியும் நீர் அருவி.

[ கைலைமலை சிவபெருமானை ஒத்து விளங்குகின்றதெனல் ]

174 இடப மீதுறப் பொலிதலால்
ஏங்தெழிற் கன்னி
புடைவ யங்கலாற் பொன்னலர்
இதழிவேய் தலினாற்
சடையின் வாளராத் தாங்கலாற்
றவளநீ றணிந்த
கடவு ளாமெனச் செழித்தது
கைலையஞ் சிகரம் 3

[ கைலை எப்பொழுதும் மணிவெயிலாற் பகலாகவே
விளங்குகிறதெனல் ]

175 குரவம் பாடலம் குங்குமம்
கோழரைச் சாந்தம்
மரவம் வாசந்தி கோங்குபுன்
னாகநீள் வகுளம்
இரவும் நண்பகல் போலுமா
மணிவெயி லெறிப்ப
விரவு தண்டலை விண்டலைத்
தட(மெலாம்) விளங்கும் 4

[ கைலைமலைச் சாரல்களின் மாண்பு ]

176 தேவர் சாரணர் சித்தர்விச்
சாதரர் ஒருபால்
கோவை வாயர மாதரார்
குழாங்கண்மற் றொருபால்

174 இடபம் – ஆனேறு, புடை – பக்கம், வயங்கல் – விளங்கல், இதழி – கொன்றைமாலை, வாளரா – ஒளியுடைய நாகப்பாம்பு, தவளநீறு – வெண்ணீறு

175 கோழரை –வயிரம்முற்றிய அடிமரம், வெயில் – ஒளி, தண்டலை – சோலை.

தாவி லாவரும் தவம்புரி
தாபத ரொருபால்
ஓவி லாதன பற்பல
சாரல்கள் உடைத்தால் 5

[ தேவர்கள் ஆடிப்பாடி ஆனந்தத்தில் திளைக்கும் நிலை ]

177 ஆடு வார்சிலர் அமுதுறழ்
சாமகீ தங்கள்
பாடு வார்சிலர் பதமொரு
மூன்றையும் பகுத்து
நாடு வார்சிலர் நயனஞ்சிம்
புளித்துசெம் மாந்து
தேடு வார்சிலர் சிலர்சிதா
னந்தத்துட் டிளைப்பார் 6

[ஆனந்த கண்ணீரும் தேனும் அருவியும், மழையென வழியுமெனல்]

178 அடியர் கண்மழை யமரர்கள்
பூமழை யலர்ந்த
கடிகொள் பூந்துணர் கண்மழை
யிறுனின் றுங் கசிந்து
வடியுந் தேன்மழை மாமுகில்
மழை யொடுந் துவன்றி
முடிவி லாதன பஃறலை
யருவிகள் முழங்கும் 7

---

176 கோவை - கொவ்வைப்பழம், தாபதர் - தவமுனிவர்கள், ஓவிலாதன - நீங்காதன.

177 சாமகீதம் - சாமவேத மந்திர இசை, பதமொரு மூன்று - மகா வாக்கியங்கள் மூன்று. அவையாவன :- தத்துவமசி, அஹம் பிரம்மாஸ்மி, சோஹம்அஸ்மி: இவற்றின் பொருள் முறையே. அது நீயாகிருய், நான் பிரம்மமாக இருக்கிறேன், நான் அவனுக இருக்கிறேன் என்பன. நயனஞ்சிம்புளித்துச் செம்மாந்து தேடுவார் என்றது யோக சமாதியில் அமர்ந்து நாடுதலே. சிதானந்தம் - பரஞானனந்தம்.

178 கடி - மணம், இறுல் - தேனடை, மாமுகில் - கார்மேகம், பஃறலை - பல இடம்.

[ இறைவன் தேவியோடும் செவ்வேளொடும் வீற்றிருக்கும் காட்சி ]

179 கணிப்பி லின்னன வளங்கனி
கைலைமால் வரையில்
தணிப்பி லாதுயர் தமனியச்
சினகர மதன்கண்
பணித்த லம்பயில் மாணிக்க
மண்டப மருங்கின்
பணிச்செ ழுங்கதிர் மணிபுனை
பரியங்க மதனின் 8

180 உலக மூன்றையும் ஈன்றசிற்
றுதரத்தி னுமையும்
இலவ வாய்ப்பசுங் குதலைச்செவ்
வேளுமாங் கினிதிற்
குலவ வன்னவர் தம்மொடும்
அளவளாய்க் குழகன்
அலகி லாவுவப் பெய்தினன்
ஒருதினத் தமர்ந்தான் 9

[ செவ்வேள் இறைவனிடம் நீ விழைந்துறையும் தானம்
எது என வினவல் ]

181 அமரும் ஏல்வயி லன்னைதன்
மடித்தலத் திருக்குங்
குமரன் தாதைதன் குளிர்முகத்
தாமரை நோக்கித்

---

179 **கணிப்பில்** – கணக்கிட இயலாத, தமனியம் – மேலான பொன், **சினகரம்** – கோயில், பணி – நாகப்பாம்பு, பரியங்கம் – கட்டில் (**இருக்கை**).

180 **சிற்றுதரத்தி** – சிறிய வயிற்றையுடைய உமையம்மை, இலவம் – **இலவம்பூ**, குழகன் – சிவபிரான்.

தமரவேலைசூழ் நாவலந்
தீவிலெத் தானம்
விமல நீவிழைந் துறைகுவ
ததுவிளம் பென்றான் 10

[ இறைவன் மகிழ்ந்து கூற முற்படுதல் ]

182 என்று கூறலும் இருகையா
லெடுத்தணைத் தெங்கோ
நன்று நன்றுநீ வினவிய
பரிசென நயந்து
குன்ற வில்லியும் புத்திர
வாஞ்சையாற் குறிக்கொண்(டு)
ஒன்ற ஓதுதும் அதிகுய்ய
மிதுவென உரைத்தான் 11

[ இத்தலத்து மான்மியத்தை இவரிவர்க்குக் கூறத்தகாது இவரிவர்க்கே கூறுதல் வேண்டும் என இறைவன் வரையறை கூறுவான் இச்செய்யுள் முதல் 29 ஆம் செய்யுள் முடியக் கூறுகின்றான். முதற்கண் அறவோர்க்கல்லது நாத்திகரிடம் உரைத்தல் கூடாதென்கிறது இப்பாடல். ]

( கலிவிருத்தம் )

183 பாவ புண்ணிய மில்லைப் பயன்றரு
தேவு மில்லையாஞ் சிந்தித்த வண்ணமே
ஏவச் செய்தும் எனத்திரி நாத்திகற்
காவ தல்ல, அறவோர்க் குரைப்பதால் 12

---

181 ஏல்வை – எல்லை (காலம்), தமரவேலை – அலைபொருந்திய கடல், நாவலந்தீவு – தென்னாடு, விழைந்து – விரும்பி.

182 எங்கோ – எமது தலைவனாகிய இறைவன், பரிசு – தன்மை, குன்றவில்லி – மேருவை வில்லாகக்கொண்ட சிவபிரான், ஒன்ற – பொருந்த, அதிகுய்யம் – மிக்க ரகசியம்.

188 தேவு – தெய்வம், ஆவதல்ல – கூறத்தக்கவையல்ல.

[வேத, வேதியரை இகழ்வோரிடம் கூறத்தகாதெனல்]

184 வேத நிந்தனை செய்யும் விதண்டையர்
ஏத மில்மறை யோரை யிகழ்பவர்
ஓதும் வைதிக நீதி யொருவினோர்
பாத கர்க்கும் பகரவொண் ணாததால் 13

[இருமுது குரவர்க்கு இடர்செய்வோர் தாரம், சேய், அன்னத்தை விற்பவர்கள் ஆயவரிடம் கூறத் தகாதெனல்]

185 தாயைத் தந்தையைத் தம்முனை வைபவர்
ஏய தங்குர வர்க்கிடர் செய்குநர்
சேயைத் தாரத்தைத் தீஞ்சுவை அன்னத்தை
வீயத் தான்கொடு போய்விற்கும் வெய்யவர் 14

[பிறனில் விழைவோன் பிறனை விரும்புவோள் இவரிடம் கூறத் தகாதெனல்]

186 கற்பின் மிக்க மனைவியைக் கையொரீஇப்
பொற்பு மிக்க புறத்தொழுக் குற்றவர்
அற்பின் மிக்கவ னன்றி யயலவன்
வெற்பின் மிக்கதோள் வேட்ட விடலியர் 15

[செய்ந்நன்றி மறந்தவர் குறளை கூறுவோர்பால் கூறத்தகாதெனல்]

187 செய்த நன்றி மறந்தவத் தீமையோர்
உய்யு மாறன்றி யோரம் உரைப்பவர்
வெய்ய தீய குறளை விளம்புநர்
பொய்யு ரைக்கும் புலையர், புன்செய்தியோர் 16

---

184 விதண்டையர் - முரண்படப் பேசுபவர், ஏதம் - குற்றம், ஒருவினோர் - வழுவியவர்கள், பாதகர் – ஐம்பெருங் குற்றங்கள் புரிபவர்.

185 தம்முனை - தம் முன்னோர்களை (மூத்தவர்களை), குரவர் - ஆசிரியர், வீய - அழிய.

186 கையொரீஇ - கைவிட்டு, புறத்தொழுக்கு - பிற மாதரை விரும்பி ஒழுகுதல், அற்பு - அன்பு, வெற்பு - மலை, வேட்ட - விரும்பிய, விடலியர் - காமியர்.

187 ஓரம் - நடுவுநிலை நீங்கி ஒரு பக்கம் சார்தல், குறளை - புறங்கூறல், புன்செய்தி - தாழ்ந்த செயல்.

[ சைவ வைணவராய்த் தம்முள்
நிந்தனை செய்வோரிடம் கூறத் தகாதெனல் ]

188 சால நம்முடை யன்பராய்த் தண்துழாய்
நீல மாயனை நிந்தனை செய்பவர்
ஞால முண்டவன் அன்பராய் நம்முடைச்
சீலம் நிந்தனை செய்யுமத் தீமையோர் 17

[ தவமுடையோர், அன்புடையோர் பால் உரைத்தல் தகுமெனல் ]

189 சொற்ற இன்ன துரிகடை யாளர்க்(கு)
உற்று நாளும் உரைக்கொண் ணுததால்
நற்ற வர்க்கும் நசையுடை யாளர்க்கும்
கற்ற வர்க்குமே கட்டுரை செய்வதால் 18

[ இறைவழிபாட்டினர் முதலியோரிடமே கூறல் வேண்டுமெனல் ]

190 கடவு ளுண்டெனக் கைதொழு மன்பினோர்
படரும் நீளொளிப் பானுவை யேத்துவோர்
உடலில் நாதனை யுண்மையிற் போற்றுநர்
செடிகொள் வானின் சிறப்பெடுத் தோதுவோர் 19

[ துறவியர் அறநெறியார் ஈகையாளர்
தம்மிடம் பகர வேண்டுமெனல் ]

191 துறந்த மேலவர் தூய்மை விரும்பினோர்
சிறந்த நல்லறஞ் செய்யுமச் செய்தியோர்
அறந்த வாது பகுத்துணும் அன்பினோர்
மறந்துந் தீச்சொல் உரையா மரபினோர் 20

---

188 சால – மிக, தண்டுழாய் – குளிர்ந்த துளசி (பூண்ட), ஞால முண்டவன் – திருமால், சீலம் – தவவொழுக்கம்.

189 சொற்ற – கூறிய, துரிசு – குற்றம், நசை – விருப்பம்.

190 பானு – கதிரவன், உடலில்நாதன் – அருவமாக விளங்கும் இறைவன் (இலிங்கமூர்த்தி).

191 தூய்மை – அவாவின்மை, செய்தி – செயல், தவாது – [illegible].

[நன்றி நடுவுநிலை முக்கரண அடக்கமுடையார் பக்கமே உரைக்கவேண்டுமெனல்]

192 செய்த நன்றி யறியுஞ் சிறப்பினோர்
உய்யு மாறு நடுநிலை யுற்றவர்
மெய்யை யாதியை மூன்றும் விதிமுறை
வைய மீதி லடக்கிய மாட்சியர் 21

[உயர்குலத்தார் பொறையுடையோரிடம் புகலவேண்டுமெனல்]

193 ஒழுக்க மோம்பும் உயர்குல மேலவர்
இழுக்கி லாவய லான்மனைக் கேக்கறார்
வழுக்கி னோர்மிகை தன்னைம னங்கொளார்
அழுக்க றார்,பிறர் ஆக்கம் விரும்பிலார் 22

[மாசகன்ற நெஞ்சினரிடமே கூறவேண்டுமெனல்]

194 குறளை யோடு பயனில கூறிலார்
திறனி லாதப டிற்றுரை செப்பிலார்
மறலி யெய்தும் பருவத்தும் மாசிலார்
அறன லாதன செய்வதற் கஞ்சுவார் 23

[ஒழுக்கமுடையோர் அருளாளரிடம் கூறல் தகுமெனல்]

195 உலக நன்னடை யுய்த்துணர் மேலவர்
இலமென் றோர்தமக் கீயுமி யல்பினோர்
நிலவும் மெய்ப்புகழ் ஈட்டும் நெறியினோர்
குலவு நல்லருட் செல்வங் குறிக்கொண்டோர் 24

---

192 மெய்யை யாதியை - மெய் (உடம்பு) வாக்கு, மனம். வையம்–உலகம்.

193 ஏக்கறார் - விரும்பி நில்லாதவர், வழுக்கினோர் – தவறியவர், மிகை - குற்றம்.

194 படிற்றுரை – பொய்யுரை, படைத்துமொழி மறலி – யமன்.

195 நன்னடை - ஒழுக்கம்.

[ புலான் மறுத்தவர் - வஞ்சனையற்றவர்பால் கூறல் ஆம் எனல் ]

196 ஊன்சு வைத்துணும் ஊனமொ ழிந்துளோர்
வான்ப ழிச்சும் வகைதவ மேற்கொண்டோர்
நான்கு முந்நீ ரிருங்கடல் நாட்டொன்றும்
தான்க ரந்துகொ ளாத தன்மையோர் 25

[ வெகுளி நீங்கியவர் சமய ஒழுக்கமுடையோர்பால் உரைக்கத்தகும் எனல் ]

197 கதங்க டிந்தவர் காசினி மீதுயிர்க்
கிதங்க ளன்றியின் னாதசெய் யாதவர்
மதங்கள் சொல்லும் வகைகண்டு மெய்ம்மையாற்
பதங்கள் மூன்றின் பரிசுணர் மேலையோர் 26

[ சிவவேடம் புனைந்த சீலமுடையோரிடம் கூறத்தகுமெனல் ]

198 வெள்ளை நீறுதம் மேனி புனைந்துளோர்
எள்க லாவக்க மாலிகை யேந்தினோர்
தள்ள ரும்மெழுத் தைந்துந் தணப்பிலா
துள்ளு மேதக வுற்றவப் பான்மையோர் 27

[ அடியார்பக்தி - இலிங்க வழிபாடு குருவை போற்றுதல் ஆயகுணமுடையாரிடம் கூறத் தகுமெனல் ]

199 ஈறில் நம்மடி யாரை யிணையிலா
வீறு பெற்ற இலிங்கத்தை மெய்ம்மொழி
கூறு முண்மைக் குரவனைப் போற்றுவோர்
தேறு மித்தகை யோர்க்குரை செய்வதால் 28

---

196 ஊன் - புலால், ஊனம் - குற்றம், வான் - தேவர்கள் (ஆகு பெயர்) கரந்து - வஞ்சித்து.

197 கதம் - வெகுளி, காசினி - உலகம், இதம் - அன்பு, பதம் மூன்று 177 ஆம் பாடற்குறிப்பைப் பார்க்க, பரிசு - தன்மை (உண்மை).

198 எள்கலா - இளிவு இல்லாத, அக்கமாலிகை - உருத்திர மணிமாலை.

199 குரவனை - ஆசிரியனை, தேறும் - தெளியும்.

[வரையறை கூறியபின் மான்மியம் கூறத் தொடங்குதல்]

200 என்று முக்க ணிறைவ னெடுத்துரைத்
தன்றிற் குன்றம் அடர்த்தவற் கன்பினல்
நன்று கூறும்நல் லூர்க்குள்ள மான்மியம்
ஒன்று காதலி னேதின னென்பவே 29

[சோணாட்டுக் காவிரித் தென்கரையில் உள்ளது இத்தலமெனல்]

201 சம்புத் தீவில் தமனியச் சோலைசூழ்
செம்பொன் மேரு வரைக்குத் தென்பாகத்தில்
உம்பர் போற்றும்சோ ணாட்டின் ஒலிபுனற்
பம்பு காவிரித் தென்றிசைப் பாங்கரின் 30

[நல்லூர் என்னும் இத்தலம் திருமகளை ஒத்தது எனல்]

202 நண்ணு மோர்தலம் நல்லூர் எனவஃ
தெண்ணுங் கால்நமக் கென்று முவந்ததால்
வண்ண வேலையின் பொலிந்த மாதுபோல்
திண்ண மென்றதன் சீர்த்தியும் செப்பினன் 31

[மூர்த்தி தலம் தீர்த்தம்பற்றி இறைவன் முருகனுக்கு விளங்க
உரைத்தான் எனச் சூதமுனிவன் கூறுதல்]

203 தலவி சிட்டமும் அத்த லத்திடை
குலவு தீர்த்த விசிட்டமும் கோதிலா
விமல மூர்த்தி விசிட்டமும் வேலனுக்(கு)
அமலன் கட்டுரை செய்தன னமரோ 32

---

200 அன்றிற்குன்றம் - கிரவுஞ்சமலை, அடர்த்தவன் - முருகன்.

201 தமனியச்சோலை - பொன்மயமான சோலை, உம்பர் - தேவர்கள் பாங்கர் - பக்கம்.

202 வண்ணவேலை - அழகிய கடல், மாது - இலக்குமி.

203 விசிட்டம் - சிறப்புத் தன்மை, கோதிலா - குற்றமில்லாத, அரோ - அசை.

[ இம்மான்மியத்தை வேலன் நந்திக்குக்கூற நந்தி சனற்குமாரர்க்கு உரைத்தான் எனல் ]

204 அந்த மாக்கதை வேலவன் அன்புகூர்
நந்தி கேசர்க்கு நன்குறக் கூறினன்
சந்த மோதுஞ் சனற்குமா ரர்க்கவன்
புந்தி யாரப் புகன்றனன் என்பவே 33

[ சனற்குமாரர் வியாசர்க்குரைக்க அவர் எனக்கருளினுர் எனல் ]

205 அனைய மாதவத் தந்தணர் கோமகன்
வினவும் வேத வியாதர்க் கியம்பினன்
எனையும் ஓர்பொரு ளாக்கியவ் வேந்தலும்
முனிவர் காள்,தமி யேற்கு மொழிந்தனன் 34

[ வியாசர் மொழிந்தாங்கு யான்பகுத்துக் கூறுவேன் எனல் ]

206 முட்டு மாறின்றி முற்றிய நோன்மையால்
எட்டெ லாத்திசை யும்மிசை போக்கிய
சிட்டர் காளெந்தை சிந்தை களிப்புறக்
கட்டு ரைத்தவவ் வாறு கணித்தரோ 35

[ சூதர் இத்தல மான்மியத்தை இவ்வாறு முறையாகக் கூறுவேன் என நிரல்படுத்துகின்றுர் ]

207 முந்தை நாளின் முழுவலி வாயுவாற்
சந்த மாருந் தமனிய வெற்பினின்
றிந்த மாநில முய்ய விலங்கொளிச்
சுந்த ராசலம் வந்தவத் தொன்மையும் 36

---

204 சந்தம் – சாமவேதம், புந்தி – அறிவு (மனம்).

206 முட்டுமாறு – தடைப்படும் நெறி, இசை – புகழ், சிட்டர் – மேலானவர்.

207 சந்தம் – சந்தன மணம், தமனியவெற்பு – மேருமலை, அசலம் – மலை.

208 பூவை வண்ணன் பொலிதரு நாபியின்
மேவு தாமரை வேதியன் ராசத
தாவி லாக்குண சாந்தியின் அர்ச்சனை
தேவ தேவனுக் காற்றிய செய்கையும் 37

209 விரைகொள் தாமரை மேலவன் வான்கங்கை
பரவு நீர்கொ டொருங்கு நிரப்பலால்
அரவு பூண்டரு ளண்ண லருளெனப்
பிரம தீர்த்தம் பிறங்குமப் பெற்றியும் 38

210 பத்தி வந்து பணைத்தெழ வெண்ணுவோர்க்
கத்தி ருத்தகு நல்லூர் அகவயின்
முத்தி நல்குமுக் கண்ணனை முத்தைந்தின்
சித்தி வல்விரைந் தெய்துமச் சீர்மையும் 39

211 குண்ட மொன்றிற் குளித்தவன் குஞ்சிநீர்த்
தண்டுளிக் கணந் தாக்கவோ ரந்தணன்
உண்டி வெஃகுஞ் சுணங்க னுருவொரீப்
பண்டை நல்லுருப் பெற்றவப் பான்மையும் 40

212 விந்த வெற்பை அடக்கிய வேதியற்
கெந்தை மங்கள ரூபத்தை யேடவிழ்
கந்த மாமலர்க் கண்களித் தாங்கவன்
சிந்தை யன்புறக் காட்டிய செய்தியும் 41

---

208 பூவை வண்ணன் - திருமால் (பூவை - காயாம்பூ), நாபி - உந்தி, தாமரை வேதியன் - பிரமதேவன்.

209 விரை - நறுமணம், பிறங்கும் - தோன்றி விளங்கும்.

210 அகவயின் - இடத்தினில்.

211 குஞ்சிநீர் - தலைமுடியினின்றும் சொட்டிய நீர்த்துளி, தாக்க - பட, சுணங்கன் - நாய், ஒரீஇ - நீங்கி.

212 விந்தவெற்பு - விந்தியமலை, வேதியன் - அகத்தியன்

213 பரவு குந்திதன் பத்திவி சேடத்தாற்
குரவ வார்குழற் கோதையோர் பங்கினன்
உரவு நீர்க்கட லேழும் ஒருங்குடன்
பிரம தீர்த்தத் தழைத்தருள் பெற்றியும் 42

214 வந்த டைந்தருள் மாக்கடல் மன்னவன்
சிந்தை யன்புறச் செப்பே சுரம்பணிந்
தெந்தை நல்லூ ரிடத்தெய்தி மீண்டவன்
முந்தை யெல்லை புகுந்த முறைமையும் 43

215 முண்ட காசனன் முள்ளுடைப் பாசடைக்
கண்டற் போது கரிபொய்த்த தீங்குடன்
கொண்டு பொய்யுரை கூறிய குற்றமும்
விண்டு போக விளைத்தமெய்ப் பூசையும் 44

216 கள்ளு லாமலர் தூவிக் கனிவுடன்
வள்ளல் சேவடி யேத்தி வலாரியாற்
கொள்ளுஞ் சாபந் தணிந்துநாற் கோட்டுடை
வெள்ளை யானை விளங்கிய மேன்மையும் 45

217 பொன்னு லாங்கொன்றை வேணிப் புராந்தகன்
தன்னை ஏத்தியெஞ் ஞான்றுந் தணப்பிலா
மன்னு காதற் கணவனை வாளராக்
கன்னி முன்னர் அடைந்தவக் காதையும் 46

218 போது லாவும் புரிகுழற் பூண்முலை
மாது பாகன் மலரடி வந்தித்தே
கேதம் நீங்கக் கிராதற் கிறையவன்
தீதில் மக்களைப் பெற்றவச் செய்தியும் 47

---

215 முண்டகாசனன் – தாமரையில் வீற்றிருக்கும் பிரமதேவன், கண்டற்போது – தாழம்பூ, கரி – சான்று (சாட்சி).

216 வலாரி – இந்திரன், கோடு – கொம்பு.

217 புராந்தகன் – சிவபெருமான், அராக்கன்னி – நாககன்னி.

218 கேதம் – குற்றம், கிராதன் – வேடன்.

219 விள்ள ருஞ்சுரு திப்பொருள் வீறென
உள்ள மூல பலத்தொடு முண்மையால்
வள்ளல் சேவடி வந்தித்தோர் வேட்டுவன்
தள்ள ருங்கதி பெற்றவத் தன்மையும் 48

220 சுருதி பாடல்செய் சுந்தர வெற்பின்மேல்
கருணை வாரியைக் கைதொழு தன்பினால்
தரும சேனன் மகப்பெற்றுத் தாழ்விலாப்
புரவி மாமகஞ் செய்தபு ராணமும் 49

221 குணங்க ளைந்துடன் கூடிய வாயசம்
பணங்க ளைந்துடைப் பாம்பரை யாத்தவன்
இணங்கு பேரருள் எய்திக் கயிலைவாய்க்
கணங்க ளுக்கர சாகிய காதையும் 50

222 தோகை பங்கினன் சுந்தர வெற்பினோர்
காக மோசனக் காதையைக் கேட்டலும்
ஓகை யோடும் ஒருவணி கன்களித்
தேகன் வெள்ளிவெற் பெய்து மியற்கையும் 51

223 நீப மல்கிய நீள்மது ராபுரிப்
பூப னுந்தமிழ் நாட்டுப் புரவலன்
கோப முற்றுக் குறுமுனி கூறிய
சாப நீங்கித் தணந்த சரிதையும் 52

---

219 வந்தித்து – வழிபட்டு, தள்ளருங்கதி – வீடுபேறு.

220 கருணைவாரி – அருட்கடல், புரவிமாமகம் – அசுவமேத யாகம்.

221 பணம் – பாம்பின் படம், ஆர்த்தவன் – உடுத்தவன் (சிவபிரான்).

222 மோசனம் – (விமோசனம்) விடுதலை ஓகை – களிப்பு, ஏகன் – இறைவன்.

223 நீபம் – வேம்பு, பூபன் – மன்னவன், குறுமுனி – அகத்தியன்.

224 மகதி யாழ்முனி வாய்ந்தால் லூர்வயிற்
றகுதி நான்முகன் றன்னைவி னவலும்
பகுதி யாவனப் பாங்குற வாங்கதன்
மிகுதி யாவும் விளம்பிய வண்ணமும் 53

225 முரணின் மிக்க முழுவலித் திண்புயத்
திரணி யன்சம ரேற்றிகல் வெல்குவான்
தரணி காந்தன் சகதண்டம் யாவைக்கும்
அரணி னன்வந் தருச்சனை செய்ததும் 54

226 தமர வேலை தனைக்கடைந் தின்னமு
திமைய வாணர்முன் னேந்திவந் தூட்டலும்
குமுத வாயுமை கொண்கன் திருப்பெயர்
அமுத லிங்கமென் றாகிய வண்ணமும் 55

227 வேரி நாண்மலர் மேவிய நான்முகன்
நார தப்பெயர் நற்றவற் கம்பொனீள்
தீர மேவிய தீர்த்தங்கள் யாவையும்
ஓரு மாறுமுன் னோதிய பெற்றியும் 56

228 ஒழுகு செய்யதே றைத்துறு தந்திரி
வழுவி லாத மகதியாழ் மாமுனிக் (கு)
அழிவி லாநெறி யால்விதி யாய்ந்தொரு
கழுகு மோசனக் காதை யுரைத்ததும் 57

---

224 மகதியாழ் – மகதயாழ் (நாரதரிடம் இருக்கும் யாழ்).

225 முரண் – பகையை வெல்லுதல், சமர் – போர், சகதண்டம் – முழு உலகம்.

226 தமரவேலை – அலைகடல், கொண்கன் – கணவன்.

227 வேரி – தேன், தீரம் – கரை, ஓருமாறு – சிந்திக்குமாறு.

228 தந்திரி – யாழ்நரம்பு, மாமுனி – நாரதன்.

229 விளங்கு நீள்முடி வீதி விடங்கர்வான்
துளங்கி யாரு ரெல்லை துன்னுநாள்
தளங்கொள் சுந்தரச் சையத்தின் மல்கிய
வளங்கள் கண்டவன் வைகிப்பின் சென்றதும் 58

230 அழுது பாற்கடற் பெற்ற வருந்தவன்
வழுவி லாத முனிவர்க்கு மாட்சியான்
முழுதுந் தேர்ந்து முறையுளிக் கூறிய
பழைசை வாழமர் நீதிதன் பான்மையும் 59

231 இன்ன தொன்மை யெவையு மெடுத்தியான்
முன்ன வன்னரு ளால்மொழி வேனெனத்
தன்னை யொத்த சவுனக னாதியோர்க்
கன்ன சூத னுரைத்தன னமரோ 60

கயிலாயச் சருக்கம் முற்றும்.

---

229 தளம் - இரத்தினக் கற்படிவம், சையம் – மலை, வைகி – தங்கியிருந்து

230 பழைசை – பழையாறை என்னும் தலம். அமர்நீதி – அமர்நீதி நாயனார்.

## நான்காவது

# சுந்தராசலச் சருக்கம்

[சுந்தராசலம் புவிக்கண் வந்த வரலாற்றைக் கூறுகென முனிவர்கள் வேண்டச் சூதமாமுனிவன் சொல்லத் தொடங்குதல்]

(ஏழுசீர் ஆசிரிய விருத்தம்)

232 வாளரா வரசு தனக்கும்முன் ளின்
மதவலி மாருதந் தனக்கும்
தோளுலாம் வலியா லிகலது தோன்றச்
சுந்தரா சலம்புவித் தோன்றும்
கேளுலாங் காதை மொழிகென வறவோர்
கிளத்தலுஞ் சூதமா முனிவன்
காளமா முகில்போல் இருள்கனிந் தொழுகும்
கண்டனை வணங்கினன் சொல்வான் 1

[தேவர்கள் யாவரும் சூழ்ந்திருக்கும் பொன்மலைச் சாரலின்கண் ஆதிசேடன் வருதல்]

233 வண்டுழா யணிந்த முகுந்தனும், முகுந்தன்
வயங்கொளி நாபியிற் பூத்த
முண்டகா சனனும் குலிசபா ணியனை
முதலதே வருமுனி வோரும்
கொண்டல்போந் துறங்கும் தமனியச் சாரற்
குலவரை நாப்பணிற் குழுமிப்
பண்டொரு ஞான்று வைகினர் வைகப்
பன்னக அரசனுங் கடுத்தான் 2

---

232 வாளராவரசு – ஆதிசேடன், மாருதம் – வாயுக்கடவுள், இகல் – பகை
கண்டன் – சிவபிரான்

233 வண்டுழாய் – தளிர்த்ததுளசி, முகுந்தன் – திருமால், நாபி – உந்தி
முண்டகாசனன் – பிரமதேவன், கொண்டல் – கார்மேகம், பன்னக அரசன் – ஆதிசேடன்.

[நாரதன் ஆதிசேடனின் ஆற்றலைப் புகழ்ந்து கூறக்கேட்ட வாயுதேவன் பொருது எழுதல்]

234 அடுத்திடும் பன்ன கேசனை நோக்கி
ஆயிரம் பணாடவி யதனான்
மடுத்திடுங் கடல்சூழ் தரையினைப் பரிக்கும்
மதுகையே யன்றிவா னெவையும்
எடுத்தெடுத் தருந்தும் ஆற்றலாய் உன்போல்
எறுழ்வலி எவருளர் என்னாத்
தொடுத்ததந் திரியாழ் நாரதன் வியப்பத்
துண்ணென வாயுவும் எழுந்தான் 3

[வாயுதேவன் தன்னுடைய ஆற்றலைச் சோதித்துக் காணுங்கள் எனமொழிதல்]

235 எழுந்தனன் புழுங்கி நெட்டுயிர்ப் பெறியா
இருகணுங் கடைக்கனல் காலத்
தொழுந்தகை யமரர் எவரையும் நோக்கித்
துணையெயிற் றரவையோர் பொருளாய்
மொழிந்தனன் முனிவன் என்னுடை வலியும்
மூதரா வரசுடை வலியும்
உழுந்துருள் பொழுதிற் காணுதி ரென்னா
ஊற்றமிக் குடன்றனன் உரைப்பான் 4

[வாயு தன் அற்றலைபற்றிக் கூறுதல்]

236 அண்டகோ டிகளைத் துகள்படப் புடைப்பேன்
அசலகோ டியையெடுத் தெறிவேன்
கொண்டலே ழினையும் ஒருபுடைத் தொகுப்பேன்
குரைகட லேழையும் திரைப்பேன்

---

234 பணாடவி – படங்களாகிய காடு, எறுழ்வலி – மிக்க வலிமை.

235 புழுங்கி – வெகுண்டு, கடைக்கனல் – ஊழித்தீ, கால – வெளிப்பட
உழுந்துருள்பொழுது – ஒரு உளுந்து உருளுகின்ற கால அளவை.

விண்டலத் தியாவும் இயக்குதல் புரிவேன்
மேம்படும் எவர்க்குமஞ் ஞான்றும்
தண்டுத விகந்த பிராணனது யானென்
சண்டவே கத்தையார் தவிர்ப்பார் 5

[ அதுகேட்டு அனந்தன் தன் வலிகூற முற்படுதல் ]

237 மந்தரப் பொருப்பை ஒருகணத் தே தான்
மத்தெனக் கடலிடை யுய்ப்பேன்
சந்திர மவுலி வீரியந் தனையும்
சரவணப் பொய்கையின் மடுத்தேன்
முந்திய தழற்குஞ் சகாயன் யானட்ட
மூர்த்தியுள் ஒருவன்யா னென்று
கந்தவா கனன்கட் டுரைத்தனன் உரைப்பக்
கனல்விழித் தனந்தனு முரைப்பான் 6

[ அனந்தன் தன் ஆற்றலை விளம்புதல் ]

238 கருங்கட லாடை புடவியோர் துகளிற்
கணபண மவுலிமேற் பரிப்பன்
ஒருங்குட னுலகம் முழுவதுந் தனித்துண்
டும்பரைத் தாங்குமா யனையும்
விரிதரும் அணையாய்த் தாங்குவன் இமைய
வெற்பையும் கறங்கெனத் திரிப்பன்
திரிபுர மெரிக்குஞ் சிலைக்குநா ணாகிச்
சிற்பரற் கணியுமா குவனால் 7

---

236 அசலகோடி – மலைக்கூட்டம், கொண்டல் – மேகம், பிராணன் – உயிர்.

237 மந்தரப்பொருப்பு – மந்தரமலை, சந்திரமவுலி – சிவபிரான், தழல் – அக்கினிக்கடவுள், கந்தவாகனன் – வாயுதேவன், அனந்தன் – ஆதிசேடன்.

238 புடவி – பூமி, மவுலி – முடி, பரிப்பன் – தாங்குவேன், அணை – படுக்கை, கறங்கு – காற்றாடி, சிலை – வில், சிற்பரன் – சிவபிரான், அணி – ஆபரணம்.

[ வாயுவைப் பார்த்து நீ என் உணவாக உள்ளாய்
எனக் கூறிப் போருக்கழைத்தல் ]

239 ஆயிரம் பகுவாய் முழைஞ்சுகொப் பளிக்கும்
ஆலவே கத்தையார் தடுப்பார்
நீயுமென் னுணவே யாமெனி லெனக்கு
நிகர்வது பிறிதெவன் கொல்லோ
வாயினு லுரைத்தென் னுகுவ நுனது
மதுகையும் எனதெறுழ் வலியும்
ஏயெனு மளவிற் காண்பரால் வானோர்
எனக்கனன் றிடுசமர்க் கமைந்தான் 8

[ தேவர்கள் இம்மலைச் சிகரத்தைப் பெயர்த்து எடுத்திடுக என
வாயுவிடம் கூற அவன் எழுதல் ]

240 அமைதலு மன்னே ரொருவருக் கொருவர்
ஆற்றலி னிகலுதல் நோக்கி
இமையவர் உமது மதுகையைக் காண்பாம்
யாமென மற்றிஃ துரைப்பார்
சிமையவெற் பிதனைப் பெயர்த்துநீ மற்றுத்
திண்ணிதிற் புறத்தினீ என்னுத்
தமையடுத் தெழுந்த சமீரணன் தனக்குஞ்
சருப்பவேந் தனக்குமாங் குரைத்தார் 9

[ அதனைப் பெயர்க்க ஒட்டாமல் தடுக்க
அனந்தன் பேருருக்கொள்ளல் ]

241 இசைத்தலும் அனந்தன் காட்டெரி கதுவ
எழுந்ததோர் வெண்புகை மானத்
திசைத்தலம் சிறுகப் பணுடவி விரித்துச்
செங்கதிர் மண்டிலம் மறைய

---

239 ஆலவேகம் – ஆலகாலவிடம் போன்ற கோபம், உணவு – பாம்பு காற்றை உணவாகக் கொள்ளுதலின் இவ்வாறு கூறினன். மதுகை – வலிமை.

240 சமீரணன் – வாயுதேவன், சருப்பவேந்தன் – ஆதிசேடன்.

விசைத்துமே லெழுந்து தனதுநெட் டுடல்மா
மேருவிற் காயிர மடங்காய்
அசைத்தன னீட்டிக் கணவன லுகுப்ப
ஆங்கதன் பாங்கர்வந் தடுத்தான் 10

[ அனந்தன் தன் உடலால் பொன்மலையைச் சுற்றிக்கொண்டு
வாயுவின் செயலைத் தடுத்தல் ]

242 நிலத்துவா லூன்றித் தனதுநெட் டுடலான்
நெடுவரை முழுவதுஞ் சூழ்ந்து
வலத்திறுற் சிக்க யாத்தனன் இறுக்கி
மணிப்பண மாயிர மவற்றால்
நலத்தகு சிகர கோடிகண் மறைத்தான்
நானிலம் முழுவதும் நடுங்கச்
சொலத்தகுந் தகைத்தோ மற்றவ னாற்றல்
சுரர்களும் நடுநடுங் கினரால் 11

[ அனந்தன் மலைச்சிகரத்தை காக்கும் முயற்சியின் வலிகண்டு
தேவர்கள் வியந்து கூறல் ]

243 அண்டகூ டத்தை யாக்கிய தொடங்கும்
அந்தணன் தூணம்நட் டதற்கு
வெண்டுகில் சாத்தும் விதங்கொலோ வல்லால்
வெண்முகில் வீழ்ந்திடும் மாண்போ
கொண்டவான் பனியின் எழுச்சியோ மற்ற
குளிர்ச்சியாற் றொட்டகஞ் சுகமோ
மண்டுபாற் கடலை மதித்தநாட் பொதிந்த
வயங்கொளி வெண்ணெய்மற் றேயோ 12

241 காட்டெரிகதுவ – காட்டுத்தீப் பொருந்த, மான – ஒப்ப, கணவனல் – பெருநெருப்பு.

242 சிக்கயாத்தனன் – அகப்படப் பற்றிக்கொண்டான்.

243 தூணம் – தூண் (கம்பம்), வெண்டுகில் – வெள்ளாடை, கஞ்சுகம் – சட்டை.

[ அனந்தன் சிகரத்தைக் காக்கும் காட்சி வருணனை ]

244 கூற்றுயிர் குடித்த குரைகழ லொருவன்
குலவிய செம்பொன்மே னியிற்பால்
நீற்றொளி பழுத்த வண்ணமோ நெடுநாள்
நிலத்தினைத் தாங்குநீர் மையினால்
ஆற்றல்சா லுதலுக் கிரசத மணிப்பூண்
அமைத்ததோ சுடுசுணச் சாந்தம்
தீற்றிய வாறோ தெரிந்தில மனந்தன்
திண்ணிதிற் பொதிந்தவப் பரிசே 13

[ குலகிரிகளும் கடலேழும் கலங்கின எனல் ]

245 அத்திறம் மேரு வடிமுடி காறும்
ஆயிரம் முடியுடை யனந்தன்
பொத்துதல் புரியக் குலகிரி யனைத்தும்
பூளைவீ எனத்திசை புகுத
முத்தெறி தரங்கக் கருங்கட லேழும்
மொத்துண்டு கரைபொரு திரங்க
சத்தமே கழும்பஞ் சடரெனப் பறப்பத்
தருக்குலஞ் சருகெனச் சுழல 14

[ விண்ணில் உள்ள திங்கள் முதலியவை கறங்கெனச் சுழல
திசைக்கரிகள் அழுங்க தேவர்கள் அஞ்சினர் எனல்]

246 திங்களும் மதியும் கறங்கெனத் திரிய
திசைக்கரி யவசமொத் தழுங்க
அங்கண்மா நிலமும் விசும்பும் மாருட
அண்டருங் கண்புதைத் தஞ்ச

---

244 ஒருவன் - சிவபிரான், பால் - வெண்மை, இரசதமணி - வெள்ளி மணி, சுணச்சாந்தம் - சுண்ணம்புச் சாந்து.

245 பூளைவி - பூளைப்பூ, தரங்கக்கடல் - அலைகடல், இரங்க - ஒலிக்க பஞ்சடர் - பஞ்சின் துகள், தருக்குலம் - மரங்கள்.

எங்கணுந் துகள்பட் டொழியவான் முகட்டில்
இலங்குடுக் கணங்களும் (யாவும்)
மங்குதல் புரியும் ஊழியின் றொன்று
வந்ததோ எனப்புவி மருள 15

[சிகரத்தைப் பெயர்க்க வாயு முயலும் வருணனை]

247 கூற்றென வுருத்து நெருப்பெனக் கொதித்துக்
கொடியவெள் ளிடியென முழங்கிச்
சீற்றமுந் தானும் தெரிவுறு வண்ணம்
தீப்பொரி விழிக்கடைச் சிந்தி
நாற்றிசை முகமும் ஒருமுக மாக
நாவிரண் டிரண்டெனக் கிடந்த
காற்றெழுந் தடர்ந்து தொடர்ந்துமீ தூர்ந்து
கைபரந் தலைத்ததை யன்றே 16

[வீசியெழுந்த வாயுவைத் தான் விழுங்கிக்கொண்டே
கலக்கமின்றி யிருக்கும் அனந்தன் நிலை யிதுவெனல்]

248 அலைத்தலும் மேரு அலைவுறு வண்ணம்
அனந்தனும் திண்ணிதின் யாத்துத்
தலைத்தலை சோர்ச்சி யிலாவகைக் காத்துத்
தனதுடை யாயிரம் பகுவாய்
பிலத்தினில் வாயு வனைத்தையும் புகுத்திப்
பெரும்பசி தணிந்திலா தவன்போல்
கலக்கமற் றின்றி வரவரப் பருகிக்
கதுவுறுப் பிரமமொத் துளனால் 17

---

246 திசைக்கரி - திக்குயானைகள். அண்டர் - தேவர் உடுக்கணங்கள் - விண்மீன் கூட்டங்கள், மருள - கலங்க.

247 உருத்து - வெகுண்டு, நாவிரண்டிரண்டு - பத்து (தசவாயுக்கள்) கைபரந்து - எல்லைகடந்து. அன்றே அசை.

248 சோர்ச்சி - சோர்வு, மறதி, பிலம் - குகை.

[வாயுவின் வேகத்தால் உலகம் கறங்கெனச் சுழல்கிறதெனல்]

(கலிவிருத்தம்)

249 இறங்க வேற்றுஞ் சலாகை யிலங்கொளி
திறங்கொள் மேருச் சிகரமொப் பாகவே
மறங்கொள் வாயு மதுகையி னுற்சுழல்
கறங்கு போன்றது காசினி வட்டமே 18

[அனந்தன் விடாது பற்றியிருக்கும் நிலை]

250 அண்ட கூட மலைந்துகப் பற்பகல்
சண்ட மாருத மின்னணந் தாக்கலும்
மண்டு மாற்றலின் வாளரா வேந்தனும்
கொண்டு பற்றினன் கூற்ற மொப்பாகவே 19

[இருவருடைய ஆற்றலும் சலியாமை கண்ட
தேவர்களின் எண்ணம்]

251 வாயு வாற்றலும் வாளரா வாற்றலும்
சாயு மாறு சலிப்பதி லாமைவான்
... ... ... வாக கண்டிறும் பூதனல்
ஓயு மாறிரப் பாமென வுன்னினர் 20

[தேவர்கள் அனந்தனிடம் வேண்டுதல்]

252 உன்னி விண்ணோ ருரக னின்னிடைத்
துன்னு மாற்றலுன் (னலித்) தொல்புவிச்
சின்ன மின்னம் படாது சிறிதுநீ
மன்ன நீ(சிறிதமை)கென வாழ்த்தினர் 21

---

249 சலாகை – இரும்புத்தடி, மரம் – வீரம், மதுகை – வலிமை.

251 சாயுமாறு – தோற்கும் வகை, இரப்பாம் – வேண்டுவோம், உன்னினர் – எண்ணினர்.

252 உரகன் – ஆதிசேடன், சின்னம் – தீங்கு.

[ அனந்தன் தன் பிடியைச் சிறிது தளர்த்தலும் - வாயு சிகரத்தைப் பிடுங்குதலும் ]

253 வந்து வானவர் வாழ்த்தலு மற்றது
சிந்தை செய்து சிறிதிடந் தந்தது
தந்த (போதினில் மா)மணிக் கூடத்தோ
டந்தில் வாயு பிடுங்கிய தாமரோ 22

[ வாயுவின் சீற்றம் தணியத் தேவர்கள் வேண்டுதல் ]

254 பிடுங்க லோடும் ......... .........
இடங்கொள் பூதல மீறுரு வண்ணத்தாற்
றடங்கொள் வானவர் தானவர் கையமைத்
தடங்க வேண்டலும் அடங்கிய தாமரோ 23

[ தேவர்கள் இருவரையும் போற்றிக் கொண்டாடி மகிழ்தல் ]

255 அரவ வேந்தையும் ஆற்றல்வங் கூழையும்
பரவி நும்வலி பார்த்தனம் யாமெனு
இருவிர் நீவிர் இணைத்திலிர் ஈண்டென
உரவு நீண்முடி யும்பர்கொண் டாடினர் 24

[ இருவரும் மாறுபாடு தணிந்துசெல்லத் தேவர்கள் தம் இருப்பிடம் சேர்தல் ]

256 சண்ட வாயுவும் சர்ப்பமும் மாறுதீர்ந்த்
தண்டர் போற்ற வகன்றன வப்பொழு
தெண்டி சாமுகத் திந்திர னாதியர்
(தண்ட) வின்றியே தம்பதத் தேகினர் 25

---

255 வங்கூழ் - காற்று (வாயுதேவன்) உரவு - வலிமை, உம்பர் - தேவர்கள்.

256 சர்ப்பம் - ஆதிசேடன், தம்பதம் - தமதிருப்பிடம்.

[சுந்தராசலம் இங்குவந்த வரலாற்றை கூறுவேன் எனச் சூதமுனி உரைத்தல்]

257 அங்க ணுற்ற திறம தாலினித்
துங்க நீள்முடிச் சுந்தர மால்வரை
இங்கு வந்த திறமற் றியம்புகேன்
உங்க ளன்பினு லென்றினி தோதினன் 26

[சோழனுடு செய்த தவப்பயன் எனல்]

258 நாவ லஞ்செழுந் தீவு நவையிலாத்
தேவ மேருவின் றென்றிசைப் பாங்கரும்
பூவ லம்புநீர் பொன்னிநன் னுடுமுன்
ஏவ வாற்றும் இமுக்கில் தவத்தினல் 27

[வாயுவின் வேகத்தால் கயிலாயத்தின் நீள்மணிக்கூடம் இங்குவந்து சேர்ந்ததெனல்]

259 வாயு வேகத்தான் மாகயி லாயத்தின்
ஏயு நீள்மணிக் கூடத்தோ டேங்கெழிற்
றூய நீடொளிச் சுந்தர மால்வரை
மேய காவிரித் தென்கரை மேவிற்றால் 28

[அதனேடுகூட சந்தனமால்வரை வளம்கூறுதல்]

260 தணப்பில் சுந்தரச் சைய மதனுக்குக்
குணக்கி ரண்டு குரோசத் தின்னெல்லை
மணக்குஞ் சாந்த மணிக்கூட மால்வரை
கணக்கி லாவளம் பூத்துக் கனிந்ததால் 29

---

260 தணப்பில் - நீங்குதலில்லாத, குணக்கு - கிழக்கு, குரோசம் - ஓர் நீட்டலளவு.

[இம்மலையில் உள்ள இலிங்கத்தைக் காமதேனுவும் முனிவர்களும் அருச்சனை புரிந்துவந்தனர் எனல்]

261 *அனைய குன்றமர் அற்புத லிங்கத்தைத்*
*துனிவி லன்பிற் சுரபி யருச்சித்துக்*
*கனைக ருங்கடற் காசினி போற்றவே*
*முனிவிற் பேரின்பம் முற்றிய தென்பரால்* 30

[இம் மலையில் ஒளிமயமாய மகாலிங்கம் விளங்குகிற தெனல்]

262 *பொன்னித் தென்கரை பொற்புறு பான்மையால்*
*துன்னி யுற்றவச் சுந்தர மால்வரை*
*தன்னிற் சோதி தயங்கு மணிமயம்*
*மன்னு கின்ற மகாலிங்கம் வைகுமால்* 31

[இங்கே இறைவனோடு மலைமகளும் உறைகின்றாள் எனல்]

263 *வைகு மந்த மகாலிங்கம் தன்னுடன்*
*மெய்க லந்தமின் னாள்கிரி சுந்தரி*
*மொய்க ருங்குழல் முற்றிழைச் செய்யவாய்*
*பெய்க ணங்குழைப் பேதையும் வைகுமால்* 32

[சுந்தராசலத்தின் அளவு கூறுகிறது இச்செய்யுள்]

264 *அன்ன குன்றத் தடியி னகலந்தான்*
*மன்னும் யோசனை மூன்றதன் மாமுடி*
*பன்னு கின்ற பரப்பரை யோசனை*
*என்ன ஓதுவர் மேலவ ரென்பவே* 33

[இவ்வெற்பில் இறைவன் லிங்கவடிவில் இருக்கும் காட்சி]

265 *நலஞ்செய் கின்ற நவமணி வண்ணமாய்*
*இலங்கு சுந்தர லிங்கமி ருந்ததால்*
*நிலந்த னிற்புகு தாதந்த நீள்வரை*
*பொலங்கொள் மாமுடி பொற்புறத் தோன்றுமால்* 34

---

261 **துனிவில்** – வெறுப்பில்லாத, சுரபி – காமதேனு.

263 **கிரிசுந்தரி** – பார்வதி, பேதை – பார்வதியாகிய உமையம்மை.

**[ இத்தல விருட்சத்தின்கீழ் இறைவன் பொலிகின்றான் எனல் ]**

266 அக்கு வட்டின் அரும்பெற லுச்சிமேல்
முக்கி ளைத்தளிர் மொய்மலர்க் கூவிளந்
தக்க வன்னதன் கீழருள் தான்குடி
புக்க லிங்கம் பொலிந்தஃ தென்பரால் 35

**[ இறைவன் அன்பருக்கு அருளுதற்பொருட்டிங்கு உறைகின்றான் எனல் ]**

267 ஈறி லன்பர்க்கும் எண்ணில்விண் ணோருக்கும்
பேறு நல்கும் பொருட்டுப் பிறையுடன்
ஆறு வன்னி யரவம ணிந்துமை
கூறு கொண்ட குழகன் உறைவனால் 36

**[ தேவர்களும் சித்தர்களும் மூவர்களும் அங்கு உறைகின்றார் எனல் ]**

268 தேவர் கின்னரர் சித்தர்விச் சாதரர்
யாவ ரும்மங்க ணெய்தி யுறைவரால்
மூவர் தம்மிலும் முன்னவன் மால்வரைப்
பாவை யாளொடும் வைகுமப் பான்மையால் 37

**[ இங்கு வாழ்வார்க்கும் வழிபடுவார்க்கும் எய்தும் பேறு இது என்கின்றது ]**

269 எண்டி சாமுகத் துற்றுமிவ் வெற்பையுட்
கொண்டு ளார்க்கும் பரகதி கூடுமால்
கண்டு ளாருக்கும் கைதொழு வார்க்கும்வாய்
விண்டு வாழ்த்துநகர்க் கும்சொல வேண்டுமோ 38

---

266 குவடு – சிகரம், தக்க – தங்கி விளங்க.

267 ஆறு – கங்கை, வன்னி – வன்னிமாலை, அரவம் – பாம்பு, குழகன் – சிவபிரான்

[ இத்தலத்திற்கு வடமொழியிற் சுந்தரமாபுரம் என்று பெயர் என்கின்றது ]

270 வீறு சுந்தர வெற்பவன் மேவலாற்
பேறு நல்கும் பெயரத் தலந்தனக்(கு)
ஆறு சூடி யருளால் அவனிமேல்
மாறில் சுந்தர மாபுர மென்பரால் 39

[ சுந்தரமாபுரத்தைத் தமிழ்ச் சான்றோர் நல்லூர் எனத் தமிழிற் கூறுவர் எனல் ]

271 தேவ பாடையிற் செப்புமப் பேரினைத்
தாவி லாத தமிழ்தெரி நாவலர்
பூவில் மங்கை பொருந்தலி னற்செல்வம்
ஓவி லாதநல் லூரென் றுரைப்பரால் 40

[ இக்கதை கேட்போர் எய்தும் பயன் கூறுகிறது ]

272 சொற்ற விக்கதை சொல்லுநர் கேட்குநர்
முற்று மன்பி லெழுது முறைமை யோர்
குற்ற மின்றிக் குவலய மீதில்வாழ்ந்
தற்றம் நீக்கும் அரனருள் சேர்வரால் 41

[ இக்கதையின் எழுத்தொன்று கற்பினும் இறையடி சேர்வர் எனல் ]

273 இக்க தைக்க ணெழுத்தொன்று கற்பிலும்
தக்க வாறு சலிப்பின்றிக் கேட்பினும்
மிக்க செல்வங்கள் யாவையு மேவியே
அக்க ணிந்த அரன்பதம் சேர்வரால் 42

---

271 தேவபாடை – சமற்கிருதம், தாவிலாத – குறைவில்லாத.

272 அக்கு – எலும்பு.

273 விஞ்சை – வித்தை.

[ கேட்க விரும்பினோர் எல்லாப் பேறுகளும் பெறுவர் எனல் ]

274 ஆயுள், விஞ்சை, யருள்மகப் பேற்றுடன்
ஏயுஞ் செல்வம் இராசவ சீகரம்
தூய நல்லதம் தொல்புக ழெய்துவார்
மேய விக்கதை கேட்க விரும்பினோர் 43

சுந்தராசலச் சருக்கம் முற்றும்

ஐந்தாவது

# பிரமதேவர் அருச்சனை புரிந்த சருக்கம்

[பிரமதேவன் பூசனை புரிந்த வரலாற்றை முனிவர்கள் சூதமுனிவரிடம் வேண்ட அவர் கூறத்தொடங்குதல்]

275 ஏய்ந்த காதலால் ராச தக்குணச்
சாந்தி வந்துறுந் தன்மை யாலயன்
வாய்ந்த பூசைசெய் வண்மை சூதநீ
ஆய்ந்து சொல்கென அவனும் சொல்கிறான் 1

[படைப்புத் தொழிலிற் சலிப்புற்ற பிரமன் வருந்தி எண்ணுதல்]

276 படைப்புப் பூண்டுழல் பான்மை யால்நமக்
கிடைப்ப டாச்செயல் எய்து கின்றதால்
தடைப்பு ணுந்துளந் தன்ம யத்துறக்
கிடைப்ப தென்றெனக் கேத முற்றரோ 2

[உயிர்களின் அறத்திற்கும் மறத்திற்கும் ஏற்பச் செய்வது ஒரு தொழிலாகுமா என எண்ணுதல்]

277 அறஞ்செய் கிற்பவும் அலக்க ணெய்தியே
மறஞ்செய் கிற்பவும் ஆகி மன்னுயிர்
பிறந்தை யெய்துமப் பேசும் யாவையும்
திறந்தெ ரிந்துசெய் வதுமோர் செய்தியே? 3

---

275 ஏய்ந்த - பொருந்திய, இராசதகுணச்சாந்தி - இராசதகுண அமைதி,

276 படைப்பு - படைத்தல் தொழில், இடைப்படா - ஓய்வில்லாத கேதம் - வருத்தம்.

277 அலக்கண் - துன்பம், மறம் - பாவம், பிறந்தை - பிறவி.

[ எழுவகைத் தோற்றத்திலும் நாற்கதியிலும் பிறப்பிக்கும் பிரமன் தொழில் ]

278 தோற்ற மேழெனத் தொகுத்துத் தொல்லுயிர்
ஏற்ற நாற்கதிக் கெய்த வேற்றலும்
பேற்றுக் கேடின்பம் பிணிகி ழவுசா
வாற்று மாறுமோ ரமைதி யாகுமோ ! 4

[ உயிர்கள் பல்வேறு நிலைகள் எய்தும் நிலைபற்றி எண்ணுதல் ]

279 இன்ப மெய்துவ எண்ணில் பல்லுயிர்
துன்ப மெய்துவ சொல்லி னத்துணை
அன்பு செய்வன அலகி லாதன
வன்பு செய்வன வகுக்க லாகுமோ? 5

[ வாழ்வும் தாழ்வும் செல்வமும் வறுமையும் உயிர்கள் எய்தும் நிலைபற்றிக் கருதுகின்றான் பிரமன் ]

280 மணந்து வாழ்வன கோடி மணமிசைத்
தணந்து சாம்புவ கோடி தாவிலா(து)
இணங்கு செல்வத்த கோடி யேமுற்
றுணங்கு நல்குர வுறுவ கோடியே 6

[ தாழ்ந்தும் நோயுற்றும் நோயின்றியும் உயிர்கள் விளங்கும் நிலையைக் கருதுதல் ]

281 தாழ்ந்து போற்றுவ வனந்தந் தம்மையே
சூழ்ந்து போற்றவோங் குவவு மத்துணை
வீழ்ந்து நோயினால் விளிவ வெண்ணில
ஆழ்ந்த நோயிலா தனவ னந்தமே 7

---

278 ஏற்றல் – பிறக்குமாறு செய்தல், பேற்று – பேறு (செல்வம்), கிழவு – கிழட்டுத்தன்மை.

279 அலகிலாதன – அளவில்லாத உயிர்கள், வன்பு – கொடுஞ்செயல்.

280 சாம்புவ – அழிபவை, தாவிலாது – கெடாது, ஏதம் – குற்றம்.

281 விளிவ – இறப்பவை, அனந்தம் – பல.

[ அறிவும் ஆற்றலும் அவையின்றியும் விளங்கும் உயிர்கள் பற்றி எண்ணுதல் ]

282 இழிவ சிற்சில வேற்ற மாகவே
மொழிவ சிற்சில மூடஞ் சிற்சில
ஒழிவி லாவறி வுதவ நன்னெறி
அழிவில் விஞ்சைய வனந்த கோடியால் 8

[ பிறப்பதும் இறப்பதுமாக நிகழும் உயிர்களின் நிலையை எண்ணுதல் ]

283 பிறப்ப வாயிரம் பிறந்து பூமிசை
யிறப்ப வாயிரம் இனைய யாவையும்
மறப்பி லாவகை மதித்து நோக்குதல்
சிறப்பென் றுருமோ சிறுமைத் தென்பவே 9

[ இத் தொழிலை வெறுத்து இறைவனிடம் அமைதிபெற எண்ணுதல் ]

284 ஆத லாலுளம் அமைதி வந்துற
நாத னருளினை நணுகிப் போற்றுதற்
கேது வாந்தலம் எவையும் சார்ந்துபின்
ஓர்ந்து மேதி னீயை மேவினன் 10

[ பிரமன் பல தலங்களைச்சுற்றி இறுதியில் நல்லூரடைதல் ]

285 மேவி நான்முகன் வேலை சூழ்புவித்
தாவி லாத்தல மெவையுஞ் சார்ந்துபின்
ஒவி லாதுமை யுடனு றைந்துமெய்த்
தேவன் வாழும்நல் லூரைச் சார்ந்தனன் 11

---

282 இழிவ – தாழ்வன, விஞ்சைய – வித்தையை உடையவை.

283 மதித்து – கணக்கிட்டளந்து, சிறுமைத்து – சிறுமையுடையது.

284 வேலை – கடல், ஒவிலாது – ஒழிவில்லாமல்.

[ பிரமன் நல்லூரிறைவனை வணங்கி மகிழ்ந்து அருச்சனை புரிதல் ]

286 சேர்ந்து முக்கணன் செம்பொ னலயஞ்
சார்ந்து தாண்மலர் தலையிற் சூடியே
யார்ந்த காதலால் அருச்ச னைசெய்வான்
வார்ந்து கண்கணீர் ததும்ப வாழ்தினன் 12

[ இறைவன் பிரமனை முறைப்படி அருச்சிப்பாயாக என அருளுதல்]

287 கஞ்ச மாமலர்க் கடவுள் வாழ்த்தலும்
அஞ்ச னம்மிடற் றையன் அர்ச்சனை
நெஞ்சு வந்துநீ நெறியிற் செய்கென
செஞ்செ வேயருள் செய்திட் டானரோ 13

[ பிரமன் முறையாக அருச்சனை புரிதல் ]

288 முண்ட காசனன் முறையி லின்னணந்
தொண்டை வாய்க்கிரி சுந்த ரீயுடன்
மண்டு சோதியம் மாம ணிமயத்
தண்டர் நாதனை அருச்சித் தானரோ 14

[ பிரமன் அருச்சனைக்கு மகிழ்ந்த இறைவன் தேவியோடு
காட்சிதர எழுதல் ]

( கலித்துறை )

289 பருவ மாயிரங் கடந்தபின்
பனிமதி மிலைச்சும்
உருவ நீண்முடி யும்பர் கோன்
உந்திபூத் தவன்செய்
பொருவில் பூசனைக் குள்ளுவந்
தருள்மழை பொழிவான்
அரிவை தன்னொடும் அவ்விலிங்
கத்தினின் றெழுந்தான் 15

---

287 கஞ்சமாமலர்க்கடவுள் – பிரமதேவன், அஞ்சனம் – கருமை, மிடறு – தொண்டை.

288 முண்டகாசனன் – பிரமன், முண்டகம் – தாமரை, தொண்டை – கொவ்வைக்கனி,

289 உந்திபூத்தவன் – பிரமன், பொருவில் – ஒப்பில்லாத.

[ இறைவனின் திருவடிக் கோலம் ]

290 பனிச்செ ழுந்துணர் இதழியம்
படர்சடைப் பரப்பின்
புனிற்றி ளம்பிறைச் செக்கர்வான்
எழுந்தெனப் பொலிய
கனைத்தெ ழுந்திரைப் பாற்கடல்
வருமணி கடுப்ப
அனல்த தும்புகண் ணீறணி
நெற்றியின் அவிர 16

291 செய்ய தாமரை மலர்ந்தெனத்
திருமுகங் கவினப்
பைய ராமணிக் குண்டலந்
தோடொளி பரப்பக்
துய்ய வானநாட் டரம்பையர்
துணைவிழிக் கெழுத
மைகு ழைத்துவைத் தாலென
மணிக்கண்டம் வயங்க 17

292 மந்த ராசல மதனுடன்
வாகுவை யளப்பான்
சிந்தை செய்தராச் சூழ்ந்தென
வங்கதஞ் செறிய
அந்தில் மான்மழு வரதத்தோ
டபயமுந் தாங்கி
எந்தை கைத்தலஞ் சரோருக
மாகநன் கிலங்க 18

---

290 **இதழி** – கொன்றை, அனல் ததும்புகண் – சிவபிரான் நெற்றிக்கண்.

291 பையரா – படத்தையுடைய நாகம், மணிக்கண்டம் – நீலகண்டம்.

292 வாகு – தோள், அங்கதம் – தோளணி, சரோருகம் – தாமரை.

293 உரிய முப்புரி நூலுட
னேடிய பசும்பொன்
வரிகொள் நீளுடல் வயங்கொளி
வாளரா மிடைந்தே
அரிய செம்பொனோ டவிரொளி
யிமைக்கும்பால் வெள்ளிப்
புரிமு றுக்கிய தாலென
மார்பிடைப் பொலிய 19

**[ மலைமகள் ஒருபால் விளங்கத் தோன்றும் காட்சி ]**

294 மேரு மால்வரைப் பாங்கரின்
விருப்பமீ தூறச்
சேரு மோர்பசம் பொற்கொடி
யாமெனச் செறிந்து
வாரும் பூங்குழல் வண்முலை
வாங்கமைப் பணைத்தோள்
நேரும் நுண்ணிடை வரைமக
ளொருபுடை நிலவ 20

**[ யானைமுகனும் ஆறுமுகனும்
இருபால் விளங்கத் தோன்றும் காட்சி ]**

295 ஐங்க ரத்திறோன் அறுமுக
னவனொடு மன்பால்
எங்கள் நாயகன் றன்னிரு
மருங்கினும் எய்தச்
செங்கண் மால்விடை நெடுங்கொடி
சேண்விசும் பளப்பக்
கங்குல் வந்தெழு மதியென
வெண்குடை கவிப்ப 21

---

294 பாங்கர் - பக்கம், வாரும் - நீண்ட, வாங்கமை - நீண்ட மூங்கில்.

[ உரகர் முதல் தேவர்கள் இறைவன் புடை சூழ்ந்து ஏத்தி நிற்றல் ]

296 உரகர் கின்னரர் கருடர்கந்
திருவர்ஔண் சோதி
விரவும் விண்ணவர் விஞ்சையர்
சாரணர் இயக்கர்
பரவு மாதவர் புரந்தரன்
நிரந்தரம் பாங்கற்
புரவி பூண்டமான் முதலியோர்
சூழ்ந்தடி போற்ற 22

[ தெய்வ வாச்சியங்கள் முழங்கும் நிலையும்
நாரதர் வீணை இசைத்தலும் ]

297 தேவ துந்துமி திசைதிசை
முழங்கொலி செய்யத்
தாவில் தும்புரு நாரதர்
தந்திரி நீவப்
பாவை நல்லவர் பாற்கடல்
வயிறுவாய்த் துள்ளார்
மேவு வெண்ணிலாச் சுகிர்ந்தனன்
சாமரை வீச 23

[ வெள்ளிமலையின் மேல் மேருவென
இறைவன் காட்சிதரக் கண்ட பிரமன் வணங்கி மகிழ்தல் ]

298 வெள்ளி யங்கிரி முதுகினேர்
மேருவே தண்டம்
தெள்ளு செங்கதிர் திசைசெலச்
சேர்ந்திருந் தாங்குப்
பள்ள வேலைசூழ் பாரெலாம்
ஏய்ந்தவெள் விடைமேல்
வள்ளல் தோன்றினன் தோன்றலும்
வணங்கிய மலரோன் 24

---

297 துந்துபி - வாத்தியம், தந்திரி - யாழ், நீவ - வாசிக்க.
298 வேதண்டம் - மலை, மலரோன் - பிரமதேவன்.

[ பிரமன் எல்லையற்ற களிப்பால் ஆடிப்பாடிப் பரவுதல் ]

299 பாடி னான்மறை யாயிரங்
கோடிகள் பாடி
ஆடி னான்மணி முடிமிசை
யடிமல ரன்பாற்
சூடி னானுடல் துளங்கினான்
துளக்கிலா இன்பங்
கூடி னானவன் பத்திமை
யாவரே குனிப்பார்? 25

[ ஆனந்தக் கண்ணீர் பெருக இறைவனைப்
பிரமன் போற்றத் தொடங்குதல் ]

300 அன்பு மீக்கொள அருவிநீர்
கண்மலர் சொரிய
என்பு நெக்குநெக் குருகவே
யிதயபுண் டரிகம்
நன்கி னோடலர் தரப்புள
கரும்பநான் முகத்தோன்
முன்பு வந்தித்துப் பழிச்சுதல்
புரியமே வினனால் 26

[ இதுமுதல் ஆறு பாடல்கள் இறைவனைப்
பிரமன் போற்றித் துதித்தல் ]
( எண்சீர் விருத்தம் )

301 மைக்கட் கொடிபங் குடையாய் சரணம்
வடிகூர் மழுவாட் படையாய் சரணம்
தொக்குத் தருதூ சுடையாய் சரணம்
துணரா ரிதழித் தொடையாய் சரணம்

---

301 மைக்கட்கொடி – உமாதேவி, தொக்கு – உடம்பு, ஈண்டு யானையின் தோலை உணர்த்திற்று, தூசு – ஆடை, துணர் – கொத்து, இக்குச்சிலை – கரும்புவில்.

இக்குச் சிலையாற் கிடையாய் சரணம்
எளியேற் கருள்கட் கடையாய் சரணம்
செக்கர்ச் சடையாய் சரணஞ் சரணம்
சினமால் விடையாய் சரணஞ் சரணம் 27

302 வேதப் பொருளாய் நின்றாய் சரணம்
விரவா ரரணம் வென்றாய் சரணம்
நாதத் தொளியாய் நிறைவாய் சரணம்
நல்லூர் குடிகொண் டுறைவாய் சரணம்
போதத் துருவா கியவா சரணம்
புகழெண் டிசைபோ கியவா சரணம்
கீதத் தொலியாய் சரணஞ் சரணம்
கேடில் வலியாய் சரணஞ் சரணம் 28

303 விடமா ரமுதா நுகர்வாய் சரணம்
விண்ணோர் பரவும் விமலா சரணம்
தடமால் வரைவார் சிலையாய் சரணம்
தவளத் திருநீ றணிவாய் சரணம்
படவா ளரவப் பணியாய் சரணம்
பத்திக் குதவும் பாதா சரணம்
இடரா னவைதீர்த் தருள்வாய் சரணம்
எனையா ளுடையாய் சரணஞ் சரணம் 29

304 அணுவிற் கணுவாய் அமர்வாய் சரணம்
அண்டத் தினுமே லானாய் சரணம்
உணர்வுக் குணர்வாய் உறைவாய் சரணம்
ஒளிர்மா மணியின் உருவாய் சரணம்

---

302 விரவாரரணம் – பகைவர்தம் முப்புரமாகிய கோட்டை.

303 விடம் – ஆலகாலவிடம், தடமால்வரை – (ஈண்டு) மேருமலை
சிலை – வில், தவளம் – வெண்மை, பணி – அணிகலம்.

இணையற் றுயரும் எந்தாய் சரணம்
ஈறில் பொருளா மிறைவா சரணம்
நணுகற் கரியாய் சரணஞ் சரணம்
நல்லூ ரரசே சரணஞ் சரணம் 30

305 மூவா முதலே சரணஞ் சரணம்
முக்கட் கனியே சரணஞ் சரணம்
தாவா வொளியே சரணஞ் சரணம்
தருகற் பகமே சரணஞ் சரணம்
கோவா மணியே சரணஞ் சரணம்
குன்று நிதியே சரணஞ் சரணம்
நாவா ரமுதே சரணஞ் சரணம்
நல்லூ ரரசே சரணஞ் சரணம் 31

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

[பிரமனின் அன்புக்கு உவந்த இறைவன் வேண்டும் வரம் கேளெனல்]

306 இத்திறம் பழிச்சி வேதன்
இணையடி யிறைஞ்சி நிற்ப
முத்தக முரிஞ்சும் பைம்பூண்
முகிண்முலை மயிலஞ் சாயற்
கத்திகைக் கருமென் கூந்தல்
காம்புறழ் பசுந்தோட் கன்னி
வித்தகப் பாகன் நோக்கி
வேண்டுவ கேண்மோ வென்றான் 32

[பிரமன் இறைவனிடம் வரங்கேட்டல்]

307 அங்கணன் இனைய கூற
அம்புயத் தவிசின் மேலோன்
பங்கயக் கரங்கள் கூப்பிப்
பதமலர் பணிந்து போற்றி

---

306 பழிச்சி – வழிபட்டு ஏத்தி, வேதன் – பிரமன், காம்பு – மூங்கில்.

எங்கள்நா யகன்பாற் கேட்ப
தெவன்கொலா மென்று நிற்பான்
பொங்கிய அன்பே அல்லால்
ஆயினும் புகல்வே னென்முன் 33

[ இந்த லிங்கத்தினிடம் இதுபோலவே என்றும் விளங்க வேண்டுமெனக் கேட்டல் ]

308 இப்பரி செந்த ஞான்றும்
இந்தலிங் கத்தி னூடே
தப்புத லொருவி, யைய
சார்ந்துநீ விளங்கல் வேண்டும்
மைப்படி கண்ணாள் செவ்வேள்
வரமிகு நந்தி யோடே
ஒப்பிலித் தலத்தின் நாளு
முற்றருள் சுரத்தல் வேண்டும் 34

[ அருச்சனைப் புரிவோர்க்குப் பவந்துடைந்தின்பமருள வேண்டுதல் ]

309 நவமணி மயமா யோங்கும்
நலங்கொளிவ் விலிங்கந் தன்னை
உவமையி லன்பு தன்னால்
உற்றருச் சனைசெய் வோர்க்குப்
பவந்தரு வினைகள் நீக்கிப்
பாங்குடன் நினைந்த வெல்லாம்
சிவந்ததாள் மலராய்! நல்கிச்
சிவகதி யுதவல் வேண்டும் 35

---

307 அங்கணன் – சிவபிரான்.

308 பவந்தருவினைகள் – பிறப்பைத்தரும் இருவினைகள்.

309 ஒடிவிலா – கெடாத, நெடியவன் – திருமால்.

[பிரமதீர்த்தத்தில் நீராடி வழிபடுவோருக்கு இம்மை இன்பமும் மறுமைப் பேறும் வழங்க வேண்டல்]

310 அடியனேன் கண்ட தீர்த்தத்
தாடுநல் லவருக் கைய
ஒடிவிலாப் போகம் முற்றும்
ஊழ்முறை மாந்திப் பின்னர்
நெடியவன் முதலாய் உள்ளோர்
நேசித்தேக் கற்று நிற்கும்
முடிவில்பே ரின்ப வீடு
முறைமையா லளித்தல் வேண்டும் 36

[பிரமதீர்த்தத்தில் மூழ்கி ஐந்தெழுத்தோதுவார்க்கு இன்பம் நல்கும் தலமாக இது விளங்க வேண்டல்]

311 எந்தைநின் வடிவ மான
எழுத்தைந்தின் சித்தி யந்தக்
கொந்தவிழ் கமல வாவிக்
குளிர்புனல் படிந்து நின்னை
வந்தடி பணிந்து போற்றி
வரன்முறை வழாம லோதின்
சந்ததம் இனிது நல்கும்
தானமீ தாதல் வேண்டும் 37

[இத்தலத்துறைவோர் இருமையும் பெறல் வேண்டுதல்]

312 இத்தலத் துறையுந் தூயோர்
எண்ணிய எண்ணி யாங்கே
அத்த! நீ யருளிப் பின்னர்
அழிவிலா னந்த வீடும்
சித்தம துகந்து வாழத்
திருவுளம் நயந்து நல்கி
முத்தலத் தவரும் போற்ற
முறையின்நீ உறைதல் வேண்டும் 38

[உன் இணையடி போற்றிச் சாந்திபெற வேண்டுமெனல்]

313 ஒருவழிப் பட்டே னுள்ளம்
உன்னிரு பாதம் உன்ன
இருமையும் உதவு மெந்தாய்
இராசத குணத்தின் சாந்தி
தருதலும் வேண்டும் என்னுத்
தாமரைப் பொகுட்டின் மேலோன்
பொருவரும் அன்பு கூரப்
பொன்னந்தாள் வணங்கி நின்றான் 39

[இறைவன் அவ்வாறே யருள பிரமன் தன் உலகம் அடைதல்]

314 அண்ணலவ் வரங்க ளெல்லாம்
அருள்பழுத் தளித்துச் சோதி
வண்ணவற் புதலிங் கத்து
மருவினன் வயங்கா நின்றான்
கண்ணொடு மனமும் அந்தக்
கருணைலிங் கத்தின் வைத்துத்
தண்ணந்தா மரையின் மேலோன்
தனதுல கடைந்தான் மன்னோ 40

[இக்காதையைச் சொல்பவர் கேட்பவர் எய்தும் பயன் கூறுதல்]

315 இயம்புமிக் காதை தன்னை
எழுதுவோ ரிசைக்கும் நல்லோர்
நயம்பெறக் கேட்குந் தூயோர்
நன்றென மதிக்கும் மேலோர்
வியந்தன குணங்க ளெல்லாம்
வேண்டியாங் கெய்தி யன்னோர்
பயந்தரு மின்ப வெள்ளப்
பரவையிற் படிவர் மாதோ. 41

பிரமதேவர் அருச்சனை புரிந்த சருக்கம் முற்றும்.

---

314 மருவினன் வயங்கா நின்றான் - பொருந்தி விளங்கினன், உலகு - சத்தியலோகம்.

315 பயம் - பயன், பரவை - கடல்.

ஆருவது

# பிரமதீர்த்தச் சருக்கம்

[ முனிவர்கள் வேண்டப் பிரமதீர்த்தத்தின் வரலாற்றைச்
சூதமுனிவர் கூறத் தொடங்குதல் ]

( தரவு கொச்சகக் கலிப்பா )

316 அரவுபூண்டவன் அருளாமென
விங்கிலத்தவ தரித்த
பரவுமாதவம் மிகுஞ்சூதமா
முனிவவிப்பா லெமக்கு
விரைகொள்தாமரை யில்வாழ்வேதியன்
அன்பினல் விதியினற்றும்
பிரமதீர்த்தத் தியல்புபேசென
ஆங்கவன்பேச லுற்றுன் 1

[ பிரமன் ஆகாயகங்கை நீரால்
இத்தீர்த்த வாவியை நிரப்பினுன் எனல் ]

317 எம்பிரான்சன் னிதிமுன்னர்நாற்
சதுரமாயிலங்கு சோதி
பைம்பொனுற்படி வகுத்தாங்கதற்
குத்துறைபாங்கி ஞன்கா
அம்புயாசனன் அமைத்தருளினு
காயகங்கையின் புனலால்
இம்பராருய்ய வேயினிதுபூ
ரித்தவனிஙீய செய்தான் 2

---

316 அரவுபூண்டவன் - சிவபெருமான், விரை - மணம், விதி - நான்முறை.

317 அம்புயாசனன் - பிரமதேவன், இம்பரார் - இவ்வுலகத்தவர்.

[ நான்கு வேதத்தையும் நாற்றிசையிலும்
துறைகளாக அமைத்தான் எனல் ]

318 இந்திரத்திசை யினிலிருக்குவே
தத்தையும்யம திசைக்கண்
அந்தமிலாவெசுர் வேதமாங்
கதனையுமமிர்த மூற்றும்
சந்திரமவுலி சன்னிதியிற்சா
மத்தையுந்தா விலாத
மந்திரஅதர்வ ணம்வடதிசைத்
துறையினும்வைத்து மாதோ 3

[ தீர்த்த வாவியின் நடுவில் ஆறங்கத்தையும் பதினெண்
புராணங்களையும் ஏழுகோடி மந்திரங்களையும் தாபித்தான் எனல் ]

319 ஆங்கதன்நடுவில் வேதாங்கமுமெ
னெம்பிரானருளின் மல்கும்
நீங்கலின்றாய மூவறுபுரா
ணங்களும்நீதி சான்ற
பாங்கமைத்தெழு கோடிமகாமந்
திரப்பரப்புந்தா பித்தே
ஓங்குமன்பா லமைத்தானதன்
பெருமையாருரைக்க வல்லார் 4

[ எல்லாத் தீர்த்தங்களும் ஆண்டுதோறும்
இதன்கண் வந்து நிறையுமெனல் ]
( கலித்துறை )

320 அத்தகைப் பெருமையா லலரின்மீ
மிசையவன் அமைத்த தீர்த்தத்(து)
எத்தலத் திலுமுள கங்கையே
முதலயா றெவையுமீர்

---

318 இந்திரத்திசை – கீழ்த்திசை, யமதிசை – தெற்குத்திசை,
319 [illegible] – நிறுவி, அதன் பெருமை – இத்தீர்த்தத்தின் [illegible]

முத்தெறி மானத முதலவோ
டைகளும் முழுகியேதந்
தொத்துறு மாசுதீர்ப் பான்வரும்
வற்சரம் தோறுமாதோ 5

[இத்தீர்த்தத்தின் பெருமை முழுதும் கூறவரிதெனல்]

321 திக்குநான் கினுமுளோர் மாசுதீர்க்
கும்புனல் தீர்த்தம்யாவும்
அக்குளத் தாடுநம் பாவம்நீங்
கும்பரி சாடுமென்றால்
தொக்குமூழ் குநர்பலன் சொல்லலாந்
தகையவோ சுருதியாலும்
முக்கண னல்லது யாவரே
யதனில மொழியவல்லார் 6

[அந்தணர், குரு, முதலானோருக்குத் தீங்கு செய்தவர் கருச்சிதைத்தவர் முதலாகப் பல பாவங்களைச் செய்தவர்களும் இதன்கண் மூழ்க உய்தி பெறுவர் எனல்]

322 அந்தணர்த் தப்பினோர் அருள்புரி
குரவனுக் கவதிசெய்தோர்
சுந்தர வனிதையர் கருவழித்
திடுதல்செய் சுமடர், தூய
நந்தலில் லாதவா சான்மனை
யாட்டிபால் நலம்விழைந்தோர்
மைந்துடைக் களியினால் மதுவருந்
திடுதல்செய் மாட்சியில்லோர் 7

320 அல்ரின்மீமிசையவன் – பிரமதேவன், ஈர்முத்து – குளிர்ந்தமுத்து மணி: மானதம் (மானசம்) ஒருதீர்த்தம். ஏதம்தொத்துறுமாசு – கேடுசூழும் குற்றங்கள்.

321 நீங்கும்பரிசு – நீங்கும்தன்மை, சுருதி – வேதாகமங்கள்.

322 தப்பினோர் – தவறிழைத்தோர், குரவன – குரு, அவதி – துன்பம், சுமடர் – அறிவிலார், நந்தல - குறைதல், நலம் – பெண்மை.

[ இதுவும் அது ]

323 ஆனினுக் கழிவுசெய் தாதரவேற்
றோர்பொருட் காசைவைத்தோர்
ஊனமில் பிறர்மனை யாட்டிபால்
மோகம்வைத் துழலுந்தீயோர்
ஞானமா தவர்தமை நிந்தனை
புரிபவர் நடுவிலாத
ஈனர்மற் றிவருமூழ் குவரெனில்
வினையொழிந் தின்புசெய்வார் 8

[ கார்த்திகைத் திங்களில் இதில் நீராடுவோர் எய்தும் பயன் கூறல் ]

324 விரிச்சிகத் திங்கள்நாள் முப்பதும்
வெய்யவன் மேவுபோதில்
இருக்குநல் வேதவண் டுறையினில்
மூழ்குவோ ரீறிலாத
உருக்கிளர் செய்யவாய்ப் பைந்தொடிப்
பாகர்வாழ் உலகுசேர்வார்
திருக்குதீ வினையொழித் தவர்பிதிர்
களுங்கதி சேர்வரன்றே 9

[ ஆவணி மதிநாளில் நீராடுவோர் எய்தும் பலன் கூறல் ]

325 ஞாயிருட் சியில் யவு னத்தொடும்
மதிநாளின் அங்கண்டடத்
தூயசா மத்துறை யாடினோர்
வினையெலாந் தொலைந்துநாதன்

---

323 ஆன் – பசு, ஆதரவேற்றோர் - அடைக்கலமாகவந்தவர், நடுவு - நடுவுநிலை.

324 விரிச்சிகத்திங்கள் – கார்த்திகைத்திங்கள், வெய்யவன் - கதிரவன். பைந்தொடிப்பாகர் – சிவபிரான்.

நேயகல் லருளினல் நிலமெலாம்
புரந்துபின் நெறியினலே
வியுமா றின்றியே நிரதிசை
யானந்த வீடுசேர்வார் 10

[உவா நாட்களில் இதில் ஆடுவோர் எய்தும் பலன் கூறல்]

326 வெண்ணிலாச் செங்கதிர் யேவுநா
ளிலெசர் வேதமல்கும்
வண்ணவார் துறையினில் ஆடியே
தருப்பணம் மரபினற்றி
யுண்ணிலா மன்பின லாமல
கத்தள வுத்தமவிரல்
திண்ணமாச் சேர்த்தபிண் டத்தினைப்
பிதிர்க்களைச் சிந்தைசெய்தே 11

[இதன்கண் சிரார்த்தம் புரியின் பிதிரர் எய்தும் பலன் கூறல்]

327 தென்றிசை நுனியதாய்த் தருப்பையைப்
பரப்பிடு செங்கைதன்னல்
நன்றுற அவர்களுக் களித்திடின்
இவர்புரி நன்மைதன்னல்
ஒன்றுமப் பிண்டியின் பொடிகளைத்
துணையவை யொன்றினுக்கோர்
மன்றவற் சரமரன் மருவுநற்
கயிலையில் வாழ்வரன்றே 12

---

325 சாமத்துறை – சாமவேதத்துறை, நிரதிசையானந்தம் – அழியாத இன்பம்.

326 ஆமலகத்தளவு – நெல்லிக்காய் அளவு, பிண்டம் – பிதிரர்க்கிடும் பொருள்.

327 பிண்டி – பிண்டம்.

[நான்கு வருணத்தாருக்கும் இப்பலன் உண்டு எனல்]

328 முப்புரி நூலினர் அரசர்வா
ணிகர்உழும் முறைமையாளர்
செப்பிள முலையினர் யாவரென்
னினுமுன் செப்பும்வண்ணம்
வெப்புறு முச்சியிற் புரிவரேல்
அவர்களும் வினைகள்தீர்ந்(து)
இப்புவி தன்னில்வாழ்ந் தெம்பிரான்
கயிலையி லெய்திவாழ்வார் 13

[இதன்கண் மூழ்கினோர் எல்லா நலனும் பெற்று
இறுதியில் கயிலை சேர்வர் எனல்]

329 முத்திநன் முனிவிர்கேண் மின்விதி
பாதமே முதலவாய
அத்தகை நற்றினம் அவையினுங்
காடினும் அல்லல்தீர்ந்து
தத்துநீர்ப் பரவைசூழ் உலகெலாம்
இனிதுடன் தனிபுரந்து
கத்திகைக் கூந்தல்நம் கவுரியோர்
பாகனர் கயிலைசேர்வார் 14

[ஆனித்திங்களில் இத்தீர்த்தமாடுவோர் உறும் பலன் கூறல்]

330 மாகமா தத்தினில் அதர்வணத்
துறையினில் வந்துமூழ்கி
ஏகமா னதர்களாய் எம்பிரான்
பதயுகம் ஏத்துவோரை

---

328 வெப்புறுமுச்சி – நண்பகற்பொழுது.

329 விதி - பிரமன், ஆடினும் – மூழ்கினும், பரவை – கடல், கவுரி - உமை

வேகமாங் கழுதொடு பிரமராக்
கதமுதல் வெருவியோடிப்
போகுமாற் கண்டபோ தேயெனில்
அதனிலைப் புகல்வதேயோ? 15

[சித்திரைத் திங்களில் இதில் மூழ்குவோர் எய்தும் பலன் கூறல்]

331 மேடமா தத்தினில் சித்திரை
நாள்வயின் விளங்குசாமத்
தீடுசால் துறையினில் மூழ்கியெம்
மானடி யிறைஞ்சுகிற்போர்
கீடுதீ வினையெலாம் தீயிடும்
பஞ்சுபோல் நீறதாக்கிப்
பீடுசா லுலகில்வாழ்ந் தெங்கள்நா
யகனருள் பெறுவரன்றே 16

[வைகாசித்திங்கள் சுவாதிநாளில் இதன்கண் ஆடுவோர் அடையும் பலன் கூறல்]

332 இடபமா தத்தினி லனிலநாள்
மூழ்கியெங் கோனையேத்தின்
மடவனும் வேதயி னப்பிரா
மணனுநான் மறைகளாற்றத்
திடனுளா னுகியா கங்களும்
செய்துமெய்த் தேவுமாகக்
கடவனும் அவன்மனு மைக்கண்மற்
றதனியல் கணிப்பதேயோ 17

---

330 மகரமாதம் – ஆனித்திங்கள், கழுது – பேய், வெருவி – அஞ்சி.

331 மேடமாதம் – சித்திரைத்திங்கள், பீடுசால்துறை – பெருமை மிக்கதுறை, நீறதாக்கி – சாம்பராக்கி, பீடு – பெருமை.

332 இடபமாதம் – வைகாசித்திங்கள், அனிலநாள் – சோதிநாள்,

[எக்காலத்து மூழ்கினும் இன்னபலன் பெறுவர் எனல்]

333 எத்தலைக் காலமா யினுமதின்
மூழ்கினோர் யாவரேனும்
கொத்துடைத் தீவினை முற்றவுந்
தீர்ந்துநற் கொள்கையெண்ணிச்
சித்தமின் புறுவன முழுவதும்
நல்குமெய்ச் செல்வமெய்தி
பைத்தலைப் பாருல காண்டுவிண்
ணுலகமும் பாங்கினுள்வார் 18

[சித்திரைத் திங்கள் விசாகநாள் மூழ்கினர் உண்டவர் எய்தும் பலன்]

334 உச்சியம் போதினிற் சித்திரைத்
திங்களி னுலகமெல்லாம்
நச்சிய சளகுநாட் பிரமதீர்த்
தப்புனல் நாடியள்ளி
மெச்சிய விழைவினு லொருதுளி
யாயினும் விழுங்கின்நல்
எச்சமில் நெஞ்சகத் துச்சிவ
லிங்கமே யாகுமன்றே 19

[இத்தீர்த்தமாடினோரைக் காணினும் தீண்டினும் எய்தும் பலன் கூறல்]

335 அன்னவர்க் காணினும் தீண்டினும்
கேட்பினும் அளவளாவி
அன்னயக் கிளவிகள் சிற்சில
பகரினும் ஞாலமெல்லாம்

---

333 பைத்தலைப்பாருலகு - ஆதிசேடன் தலையிலுள்ளதாகிய இவ்வுலகம்.
334 நச்சிய - விரும்பிய, சளகுநாள் - விசாகநாள்.

துன்னுவல் வினைதொலைத் தின்பவி
டடைவராற் சமடர்என்றாற்
பன்னவும் வேண்டுமோ வப்பெரி
யோர்கடம் பான்மைமாதோ 20

[ இந்தத் தீர்த்தில் ஆடினோர் எய்தும் சிறப்புக்களைக் கூறல் ]

336 தாவிலா வங்கவர் புக்கபா
ரெங்குநற் றலமதாகும்
ஓவிலா மந்திர மாகுமால்
மற்றவ ருரைக ளெல்லாம்
மேவியா டும்புனல் கங்கைநீ
ராகுமால் விண்ணுளோரும்
பூவைபோல் வண்ணனும் புகழ்வரே
லவர்நலம் புகலற் பாற்றோ 21

[ இங்குத் தான முதலியவை செய்யின் அது பன்மடங்கு பெருகும் எனல் ]

337 புன்னுலா வுமலர்ப் பொதுளுமிவ்
வாவியிற் போந்து மூழ்கி
எள்ளிலோர் பாதிதான் நல்கினும்
அன்னதும் ஏமகூடத்
தன்னுரு வரையெனப் பொலியுமால்
அத்தலத் தானமேன்மை
கன்னுலாங் கொன்றைவே ணியனலால்
யாவரே கணிக்கற் பாலார் 22

---

335 கிளவிகள் – நன்மொழிகள், பகரினும் – சொல்லினும், துன்னுவல் வினை – நெருங்கியுள்ள கொடிய கருமங்கள், சமடர் – அறிவிலார்.

336 ஓவிலா – நீங்காத, பூவைபோல்வண்ணன் – திருமால், நலம் – சிறப்பு.

337 புன் – ( நண்டு ) வண்டு, பொதுளும் – தழைத்து மலரும், ஏமகூடம்– ஒருமலை,

[ யுகந்தோறும் இத்தீர்த்தின் பெயர் இவ்வாறு வழங்குமெனல் ]

338 ஆதியூ ழிதனில் பிரமபுட்
கரணியா மடுத்த வூழி
வேதபுட் கரணியாம் மேதினி
யோர்கள்மூன் றாம்யுகத்திற்
காதரந் தீர்த்திடும் புண்யபுட்
கரணியாங் கலியுகத்தில்
ஏதமில் சத்தசா கரமெனும்
பெயரதற் கென்பரன்றே 23

[ இத்தீர்த்தம், தலம், மூர்த்திக்கு இணை உலகில் இல்லை எனல் ]

339 பிரமதீர்த் தந்தனக் கிணைபுவி
மீதினிற் பிறிதொன்றில்லை
விரவிய நவமணி இவ்விலிங்
கத்தின்மேல் வேறொன்றில்லை
பரவுமிச் சுந்தர நகரிபோற்
புடவியிற் பதியொன்றில்லை
வரமிகு முனிவிர்மு வகைவிசிட்
டமுமவண் மன்னுமன்றே 24

[ இத்தலத்தின் பெருமை கூறல் ]

340 ஆதலா லத்தலந் தீவினை
தீர்த்திடும் அறம்பெருக்கும்
பேதமை நீக்கிடும் ஞானநன்
னெறிதரும் பெற்றியாலே
காதரம் பெயர்த்திடும் கயிலையங்
கிரியில்வாழ் கடவுள் செம்பொற்
பாததா மரைதரும் அப்பதி
மேன்மையார் பகர்தல் வல்லார்? 25

---

338 ஆதியூழி - கிரேதாயுகம், அடுத்தவூழி - திரேதாயுகம் மூன்றும். யுகம் - துவாபரயுகம், காதரம் - தீங்குகள், ஏதம் - குற்றம்.

339 பரவும் - வழிபடும், புடவி - மண்ணுலகம், பதி - தலம்

[ இச்சருக்கத்தினைப் படிப்பவர் கேட்பவர் எய்தும் பேறு கூறல் ]

341 இக்கதை படிப்பவர் கேட்பவர்
எழுதுநர் எழுதுவிப்போர்
தொக்கதீ வினையெலாம் துகள்படுத்
திக்கடல் சூழும்பார்மேல்
மிக்கவிர் திரனெனத் தங்கிளை
தன்னொடு மேவிவாழ்ந்து
முக்கணு னுலகினை யடைவது
திண்ணமாம் முறையினன்றே. 26

பிரமதீர்த்தச் சருக்கம் முற்றும்.

ஏழாவது

# பஞ்சாக்கரச் சருக்கம்

[ முனிவர்கள் வேண்டப் பஞ்சாக்கர சித்திபற்றிச் சூதமுனிவர்
[ கூறத் தொடங்குதல் ]

( கலி விருத்தம் )

342 விழுத்த வக்கிழ வோர்மிகு காதலால்
தொழுத்த குந்திறற் சூதனை நோக்கியே
எழுத்தொ ரைந்தின் இயல்புறு சித்திதான்
வழுத்து காதைசொல் கென்ன வகுகின்றான் 1

[ இது முதல் 16 பாடல்கள் தேவர்கள் முதலானோர் பஞ்சாக்கரப்
பெருமையை அறிந்துய்யப் பிரமதேவரிடம் செல்லுதலைக்
கூறுகின்றார் ]

343 உடைதி ரைக்கடல் ஒப்பக் கவுட்குழி
கடைதி றந்து சொரிமத வாரணம்
பிடரின் ஏறியப் பீடுடை வானெலாம்
அடையக் காக்குமோ ராயிரங் கண்ணனும் 2

344 உம்பர் யாவர்க்கும் ஒள்ளழற் குண்டத்துள்
இம்ப ராகுதி ஏற்றொரு ஏற்றைமேல்
பம்பு சோதி பரப்பிவந் தேயருள்
விம்ப வாயெழு நாவுடை வேந்தனும் 3

---

342 விழுத்தவம் – மேலானதவம், எழுத்தோரைந்து – பஞ்சாட்சரம்,
வகுக்கின்றான் – வகுத்துச்சொல்லுகிறான்.

343 கவுட்குழி – கன்னத்தில் உள்ள துளை, வாரணம் – வெள்ளையானை.
ஆயிரங்கண்ணன் – இந்திரன்.

344 உம்பர் – தேவர், குண்டம் – குழி, ஏற்றை – ஆடு, வேந்தன் –
அக்கினி.

345 ஏற்று வெம்பகை ஈர்ந்துவைத் தாலென
தோற்றங் கோட்டுடைத் துங்கப் பகட்டின்மேல்
நாற்றி சைக்கும் நடுவனென் றேவரும்
சீற்ற மிக்கதோர் தென்றிசை வேந்தனும் 4

346 குருதி கொப்புளிக் குங்கொலை வாட்படை
பொருதி ரைக்கடல் போன்மெனச் சூழ்வரப்
பிருது விக்கட் பிரேதத்தின் மேல்வரும்
நிருதி யென்னும் நெடுந்திறல் வேந்தனும் 5

347 வெள்ள வேலையோர் ஏழுக்கும் வேந்தெனத்
துள்ளித் தாவும் சுறாவின் மிசைவரும்
தெள்ளு சோதிச் செழுமணி நீள்முடி
வள்ளத் தாரக லத்து வருணனும் 6

348 விண்ணந் தாவும் விறலுடை வான்கலை
வண்ண மாமுது கேறி வலம்வரும்
எண்ணி லாற்ற லியல்புளி யெய்திய
தண்ணந் தாமச் சதாகதி வேந்தனும் 7

349 பொங்கும் நீடொளிப் புட்பக வூர்திக்கும்
எங்கும் ஏத்தும் இயக்கர்தம் சாதிக்கும்
சங்க நீணிதி யாதிக்கும், சம்புவின்
வெங்க ணன்வட வீதிக்கும் வேந்தனும் 8

---

345 ஈர்ந்து - பிளந்து, பகடு - எருமை, நடுவன் - நீதிமான், வேந்தன் - யமன்.

346 நிருதி - தென்மேற்குத்திசைக்கடவுள், திறல் - வலிமை

347 வேலை - கடல், சுறா வருணன் ஊர்தி.

348 விண்ணம் - அம்இடப்பொருள்விகுதி, கலை - மான், சதாகதி - வாயுதேவன்.

349 ஊர்தி - விமானம், வேந்தன் - குபேரன்.

350 அள்ளி வாரித்தன் ஞகம் முழுவதும்
வெள்ளை நீறொளி வீசிடப் பூசிய
துள்ளு மால்விடை ஏறித் துரத்துநீர்
தெள்ளு பாற்கடல் வருஞ்சல வருணனும் 9

351 கற்ப கச்செழுந் தாமங்க ளார்தரு
பொற்பு மிக்க புனைமணி மோலியார்
விற்ப முத்தொழு குஞ்செழு மேனியார்
மற்பு யத்துயர் வானவர் யாவரும் 10

352 குய்யர் சாரணர் கோதில்விச் சாதரர்
கையில் யாழ்பயில் கந்திரு வத்தினர்
வெய்ய நாகர் வியக்கும் இயக்கர்கள்
துய்ய சித்தர் இனையதொல் லோர்களும் 11

353 வெள்ள வாய்க்கம லங்கண் மடைதிறந்
தள்ளல் வாரியி னுய்நற வூற்றவே
துள்ளு மேழ்பரித் தூண்டிவந் தீண்டிய
தெள்ளு சோதிச் செழுங்கதிர்ச் செல்வனும் 12

354 அமிழ்து சூற்கொண் டரும்பிய வெண்ணிலா
உமிழு மாறுசெய் தூடறுத் தேகலா
இமிழ்தி ரைக்கடல் வையத் திருள்கெடத்
தமிழ்ச ரக்குமத் தண்மதி வேந்தனும் 13

---

350 சலவருணன் - கடலரசன்.

351 மோலியார் - கிரீடமணிந்தவர், வில் - ஒளி.

352 குய்யர் - குய்யகர், ஒருவகை தேவசாதியினர், துய்ய - தூய்மை யுடைய.

353 அள்ளல் - சேறு, நறவு - தேன், பரி - குதிரை, கதிர்ச்செல்வன் - சூரியன்.

354 சூல் - கருப்பம், தமிழ் - இன்பம், தண்மதிவேந்தன் - சந்திரன்.

355 ஆரல் பண்டிதன் ஆண்டளப் பான், புகர்
காரி யாதிய கோள்களும் காண்பரும்
பாரின் மங்கையும் பங்கயச் செல்வியும்
வீர பத்தி ரையும்பொரு விந்தையும் 14

356 காசி பன்கும்ப யோனிக் கவுதமன்
மாசில் மார்க்கண்டன் மாண்டவி யன்றவத்
தாசில் கண்ணுவன் அத்திரி வங்கிரர்
ஓசை பெற்ற வசிட்டன் உரோமசன் 15

357 சீலம் வாய்மை செழுமை யருள்நலம்
காலம் மூன்றும் உணர்தல் கடைப்பிடித்
தேல நற்றவஞ் செய்த வினைவபெறும்
வால கில்லியர் ஆதி வரர்களும் 16

[ தேவராதியர் சத்தியலோகம் புக்குப்பிரமனை வணங்குதல் ]

358 இன்ன தன்மை இமையவர் யாவரும்
பொன்னை யன்ன புரிசடைச் செல்வரும்
தன்னை யொத்தவச் சத்திய லோகம்புக்
கன்ன வூர்தி யடியினைப் போற்றினர் 17

[ பிரமதேவன் நீவிர் போந்த காரணம் புகல்கெனக் கேட்டல் ]

359 போற்றி வந்திக்கும் புங்கவ ராதியாம்
ஏற்ற மிக்கவர் யாரையும் நோக்கியே
சேற்றி தழ்க்கம லத்தமர் செவ்வியான்
தோற்ற மிக்குளீர் வந்ததென் சொல்கென்றான் 18

---

355 ஆரல் – செவ்வாய், பண்டிதன் – புதன், ஆண்டளப்பான் – வியாழன் புகர் – (வெள்ளி) சுக்கிரன், காரி – சனி, கோள்களும் கிரகங்களும், பாரின்மங்கை – பூமிதேவி, பங்கயச்செல்வி – இலக்குமி (சரசுவதியுமாம்) விந்தை – துர்க்கை.

356 கும்பயோனி – அகத்தியன், ஓசை – புகழ்.

357 சீலம் – ஒழுக்கம், வரர் – முனிவர்கள்.

358 அன்னவூர்தி – அன்னத்தை வாகனமாகஉடைய பிரமதேவன்,

359 புங்கவர் – மேலானவர்.

[ தேவர்கள் தம் நோக்கத்தைக் கூற முற்படுதல் ]

360 என்ன நான்முகன் கூறலும் யாவரும்
பொன்னை நோக்கிப் புகல்கென வோதினர்
அன்ன வன்மல ரோனடித் தாமரை
முன்ன மேத்தி முறைமையிற் கூறுவான் 19

[ ஈறிலாக்கதி நல்குவது யாதெனத் தேவர் கேட்பப் பிரமன் கூறத் தொடங்குதல் ]

361 ஈறில் போகம் எவர்க்கும் அளிப்பதும்
மாறி லாத வரகதி யுய்ப்பதும்
தேறில் யாதது தேர்ந்துரை செய்கெனக்
கூறி னைவ னுங்குறித் தோதுவான் 20

[ பிரமன் பஞ்சாக்கரப் பெருமையை விளக்குதல் ]

362 அலகில் வேத முதல வனைத்தையும்
உலக மீன்ற முதல்வன் ஒருங்குணர்ந்
திலவ வாயுமை பங்கன் எழுத்தைந்தின்
நலம தித்தன னாகி நவில்கின்றான் 21

[ இதுவும் அது ]

363 உறுதி யாவு முதவுமத் தன்மையை (து)
இறுதியி லைந்தெழுத் தன்றி யில்லையால்
நறும லர்க்கம லத்துறை நான்முகன்
அறிதிர் நீரென ஆங்கவர்க் கோதினன் 22

---

360 பொன்னைநோக்கி – வியாழபகவானைநோக்கி,

361 தேறில் - ஆராய்ந்து தெளியின்.

362 அலகில் – எண்ணிக்கையில்லாத, இலவவாய் – இலவமலர்போன்ற செவ்வாய்.

[ முனிவரர் பஞ்சாக்கர மந்திரத்தை யாம் அறியும் திறங் கூறுகெனப் பிரமனிடம் கேட்டல் ]

364 ஓத லோடுமங் குற்றவர் யாவரும்
மாது பாகன் மகிழ்ந்தவம் மந்திரம்
பேதை யேமறி யுந்திறம் பேசெனப்
போதின் மேலவ னும்புகல் வானரோ 23

[ பிரமன் பஞ்சாக்கரப் பெருமையை சிவபிரானன்றி யாராலும் விளம்ப இயலாதெனல். ]

365 என்னை யீன்ற முராரியும் யானுமற்
றன்ன தன்பரி சின்றள வாய்ந்திலம்
கன்ன லஞ்சொற் கவுரியோர் பங்குடை
முன்ன வன்னல தியாவர் மொழிவரால்? 24

[ சிவபிரானிடம் சென்று கேட்க வேண்டுமெனப் பிரமன் கூறுதல். ]

366 ஆத லாலர னம்புயத் தாள்மலர்
காத லாற்பணிந் தேத்திலக் கண்ணுதற்
பூத நாதனே புண்ணிய வஞ்செழுத்
தோது வானென வோதிமற் றோதுவான். 25

[ வாயுதேவனால் கொண்டுவரப்பட்டதோர் சிகரம் பூவுலகில் உண்டெனப் பிரமன் கூறுதல். ]

367 சண்ட வாயுவி னாலித் தாரதலத்
தெண்டி சாமுகம் யாவையு மேத்தவே
பண்டு வந்த பசும்பொற் சிகரமொன்
றுண்டெ னவதன் உண்மையுங் கூறினான். 26

364 போதின்மேலவன் – பிரமன்.

365 முராரி – திருமால், கன்னல் – கரும்பு, கவுரி – உமாதேவி.

367 சண்டவாயு – வேகமான காற்று, சண்டம் – மிகுதி.

**[ காவிரித் தென்கரையில் உள்ள அச்சிகரத்தைக் காணத் தேவராதியர் வந்து சேர்தல். ]**

368 *கூற லோடுங் குறிக்கொண் டனைவரும்*
*பேறு நல்கும் பிரானடி போற்றுவான்*
*தேறு நீர்ப்பொன்னித் தென்கரைப் பாங்கரில்*
*ஏறி லாமகிழ் பூப்பவந் தெய்தினர்.* 27

**[ தேவராதியர் நல்லூர் வந்து பிரமதீர்த்தில் மூழ்குதல். ]**

369 *எய்தி வானவர் ஏந்திய கொள்கையார்*
*உய்தி நல்குநல் லூரை வலங்கொண்டு*
*செய்தி கூறத் திசானனன் வானதி*
*பெய்த தீர்த்தத்துட் பெற்றியின் மூழ்கியே.* 28

**[ அவர்கள் இறைவனை அருச்சித்து வழிபடுதல். ]**

370 *நியம முற்றி நிலவிய காதலான்*
*நயன மூன்றுடை யானல் லூரில்வாழ்*
*கயனெ டுங்கண்ணி பாகனைக் கைதொழு*
*தயனு ளம்புகு தாதரிச் சித்தரோ.* 29

**[ இதுவுமது ]**

371 *தத்தம் பேரினல் தாபித்து லிங்கமும்*
*சித்த மின்புறத் தீர்த்தங்க ளுங்கண்டு*
*பத்தி மீக்கொளப் பற்பக லர்ச்சித்தார்*
*முத்தி தருமவை கண்டருள் முற்றியே.* 30

---

368 தேறுநீர் – தெளிந்த வெள்ளம், பொன்னி – காவிரி.

369 திசானனன் – திக்குகளை முகமாகக்கொண்ட பிரமன், வானதி – ஆகாய கங்கை.

[ தேவர்களின் வழிபாட்டிற்கு வந்த இறைவன் உமையோடு காட்சிதரல். ]

372 கரும்பு மென்றதை யொக்குங் கனிமொழி
அரும்பி ளங்கொங்கை யாய்மலர்ப் பூந்தொடைச்
சுரும்பு லாங்குழ லாள்கிரி சுந்தரி
விரும்பி வாமத்து மேவி விளங்கவே. 31

[ இதுவுமது ]

373 ஐங்க ரத்தொரு போதகம் ஆறிரு
துங்க வண்புயத் தோன்றல்முன் தோன்ற,வான்
திங்கள் வெண்குடைச் சென்னியின் மீமிசை
பொங்கு நீணிழல் செய்து பொலியவே. 32

[ இதுவுமது ]

374 விடைநெ டுங்கொடி விண்ணந் தடவர
இடப ஊர்தியின் மீமிசை யேறியே
புடையிற் பூத கணம்பல போற்றிடக்
கடவு ளன்னவர் காண்வரத் தோன்றினர். 33

[ இடபவாசனத்தோடு காட்சி தரும் இறைவனைக் கண்டு தேவர்கள் ஆனந்த மேலிட்டுப் பரவுதல் ]

375 எந்தை தோன்றலு மிந்திர னாதியோர்
தந்த மன்பு தனக்கெல்லை காண்கிலார்
கந்த மாமமலர் தூவிக் கனிவினால்
வந்தித் தாடி வழுத்தத் தொடங்கினர். 34

---

372 அரும்பு – கோங்கரும்பு, கிரிசுந்தரி – பார்வதி, வாமம் – தென் பக்கம்.

373 போதகம் – யானை (விநாயகர்) துங்க – மேலான, தோன்றல் – முருகக் கடவுள்.

374 விடை – இடபம், ஊர்தி – வாகனம், புடை – பக்கம்

375 கந்தமாமலர் – மணம்பொருந்திய மலர், கனிவு – உள்ள நெகிழ்ச்சி வழுத்த – வணங்கிப்போற்ற

[ இது முதல் மூன்று பாடல்கள் தேவர்கள் இறைவன் புகழைப் பலவாறு கூறிப் போற்றுதல். ]

( அறுசீர் விருத்தம் )

376 சையம்யா வைக்கும் மேலாம்
தமனியப் பொருப்பி னின்றும்
துய்யபூஞ் சோலை சூழ்ந்த
சுந்தரத் சிகரத் தோடும்
பையரா மவுலி மீது
பாங்குடன் பரிக்கு மிந்த
வையகம் உய்ய வந்த
வள்ளலே போற்றி போற்றி! 35

377 பூரணப் பொருள தாகிப்
புறம்புமா யுள்ளு மாகிக்
காரணச் சுடராய் யார்க்கும்
களைகணய்க் கருணை மல்கி
ஆரணத் தலைவன் செய்த
அருச்சனைக் குகந்து நல்கும்
வாரணத் துரியாய் நல்லூர்
வரதனே போற்றி போற்றி! 36

378 எங்கள்நா யகனே போற்றி
எவர்க்குமே லவனே போற்றி
பொங்கர வணிந்தாய் போற்றி
புரிசடைப் புனிதா போற்றி
செங்கண்மா லறியாய் போற்றி
திருமலைச் சொக்கி யென்னும்
மங்கைபங் குடையாய் நல்லூர்
வரதனே போற்றி போற்றி! 37

---

376 சையம் - மலை, தமனியப்பொருப்பு – பொன்மலை, பையரா - படம் பொருந்திய நாகம், பரிக்கும் தாங்கும்.

377 களைகண் - பற்றுக்கோடு, ஆரணத்தலைவன் - பிரமதேவன், ஆரணம்- வேதம். வாரணத்துரி - யானைத்தோல், வரதன் – மேலானவன்

378 அரவு – பாம்பு, திருமலைச்சொக்கி – பார்வதி.

[இறைவன் நீவிர் வந்த நோக்கம் யாதென வினவ அவர்கள் கூறத்தொடங்குதல்]

379 இன்னன துதிகள் கூறி
இமையவர் இறைஞ்சி நிற்ப
முன்னவன் நோக்கி நீவிர்
முன்னிய தெவன்கொ லென்ன
பன்னக மணிந்தோன் பாதம்
பணிந்தனர் மீண்டும் போற்றி
அன்னவர் உவகை பூப்ப
ஆங்கது மொழிய லுற்றார் 38

[பஞ்சாக்கர நுட்பத்தை ஓதல் வேண்டுமென அவர்கள் கேட்டல்]

380 பிஞ்சுமா மதியஞ் சூடும்
பிஞ்ஞக! நினது நாமத்
தஞ்செழுத் தோதல் வேண்டும்
அதனினை யடியே முய்யச்
செஞ்செவே யுபதே சித்தல்
செய்தவை செபிக்கு மாறு
நெஞ்சிடை நினையும் வண்ணம்
நீயினி தருள வேண்டும் 39

[இத்தலத்துவந்து வழிபட்டோர் இன்னல் தீர்க்க வேண்டுமென வேண்டுதல்]

381 பொன்னல ரிதழி சூடும்
புனிதநின் சரணத் தென்றும்
மன்னுபே ரன்பு வேண்டும்
மகிழ்ந்துயா மரிச்சித் தேத்தும்

---

279 முன்னியது – கருதிவந்த நோக்கம், பன்னகம் – பாம்பு.

380 பிஞ்சுமாமதியம் – பிறைச்சந்திரன், செஞ்சவே – செம்மையாக.

துன்னிய சோதி லிங்கம்
எவற்றினும் தொழுவோர் தொல்லை
இன்னல்தீர்த் தருளி நாளும்
இலங்குதல் வேண்டும் மன்னே 40

[ இங்குள்ள தீர்த்தத்தில் ஆடினோர்க்குப் பரகதி அளிக்க வேண்டுமெனல் ]

382 பாசிழைப் பரவை யல்குற்
பாவையோர் பாகங் கொண்ட
ஈச ! யாம் அமைத்த தீர்த்தம்
மூழ்கினர் எவரும் பார்மேல்
மாசினை யகற்றி மீளா
வரகதி கொடுத்தல் வேண்டும்
ஆசைமற் றெமக்கீ தென்றார்
அய்யனும் அதற்கு நேர்ந்தான். 41

[ இறைவன் அவர்கள் கேட்ட வரத்தினை நல்கிப் பஞ்சாக்கரப் பெருமை கூறுதல். ]

( கலி விருத்தம் )

383 ஒப்பரும் பஞ்சினீ டுயர்மலைத் தீயெனச்
செப்புமச் செயலினோர் செனனகோ டியினும்
எப்பெரும் பாவமும் ஈறுகண் டிடுதல்செய்
யப்பெருந் தன்மைய தஞ்செழுத் தாகுமே. 42

---

381 இதழி - கொன்றைமலர், சரணம் - பாதங்கள், துன்னிய - நெருங்கிய

382 பாவை - உமாதேவி, மாசினை - பிறவித்துன்பத்தினை.

383 செனனகோடி- கோடிக்கணக்கான பிறப்பு, ஈறுகண்டிடுதல் - முடிவு செய்தல்,

[ சத்தகோடி மகாமந்திரத்தினும் பெரிது அஞ்செழுத்து மந்திர மெனல். ]

384 சத்தகோ டிமகா மந்திரந் தன்னிலும்
உத்தமொத் தம்மென உரைசெயுந் தகையது
நித்தமா நிலையதூம் நிகரில்பன் மறைகளின்
அத்தமா கின்றதூம் அஞ்செழுத் தாகுமே. 43

[ எல்லா நலங்களையும் தந்து பிறவி நீக்குவது இம்மந்திரமெனல். ]

385 திருந்திய விஞ்சையும் செய்தவ மேன்மையும்
பொருந்திய வாயுளும் புகழ்மையும் பூப்பதூம்
மருந்தினு மினியதூம் வன்பெரும் பிறவியின்
அருந்துயர் களைவதூம் அஞ்செழுத் தாகுமே. 44

[ எண்வகைச் சித்திகளும் வீடும் அருள்வது இம்மந்திரமெனல். ]

386 வழுவிலா எண்வகை மாபெருஞ் சித்தியும்
பழுதிலா மரபினுற் பன்னுவார்க் கெண்ணியாங்
கொழிவிலா மாட்சியின் உற்றபோ கத்துடன்
அழிவிலா வீடருள் வஃதுமஞ் செழுத்துமே 45

[ இறைவன் அஞ்செழுத்தாகத் தான் விளங்குவதாகக் கூறல் ]

387 மேயநம் மாற்றலும் மிக்கதாஞ் செல்வமும்
ஏயநன் நாமமும் ஈறிலா நீர்மையாற்
றாயநங் கரசர ணதியுந் தொன்மையே
ஆயதா மத்தகை யஞ்செழுத் தாகுமே 46

---

384 சத்தகோடி - ஏழுமுடி புகளையுடைய, உத்த - உற்ற, அத்தம் - அர்த்தம் (பொருள்)

385 விஞ்சை - கலை, வித்தை. மருந்தினும் - அமிழ்தத்தினும்

386 வழுவிலா - குற்றமில்லாத, எண்வகைச்சித்தி - அட்டமாசித்தி, பன்னுவார்க்கு - புகழ்ந்து துதிப்பார்க்கு.

387 ஈறிலா - அழிவில்லாத, கரசரணதி - கைகால்முதலிய உறுப்புக்கள்

**[ஆறாதார முதலிய தத்துவங்கள் யாவும் அஞ்செழுத்தின் விளக்கமே எனல்]**

388 வீறுயா வும்மெமை விட்டக லாதநம்
ஊறிலாச் சத்தியும் ஏயவான் மாவுமக்
கூறுசே ரிருண்மலக் கொத்துமாய்க் குடிலையோ
டாறுமா கின்றதூம் அஞ்செழுத் தாகுமே 47

**[கொடியோரும், பாவிகளும் அஞ்செழுத்தோதின் அவரை மாற்றுவது எனல்]**

389 வன்பராய் முருடுநேர் மனத்தின ராயினும்
முன்பிலா நெறிபயில் மூர்க்கரே யாயினும்
இன்புகூர் தரவுளத் தெண்ணுவர் தமையெமக்
கன்பராய்ச் செய்வதா மஞ்செழுத் தாகுமே 48

**[இதுவே தாரக மந்திரமென இறைவன் அதனை யாவர்க்கும் உபதேசஞ் செய்தல்]**

390 இத்திறம் பற்பல இனிதெடுத் தெம்பிரான்
அத்தகை யஞ்செழுத் தமைதியின் வானவர்க்
குத்தம முனிவர்கா ளோங்குதா ரகமுடன்
சித்தமின் புறஉப தேசஞ்செய் தானரன் 49

**[பிரமன் முதலானோர் மகிழ்ந்து சேவித்தல்]**

391 அம்புயப் பொகுட்டினன் அருச்சனை புரிந்தநம்
செம்பொனீ டவிரொளித் திவ்யலிங் கத்தினை
பைம்பொனா லயம்வல மாகவே பாங்கின்வந்
தும்பர்கா ளுமையுடன் உவந்துசே வித்தரோ 50

---

388 ஊறு - துன்பம், இருள்மலக்கொத்து - அவிச்சையாகிய மாயை குடிலை - குண்டலிசக்தி, ஆறு - ஆதாரங்கள் ஆறு.

389 வன்பர் - தீயவர், முருடு - நெறியில்லாமை, மூர்க்கர் - கொடியவர்.

390 அமைதி - இயல்பு. தாரகம் - (கொள்ளத்தக்கது) அடிப்படை.

391 அம்புயப் பொகுட்டினன் - பிரமதேவன். உம்பர்கள் - தேவர்கள்

[ இறைவன் கூவிளத் தருவின் கீழமர்ந்து ஆயிரத்தெட்டுருவேற்றி இவ்வாறே ஓதி வழிபடுவது என முனிவர்க்குக் கூறுதல் ]

392 தக்கண மூர்த்திதன் சன்னிதி யெய்திவிண்
முக்கிளைக் கூவிளை மூலத்தின் வைகியே
மிக்கவா தரவினல் மேவர வெமைநினைந்
தொக்கவோ ராயிரத் தெட்டுரு வோதிபே 51

[ இதுவுமது ]

393 நீதியான் முற்றுவித் திட்டபின் நெஞ்சினிற்
காதலா யினவெலாம் கடிதுசித் திக்குமால்
ஆதலா லும்பர்கா ளஞ்செழுத் துண்மை,யாம்
ஓதுமா றேதிநீ ருய்மினென் றுரைசெய்தான் 52

[ ஏழுதீவினும் இத்தலம் உயர்ந்தது எனல் ]

394 சந்தமார் காவிரி தனக்குத்தென் பாலினிற்
சுந்தர கிரியின்மேற் சோதிநீள் மயமதாய்
அந்தமி லாதநம் மிலிங்முந் துறுமதால்
இந்தமெய்த் தீவுதீ வேழினும் உயர்ந்ததே 53

[ இதுவே சித்திதலம் என இறைவன் அறிவுறுத்தல் ]

395 மாகயி லாயநீள் சிகரமிவ் வான்பதி
ஆகையாற் பரதகண் டம்மிஃ தாதலால்
ஓகைகூர் சித்திதா னம்மென உணர்மினென்
றேகநா யகன்மொழிந் திணையவும் புகலுவான் 54

---

392 கூவிளை – கூவிளமரம். ஆதரவு – அன்பு. உரு – மந்திரஞ் செபிக்கும் எண்ணிக்கை.

393 கடிது – விரைவாக. சித்திக்கும் – வந்துகூடும்.

394 சந்தம் – அலையோசை, சந்தனமணம். தீவு – நாவலந்தீவு.

395 சித்திதானம் – இறைவன் அருள் கூடுமிடம். இணையவும் – இத்தன்மையன பலவும்.

**[ இத்தலத்தில் பஞ்சாக்கரத்தை ஓத அஃது பத்து நூறாயிரங்கோடியாகப் பெருகுமெனல் ]**

396 இத்தலத் தைந்தெழுத் தேவர்ஓ தினுமது
பத்துநூ றாயிரப் பத்தெனப் பலித்திடும்
அத்தலத் தருச்சனை யதுலமா மாதலான்
அத்தல மதற்குநேர் வேறுமற் றில்லையே 55

**[ இதனை ஓதுவார் வேறுமந்திரங்களைக் கருதார் எனல் ]**

397 கண்மபே தத்தினாற் காண்வருந் தகையவாம்
வன்னவித் யாசத்தான் மற்றவிம் மந்திரம்
பன்னிலை ஐந்ததாம் பரகதி வேண்டுவோர்
பின்னைவே றுள்கலார் பெற்றியி னெண்ணுவார் 56

**[ உருத்திராக்கம் பவழம் இவற்றால் எண்ணி உருச்செய்ய வேண்டுமெனல் ]**

398 அக்கமா மணியினா லவிர்ப்பளிங் கவற்றினால்
மிக்கவித் துருமத்தால் வேறுமித் திறத்தினாற்
றொக்கநீள் வடத்தினால் தோமிலி மந்திரம்
தக்கவா றெண்ணுவார் சற்கதிக் குரியரால் 57

**[ கார்த்திகைத் திங்கள் கார்த்திகை பௌர்ணமியில் முருகனை அருச்சித்து அஞ்செழுத் தோதுவார் குமரனாக வீற்றிருப்பாரெனல் ]**

399 விருச்சிகத் திங்களின் மேவுகார்த் திகைதனில்
திருந்துபூ ரணைதனில் செய்யவேற் குமரனை
அருச்சனை புரிந்துசன் னிதியிருந் தைந்தெழுத்
துருத்தொகுத் தோதுரவன் ஒத்துவீற் றிருப்பரால் 58

---

396 பலித்திடும் – பெருகிப் பயன் தரும். அதுலம் – உவமையின்மை.
397 வன்னம் – ஒலியெழுத்து. பன்னிலை – பன்னும் நிலை, கூறும் முறை. உள்கலார் – எண்ணமாட்டார். பெற்றி – தகுதி, தன்மை.
398 அக்கமாமணி – உருத்திராக்க மணி. வித்துருமம் – பவழம். வடம் – மாலை. தோமிலி – குற்றமற்ற.
399 விரிச்சிகம் – விருச்சிகராசி. பூரணை — பவுர்ணமி.

**[ இதுமுதல் மூன்று பாடல்கள் திருநீறு முதலிய சைவசின்னங்களை அணிந்து அஞ்செழுத்தோதுவார் எய்தும் பலன் கூறுகின்றன ]**

400 அக்கினிக் கோத்திரத் தடலையா லடைவுசால்
மிக்கதோ ரவிர்சரவோ மத்தின்வெண் பொடியினாற்
தக்கவேள் பாசனத் தவளவெண் பூதியாற்
றொக்கசை வர்க்கினித் தூயவெண் ணீற்றினால் 59

401 சென்னியி னெற்றியிற் றிருந்துகந் தரத்தினில்
பொன்னணி மார்பினிற் பொற்புறும் உந்தியில்
மன்னிய தோள்மணிப் பந்தமற் றவற்றினில்
கன்னமே முதலிய கவினகோ ளங்களின் 60

402 அக்கினி யாதிய மந்திர மவற்றினால்
பொக்கமில் நெறியொடு புனைந்துகண் டிகைவடம்
தக்ககண் டம்முதற் றிரித்தினி தோதுவார்
மிக்கநம் பொற்கயி லைக்கண்வீற் றிருப்பரால் 61

**[ திருநீறு முதலியவற்றை அணியாதவரைக் கண்டதோடங்கள் அஞ்செழுத் தோதுவதனால் அகலுமெனல் ]**

403 பூதிகண் டிகையணி யாதவர் புலையரே
ஆதலால் அவர்களை ஆற்றெதிர்ப் பட்டவர்
சீதநீ ரங்கிதே னுவை, நமைத் தெரிசியா
ஏதமி லைந்தெழுத் தெண்ணிமா றொழிவரால் 62

---

400 அடலை – சாம்பல், திருநீறு. அவிர்சரம் – புல்லு (தருப்பை), பாசனம் – நெருப்பு. பூதி – புழுதி. இனி – இனிதாய.

401 கந்தரம் – கழுத்து. மணிப்பந்தம் - மணிக்கட்டு. கன்னம் – காது ஓரம், கவின – அழகுடைய.

402 பொக்கம் – குறைவு. கண்டிகை வடம் – உருத்திராக்க மாலை.

403 பூதி - விபூதி (திருநீறு). ஆற்றெதிர்ப் பட்டவர் – வழியில் எதிர்ப் பட்டவர். அங்கி – நெருப்பு. தேனு - காமதேனு. தெரிசியா – தெரிசித்து.

[ இத்தலத்துடன் ஒருமுறை அஞ்செழுத்தோதி வழிபடுவார் எய்தும் பலன் கூறுதல் ]

404 காசியிற் றமதுடல் முடிவு கண்டிடும்
ஏசிலா முத்திவீ டெய்துவர் இத்தலத்
தோசைகூ ரைந்தெழுத் தொருமுறை யோதுவார்
மாசுதீர்ந் திறுதியில் வரகதி யுறுவரால் 63

[ இத்தலத்து உறைபவர் எய்தும் பலன் கூறுதல் ]

405 ஒருகண மித்தலத் துறைவரே லன்னவர்
பெரிதுநங் கயிலையிற் பிரிவிலா துறைவரால்
மருவுகீ டாதியும் மரிக்கின்மற் றவைகளும்
அருமைசால் வரகதி யடைவது திண்ணமே 64

[ சேய்மையிலிருந்து சுந்தரச் சிகரத்தை கண்டு தெரிசித்தோர் முதலானோர் எய்தும் பயன் கூறுதல் ]

406 சேணிடைச் சுந்தரச் சிககரம்நோக் கினர்களும்
ஏனுடைப் பாதகம் எவையுநீங் குவர்களாற்
காணவோர் முன்றடி காலையிற் செல்குநர்
பேணுவாம் பரிமகப் பேறுபெற் றுய்வரே 65

[இத்தலத்தில் எப்பொழுதும் இருந்து அருள் புரிவேனெனக் கூறி இறைவன் இலிங்கத்துள் அமர்தல் ]

407 கந்தனந் தியுங்கவு ரியுடன் நுந்தமக்
கந்தமி லின்பவீ டருளினா ளுமிச்
சுந்தர கிரியின்மேற் றுன்னிவாழ் வோமெனு
எந்தைகூ றியிலிங் கத்தமர்ந் தானரோ 66

---

404 ஏசிலா – பழிப்பில்லாத, மாசு – மும்மலக் குற்றம்.

405 கீடாதி – புழு முதலான உயிரினங்கள். மரிக்கின் – இறந்துபடின்.

406 பாதகம் – பஞ்சமா பாதகங்கள். பரிமகம் – அசுவமேத யாகம்.

[ அஞ்செழுத்தின் சித்திகள் பற்றி உரைப்பதற் கரிதெனச் சூதமுனி ஓதுதல் ]

408 இன்னவா றெம்பிரான் இனிதுரைத் தேகினன்
சொன்னவா றனையவர் சூழ்ந்தனர் புரிதலும்
உன்னுமான் றைந்தெழுத் துயர்பெருஞ் சித்திகள்
மன்னினர் அவர்பெறும் மாட்சியான் வகுப்பதோ? 67

[ இந்திரன் இம்மந்திரத்தால் பெற்ற பேற்றினைக் கூறுதல் ]

409 ஐந்தரு நீழலின் அரியணைப் புறமிசைச்
சுந்தர நீண்முடிச் சுரர்தொழு தேத்தவே
மந்திர வைந்தெழுத் துதவுமன் சித்தியால்
இந்திர னரசுவீற் றிருந்தனன் என்பவே 68

[ அக்கினி, யமன் முதலானோர் பெற்ற சிறப்பைக் கூறுதல் ]

410 அங்கிவா னவன்சுசி யடைந்தனன் அந்தகன்
எங்கணும் தருமனென் றேத்தவீ றெய்தினன்
துங்கவா னிருதியும் தொகையிலா நிசிசரர்
தங்கணா யகனெனுந் தலைமைபெற் றனரோ 69

[ வருணனும் குபேரனும் பெற்ற பெருமையைக் கூறுதல் ]

411 மறிகடற் சிறையென வருணன்வாழ் வெய்தினன்
எறுழ்வலிக் கிணையிலா னெனவளி யோங்கினன்
உறுநிதிக் கிழவனாய் உத்தர திசைபுரந்
தறைகழற் பிங்களன் அளகைவீற் றிருந்தனன் 70

---

408 சூழ்ந்தனர் - சிந்தை செய்து, புரிதலும் - சொல்லுதலும். உன்னும் - நினையும். மன்னினர் - நிலைபெற எய்தினர்.

409 ஐந்தரு - கற்பக முதலிய ஐந்து தெய்வ விருட்சங்கள். சுரர் - தேவர்.

410 அங்கிவானவன் - அக்கினிதேவன். அந்தகன் - யமன். நிசிசரர் - இராக்கதர்.

411 எறுழ்வலி - மிக்கவலிமை. வளி - வாயு தேவன், பிங்களன் - குபேரன்.

[ ஈசானன் பெற்ற பேற்றினைப் புகலுதல் ]

412 காளகண் டமுறுதற் கண்ணும்விண் ணோர்தொழும்
தாளதா மரையுமச் சம்புவொப் பாகவே
கோளிலாச் செல்வமும் குறைவறப் பொருந்தியே
மீளியீ சானனும் வீற்றிருந் தானரோ 71

[ கதிரவனும் திங்களும் பெற்ற பேறு அஞ்செழுத்தோதியதனால் எனல் ]

413 அள்ளிருட் படலமேய்ந் தாயிரங் கதிரினால்
வெள்ளநீ ருலகெலாம் வெய்யவன் விளக்கலும்
தள்ளரும் பனிக்கதிர் சந்திரன் படைத்ததும்
தெள்ளுமம் மந்திரச் சித்தியா லென்பவே 72

[ முனிவர்கள் எண்வகைச் சித்தி முதலாயின பெற்றதும் இதனால் எனல். ]

414 எண்வகைச் சித்தியும் எத்துணைப் பெருமையும்
தண்ணளிக் குறையுளாந் தாபத ரடைந்ததும்
கண்ணுதற் கடவுள்தன் கருணையின் படிவமாம்
அண்ணலைந் தெழுத்துடை யாற்றலா லென்பவே. 73

[ இதுவுமது ]

415 வாலகில் லியரெழு வாம்பரித் தேரினன்
காலும்வெங் காய்கதிர் காண்வரத் தாங்கியே
ஞாலம்யா வையுமிடர் நண்ணுறா தருள்நலம்
ஆலபா ரணனெழுத் தைந்தினா லென்பவே. 74

---

412 சம்பு – சிவபெருமான். மீளி – வலிமை பொருந்திய.

413 வெய்யவன் – கதிரவன். பனிக்கதிர் – குளிர்ந்த கிரணங்கள்.

414 தண்ணளி – அருள். தாபதர் – தவ முனிவர்கள். படிவம் – வடிவம்.

415 வாலகில்லியர் – ஒரு மகா முனிவர். காலும் – வெளிப்படுத்தும். நண்ணுறாது – வந்து அடையாமல். ஆலபாரணன் – சிவபெருமான்.

[ இதுவுமது ]

416 எத்தகைத் தேவரும் எவ்வகை முனிவரும்
சித்தமுற் றெவைகளும் சேர்ந்துவா முறுவதும்
அத்தகை யைந்தெழுத் தாற்றலே எனிலதன்
வித்தகச் சித்தியின் மேன்மையார் புகல்வரே? 75

[ அஞ்செழுத்தோதிச் சிறப்புற்றோரை அளந்து கூறுதற்கரி தெனல் ]

417 இப்பெரும் பதியினி லெம்பிரா னைந்தெழுத்
தொப்பருஞ் சித்திபெற் றுய்ந்துளா ரளவையான்
செப்புறுந் தகையவோ தெண்டிரை மணல்களும்
அப்பெருந் தொகையுரைக் காற்றுமா றரிதரோ. 76

[ இச்சருக்கத்தை எழுதுவோர் கூறுவோர் கேட்போர்
எய்தும் பலன் கூறல். ]

418 இப்பெருங் காதையை எழுதுவோ ருரைசெய்வோர்
தப்புத லின்றியா தரவினுற் கேட்பவர்
முப்பெரும் பகையையும் முடிவுகண் டுறிலா
ஒப்பருஞ் சிவகதி யுற்றுவீற் றிருப்பரால் 77

பஞ்சாக்கரச் சருக்கம் முற்றும் *

---

417 அளவை – எண்ணிக்கை. தெண்டிரை ஆகுபெயர் – கடலைக்குறித்தது.

418 முப்பெரும்பகை – ஆணவம், கன்மம், மாயை. சிவகதி – வீடுபேறு.

* இச்சருக்க இறுதியில் பஞ்சாட்சரச் சித்தி சருக்க முற்றும் என்று சுவடியில் எழுதப்பட்டுள்ளது.

எட்டாவது

# அக்கினி தீர்த்தச் சருக்கம்

**[ முனிவர்கள் ஓர் அந்தணன் தன் பாவம் நீங்கிப் பழைய உருவெய்திய வரலாற்றைச் சூதமுனியைக் கூறுவேண்டுதல் ]**

( அறுசீர் விருத்தம் )

419 பண்டையொரு தொழுகுலத்தோன் பரம்பரன்வாழ்
நல்லூரின் பாங்கர் எய்திக்
கண்டவர்கள் வியப்பெய்தச் சுணங்கனுருத்
தணந்தபழங் காதை யிப்பாற்
புண்டரிக முகமலர்ந்து புகல்வாயென்
றருந்தவத்தோர் புகலச் சூதன்
துண்டமதிக் கண்ணியனைத் தொழுதமிழ்த
முமிழ்வதுபோற் சொல்ல லுற்றான் 1

**[ சூதன் அவ்வந்தணனின் வரலாறு கூறத் தொடங்கி பொருநை நதிக்கரையில் மாதவி என்பது அவன் ஊர் எனல் ]**

420 பண்பயிலு மேழிசைய அறுகாலஞ்
சிறைச்சுரும்பர் பசும்பொற் றொட்டில்
கண்பொருவப் பொருதுலவுஞ் சோலைவிளிம்
புடுத்துவளங் கனிந்து நாளும்
விண்குலவு நெடுஞ்சினைய கோழரைச்சந்
தகிலினொடு மலைத்தி யூக்கும்
தண்பொருனைப் பொருகரையின் மாதவியென்
றொருமூது றமைந்த தன்றே 2

---

419 தொழுகுலத்தோன் – அந்தணகுலத்தோன். பாங்கர் – பக்கம். சுணங்கன்உரு – நாய்வடிவம். தணந்த – நீங்கிய. துண்டமதி – பிறைச் சந்திரன்.

420 அஞ்சிறை – அகச்சிறகு. கோழரை – வயிரம் முற்றிய அடி (மரம்). சந்து – சந்தன மரம். மலைத்தி – பொருது.

[ வசு என்னும் அவ்வந்தணனின் பண்பு, கல்வி முதலிய சிறப்புக் கூறல் ]

421 அந்நகரின் ஒருபனவன் வசுவெனப்பேர்
தரித்துள்ளா னங்க மாறும்
பன்னுமறை யொருநான்கும் ஐயம்விப
ரீதமறப் பயின்ற மேலோன்
துன்னுநெடும் புகழாளன் சுருதிநெறி
முறையொழுகுந் தூயோன் நேயம்
மன்னுபொறை யறிவூக்கம் நடுநிலைமை
வாய்மைமுதல் வாய்ந்த நீரான் 3

[ அவன் நிகழ்த்தும் இல்லறச் சிறப்பைக் கூறுதல் ]

422 இல்வாழ்க்கை நிலைக்குரிய மனைவியொடும்
மைந்தரொடும் ஈறில் மெய்ந்நூல்
சொல்வாழ்க்கை யொக்கலொடும் எண்ணில்பல
வளங்களொடுந் துவன்றித் தூய
பல்வாழ்க்கை நிலைபூண்ட சால்புடையோர்
அனையோரும் பாரின் மீது
நல்வாழ்க்கை யிவன்வாழ்க்கை யெனமதித்து
வியப்பெய்த நடக்கும் நாளில் 4

[ அக்காலை பாண்டிய நாடாண்ட வேந்தன் சிறப்புக் கூறல் ]

423 சையமெனப் பணைத்தெழுந்த திரடோளான்
சரணமெனத் தரியார்ச் சாய்க்கும்
செய்யமுடித் தழும்பிருந்த விருதாளான்
வளையாத செங்கோல் வேந்தன்

---

421 பனவன் – அந்தணன். அங்கம் – வேதாங்கம். சுருதி – சாத்திரம். நீரான் – தன்மையுடையவன்.

422 ஈறில் – அழிவில்லாத. ஒக்கலொடும் – உறவினரோடும். துவன்றி – நிறைந்து.

பையரவின் முடிக்கிடந்த வுலகாள்மன்
னவன்கூடற் பதிக்கு நாதன்
வையைநதித் துறைபுரக்கும் வழுதிமலை
யத்துவசன் நேர்வை வேலோன் 5

[பாண்டிய மன்னன் ஆட்சிச் சிறப்பும் செங்கோலும்]

424 சீற்றமோ டயிலனுக்கிச் செஞ்சிலைவா
ளியைமருட்டிச் செழுந்தோ டேந்தும்
போற்றுதா மரைமடந்தை பொருவுநலார்
கருந்தடங்கட் பூசலல்லாற்
கூற்றுநா வெனச்சோரி குடித்துமிழும்
சுடர்வாளாற் குறுகார் வெய்ய
ஆற்றல்சால் பூசல்கடிந் தடுபூசல்
பெருதுபுவி யாளும் நாளில் 6

[பாண்டிய மன்னனின் கொடைச்சிறப்பு]

425 இருநிதியைந் தரு,சுரபி புட்கலா
வர்த்தமணி யிவற்றோ டேற்றுப்
பொருவதைமேற் கொண்டவன்போற் பூசுரர்க்கும்
நாவலர்க்கும் அன்பு கூர்ந்து
வருமிரவ லாளருக்கும் மாமணிநீள்
நிதிதூசு வளங்க ளெல்லாம்
ஒருவருநே ரில்லையென அவரவர் வேண்
டியவெல்லாம் உதவு கின்றான் 7

---

423 சையம் – மலை பணைத்து – திரண்டு. தரியார் – பகைவர். வழுதி – பாண்டியன். நேர் – ஒத்த. வைவேல் – கூரியவேற்படை.

424 அயில் – வேல். சிலை – வில். வாளி – அம்பு. பூசல் – கடற்போர். சோரி – குருதி. குறுகார் – பகைவர். பூசல் – போர்.

425 இருநிதி – சங்கநிதி, பதுமநிதி. ஐந்தரு – கற்பக முதலிய ஐந்து தருக்கள். சுரபி – காமதேனு. புட்கலாவர்த்தம் – மழையில் ஒன்று. மணி – சிந்தாமணி. பொருவதை – ஒப்பாக அதனை. பூசுரர் – அந்தணர். தூசு – ஆடை.

[ வசு என்னும் அந்தணன் மன்னனிடம் பெற்ற பரிசு ]

426 முத்தமணி முகடழுத்தும் பசும்பொற்கொள்
கைம்மருப்பின் முயங்கச் சேர்த்தி
பத்திபத்தி மணிகுயின்ற தமனியத்தாற்
குரம்நான்கும் பருமித் தார்க்கும்
கொத்துமணித் தாமமணி தோகைநுதற்
புனைந்தனைய குழக்கன் றோடும்
உத்தமஅவ் வசுவினுக்குப் பசுவொன்றீந்
தனனவனும் உவப்பி னோடே 8

[அந்தணன் தான்பெற்ற பசுவைப் பத்தியோடு பேணிக்
காத்துவரும் நிலைகூறல்

427 ஏற்றவனும் அவ்வியகெவ் வியம்பயப்ப
தவயவந்தா மெனவா யும்நூற்
சாற்றியதெய் வதமிதுவே தருமத்தின்
உருவமது சரத மென்னுப்
போற்றுசுரு திப்பொருளைப் பின்செல்லும்
ஆரிடமே போல நாளும்
ஊற்றமிகும் வேதியனும் அதன்குறிப்பின்
வழியேநின் றொழுகுகின்றான் 9

[ பசுவை அந்தணன் பேணும் முறைமை கூறல் ]

428 கொடிவிடுபா சறுகினுடன் வாலரிமேய்த்
தகடாரக் குளிர்நீ ரூட்டி
வடிசுதைதீற் றியபுரையுட் சமனிலத்தி
னிசைந்தவகை வைக வைக்கோல்

---

426 முகடு – உச்சி. கைம்மருப்பு – யானை. பத்தி – வரிசை. குரம் – குதிரை. பருமித்து – சேணம் முதலிய விட்டு அழகு செய்து.

427 அவ்வியம் –தேவர்க்குப் படைக்கும் பொருள் கெவ்வியம் (கௌவியம்). கோரோசனம் பால் தயிர் முதலிய ஐந்து. சரதம் – சத்தியம், உண்மை. சுருதி – மனு முதலிய நூல்கள். ஆரிடம் – இருடிகள் நெறி.

அடியிணைம ளியிற்படுத்தும் அசகமுடன்
ஈக்கதுவா தகற்றி நாளும்
நெடியதடங் கண்மணிபோற் போற்றியதன்
கன்றையுமந் நெறியிற் பேணி 10

**[பசுவாற்கொள்ளும் பயனை நியதியோடு அவ்வந்தணன் பெற்று வாழ்தல்]**

429 குடம்புரையுஞ் செருத்தல்முலை சுரந்துபீ
ரோடுகலுங் குழக்கன் றூட்டி
முடிந்தபினர் விஞ்சியபால் கறந்துவே
ளவிகளைந்து முறையி னூற்றி
அடைந்தகுழக் கன்றினுக்கவ் வான்போல
அசங்கசிந்தா தரவு மல்கித்
தடம்புரிநூ லணிமார்பன் இப்பரிசே
காத்தோம்பிச் சரிக்கும் நாளில் 11

**[தன் மகன் திருமணத்தின் பொருட்டு வேற்றூர் செல்ல நேர்ந்த அந்தணன் தன் மாணாக்கன் ஒருவனிடம் பசுவை ஒப்பித்தல்]**

430 அரும்பெறற்சே யொருவனுக்கு மணம்புரிவா
னெண்ணிமனை யாட்டி யோடும்
விரும்பியதன் கிளைஞரொடும் வேற்றூர்க்குச்
செலநடப்பான் விழைந்து தன்பால்
பொருந்தியவன் கலையிலும் மாணாக்கன்
ஒருவனையிப் புனிற்று நல்லான்
பெரும்பசிதீக் குகதிவசம் மூன்றென்று
னவனுமந்தப் பெற்றி நேர்ந்தான் 12

---

428 பாசறுகு – பசுமையான அறுகம் புல். வாலரி – தூய வைக்கோல். அகடு – வயிறு. சுதை – சுண்ணம். புரை – கொட்டில். அமளி – படுக்கை. அசகம் – ஒருவகை ஈ. கதுவாது – பற்றிக்கடிக்காமல்.

429 புரையும் – ஒக்கும். செருத்தல் – பால்மடி. பீர் – சுரப்பு. சரிக்கும் – ஒழுகும்.

430 சேய் – மகன். கிளைஞர் – சுற்றத்தார். புனிற்றுநல்லான் – ஈன்றணிய பசு. திவசம் – நாள். பெற்றி – செயல் தன்மை.

**[ அந்தணன் சென்றபின் மாணவன் ஒரு நாளிட்ட உணவை முழுதும் உண்ட பசு இருநாள் பட்டினியாகக் கிடந்ததெனல் ]**

431 நேர்ந்தபின்னர்க் கவற்சியொரீத் தீவேட்பான்
வேதியனும் நெறியிற் செல்லச்
சார்ந்தவிளை ஞர்களொடு மாணுக்கன்
முத்திவசந் தனக்குங் கூட
ஆர்ந்தகொடிப் பாசறுகு கொய்திட்டான்
அத்தினத்தின் மடுத்த தெல்லாம்
ஆர்ந்தபசு பட்டினியே யிருதினமும்
கிடந்ததந்தோ வந்த ணீர்காள். 13

**[ மீண்டுவந்த அந்தணன் பசுவின் நிலையை அறிதல். ]**

432 விப்பிரனு மணமுடித்து மீண்டெய்திச்
சுரபிநிலை வினவ லோடும்
செப்பியவா றிருங்குதினம் மூன்றினுக்கும்
பச்சிளம்புற் சேர்த்த வாறும்
அப்பசுமற் றவையனைத்தும் ஒருதினத்தின்
அருந்தியிரண் டானி யந்தான்
துப்பருந்தப் பெறுமலரும் பசியுழந்து
சோர்ந்ததுவும் சொற்றா ரன்றே. 14

**[ பசுவின்நிலை கேட்ட வசு மனங்கலங்குதல். ]**

433 சொற்றலுநெட் டுயிர்த்துமனந் துளங்கினன்மெய்
நடுநடுங்கிச் சோர்ந்தா னவி
யிற்றவன்போற் கிடந்துமீண் டெழுந்திதனுக்
கென்செய்வோ மெனமா ழாந்தான்

---

431 **கவற்சி** – கவலை. **ஒரீஇ** – நீங்கி. **தீவேட்பான்** – மணவினைசெய்ய. **மடுத்தது** – உண்டது. **ஆர்ந்த** – உண்ட.

432 **விப்பிரன்** – பிராமணன். **சுரபி** – பசு. **ஆனியம்** – நாள். **துப்பு** – உணவு.

கற்றதுவும் கேட்டதுவும் சீலமும்மென்
னாகுமெனக் கரைந்தான், பின்னை
மற்றதனுக் கென்செய்வான் மறையவனும்
அலமந்து வருத்தங் கூர்ந்தான். 15

**[ வசு நெறியோடு பசுவைப் புரக்காமையின் பெரும் பாதகம் செய்வதனாகக் கருதி வருந்துதல். ]**

434 ஏற்றல்விதி யேனும்ஆன் ஏற்பதுதீ
ததனினுந்தீ திரண்டா னேற்றல்
போற்றலரி தெனவிற்றாற் றலைமுறையேழ்
பொன்றுமெனப் புகலா நிற்பார்
தோற்றமிகு மாவினைக்காத் தளிப்பவர்க்கே
நற்கதியுந் துணிவி றம்மால்
ஆற்றுநெறி யாற்புரவா தடைந்தனம்பா
தகமென்னா வறிவி னோர்ந்தே. 16

**[ வசு ஆவினை ஓர் அந்தணக்குத் தானமாகக் கொடுத்து பின் இயமனுலகில் இருநூறு ஆண்டுகள் நிரயத் துன்பம் உறுதல். ]**

435 வேதியனு ம..தரந் தாவினையோர்
விப்பிரர்க்கு விருப்பி னீந்தே
ஏதமிலா வாழ்நாளுக் கெல்லைகண்டு
மறலியுல கெய்தி யன்னோன்
தீதுடைய நிரயமதிற் றினமிரண்டான்
பசியுழந்த தீங்கு தன்னால்
மாதுயர மீதூர மாழாந்து
நூற்றிரட்டி வருடம் ஆழ்ந்தான். 17

---

433 இற்றவன் - நீங்கினவன். மாழாந்தான் – மயங்கினான். அலமந்து - கலங்கி.

434 ஆன் - பசு. விற்றால் – விலையிட்டால். பொன்றும் – அழியும். புரவாது – பேணாமல். ஓர்ந்தே – எண்ணி.

435 ஏதம் – குற்றம். மறலியுலகு – யமன் உலகம். நிரயம் – நரகம். ஆன் – பசு. மாழாந்து – மயங்கி. நூற்றிரட்டி – இருநூறு.

[ அவன் பின்பு மறுபிறவிநாயாகத் தோன்றிச் சுற்றி வருந்தி அகத்தியரின் ஆசிரமத்தை யடைதல் ]

436 நிரையவுல கதுநீங்கி நிலவுலகந்
தனையடைந்து நெறியொன் றில்லார்
புரையுடைய ஞாளியாய்ப் பிறந்தைநூ
றெய்திமுனம் புரிந்த நன்றால்
வரையினையொத் துயர்திணிதோள் வல்லவுணர்
வலிசாய வானோ ருய்யத்
திரையெறிவா ரிதியுடைய தமிழ் முனிவன்
ஆச்சிரமஞ் சேர்ந்தா னன்றே. 18

[ அகத்தியர் ஆசிரமத்தின் பெருமை கூறல் ]

( கலி விருத்தம் )

437 அன்ன வாச்சிர மத்தி னணிநலம்
பன்ன காதி பனுக்கும் பகர்ந்திட
உன்னொ ணாதெனின் வூழ்முறை யாலுணர்ந்
தென்ன வாறெடுத் தெங்ஙன மோதுகேன்? 19

[ பொதியமலையின் சிறப்பும் செழிப்பும் ]

438 சந்த மோடுத மிழ்மண மிக்கது
முந்தை மாதவ ரெண்ணிலர் மொய்ப்பது
இந்தி ராதிபர் யாருமி ருப்பது
மந்த மாருதஞ் சூழ்மலை யாசலம் 20

---

436 புரை – குற்றம். ஞாளி – நாய். பிறந்தை – பிறப்பு. நன்று – பசுவினை ஓர் அந்தணனுக்கீந்த நன்மை. வலிசாய – ஆற்றல்கெட. வாரிதி – கடல். உடைய – வயிறார உண்டு அடைந்த. தமிழ் முனிவன் – அகத்தியன்.

437 பன்னகாதிபன் – ஆதிசேடன். உன்னொணாது – எண்ண முடியாது.

438 சந்தம் – சந்தன மரங்கள். மந்தமாருதம் – தென்றல். மலையாசலம் – பொதியமலையைக் குறித்தது.

[ பொதியமலையின் அருவி வருணனை ]

439 ஆளி யேற்றி னசைந்தரு விப்புனல்
நீள்கு வட்டிடை நின்றிழி கின்றன
மீளி யுற்றவி ராட்புரு டன்மணித்
தோளி லிட்டமுந் நூலெனத் தோன்றுமால் 21

[ மலை முகடுகளின் வருணனை ]

440 கணங்கொள் சாந்தம் கமழ்குவட் டின்னிடை
மணங்கொள் வேங்கை மணம்விரிக் கின்றன
குணங்கொள் பார்மகள் கொங்கைத் தலத்தின்மேற்
சுணங்கு பூத்தது போன்மெனத் தோன்றுமால். 22

[ மேகங்கள் வந்து படியும் வருணனை ]

441 வந்து வைகிய வாசவன் வேழமும்
கந்து கொல்லுங் கடகளிற் றீட்டமும்
முந்து மஞ்சுமுன் னிருண்ட மேகமும்
பந்தி பந்திக் குலவுமோர் பாங்கெலாம். 23

[ மயில் கிளி அன்னம் முதலிய விளங்கும் வருணனை ]

442 முருக னூர்தி முராரி செலுத்திய
கருடன் வேதன் கடவிய வோதிமம்
உருவி லான்கிளி யொன்றுட னொன்றுசாய்
மருவி வைகும்வண் காவின் மருங்கெலாம். 24

---

439 ஆளி – சிங்கம். குவடு – உச்சி. மீளி – வலிமை. முந்நூல – பூணூல்.

440 பார்மகள் – பூமிதேவி. சுணங்கு – ஒருவகை அழகுப் படர்ச்சி.

441 வாசவன் – இந்திரன். வேழம் – ஐராவதம். கந்து – கட்டுத்தறி. மஞ்சு – வெண் மேகம். பந்தி – வரிசை.

442 முருகனூர்தி – மயில். முராரி – திருமால். வேதன் – பிரமா. ஓதிமம் – அன்னம், உருவிலான் – மன்மதன். வண்கா – வளமிக்க சோலை.

[ முனிவர்களும் தேவசாதியாரும் இசைக்கும் பாட்டொலிகளின் வருணனை ]

443 நாவின் பாடலும் நான்மறைக் கீதமும்
தாவில் கின்னரர் தந்திரி யோசையும்
மேவ ரம்பையர் மென்சிலம் போதையும்
தேவ துந்துபி யார்ப்புந் திசையெலாம். 25

[ தேவ மாதர்கள் உறைதலால் எழும் நறுமண வருணனை ]

444 வாச வார்குழல் வானர மாதரார்
பூசு சாந்தமும் பொன்னரி மாலையும்
காசு லாமலர்க் கற்பகத் தாமமும்
ஆசை யெங்கு மருங்கடி வீசுமால். 26

[ சுனைகளும் தடங்களும் பற்றிய வருணனை ]

445 குண்டு நீர்ச்சுனை பூத்த குவளையும்
அண்டர் நாட்டின் அரிவையர் வாட்கணும்
கண்டு வேறு கணிப்ப தருமையின்
வண்டு சூழ்ந்தலம் வந்தும யங்குமால். 27

[ சுணங்களுகிய வசுவை அகத்தியர் காணுதல் ]

446 இன்ன தன்மை மலயத் திலங்கொளிப்
பன்ன சாலையும் பாங்குடன் வைகிய
அன்ன வாய்மை யகத்தியன் கண்டனன்
முன்ன வன்செய் தவத்தின் முதிர்ச்சியால். 28

---

448 தந்திரி – யாழ்நரம்பு. ஓதை – ஓசை. ஆர்ப்பும் – ஆரவார ஒலியும்.

444 வான்அரமாதர் – தேவ மகளிர். காசு – ஒளி. தாமம் – மாலை. ஆசை – திக்கு. அருங்கடி – அரிய நறுமணம்.

445 குண்டுநீர் – ஆழமான நீர். கணிப்பது – எண்ணுவது. அலம்வந்து – சுற்றிச் சுற்றி வந்து.

446 மலயத்து – பொதிய மலையிடத்து. முன் அவன் செய்த – முன்புவசு செய்த.

[அகத்தியர் அவன் நிலையுணர்ந்து இரங்கிக் கூறுதல்]

447 கண்டு கும்ப முனிவன் கருணையாற்
பண்டு மற்றவற் குற்ற பரிசெலாம்
தண்ட லின்றிய தன்மையி னோர்ந்துவாய்
விண்டு கேண்மதி யென்ன விளம்புவான். 29

[வசுவை நோக்கி அவன் பழைய வரலாறு கூறல்]

448 வழுவில் வென்றி மலயத் துவசன்பால்
ஒழுகு பாற்பசு வொன்றுநீ யேற்றதும்
பழுதில் விஞ்சை பயில்பவ னாலதற்
கழிபெ ரும்பசி யுற்றது மாய்ந்தனம். 30

[இதுவுமது]

449 அன்ன தீமையி னாலவ னோடுதீ
இன்னல் கூர்நிர யத்திடை யெய்தியே
பன்ன ருந்துயர் பற்பல வெய்தினை
பின்னும் ஞாளிப் பிறந்தையுற் றுய்மன்னோ 31

[பசுவை பட்டினி விட்டோர் எய்தும் நிலை கூறுதல்]

450 சிறந்த வான்பசி சேர வருத்தியோர்
இறந்து தீய நிரயத்தின் எய்தியே
பிறந்தை நூறுநா யாகப் பிறந்துபின்
அறந்த பும்புலைச் சென்ம மடைவரால் 32

---

447 கும்பமுனி – அகத்தியன். தண்டலின்றி – தாழ்வில்லாமல், ஓர்ந்து – அறிந்து. விண்டு – திறந்து.

448 மலயத்துவசன் – அந்தணனுக்கு பசுவைத் தானங்கொடுத்த பாண்டிய மன்னன். கழிபெரும் – மிக்க. பயில்பவன் – மாணாக்கன்.

449 அவனோடு – பசுவை இரண்டு நாள் பட்டினி கிடக்கச் செய்த வசுவின் மாணாக்கனோடு. பன்னரும் – சொல்லுதற்கரிய.

450 இறந்து – இறந்தபின்பு, தபும் – தவறியொழுகும். சென்மம் – பிறப்பு.

[ அகத்தியர் வசுவின் துயர் நீங்க உபாயங்கூற முற்படுதல் ]

451 புந்தியாரப் புரிந்திலை யாதலால்
வந்த தீங்கினை மாற்றுமு பாயம்யாம்
சிந்தை செய்து தெளிவுறக் கூறுதும்
அந்த ணாள வதற்கஞ்சே லென்றான் 33

[ இறைவனருளால் உன்னைக் காப்பேன் எனல் ]

452 உச்சிப் போதிடை ஞாளி யுருக்கொடு
நச்சி வந்திடும் நான்மறை வேதிய
செச்சை மேனிச் சிவனரு ளாலின்றே
நிச்ச லும்புறம் காப்பல்நி னையென்றான் 34

[ பசுவைத் தானமிட்டோர் எய்தும் பயன் கூறல் ]

453 என்று பின்னு மினிதெடுத் தோதுவான்
கன்றி னேடுங் கபிலைக் கனிவினல்
ஒன்று நல்கி னுலக முழுவதும்
நன்று நல்குநர் நற்பல னெய்துவார் 35

[ பாலாபிடேகம் இறைவற் கியற்றுவார் எய்துப் பயன் கூறல் ]

454 செய்ய தேனுடன் சேதாவெண் பாலினை
ஐயன் சென்னியி லாட்டிய தூயவர்
உய்யும் வண்ணம் உறும்பயன் மான்மறிக்
கைய னல்ல தெவர்கட் டுரைப்பரே 36

---

451 புந்தி – வயிறு. ஆர – நிறைய. உபாயம் – வழிமுறை.

452 நச்சி – விரும்பி. செச்சை – ஒரு மலர். நிச்சலும் – நாள்தோறும்.

453 கபிலை – பசு. கனிவினல் – அன்பால். நன்று – பெரிது,

454 சேதா – செந்நிறப் பசு. ஆட்டிய – அபிடேகம் செய்த. கட்டுரைப்பர் – விரித்துச் சொல்லுவார்.

[ சிவலிங்கங்களின் பெருமை கூறுதல் ]

455 மானு டச்சிவ லிங்கத்தின் மாண்புடைத்
தான ஆரிட லிங்க மதிகமாம்
ஏனைச் சித்த விலிங்க மதனினும்
ஊன மற்ற பயன்பெரி துய்க்குமால் 37

[ சிவலிங்கத்திற்குப் பஞ்சாமிர்த அபிடேகம் செய்வார் எய்தும் பயன் ]

456 இயம்பும் சித்த விலிங்கத்தி னும்பயன்
சுயம்புலிங்க மதிகஞ் சுரக்குமால்
வியந்து பஞ்சமிர் தம்விழைந் தாட்டினர்
நயங்கொள் சாயுச் சியபதம் நண்ணுவார் 38

[ பசு முதலியவற்றைத் தெரிசித்தோர் எய்தும் பலன் கூறல் ]

457 ஆவி னைத்தெய்வ தங்களை யன்பிறைற்
பாவு தீர்த்தங் களைப்பரன் அன்பரை
யாவ ரேனும் இனிது தெரிசித்தோர்
ஓவில் பாவங்கள் முற்றும் ஒழிவரால் 39

[ அறிந்துசெய்த பாவங்கள் அரனைப் பூசிக்க விலகும் எனலும் நீ ஆவினைத் தானம் செய்தமையின் சிறிது பேறு பெற்றனை எனலும் ]

458 அறிந்தி யற்றிய பாவ மரன்பதஞ்
சிறந்த அன்புடன் பூசிக்கத் தீருமால்
நிறங்கொ ளாவை நெறியயி லந்தணர்க்
கறந்த வாமல் அளித்தனை யாமரோ 40

---

455 ஆரிடலிங்கம் – முனிவர்கள் தாபித்த லிங்கம். ஊனம் – குற்றம்.

456 சுரக்கும் - வழங்கும். சாயுச்சியம் – இறைவனோடுறையும் பேறு.

457 தெய்வதம் – தெய்வம். பரன் அன்பர் – சிவனடியார். ஓவில் – நீங்காத.

458 அரன்பதம் – சிவனுடைய பாதங்கள். ஆவை – பசுவை. தவாமல் – கெடாமல்.

[ உன் குறை நீங்கவழி கூறுவேன் எனல் ]

459 ஆத லானவை பாதிய கன்றது
வேத பாரக! விஞ்சிய தற்குமிப்
போது முத்திப் பொருந்திய தாலிஃ
தேத நீங்க வியம்புதுங் கேட்டியால் 41

[ குடந்தையின் தென்திசையில் உள்ள நல்லூரைப் பற்றி விளக்குதல் ]

460 சுழிக்குந் தெண்டிரை தூமணி யெற்றுநீர்
செழிக்கும் காவிரித் தெக்கணத் தீர்த்தத்தில்
கொழிக்குஞ் சோதிக் குடந்தைக் கிமதிசை
சழிக்குங் கோணத்திற் காவதம் பாதியில் 42

[ சித்தர் முதலியோர் சூழ்ந்து வணங்கும் சுந்தரகிரியைச் சுட்டுதல் ]

461 சித்தர் சாரணர் தேவ ரியக்கர்கள்
பத்த ரந்தணர் பண்ணவர் யோகிகள்
சுத்தர் சூழ்சுந் தரகிரி என்னவே
அத்தர் வாழும் அசலமொன் றுண்டரோ 43

[ ஆண்டுள்ளது அக்கினி தீர்த்தமெனல்
அக்கினி தீர்த்தத்தின் பெருமை கூறுதல் ]

462 சாற்று மச்சுந் தரகிரி தன்வயிற்
போற்று மங்கித் திசையினோர் பூந்தடம்
ஆற்றல் மிக்கதோ ரக்கினி யாற்றந்
தேற்ற மெய்தி யிலங்குமற் றென்பவே 44

---

459 நவை – குற்றம். விஞ்சியது – எஞ்சியிருக்கும் பாவம். உத்தி – வழி.

460 தூமணி – வயிரம் முதலிய மணிகள். கிமதிசை – தென்திசை. காவதம் – காத தூரம்.

461 பத்தர் – பக்தர்கள். பண்ணவர் – கந்தருவர். அத்தர் – மேலானவர்.

462 அங்கித் திசை – தென்கிழக்குத்திசை. தடம் – தீர்த்தக் குளம்.

463 சொற்ற வத்தடந் தூய்மையி லுண்டியின்
குற்ற முற்றுங் குறுகலுந் தீர்ப்பது
பெற்ற மூரும் பிரானருள் போல்வது
எற்று நீர்க்கங்கை யொப்பதத் தீர்த்தத்தை 45

**[ அத்தீர்த்தத்தின் கரையில் உள்ள அரசமரத்தின் அடியில் சென்று நிற்கக் கூறுதல் ]**

464 வலங்கொண் டன்னதன் மாடொரு பிப்பிலம்
நலங்கொண் டோங்கும் நயங்கெழு மற்றதின்
நிலங்கொள் மூலத்தின் நீசென்று நின்றிடின்
பொலங்கொள் பங்கயப் பூந்தடம் ஆங்கதில் 46

**[ அத்தீர்த்தத்தில் நீராடி வரும் நல்லவர் ஒருவரின் சடைநீர்த் துளிபட உன் நாயுரு நீங்கி நலம்பெறுவாய் எனல் ]**

465 ஆடும் நல்லவ ராய்மலர்க் குஞ்சியின்
வீடும் நீர்த்துவ லைத்துளி விசலும்
நீடு தீவினை நீங்கும் நினதுருக்
கூடும் அந்தணக் கோமகன் என்னவே 47

**[ பின்னர் பிரமதீர்த்தத்தில் மூழ்குமாறு பணித்தல் ]**

466 பரவு மத்தடம் ஆடிப்ப ரவினல்
விரவு மந்தணர் தம்முடன் மேவிநீ
அரவு பூண்டருள் அண்ணலின் சன்னிதிப்
பிரம தீர்த்தத்தின் பெற்றியின் மூழ்கியே 48

---

463 தூய்மையில் உண்டி - புலால், கள் முதலியன. குறுகலும் - அடைந்தவுடன். பெற்றம் - காளை ( இடபம் ).

464 மாடு - பக்கம். பிப்பிலம் - அரசமரம். மூலம் - அடி.

465 ஆடும் - மூழ்கும். குஞ்சி - தலைமுடி. வீடும் - வழியும்.

466 பரவும் - வணங்கத்தகும், மேவி - பொருந்தி. பெற்றி - முறை.

[பின்னர் திருக்கோயில் புக்கு வழிபடுக எனல்]

467 ஆல யத்தெய்தி அன்புடன் மும்முறை
ஏல வேவலம் வந்திறை வன்பதம்
சீல மாக வுமையுடன் சேவித்து
மூல வைந்தெழுந் தோதி முறைமையால் 49

[சிவராத்திரி நாள் வருதலின் விரைந்து செல்கென ஏவுதல்]

468 சொல்லு மாறுதொ ழுதங்ஙன் வாழுநாள்
எல்லை காறு மிருத்தி சிவநிசி
வல்லை வந்துறு மாசியும் வந்ததால்
ஒல்லை ஏகெனப் பின்னரு மோதுவான் 50

[இறைவன் நல்லருள் புரிவானெனல்]

469 தலவி சிட்டத்தி னற்பிர சன்னதை
நிலவு மாற்சிவன் நின்னெதிர் தோன்றியே
அலகி லாவப ராதட் சமரெனக்
குலவி வேண்டுவ யாவுங் கொடுப்பரால் 51

[அகத்தியர் இவ்வாறு கூறக்கேட்ட வசு ஆங்குப் புறப்படல்]

470 அப்ப திக்குநீ போதற் கறிவுநாம்
ஒப்பரும் பரிசாலின் றுதவினம்
செப்பு மாறுசெல் வாயென் றகத்தியன்
தப்பி லாததன் சாலைபுக் கானரோ 52

---

467 சீலமாக – ஒழுக்க முறையாக.

468 இருத்தி – அங்குத் தங்கியிருப்பாயாக. சிவநிசி – சிவனிரவு. வல்லை – விரைந்து. மாசி – மாசித் திங்கள். ஒல்லை – விரைந்து

469 விசிட்டம் – மிக்க சிறப்பு. பிரசன்னம் – காட்சி. குலவி – விளங்கி

470 பரிசு – அருட்டன்மை. உதவினம் – கூறினேம்.

[ அவன் பொதிய வெற்பை வலம் வந்து பணிதல் ]

471 ஞாளி முத்தமிழ் நற்றவன் தாள்மலர்
தூளி யாடிதன் தோகை குழைத்துராய்
ஆளி யெற்றி அருவிவந் தார்க்குமம்
மீளி வெற்பை வலங்கொண்டு மீண்டரோ 53

[ கடம்பாடவி இலிங்கத்தை வழிபட்டுச் செல்லுதல் ]

472 தமிழ்ம ணந்தரு தண்பொருந் தப்புனல்
இமிழ்த டந்துறை யாடி யினிதுராய்க்
கமழ்ந றுந்துணர் பூங்கடம் பாடவி
அமிழ்த லிங்கத்தை யன்புட னேக்கியே 54

[ வையையில் நீராடிப் பின் சிராப்பள்ளி வழியாக வருதல். ]

473 வையை மாநதி யாடி வழிக்கொளீ
ஐயன் வாழ்சிராப் பள்ளி யடைந்துமான்
கையன் வாரணக் கானங் கண்ணுற்று
மெய்யன் வாழ்பதி யேனவும் மேவியே. 55

[ ஐயாற்றிறைவனே வணங்கிக் குடந்தை வந்து பின்
அவன் நல்லூரையடைதல், ]

474 நம்பன் பஞ்ச நதத்தை வலங்கொண்டு
பம்பு காவிரித் தீர்த்தம் படிந்துராய்க்
கும்ப கோணங் குறுகிக் குழகன்வாழ்
உம்பர் போற்றும்நல் லூரைவந் துற்றதால். 56

---

471 ஞாளி - வசுவாகிய நாய். தூளி - தூசு. தோகை - வால். ஆளி - யாளி ( சிங்கம் ). வெற்பு - பொதியமலே.

472 தண்பொருந்தம் - பொருநை நதி ( தாமிரவருணி ). கடம்பாடவி - கடப்பந்துறை. நோக்கி - தரிசனம் செய்து.

473 வழிக்கொளீஇ - வழியாக. மான்கையன் - சிவபெருமான். வாரணக் காணம் - திருவானைக்கா. ஏனவும் - பிற தலங்களும்.

474 பஞ்சநதம் - திருவையாறு. குழகன் - சிவபெருமான்.

[ அக்கினி தீர்த்தத்தில் மூழ்கி அரசமரத்தின் கீழ் அவன் நிற்றல் ]

475 உற்று நேசம் உவட்டெடுத் தோடவாங்
கற்ற மின்றியவ் வக்கினி தீர்த்தத்தைச்
சுற்றி மும்முறை சூழ்வந் தரசின்கீழ்
சொற்ற வாறு சுணங்கன் வதிந்ததால் 57

[ முனிகுமாரன் சடைநீர்ப் படுதல் ]

476 துனிவு தீர்க்குமத் தூய்தடந் தன்னிலோர்
முனிகு மாரன் முழுகித்தன் குஞ்சிநீர்
இனிதி னுற்றுழி யெற்றுமோர் சீகரம்
அனைய ஞாளிதன் னாகத் தணைந்ததால் 58

[ ஞாளிஉரு நீங்கி வசு அந்தண உடம்பு பெறுதல் ]

477 அன்ன காலையி னவ்வுரு நீங்கித்தன்
முன்னை வேதிய னுருமுற் றினன்
மன்னு சித்த குளிகையின் மாட்சியால்
பொன்ன தாகிப் பொலிகருந் தாதென 59

[ மீண்டும் பெற்ற உடம்பின் எழில்நல வருணனை. ]

478 வால ஞாயிற்றின் மண்டிலத் தின்னுருக்
கோல மோவியன் குத்தி வகுத்தெனக்
காலுஞ் சோதிக் கரசர ணாதிகள்
ஞாலம் யாவும் வியப்ப நலஞ்செய 60

---

475 உவட்டெடுத்து – பொங்கி. அற்றம் – மறதி. சுணங்கன் – நாய்.

476 துனிவு – வெறுப்பு (பாவம்). சீகரம் – நீர்த்துளி. அணைந்தது – பட்டது.

477 அவ்வுரு – நாய் வடிவம். சித்தகுளிகை – இரும்பைப் பொன்னாக்கும் ஆற்றலுடையது.

478 வாலஞாயிறு – இளஞ்சூரியன். கோலம் – அழகு. காலும் – வெளிப்படும். கரசரணாதிகள் – கால்கை முதலிய உறுப்புக்கள்.

[ இதுவுமது ]

479 சாற்று நான்மறை தன்னுட னறங்கம்
போற்று வான்முகம் பொற்ப நிலாவினை
நூற்ற தன்ன நுடங்குமுந் நூலுடன்
ஏற்ற மானுரி மார்பத் தெழிலுற 61

[ அங்கு வாழ்கின்ற அந்தணர்கள் இவ்வற்புதங் கண்டு கூறுதல். ]

480 தோன்றி நின்ற சுருதியந் தோன்றலை
ஆன்ற நூலணி மார்புடை யந்தணர்
ஊன்று காத லுவட்டெடுத் தோடநேர்
ஏன்று நோக்கி யிஃதிரும் பூதென்றார் 62

[ வசு, பின்னர் பிரமதீர்த்தத்தில் மூழ்கிவிட்டுக் கோயிலுக்குள் செல்லுதல். ]

481 என்ன வன்னவ ரோடு மிசைந்தவன்
பின்னர் வந்து பிரமதீர் தத்தினிற்
சொன்ன வண்ணமே தோய்ந்து கடன்கழீ
முன்ன வன்றிருக் கோயிலை முன்னினான். 63

[ இறைவனை வணங்கி வலம் வருதல். ]

482 ஆல யத்தினை யெய்திய வந்தணன்
ஞால முற்றும் புகழ்தரு நந்திமுன்
மால யற்கரி யானை வணங்கிப்பின்
சீல மாய்மும் முறைவலஞ் செய்தரோ 64

---

479 நூற்றதன்ன – நூலாகத்திரித்தாற்போல. மானுரி – மான்தோல்.

480 தோன்றலை – வசுவாகிய அந்தணனை. ஏன்று – நிமிர்ந்து. இரும்பூது – வியப்பு.

481 சொன்னவண்ணம் – அகத்தியர் கூறிய முறைப்படி. தோய்ந்து – மூழ்கி.

[ காசி விநாயகரையும் அம்பிகையையும் வணங்குதல். ]

483 காசி யைங்கரன் கான்மலர் கைதொழு
தீசன் சேவடி யேற்றி யிறைஞ்சியே
ஆசை மீக்கொள அம்பிகை தாளிணை
வாச மாமலர் வாழ்த்தி வணங்கியே 65

[ வசு சிவராத்திரி நன்னாளை எதிர்நோக்கி யிருத்தல். ]

484 இன்ன தன்மை நியம மினிதுசெய்
தன்ன வூர்தி யனையவவ் வந்தணன்
சொன்ன வைந்தெழுத் தோதித் துளக்கற
மன்னி யாங்குச் சிலபகல் வைகினான். 66

[ சிவராத்திரியன்று வசு இறைவனைப் பூசித்தல் ]

485 வைகும் நாளிற் சிவநிசி வந்தென
மெய்கொள் வேதியன் பூசை விதிமுறை
கைக ளாரக் கனிவி னியற்றியே
பைகொள் பாம்பரை யானைப் பரவுவான் 67

[ இதுமுதல் ஏழு பாடல்கள் இறைவன் புகழைப் பலவாறாக அவ்வந்தணன் போற்றிக் கூறுதல் ]

486 கங்கைவாழ் சடையாய் போற்றி
கவுரிதன் பாகா போற்றி
பொங்கர வசைத்தாய் போற்றி
புரம்பொடி படுத்தாய் போற்றி

---

488 காசிஐங்கரன் – காசி விநாயகர், தாளிணையாகிய மலர் எனக்கூட்டுக.

484 அன்னவூர்தி – பிரமன். துளக்கற – கலக்கம் நீங்கி, மன்னி – நிலையாக.

485 பைகொள் பாம்பரையான் – படத்தையுடைய நாகத்தை இடையிலே அணிந்துள்ள சிவபெருமான். பரவுவான் – வணங்கிப் போற்றுவான்.

பங்கயன் முகுந்தன் காணாப்
பரஞ்சுட ராகி நின்று
இங்கெமை யினிதி னுண்ட
இறைவனே போற்றி போற்றி! 68

487 மூலகா ரணனே போற்றி
முக்கண்நா யகனே போற்றி
சூலபா ணியனே போற்றி
சுருதியின் முடிவே போற்றி
மேலைவா னவர்கள் உய்ய
விரிகடல் முகட்டிற் றோன்றும்
ஆலமே யமுதா யுண்ட
ஐயனே போற்றி போற்றி! 69

488 பாலலோ சனனே போற்றி
பனிமதி முடித்தாய் போற்றி
வேலனைப் பயந்தாய் போற்றி
விண்ணவர் தலைவா போற்றி
சீலமா முனிவ ரேத்த
சின்மய வடிவ மாகி
ஆலமா நீழல் வைகி
யறம்பல உரைத்தாய் போற்றி! 70

489 கண்டவர் வெருக்கொண் டேத்த
கவைத்தலைச் சூலஞ் சுற்றும்
சண்டனை மார்க்கண் டற்காய்த்
தடிந்துயிர் புரந்தாய் போற்றி

---

486 அசைத்தாய் – உடுத்தாய். பங்கயன் – பிரமன். முகுந்தன் – விட்டுணு.

487 பாணி – கை. சுருதி – வேதம். ஆலம் – ஆலகால விடம்.

488 பாலலோசனன் – நெற்றியிற் கண்ணையுடையவன். வேலன் – முருகன்.

முண்டக மலரி னானும்
முகுந்தனும் மருண்டு நீங்கப்
பண்டொரு பாலற் கென்றே
பாற்கட லளித்தாய் போற்றி! 71

490 வண்ணமைந் துடையாய் போற்றி
வானவர் தலைவா போற்றி
பெண்ணொரு பாகா போற்றி
பேரருட் செல்வா போற்றி
எண்ணுதற் கரியாய் போற்றி
எமக்கெளி வந்தாய் போற்றி
அண்ணலே போற்றி நல்லூர்
அமலனே போற்றி போற்றி! 72

491 சென்னியைந் துடையாய் போற்றி
தேவர்க்குந் தேவே போற்றி
பொன்னணி நீக்கி யென்பு
பூண்டருள் புனிதா போற்றி
முன்னைய வடிவு நல்கி
முனியும்நா யுருவம் போக்கி
என்னையும் ஆண்டு கொண்ட
இறைவனே போற்றி போற்றி! 73

492 அணுவினுக் கணுவாய் மற்றை
யண்டத்திற் கண்ட மாகித்
தணவுத லிகந்து நின்ற
சச்சிதா னந்த போற்றி

---

489 வெருக்கொண்டு – அச்சமுற்று. கவை – பிளவு. சண்டன் – யமன். புரந்தாய் – காத்தாய். பாலன் – அபிமன்யு.

491 சென்னி – (தலை) முகம். என்பு – எலும்பு. முனியும் – வெறுக்கும்.

இணையிலா வன்பு பூண்டோர்க்
கீறில்பே றின்ப மான
துணையடி நீழல் நல்கும்
சுந்தரே சுரனே போற்றி! 74

[இறைவன் வசுவிற்குக் காட்சிதரல்]

493 இன்னன துதிகள் கூறி
இணையடி இறைஞ்சி நிற்ப
அன்னவன் காணச் சோதி
யாயலிங் கத்தி னின்றும்
கன்னியோர் பாக மாகக்
கந்தவேள் நடுவண் வைகப்
பொன்னிற மேனி யண்ணல்
பொலிவுறத் தோன்றி நின்றான் 75

[வசு ஆனந்த மேலிட்டு உளமுருகி நிற்றல்]

494 தோன்றலு மந்த ஞான்
தொடர்ந்தபே ரன்பி னாலே
கான்றுகண் ணருவி சோரக்
கரகம லங்கள் கூப்பி
மூன்றுகண் ணுடையான் பாத
முளரிகள் முடிமேற் சூடி
ஈன்றணித் தாய சேதா
வெனக்கசிந் துருகி நின்றான். 76

---

492 தணவுதல் – நீங்குதல். ஈறில் – அழிவில்லாத.

493 கன்னி – உமாதேவி. அண்ணல் – சிவபெருமான்.

494 கரகமலம், கைகளாகிய – தாமரை. முளரி – தாமரை.

[ இறைவன் நீ வேண்டும் வரங்களைக் கேள் எனல் ]

495 உருகுமந் தணனை நோக்கி
யொருவனென் றுலக மேத்தும்
விரைகம ழிதழி யானும்
வேண்டுநல் வரங்க ளென்ன
பரமநின் பாதம் போற்றும்
பான்மையே யன்றி வேறு
வரமெனக் கென்கொ லென்றான்
வல்வினை மாய்த்து நின்றான் 77

[ வசு இறைவனிடம் வரம் கேட்டல் ]

496 ஆயினு மைய நின்பே
ரருள்வழி நிற்ப தன்றி
நாயினேன் மறுப்ப துண்டோ
நல்வர மாவ தெந்தாய்
மாயிரு ஞால முண்டோன்
மண்கிளைத் தறியா நின்பொற்
சேயொளிச் சரணம் போற்றும்
செல்வமே வேண்டும் வேண்டும் 78

[ இதுவுமது ]

497 தவவினை புரிதல் (செய்யாத்)
தன்மையேன் நன்மை யெய்தும்
சிவநிசி யிதன்கட் பூசை
செய்தில ரேனு மைய
பவவினை நீக்கி யின்பம்
பயக்குநின் பதவி நண்ணி
உவமையி னீங்கி வாழ்வோர்
உறைவது வேண்டு மென்றான் 79

---

495 விரைகமழிதழி – மணம் நாறும் கொன்றை மலர்.

496 ஞாலமுண்டோன் – திருமால். சரணம் – பாதங்கள்.

497 உவமையின் நீங்கி – இங்கு வாழ்வோருக்கு உவமைகூற முடியாதபடி.

**[ இறைவன் அவன் வேண்டியவற்றை நல்கி இலிங்கத்தில் மறைதல் ]**

498 ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
பொன்றிரண் டனைய சோதி
புனிதலிங் கத்தி னூடு
சென்றுபுக் குறைந்தா னெங்குஞ்
செறிந்துட னிறைந்து நின்றே 80

**[ இறைவன் அபராதட்சமர் என்னும் பெயரோடு விளங்குதல் ]**

499 அன்றுதொட் டுலக மெல்லாம்
அபராதட் சமரென் றோதக்
கன்றுமா னுகளுங் கையான்
காண்வரும் பெயரோன் றுற்றான்
பொன்றிரண் டனைய சோதிப்
புரிசடை மவுலி தாங்கும்
நன்றறி முனிவிர் ஐயன்
கருணையார் நவிலற் பாலார் 81

**[ இச்சருக்கத்தை ஓதுவார் கேட்பார் அடையும் பலன் கூறல் ]**

500 இக்கதை படிப்போர் கேட்போர்
எழுதுவோர் எழுது வித்தோர்
தொக்கதீ வினைகள் தீயிற்
றூலம்போல் மாய நூறித்
திக்கெலாம் புகழப் பார்மேல்
செல்வமீ தூர வாழ்ந்து
முக்கண னுலகை யெத்தி
முடிவின்றி வாழ்வ ரன்றே 82

அக்கினி தீர்த்தச் சருக்கம் முற்றும்.

---

499 அபராதட்சமர் — குற்றங்களைப் பொறுத்து நீக்குபவர் என்னும் கருத்தால் நல்லூர் இறைவனுக்கு வழங்கும் பெயர்களுள் ஒன்றாகும்.

500 தொக்க - நிறைந்த. தூலம் - பஞ்சி. நூறி - அழித்து.

ஒன்பதாவது

# அகத்தியர்க்கு மணவாளக் கோலங்காட்டின சருக்கம்

[ முனிவர்கள் அகத்தியருக்கு இறைவன் திருமணக்கோலங்காட்டிய வரலாறு கூறுக எனச் சூதமுனிவரை வேண்டுதல் ]

501 மாதவர் குறுமு னிக்கு
மணவாளக் கோலம் பெம்மான்
காதலாற் காட்டி யாண்ட
கதையிப்பா லுரைசெய் கென்ன
சீதமா மதியஞ் சூடும்
செல்வனை வணங்கிப் போற்றிச்
சூதனு ரன்பு கூரத்
தொகுத்தது துரைக்க லுற்றூர் 1

[ உமாதேவி தக்கன் மகளாகத் தோன்றினுள் எனச் சூதமுனி கூறித் தொடங்குதல் ]

502 பங்கயத் தவிசின் மேய
பண்ணவன் பயந்த பாலர்
அங்கண்மா ஞாலம் போற்றும்
ஆற்றல்சால் பதின்ம ரன்னோர்
தங்களிற் றலைமை சான்ற
தக்கன்நான் மறைகள் வல்லான்
மங்கையா யவத ரித்தாள்
வான்புவி முழுது மீன்றூள் 2

501 மணவாளக்கோலம் - திருமணக் காட்சி. சீதம் - குளிர்ச்சி. கூர - மிக.

502 பண்ணவன் – பிரமன். முழுதும் ஈன்றூள் - உமாதேவி.

**[ தக்கன் தாட்சாயணியைச் சிவபெருமானுக்கு மணஞ்செய்து கொடுத்தான் எனல் ]**

503 ஈர்ந்தவெண் பளிக்குப் பாறை
யிடத்தெய்தித் தோன்று நின்ற
வார்ந்தபா சொளியின் மிக்க
மரகதப் பாவை யொப்பாள்
நேர்ந்தநூ லிடையா ளந்த
நேரிழை யவளை யீசற்
கார்ந்தவா தரவா லன்னோன்
அளித்தன னுறையு நாளின் 3

**[ சிவபெருமானை இகழ்ந்து தக்கன் புரியும் வேள்வியைக் காண வந்த இறைவியை அவன் மதியாதிருந்தான் எனல் ]**

504 மூலகா ரணனும் முக்கண்
முதல்வனை யிகந்தோர் வேள்விச்
சாலும்வா னவரோ டந்தத்
தக்கனற் றினனவ் வேலை
ஏலவார் குழலாள் தாதை
யியற்றுமவ் வேள்வி காண்பான்
நூலிடை துவள வந்தாள்
நோக்கினன் மதியா துற்றான் 4

**[ அதனைப் பொறுத உவமையவள் தன்னை வேள்வியில் அவியாக நல்கி இமவானுக்கு மகளாகப் பிறந்தாள் எனல் ]**

505 அவமதித் திடலு மந்த
வாயிழை வெள்கி யாகத்
தவ...... னுங்க வாகந்
தனையவி யாக நல்கிப்

---

503 ஈர்ந்த - குளிர்ச்சிபொருந்திய. பாசொளி - பச்சையொளி. அளித்தனன் - மணம் செய்து கொடுத்தான்.

504 இகந்து - நீக்கி. ஏலவார் குழலாள் - தாட்சாயணி. மதியா துற்றான் - இகழ்ந்து பராமுக இருந்தான்.

புவியொரு மூன்றும் போற்றும்
பொன்னெரி யிமைய வேந்தன்
உவகைகூர் புதல்வி யாகி
உதித்தனள் வளரும் நாளில் 5

[ இமவானிடம் முனிவரைக்கொண்டு மணம் பேசி இறைவன் தேவர்கணங்களோடு எழுந்தருளினன் எனல் ]

506 எழுவகை முனிவர் தம்மை
யியன்மணம் பேசு கென்று
செழுமலை யரசன் றன்பால்
செலவிடுத் திசைவு நோக்கி
முழுமுத லிறையோன் செங்கண்
மூரிவெள் விடைமேற் கொண்டு
தொழுதிரு மருங்கு மும்மைத்
தொல்புவி யோருஞ் சூழ 6

[ தேவர்களும் முனிவர்களும் இமையத்திற் கூடினமையால் தென்திசை உயர்ந்தது எனல் ]

507 இமையமால் வரையி னெங்கோன்
எய்தின னிருத்த காலை
அமைநெடுந் தோளி னரும்
ஆண்டகை யவரு மீண்டிச்
சிமையவெற் பிடம்பெ றாது
சேர்ந்தொருங் குறலுந் தென்பாற்
சமமஃ துறாது விண்ணந்
தடவமீ துயர்ந்த தன்றே

---

505 வெள்கி – நாணமுற்று. அவியாக – வேள்விப் பொருளாக. எரி – ஒளி.

506 எழுவகை முனிவர் – சப்தரிசிகள். மலையரசன் – இமவான். மும்மைத் தொல்புவி – மூன்றுலகம்.

507 அமை – மூங்கில். ஈண்டி – குழுமி. விண்ணந்தடவ – ஆகாயத்திற் சென்றுஉயர.

[ உலகினைச் சமன் செய்ய அகத்தியனை இறைவன் தென்னாடு ஏகப் பணித்தான் அவன் மணக்கோலங்காணல் வேண்டினான் எனல் ]

508 அத்திறம் நோக்கி யீசன்
அகத்தியன் தன்னைக் கூவி
வித்தக முனிவ நீபோய்
மேவரப் புரிதி யென்ன
முத்தக முரிஞ்சும் பைம்பொன்
முகின்முலை யுமையை வேட்டுக்
கத்திகை சூட்டுங் கோலங்
காண்டலெங் ஙனம்யா னென்றான் 8

[அகத்தியன் வேண்டுகோளுக்கு இரங்கி இறைவன் நல்லூரில் திருமணக் கோலங் காட்டுவதாக அருளினான் எனல் ]

509 என்றவ னிரங்கலோ லோடும்
எம்பிரான் கருணை பூத்து
மன்றலங் கோதை சூட்டும்
மங்கள ரூபந் தன்னைப்
பொன்றிகழ் புரிசை நல்லூர்
போந்துகாட் டுதும்யா மென்றான்
நன்றென வவனும் நேர்ந்து
நலங்கொள்தென் வரையிற் செல்வான் 9

[ அகத்தியன் தெற்குநோக்கி வருங்கால் விந்தமலை செருக்குடன் எழுந்து நின்றதெனல் ]

510 தொடுத்ததேன் பிரச மென்னச்
சுடரவ னோடு திங்கள்
மடுத்திட வான்கீ ழாக
வடதிசை யிருளின் மூழ்க

---

508 மேவர – சமனிலையாகப் பொருந்த என்றவாறு. கத்திகை – மணமாலை.

509 மன்றல் – திருமணம், மங்கள ரூபம் – திருமணக் கோலத்து வடிவம். புரிசை – மதில். போந்து – வந்து. தென்வரை – பொதியமலை.

முடித்தலை முன்ன மெங்கோன்
முளரியான் தேட நீண்டாங்
கிடைப்பட லொன்று மின்றி
யெழுந்தமால் விந்தந் தன்னை 10

[அகத்தியன் அதன் செருக்கழியக் கையினால் அமிழ்த்து அடக்கிப் பொதிய மலையில் வந்து தங்கினான் எனல்]

511 குடங்கையி னடக்கிச் சாந்தக்
குளிர்நறுஞ் சோலை சூழ்ந்த
தடம்பெறு மலையச் சாரல்
சார்ந்தனன் சார லோடு
நெடுங்கட லுலக மெல்லாம்
நிலைமையி னின்ற தன்னோன்
இடம்பெறு தவத்தின் மேன்மை
யாவரே இசைக்க வல்லார் 11

[பின்னர் மணவாளக் கோலங்காண அகத்தியன் நல்லூரை வந்தடைந்தான் எனல்]

512 திங்களஞ் சடிலத் தெங்கோன்
சிற்பரை தன்னை வேட்ட
மங்கள ரூபங் காணும்
வாஞ்சையுள் ளத்தின் மல்க
பொங்குவா ரிதியை வாரி
புனிதவாய் மடுத்தோன் வாச
பங்கயத் தடாகஞ் சூழ்ந்த
பரமன்நல் லூரில் வந்தான் 12

---

510 பிரசம் - தேனிறால். முளரியான் - பிரமன். மால் - பெரிய. விந்தம் - விந்தியமலை.

511 குடங்கை - குழிந்த அகங்கை. நிலைமையின் நின்றது - சமமாக நின்றது.

512 சடிலம் - சடாமுடி. சிற்பரை - பார்வதி. வாஞ்சை - அவா. வாரிதி - கடல். மடுத்தோன் - உண்டவன்.

[இறைவன் இமயவல்லியோடு
மணவாளக் கோலங்காட்டியருளினுன் எனல்]

513 வந்தவன் பிரமதீர்த்த
வாவியின் மூழ்கி யன்பாற்
சுந்தர நாதன் பாதம்
தொழுதுபோற் றிசைத்து நிற்ப
இந்துவாழ் சடையி னுனும்
இயற்றமிழ் முனிவன் காண
முந்திய மணக்கோ லத்தை
முறையுளிக் காட்டு கின்றுன் 13

[சிவபெருமான் மணவாளனுக இருந்த தோற்றச் சிறப்பை
விளக்கிக் கூறுதல்]

514 செஞ்சுடர் மவுலி தானே
செழுமணிக் கிரீட மாக
நஞ்சரா வணிக ளெல்லாம்
நகைமணிப் பணியே யாக
விஞ்சுமு மத்தை பூளை
வெள்ளெருக் கிலைய தாமம்
எஞ்சலி லரமந் தாரத்
தேடலர் தொடைய லாக 14

[விண்ணேர் ஆசிகளியம்பத்துந்துமி முழங்கிய காட்சி]

515 பூசுவெண் ணீறு வாசப்
புதுநறுஞ் சுண்ண மாக
வீசுதோ ளுடைக ளெல்லாம்
விலைவரம் பறிதல் செல்லாத்

513 இந்து – சந்திரன் (பிறை) முறையுளி – முறைப்படி.

514 அரா – பாம்பு. பணி – அணிகலன். அரமந்தாரம் – தேவ மந்தார மலர். தொடையல் – மாலை.

தூசுக ளாகத் தேவ
துந்துமி முழங்க விண்ணோர்
ஆசிக ளியம்ப மெய்ந்நூ
லறிஞர்பல் லாண்டு கூற 15

**[ பிரமன் சடங்குகளியற்ற திருமால் குடநீர் வார்க்க இறைவன் தேவியைக் கரம்பற்றிய காட்சி ]**

516 எண்டிசை யுலக மெல்லாம்
இனிதொருங் கீன்று வாசப்
புண்டரி கத்தில் வாழும்
புண்ணியன் சடங்கு காட்டத்
தண்டுள வணிந்த மாயன்
தமனியச் சிரக நன்னீர்
அண்டர்நா யகனின் கைப்போ
தடுத்தனன் நின்று வார்ப்ப 16

**[ இமயவெற்பில் நிகழ்ந்த மணநிகழ்ச்சியோடுகூடிய திருமணக் கோலத்தை அகத்தியன் காணுதல் ]**

517 செம்பொன் மால் வரையின் பாங்கர்
செழித்தகார் மயிலோ வானிற்
பைம்பொனீ டருவி நோற்பாற்
படர்ந்தபைங் கொடியோ வென்ன
விம்பவா யிமைய வல்லி
மேவரு மொருபா லாகத்
தம்பிரா னெதிரே தோன்றித்
தமிழ்முனி காண நின்றான் 17

---

515 நறுஞ்சுண்ணம் - நறிய மணம் வீசும் பொடி. தூசு - பட்டாடை.

516 புண்ணியன் - பிரமன். சடங்கு - மணச் சடங்கு. தண்டுளவு - தண்ணிய துளசி. தமனியச் சிரகம் - பொற்குடம். நன்னீர் - தாரைநீர்.

517 விம்பவாய் - கொவ்வைக் கனிபோன்றவாய். தமிழ்முனி - அகத்தியன்.

[ அகத்தியன் பெருங்களிகூர்ந்து போற்றி வணங்குதல் ]

518 நிற்றலுங் கும்ப யோனி
நேசமுற் றிருந்து மல்க
கற்றையஞ் சடிலன் பாத
கமலங்கள் முடிமேற் கொண்டு
முற்றுபே ரன்பு தன்னால்
முறையுளிப் பழிச்சிக் கண்கள்
பெற்றதற் கின்று பேறு
பெற்றனென் எனப்பூ ரித்தான் 18

[ இறைவன் அகத்தியனைநோக்கி வேண்டிய வரங்களைக்கேள் எனப் பணித்தல் ]

519 பூரித்த முனியை நோக்கிப்
புகலுநல் வரங்க ளெல்லாம்
வாரித்தா ரணியோர் போற்ற
வழங்குது முனக்கின் றென்ன
வேரித்தா மரைத்தாள் போற்றி
மெய்த்தபோ தனனும் நின்பாற்
பாரித்த வன்பொன் றல்லாற்
பகர்வது பிறிதொன் றுண்டோ 19

[ அகத்தியன் வரங்கேட்டல் ]

520 அத்தகைத் தேனு மைய
அடியனேன் காணத் தோன்றும்
இத்தகைக் கோலத் தோடும்
என்றுமீங் குறைதல் வேண்டும்

---

518 கும்பயோனி – அகத்தியன். பழிச்சி – போற்றி வழிபட்டு.

519 வேரி – தேன். பாரித்த – பெருகிய. பகர்வது – வரமாகக் கேட்பது.

சித்தமின் புறவிவ் வெற்புந்
தென்கயி லாய மென்ன
வித்தக வேண்டு மிவ்வூர்
வியன்காசி யெனவும் வேண்டும் 20

[ இவ்வூர் சுந்தரபுரமென வழங்க வேண்டுமென அகத்தியன் வேண்டுதல் ]

521 வந்துநீ தமிய னேற்கு
மணவாளக் கோலங் காட்டி
அந்தமி லாத வின்பம்
அளித்தலா லிந்த மூதூர்
சுந்தர புரமென் றூழித்
தொல்புவி யோர்க ளெல்லாம்
சந்திர மவுலி யெந்தாய்
சாற்றுதல் செயவும் வேண்டும் 21

[ இறைவன் சுந்தரநாதன் என்னும் திருநாமத்தோடு விளங்க வேண்டுமெனக் கேட்டலும் இறைவன் அவ்வாறேயருளுதலும் ]

522 தோன்றலே யுமது நாமம்
சுந்தர நாத னென்ன
மூன்றுபே ருலகத் தோரும்
மொழிந்திடல் வேண்டு மென்ன
நான்றசெஞ் சடையி னோனும்
நன்றென வனைத்தும் நல்கி
ஊன்றுமவ் விலிங்கத் தூடே
உகந்தினி துறைந்தா னன்றே 22

---

520 இவ்வெற்பு – சுந்தரகிரி. இவ்வூர் – நல்லூர்.

521 ஆழி – கடல். சாற்றுதல் – கூறுதல்.

522 நான்ற – தாழ்ந்த. உகந்து – மகிழ்ந்து.

[ இச்சருக்கம் கேட்பார் எய்தும் பலன் கூறல் ]

523 குறுமுனி யென்று கூறும்
கோதிலா நெடுந்த வத்தோன்
மறுவிலா தரவு தன்னால்
வயங்குமந் நல்லூர் தன்னில்
சிறிதுநாள் வைகிப் பின்னர்
தென்வரை புகுந்தா னிந்த
உறுதிகூர் காதை கேட்டோர்
உயர்மணம் பொருந்தி வாழ்வார் 23

அகத்தியர்க்கு மணவாளக்கோலங் காட்டின சருக்கம் முற்றும்.

523 குறுமுனி - அகத்தியன். மறுவிலா - குற்றமில்லாத. ஆதரவு - அன்பு.

பத்தாவது

# சத்தசாகரம் வரவழைத்த சருக்கம்

[ குந்தியின் பொருட்டு இறைவன் ஏழு கடல்களையும் பிரமதீர்த்தத்துள் வரவழைத்த வரலாற்றை முனிவர்கள் சூத முனிவரிடம் கூறுமாறு கேட்டல் ]

( *கலித்துறை* )

524 பரவை யேழையும் பாங்குறு
குந்திதன் பொருட்டாற்
பிரமதீர்த்தத்துள் பிஞ்ஞகன்
அழைத்தருள் பெற்றி
உரைசெய் வாயென உறுதவ
ரோதலுஞ் சூதன்
அரவு பூண்டவ னருளினாற்
புகலுதற் கமைந்தான்

[ குந்திதேவி பாண்டு மனைவி எனப் பாண்டுவின் சிறப்புக் கூறல் ]

525 தூண்டு வாம்பரித் தேரினன்
றுன்னலர் மகுடந்
தீண்ட லாற்றமும் பிருந்திடும்
செய்யபொற் கழலான்

---

524 பரவை – கடல், குந்தி – பாண்டுவின் மனைவி, பிஞ்ஞகன் – சிவ பெருமான், உறுதவர் – மிக்கதவமுடைய முனிவர்கள், அரவு பூண்டவன் – பாம்பை அணியாகப் பூண்டுள்ள இறைவன், அமைந்தான் – சொல்லுவதற்கு உடன்பட்டான்,

சப்தசாகரம் – ஏழுகடல்

நீண்ட கோட்டுடைக் குஞ்சரக்
காக்கொரு நிருபன்
பாண்டு, மற்றவன் பாரி, யப்
பதுமையே யனையாள் 2

[ குந்தியின் பண்பு நலம் கூறல் ]

526 தரும ஞாதிய வைவரைப்
பயந்திடுந் தையல்
உரிமை பூண்டுயர் கற்பினல்
அருந்ததி யொப்பாள்
இருநி லத்துள மடந்தையர்
திலகமென் றேத்தும்
பெருமை மிக்குளாள் குந்தியென்
றொருபெயர் பெற்றாள் 3

[ குந்தி தவுமிய முனிவரிடத்து வருதல் ]

527 பெண்ண லங்கனிந் தொழுகுமப்
பெய்வளை யொருநாள்
தண்ணந் தாமரை யானிகர்
தவுமியற் சார்ந்து
வண்ண மாமலர்ப் பதயுகம்
மரபினல் வணங்கி
அண்ண லே! யெனத் தன்குறை
கூறுதற் கமைந்தாள் 4

---

525 வாம்பரி – தாவிச்செல்லும் குதிரைகள். துன்னலர் – பகையரசர்கள் நீண்டலால் – வணங்குங்காற் படுதலால், தழும்பு – வடு குஞ்சரக்கா – இந்திரப்பிரத்தம். பாரி – மனைவி, பதுமை – இலக்குமி.

526 ஆதியஐவர் – பஞ்சபாண்டவர். பயந்திடும் – பெற்ற.

527 பெய்வளை – குந்தி. தாமரையான் – பிரமன், நிகர் – ஒத்த. பதயுகம் – இணையடிகள்.

[ குந்தி தவுமிய முனிவரிடத்துத் தான் கன்னியாக இருந்தபொழுது நேர்ந்த குறையைக் கூற விழைதல் ]

528 மந்தி ரத்தொகை யாவையும்
அறங்கள்மற் றெவையும்
அந்த மில்லதோர் காதலால்
அளியனுக் குரைத்தாய்
எந்தை! யாங்கது கேட்டியான்
உய்ந்தன னிருந்தேன்
சிந்தை யீருமாற் கன்னியிற்
புரிந்ததோர் தீமை 5

[ இளமையில் தான் துருவாசரிடம் மந்திரம் பெற்றமையைக் குந்தி கூறுதல் ]

529 அனைய தீமைமற் றியாதென
வினவுதி யாயின்
முனைவ கேண்மதி முன்னம்யான்
புரிந்தமா தவத்தாற்
றுனிவி லாதவோர் தூய்த்தவன்
அருளினாற் றோமில்
வனைக ருங்கழல் மகப்பெறு
மந்திரம் பெற்றேன் 6

[பெற்ற மந்திரத்தின் பயனையறியப் பேதைமையால் சூரியனை நோக்கி மந்திரத்தைச் செபித்தமை கூறல் ]

530 பெற்ற பின்னரென் பேதைமை
தூண்டலு மந்த
அற்ற மின்றிய மத்திரப்
பயனையாங் கறிவான்

---

528 அளியன் – அருளத்தக்கவள், ஈருமால் – அறுக்குமால், கன்னி – பேதைப் பருவம்.

529 வினவுதியாயின் – கேட்பாயெனின். முனைவ – தலைவனே, துனிவு – வெறுப்பு, தூய்த்தவன் – தூய தவமுடைய முனிவன் (துருவாசன்) தோமில் – குற்றமில்லாத, வனை – அழகு.

உற்ற கன்னியாம் பருவத்தி
லுதயனை நோக்கி
மற்றும் மந்திரத் தொருமனு
மதித்தனன் மன்னோ 7

[கதிரவன் தனக்கொரு கர்ப்பத்தைத் தரத் தான் காதினால் அம்மகவை உயிர்த்தமை கூறல்]

531 பேதை யேன்மதித் தெண்ணலும்
பிறங்கொளி வெய்யோன்
சோதி மீக்கொளத் துணைவில்வந்
தடுத்தன னாக
ஏத மில்லதோர் கருப்பமாங்
செய்தலு மினைவேன்
காதி னாலொரு மகவினைக்
காண்வர வுயிர்த்தேன் 8

[கன்னிமையழிந்ததற்கஞ்சி அம்மகவை நீரில் வைத்துச் செல்ல விடுத்ததனைக் கூறல்]

532 உயிர்த்த பாலனை யோம்புத
லிகந்துறு தவர்போற்
செயிர்த்த நோக்கமும் நேசமும்
சிந்தனை கவற்ற

---

530 பேதைமை - அறியாமை, அற்றம் - நீக்கம், அறிவான் - சோதித் தறியும் பொருட்டு, உதயன் - சூரியன், ஒருமனு - ஒருமந்திரம், மதித்தனன் - செபித்தேன்.

531 எண்ணலும் - உருவேற்றியபோது, வெய்யோன் - கதிரவன், துணைவில் - விரைவாக, ஏதம் - குற்றம், இனைவேன் - துன்புறுவேனாய யான், மகவினைக் - குழந்தையை ( கர்ணன் ) உயிர்த்தேன் - ஈன்றேன்.

அயிர்த்து மாநிலம் இஃதிறும்
பூதென, வாழ்நீர்க்
கயத்தி லிட்டனன் கன்னியுங்
கட்டழிந் தனளுல் 9

[ அந்தச்செயல் குற்றமென்று என்மனம் வருந்துதலால்
அதற்கு உய்தி கூறுக எனவேண்டுதல் ]

533 அரும்பெ றற்சிறு மதலையை
யாற்றிலுய்த் ததற்கும்
திருந்து கன்னிமை கலங்கிய
தீமைக்கு முள்ளம்
வருந்து கின்றதால் மற்றதற்
குய்திநீ மதித்துப்
பொருந்த வோதுதி புகலுனக்
கென்றனள் புகன்ருள் 10

[ அது முடிந்துபோன நிகழ்ச்சி எனினும் உலகமுய்யும்
பொருட்டுத்தான் கூறுவதனைக்கேள் எனத்
தவமியமுனிவர் கூறல் ]

534 குந்தி யித்திறங் கூறலும்
குரவனும் நோக்கி
வந்த தீவினைக் கிரங்கினை
மற்றஃகு தின்றே

---

532 இகந்து – நீங்கி, உறுதவர்போல் – பெறுதவர்போல, செயிர்த்த – சினந்த, கவற்ற – வருத்த, அயிர்த்து – ஐயமுற்று, கயம் – நீர் (ஈண்டு ஆற்றைக் குறித்தது) கன்னியும் – கன்னித்தன்மையும், கட்டு – உறுதி.

533 மதலை – குழந்தை, உய்தி – பிராயச்சித்தம், மதித்து – எண்ணி, புகலுனக்கு – உனக்கே அடைக்கலம், புகன்ருள் – வேண்டிக் கூறினுள்.

அந்த மாயினு தாயினும்
அகிலமு முய்யச்
சிந்தை செய்திது செப்புதுங்
கேண்மதி யென்றான் 11

[ பாவங்களை எளிதிற்போக்கவல்லது தீர்த்த யாத்திரை புரிதல் எனல் ]

535 வேத மேமுதல் நூல்களில்
விளம்புதல் புரிந்த
ஏத மில்லன புண்ணியம்
எண்ணிலவ் வவற்றுள்
மாதராய் ! எளி தாய்ப்பயன்
வல்விரைந் தளிக்கும்
நீதி பெற்றது தீர்த்தயாத்
திரையென்பர் நெறியோர் 12

[ அதனால் நீ உன் மக்களிடம் அனுமதிபெற்று, என்தனயனோடு தீர்த்தயாத்திரைக்குச் செல்களன முனிவர் கூறுதல் ]

536 அன்ன தாகிய தீர்த்தயாத்
திரைசெல்வா னன்பான்
முன்னம் நீயருள் மைந்தரா
லனுமதி முற்றிப்
பொன்னை யன்னநம் புதல்வனோ
டேகுதி கடிதின்
என்ன வோதினன் அவளுமாங்
கதற்கிசைந் தெழுந்தாள் 13

---

584 குரவன் – சவுமிய முனிவன், இன்றே – இப்பொழுதே, அந்த மாயினது – நீங்கிவிட்டது, கேண்மதி – கேட்பாயாக.

535 நீதி – நியதி, நெறியோர் – தவ ஒழுக்கமுடைய சான்றோர்.

586 செல்வான் – செல்லும் பொருட்டு, மைந்தரால் – நின்மைந்தரிடத்து. பொன் – வியாழ முனிவன், கடிதின் – விரைவாக.

[மக்களிடம் அனுமதிபெற்று, குருபுத்திரனோடும் தன்தோழியரோடும் குந்தி தீர்த்தயாத்திரைக்குப் புறப்படல்]

537 எழுந்து குந்தியும் தவுமியன்
இணையடி யிறைஞ்சித்
தொழுந்த கைக்குலத் தோகையர்
தம்மொடுந் துவன்றி
அழுந்து காதல்கூர் மக்கள
தனுமதி யடைந்து
செழுந்த வத்தினேன் அரும்பெறல்
மகவொடுஞ் செல்வாள் 14

[குந்தி யாத்ராதானம் முதலிய புரிந்து புறப்படல்]

538 குரவன் மைந்தனுற் கொள்கையின்
வழாநிலை நோக்கித்
திரமு றுந்திறம் சங்கற்பஞ்
செய்தன ளாகி
இரவ லர்க்கும்அந் தணர்க்கும்
வேண்டுவ ஈந்து
பரமன் சேவடி போற்றுவான்
பார்மிசை நடந்தாள் 15

[குந்தி கங்கைமுதலாய தீர்த்தங்களாடி யமுனை வந்தடைதல்]

539 கங்கை வந்திழி கிரித்துவா
ரந்தனைக் கண்ணுற்
றங்கண் மாநிலத் தமுதன்ன
வன்னதி லாடிப்

537 தோகையர் – தோழியர், துவன்றி – குழுமி, தவத்தினேன் – தவுமிய முனிவன், மகவு - மகன்.

538 குரவன் – ஆசிரியன் (ஈண்டுத் தவுமிய முனிவரை உணர்த்திற்று திரம் – (ஸ்திரம்) உறுதி, சங்கற்பம் – உறுதி மேற்கொள்ளல்.

பொங்கு காதலாற் ருனங்கள்
பற்பல புரிந்து
தங்கு லக்குர வன்றெடும்
யமுனையைச் சார்ந்தாள். 16

[அதன்கண் ஆடி நைமிசாரண்யம் முதலாய இடங்களைக் கண்டு செல்லுதல்]

540 சார்ந்து மற்றதின் ... ... ... ...
சந்திர பாகை
சேர்ந்த திற்படிந் தின்னன
தீர்த்தநீர்த் தோய்ந்தே
ஈர்ந்தண் நைமிசம் வெதிரிகாச்
சிரமுத லவையும்
கூர்ந்த வன்பினுல் குறிக்கொண்டு
வணங்குதல் புரிந்தே. 17

[வட மதுரை காசி முதலிய தலங்களுக்குச் சென்று இறைவனை வணங்கி வருதல்]

541 அழிவி லாவட மதுரை சோ
மேச்சுரம் அவந்தி
தொழுது மற்றவள் தூயவண்
காசியை வணங்கி
ஒழுகு நீள்சடை யும்பர்கோ
னுவந்துவீற் றிருக்கும்
பழைய வான்பதி பற்பல
இனையன பணிந்து 18

---

539 கிரித்துவாரம் – ஹரித்வாரம் என்னும் தலம், தானம் – கொடை, யமுனை – யமுனை நதி.

540 சந்திரபாகை – பிரயாகை, வெதிரிகாச்சிரம் – பதரிகாச்சிரமம் என்னும் தலம்.

541 உம்பர்கோன் – சிவபிரான், வான்பதி – உயர்ந்த தலங்கள்.

[ ஸ்ரீ சயிலம் பொன்முகரி காளத்தி முதலாய தலங்களைக் கண்டு வழிபட்டு வருதல் ]

542 காணிற் காணருஞ் செல்கதி
யுதவுசீ சயிலத்
தாணிப் பொன்னினைக் கைதொழு
தவ்வயின் நீங்கி
மாணிக் கத்துடன் வைரமும்
வரன்றுபொன் முகரி
பேணிக் காளத்தி மலையினை
வலம் வந்து பெயர்ந்தே. 19

[ திருவண்ணாமலை காஞ்சி முதலாயவற்றைத் தொழுது சிதம்பரம் அடைந்து மகிழ்தல் ]

543 அருண மால்வரை கைதொழு
தாதர வதனால்
இருநிலந்தொழு காஞ்சிமா
நகர்தனை யிறைஞ்சிப்
பொருவி லாமுது குன்றினைச்
சூழ்வந்து போற்றி
யொருவ னாடுபொன் னம்பலம்
நோக்கியுள் ளுவந்தே. 20

[ பின்னர்ச் சீர்காழி, மாயூரம், வலஞ்சுழி முதலிய தலங்களை வழிபட்டு வருதல் ]

544 காழி மாநகர் பணிந்துகா
விரிப்புன லாடி
வீழி வாயுமை பங்கினன்
விரும்புமா யூரம்

---

542 காணின் - ஆராய்ந்தால், காணரும் - காணுதற்கரிய, கதி - வீடு பேறு. ஆணிப்பொன் இறைவனை உணர்த்திற்று, அவ்வயின் - அவ்விடத்தின், வரன்றும் - வாரிச்செல்லும், பொன்முகரி - காளத்தியிற் செல்லும் புண்ணியநதி,

543 அருணமால் வரை - திருவண்ணாமலை, முதுகுன்று - விருத்தாசலம், பொன்னம்பலம் - சிதம்பரம்.

வாழி மாதவர் பயிலிடை
மருதுடன் குடந்தை
பாழி மாமதில் வலஞ்சுழி
யிணையன பணிந்தே. 21

[ இறுதியில் நல்லூரை யடைந்து ஆங்குள்ள தீர்த்தங்களில் ஆடி மூன்று நாள் தங்கியிருத்தல் ]

545 நங்கை குந்தி, நல் லூரைவந்
தெய்தினள் வணங்கி
அங்க னுள்ளதொல் வளங்கள்கண்
டற்புத மென்னுப்
பொங்கு தீர்த்தமங் குள்ளவை
யெவையும் போய் மூழ்கிக்
கங்குல் மூன்றவண் வதிந்தனள்
வதியுமக் காலை. 22

[ அப்பொழுது உரோமசமுனிவர் அங்கு வருதல் ]

546 மறுவி லாமதி யனையவாண்
முகத்தினன் மறைதே
ரறிவி னுனர னஞ்செழுத்
தோதிய வகத்தோன்
பொறையும் வாய்மையும் புகழ்மையும்
சீலமும் பூண்டோன்
உறுத போதனன் உரோமசன்
வந்தவ னுற்றான். 23

---

544 காழி – சீர்காழி, வீழி – திருவீழிமிழலை என்னும் தலம், வாய் – இடத்து, பாழி – வலிமை, வலஞ்சுழி – திருவலஞ்சுழி என்னும் தலம்.

545 கங்குல் – பொழுது (நாளை உணர்த்திற்று), அவண் – அவ்விடத்து, வதிந்தனள் – தங்கியிருந்தாள்.

546 மறுவிலாமதி – களங்கமில்லாத நிலா, அஞ்செழுத்து – பஞ்சாக்கரம் சீலம் – நல் ஒழுக்கம், உறு – மிக்க.

[ உரோமச முனிவரிடம் குந்தி தன் நிலைமையைக் கூறுதல் ]

547 உற்ற மாதவத் தொருவனை
யெதிர்கொடுள் ளுவந்து
பெற்றி கூர்தரு பாத்திய
முதலிய பேணி
அற்ற மின்றிய வன்பினு
லடிமல ரிறைஞ்சி
நற்ற வம்பயில் குந்தியும்
இன்னன நவின்றாள். 24

548 கன்னி யம்பருவத்தினிற்
புரிந்தவக் கரிசு
தன்னை யான்றண வுந்திறந்
தவுமியர்ச் சார்ந்து
பொன்னஞ் சேவடி போற்றினன்
போற்றலு மன்னேன்
என்னை யேகென்றான் தீர்த்தயாத்
திரை, தனக்குயானும் 25

[ இறுதியில் நல்லூர் வந்தடைந்த நிலையைக் கூறுதல் ]

549 குரவன் கூறிய பரிசினை
யுளத்திடைக் குறித்துத்
திரைசெய் தீர்த்தங்கள் பற்பல
சென்றுசென் றாடி
வரைகொள் வில்லிவாழ் தானங்கள்
அனைத்தும்போய் வணங்கி
உரைசி றந்தநல் லூரிதை
யுற்றனன் உரவோய்! 26

547 பாத்தியம் - பாத பூசை, இறைஞ்சி - வாழ்த்தி வணங்கி, நவின்றாள் - கூறினாள்.

548 கரிசு - குற்றம், தணவும் - நீக்கும், திறம் - உபாயம்.

549 வரைகொள்வில்லி - பொன்மலையை வில்லாகக் கொண்ட சிவபெருமான், உரை சிறந்த - புகழ்மிக்க, பரிசினை - வழியினை, திரை - அலை.

[ முன்செய்த தவத்தால் தங்களைக் கண்டேன் என
உரோமசரிடம் குந்தி புகழ்ந்து கூறுதல் ]

550 சிந்தை யின்புறத் திர்த்தயாத்
திரைப்பய னென்ன
எந்தை யின்றுனைக் கண்டனன்
இன்னல்தீர்ந் துய்ந்தேன்
அந்த மின்றிய போகமும்
வீடும்நே ரடைதற்
குந்து சாதனம் பெரியர்சார்
பன்றிவே றுளதோ? 27

[உரோமச முனிவர் உளமகிழ்ந்து அவட்கு உய்தி கூறல் ]

551 என்று மீளவும் இணையடித்
தாமரை யிறைஞ்சி
நின்று தன்னிலை முழுவதும்
ஆங்கவள் நிகழ்த்த
நன்று நன்றென உரோமசன்
வியந்துபின் நயப்பால்
ஒன்று கூறுவன் கேண்மதி
நீயென வுரைப்பான் 28

[ நாளை மாசிமாமக நாளில் கடலாடினுல் உன் பாவங்கள்
தீருமென முனிவர் கூறுதல் ]

552 நாளை மாசிமா மகமந்த
நற்றின மதனில்
வாளை பாய்கட லாடினர்
பலன்வரம் பின்றாற்

550. யாத்திரைப் பயன் - யாத்திரை புரிந்ததனுல் எய்திய பலன், இன்னல் - துன்பம், அந்தம் - முடிவு, இன்றிய - இல்லாத, சாதனம் - பற்றுக்கோடு, பெரியர்சார்பு - பெரியாரைத் துணைக் கொள்ளல்,

551. தன்னிலை - தான் செய்த குற்றமும், தீர்த்த யாத்திரை புரிதலையும் நயப்பு - விருப்பு.

ருளையா வினைக் குறித்துநீ
தாமதித் திடாதவ்
வேளை யெய்துபு வேலையின்
மூழ்கென விதித்தான் 29

[ உரோசமன் பின்னர் அங்கிருந்து புறப்பட்டுப் போதல் ]

553 விதித்து மாதுநீ தீர்த்தயாத்
திரைசெலும் விழைவான்
மதித்திவ் வாறுநா முரைத்தன
மென்றுமா தவத்தோன்
கொதித்த வாரழல் விடத்தினைக்
குலமணி பொருவப்
பதித்த கண்டனை யன்புடன்
பணிந்தவன் சென்றான் 30

[ கடலாடுதற்குச் செல்லப் பொழுதின்மை நினைந்து குந்தி வருந்தி இறைவனிடம் சென்று வணங்குதல் ]

554 சென்ற பின்னவள் தேசிகன்
மகனொடும் உசாவி
இன்று நீள்கட லாடுதற்
கோடுத லரிதாற்

---

552 மகம் – மக நட்சத்திரம், பலன் – புண்ணியம், வரம்பு – அளவு, தாளையாவினை (தாள் + அயா) கால்கள் நடத்தலால் வரும் வருத்தத்தினை (அயா – வருத்தம்) வேளை – பொழுது, எய்துபு – அடைந்து, வேலை – கடல், விதித்தான் – கட்டளையிட்டுக் கூறினான்.

553 மதித்து – உயர்வாக எண்ணி, ஆரழல் – நிறைந்த ஒளி, குலமணி – நீலமணி, பொருவ – ஒப்ப, பதித்தகண்டன் – சிவபெருமான்.

பொன்று சிந்தையேன் என்செய்வே
னென நனி புலப்பிக்
கன்று மானுகள் கையன்முன்
நின்று கண் கலுழ்ந்தாள். 31

[ இறைவன் அவளுக்கிரங்கி ஏழு கடலையும் இப்பிரம தீர்த்தத்தினுள் அழைப்பேன் என அருளுதல் ]

555 தோகை யன்னவள் கலுழ்தலும்
சுந்தர நாதர்
பாகு நேர்மொழி யாய்! பரி
யேலெனப் பகரா
வோகை யாற்கட லேழையும்
ஒருகணத் தழைப்பேம்
ஏக மாகவிப் பிரமதீர்த்
தத்திடை யென்றார். 32

[ குந்தி பேருவகையுற்று இறைவனைப் போற்றி வணங்குதல் ]

556 திங்கள் மோலியான் இவ்வணஞ்
செப்பலும் மகிழ்ந்து
மங்கை, எம்பிரான் மலரடி
யுகளங்கள் வணங்கி
இங்கு நீயெனை யொருபொரு
ளாகவே யெண்ணி
அங்க ணயக! வருளினை
யளியனு முய்ந்தேன். 33

---

554 தேசிகன் - ஆசிரியனாகிய தவுமிய முனிவன், உசாவி - ஆராய்ந்து, அரிது - இயலாது, கன்றுமானுகள் - மான் கன்று விளங்கும், கையன் - சிவபிரான்.

555 கலிழ்தல் - கலங்கி அழுதல், பாகு - கற்கண்டுப்பாகு, பரியேல் - துன்புறவேண்டா, பகரா - கூறி, ஓகை - உவப்பு, ஏகமாக - ஒன்றாக.

556 மோலியான் - முடியினன், உகளம் - இணை, அங்கண் - நெற்றிக் கண், அளியனும் - கருணை செய்யத்தக்கயானும்.

[ இறைவன் கடல் ஏழையும் பிரம தீர்த்தத்துள் வர எண்ணுதல் ]

557 என்ன வாங்கவள் பற்பல
திறனெடுத் தியம்பிச்
சென்னி மேற்கரங் குவித்தயல்
நிற்றலுஞ் செறிந்த
வன்னி கூவிளை முடித்தவன்
வாரியே ழிணையும்
முன்னம் மேவிய வாவியின்
அணையமுன் னினனுல். 34

[ ஏழு கடலும் திசை யானைகளின் செவிகள் செவிடுபடக் கனைத்துப் பொங்கிப் புறப்படல் ]

558 எந்தை எம்பிரான் வருகெனப்
பணித்தலும் எறிநீர்ச்
சிந்து வேழுமெண் டிசைக்கரி
செவிடுபட் டழுங்க
முந்து நீடொலி முழக்கொடு
மின்மணி முகிழ்ப்பப்
பந்தி பந்திவெண் டிரைதிரை
வரையெனப் பரப்பி 35

[ கடல் ஏழும் பிரம தீர்த்தத்துள் வந்து புகுதல் ]

559 சங்க ராசியும் சலஞ்சல
ராசியும் தழங்க
எங்கும் நீள்சுறுத் திமிங்கில
கிலமுடன் எற்றி

---

557 திறன் - அருட்டிறன், சென்னி - தலை, வாரி - கடல், மேவிய - பொருந்திய, வாவி - பிரம தீர்த்தத்தடம், அணைய - வந்து பொருந்த, முன்னினன் - கருதினன்.

558 பணித்தலும் - ஆணையிட்டவுடன், சிந்து - கடல், கரி - யானை, அழுங்க - வருந்த, மணி - முத்து, பந்தி - வரிசை, திரை - அலை, வரை - மலை.

அங்கண் மாநில மிஃதிறும்
பூதென வயரப்
பொங்கி நான்முகன் தீர்த்தத்துட்
புகுந்தன வன்றே. 36

[ குந்தியும் குருபுத்திரனும் எழுகடல் புகுந்த பிரமதீர்த்தத்துள் மூழ்கித் தருப்பணம் முதலிய புரிதல் ]

560 புகுத லோடுந்தன் புரோகிதன்
சேயுடன் அவளும்
மிகுதி யாதர வாலந்தத்
தீர்த்தத்தை மேவிப்
பகுதி கூர்தரு சங்கற்பம்
முதலிய பலவும்
தகுதி யாற்செய்து மூழ்கியே
தருப்பணம் புரிந்து 37

[ குந்தி தீர்த்தமாடிய பின் அந்தணர் முதலானோர்க்குத் தானம் புரிதல் ]

561 அந்த ணார்தம் அவாக்கெட
ஆனொரு நூறும்
வெந்த வாடகப் பசும்பொனோ
ரயுதமும் வீசிச்
சுந்த ரேசர்க்குச் சிறப்பெடுத்
தணிபல தொகுத்திட்
டெந்தை சுந்தரத் தாண்டவர்க்
குவந்தன வீந்தே. 38

---

559 ராசி – கூட்டம், சலஞ்சலம் – சங்குகளுள் உயர்ந்த வகை, தழங்க – முழங்க, கிலம் – (சிறுமை) குட்டி, இறும்பூது – வியப்பு, அயர – நினைக்க, அன்றே – அப்பொழுதே (அசையுமாம்).

560 புரோகிதன் – ஆசான், ஈண்டுத் தவுமிய முனிவன், சேய் – மகன், ஆதரவு – அன்பு, தருப்பணம் – மந்திரம் நிறைத்தல்.

561 அவாக்கெட – ஆசை நீங்க, ஆன் – பசு, ஆடகம் – பொன்னுள் உயர்ந்த வகை, அயுதம் – பதினாயிரம், வீசி – வழங்கி, சிறப்பு – விழா, சிறந்த பூசை.

[ குந்தி இறைவனிடம் தன் குறை நீங்கவேண்டுமென
இறைவனிடம் வேண்டிப் பூசித்தல் ]

562 மைந்த ரைவர்க்கும் வாழ்வுமென்
மேல்வரும் பரிசு
முந்து தன்னுடை வல்வினை
தீர்ந்திடு முறையும்
எந்தை நல்கென வற்றைநாள்
ஆங்கவ ளிருந்து
புந்தி யின்புறப் பூசனை
யாவையும் பொருந்தி 39

[ பின்னர் பசுபதீச்சரம் மறைக்காடு முதலாய தலங்களுக்குச்
சென்று சேர்தல் ]

563 பரம்ப ரன்றனை விடைகொண்டு
பசுபதீச் சுரம்போந்
தரந்தை தீர்த்திடு மண்ணல்தாள்
வணங்கின ளாகி
நிரந்த தானங்கள் ஏனவும்
நெறியினு லிறைஞ்சித்
திருந்து சோலைசூழ் மறைவனந்
தனைவந்து சேர்ந்தாள். 40

[ குந்தி இவ்வாறு பல தலங்களையும் வழிபட்டுப் பின்
தன் பதி சென்றடைதல் ]

564 மாத ராள்மணி கன்னிகை
படிந்துமா சிகந்த
வேத பாரகர்க் கிருநிதி
பற்பல வீசிச்

---

562 ஐவர் – பாண்டவ புத்திரர், பரிசு – தன்மை, புந்தி – சிந்தை, பொருந்தி – செய்து.

563 அரந்தை – துன்பம், நிரந்த – முறையான, தானம் – திருத்தலங்கள், மறைவனம் – வேதாரணியம்,

சோதி வானவன் றுணையடி
யிறைஞ்சிமீண் டவரும்
காதல் மீக்கொளத் தன்பதி
யடைந்துளங் களித்தாள். 41

[ அது முதல் பிரமதீர்த்தம் சத்தசாகரமென வழங்கலாயிற்
றெனலும் அதன்கண் மூழ்குவோ ரெய்தும் பயனும் கூறுதல் ]

565 அந்த நாள்முதல் பிரமதீர்த்
தத்தினை யகிலம்
உந்து காதலாற் சத்தசா
கரமென வோதும்
முந்து மாசிமா மகத்தினில்
முடிமிசை அறுகு
தந்து காலையில் மூழ்கினர்
தீவினை தவிர்வார். 42

[ இத்தீர்த்தமாடுவோர் உலகில உள்ள தீர்த்தங்கள் அனைத்திலும்
ஆடிய பலனைப் பெறுவர் எனல் ]

566 உலகி லுள்ளதீர்த் தங்கள்
யாவையு முவப்பால்
நலமி கும்படிப் படிந்தவர்
பலத்தைநண் ணுவரால்
மலரின் மேலவன் வானதி
கொடுநிறைத் தமைத்த
அலகில் மேன்மைசால் பிரமதீர்த்
தத்திற் டுநரே. 43

---

564 மணிகன்னிகை – தீர்த்தத்தின் பெயர், இருநிதி – பெருஞ்செல்வம், தன்பதி – தன்நகர்.

565 அகிலம் – உலகம், அறுகு – அறுகம்புல், தந்து – ஏந்தி, வினை – கர்மம்.

566 படிந்தவர் – மூழ்கினவர், பலம் – புண்ணியப்பயன், நண்ணுவர் – அடைவர், வானதி – ஆகாய கங்கை, ஆடுநர் – மூழ்கினவர்.

**[ இத்தீர்த்தத்தின் பெருமை ஆதிசேடனாலும் அறைதற்கரிது எனல் ]**

567 அரவு பூண்டருள் சுந்தர
நாதனு ரருளும்
பிரம தீர்த்தத்தின் பெருமையும்
பிறைக்கொழுந் தணியும்
ஒருவ னல்லது முனிவீர்காள் !
உள்ளவா றெவரே
கரைகண் டோதுவார் சேடனுங்
கழறுதற் கரிதால். 44

**[ இச்சருக்கம் ஓதுவார் கேட்பார் எய்தும் பயன் கூறல் ]**

568 இனைய காதையை எழுதுநர்
படிக்குநர் என்றும்
நினையும் மேலவர் புவியிடை
நெறியின்வீற் றிருந்து
முனிவிர் ! முக்கணன் அருளினல்
மூதுல கேத்தத்
தனையொப் பாகிய சற்கதி
யடைவது சரதம். 45

[ சத்தசாகரம் வரவழைத்த சருக்கம் முற்றும் ]

---

567 **கரைகண்டு** – எல்லையறிந்து, சேடன் ஆதிசேடன், **கழறுதல்** – கூறுதல்.

568 **வீற்றிருந்து** – புகழோடு விளங்கி, மூதுலகு – தேவருலகு, **சற்கதி** – வீடுபேறு.

பதினோராவது

# சமுத்திரராசன் செப்பேசுரம் பணிந்து மீண்ட சருக்கம்

[ கடலரசன் செப்பேசுரம் பணிந்து மீண்ட வரலாற்றை முனிவர் சூதனிடம் கேட்டல் ]

( கலி விருத்தம் )

569 விரிக டற்கிறை விறுசெப் பேசுரம்
பரவப் போய்வந்த பான்மை விளம்பெனக்
கருணை மாதவர் கட்டுரை செய்தலும்
பொருவில் சூதனும் புந்திசெய் தோதுவான் 1

[ எல்லாத் தலங்களையும் கண்டு வழிபட விரும்பிக் கடலரசன் இறைவனை வேண்டல் ]

570 தம்பி ரானரு ளாலிவண் சார்ந்தனன்
இம்பர் மெய்த்தலம் யாவையும் சேவிப்பான்
நம்ப ! வாசை நலிகின்ற தாலெனப்
பம்பு நீர்க்கடற் பார்த்திபன் கூறினன். 2

[ நீ இவ்வடிவிற் சென்றால் உலகம் சிதையும் என இறைவன் கூறல் ]

571 கூற லோடுங் குழகனும் பார்மிசை
ஏறு தெண்டிரை யெற்றும்நீ யேகிடின்
மாறு மாறும் மகிதலம் யாவையும்
வேறு பட்டொழி யும்மிது மெய்ம்மையால் 3

---

569 இறை - அரசன், பரவ - வழிபட, பான்மை - தன்மை (வரலாறு) பொருவில் - ஒப்பில்லாத, புந்திசெய்து - மனம் விரும்பி.

570 இம்பர் - இவ்வுலகம், தலம் - புண்ணிய தலங்கள், நம்ப ! - இறைவனே !, பம்பு - பொங்கும், பார்த்திபன் - மன்னன்.

571 குழகனும் - இறைவனும், தெண்டிரை - தெளிந்த அலைகள், எற்றும் - வீசும்.

[ பின்னர்ச் செப்பேசுரம் சென்று வழிபட்டால் எல்லாப் பயனும் கிட்டுமென இறைவன் கூறல் ]

572 ஆகை யாற்றலம் யாவும் அடைவுற
ஏகிச் சேவிப்ப வெய்தும் வியன்பலம்
ஓகை கூருஞ்செப் பேசுரம் உற்றுநீ
சோகந் தீரத் தொழுதலு மெய்துமால் 4

[ அவனை உன் ஆற்றலை அங்குச் செலுத்தா வகையில் சென்று மீள்க என இறைவன் பணித்தல் ]

573 அன்ன தன்மையி னாலத் தலத்திடை
நின்ன தாற்ற னிலவா வகைசென்று
மன்னு காதலின் வந்தித்து மீளுதி
என்ன ஈசன் எடுத்துரைத் தானரோ 5

[ கடலரசன் விடை பெற்றுச் செல்லுதல் ]

574 உரைத்த லோடும் ஒலிகடல் வேந்தனும்
நிரைத்த கொன்றையி னாயந் நெறியினாற்
றரைத்த லத்திற் சவுமிய னாகியான்
அருத்தி கூர வடைந்திவண் மீள்வனால். 6

[ இதுவுமது ]

575 என்று மாக்கடல் வேந்தன் இறைவனை
மன்ற வன்பின் வணங்கி விடைகொண்டு
சென்று பச்சிம திக்கிற் குரோசமா
றொன்று மெல்லை யுவந்தன னெய்தியே. 7

---

572 அடைவுற – முழுதுமாக, வியன்பலம் – சிறந்த புண்ணியங்கள், கூரும் – மிகும், எய்தும் – வந்தடையும்.

578 ஆற்றல் – நீரலைவீசி அழிக்கும் வலிமை, மன்னுகாதல் – நிலையான விருப்பம்.

574 கொன்றையினாய் – கொன்றைமாலையணியும் இறைவனே! சவுமியன் – தூயவன், அழகன், அருத்தி – அவா, கூர – மிக,

575 மன்ற – உறுதியான, பச்சிமதிக்கு – மேற்குத்திசை, குரோசம் – கூப்பிடுதூரம், ஆறொன்று – ஏழு, எல்லை – நீட்டல் அளவு' எய்தி – அடைந்து.

[ செப்பேசுரத்திற்கு அண்மையில் கடலரசன் ஒரு மேடையமைத்தல் ]

576 அன்பு கூரவ னேச்சுரஞ் சேவியா
என்பு பூணு மிறைவர்க் கணித்தெனப்
பொன்பெய் குன்றம தொப்பப் புளினமொன்
றின்பு கூர வினிதி னியற்றினன். 8

[ அந்த மேடை புனிதத் தீர்த்தப் புனல்போல் பொலிதல் ]

577 வைகல் தோறுமவ் வாலுகக் குன்றம்வண்
செய்கை யாடவர் சீர்த்தியொப் பாகவே
மெய் குலாவும் விழுத்தவத் தீர்ம்புனற்
பொய்கை போற்குளிர்ந் தோங்கிப் பொலியுமால். 9

[ இறைவன் கடலரசன் வழிபாட்டிற்கு வந்து அவனமைத்த லிங்கத்திற்குள் எழுந்தருளுதல் ]

578 தெண்டி ரைக்கடல் மன்னன்செப் பேசுரத்
தண்டர் வாணனை யன்பி னிறைஞ்சியே
தொண்டர் கண்டு தொழச்சுத்தி சங்கங்கள்
மண்டு காதலின் மாலிங்கத் துய்த்தனன். 10

[ இறைவன் கடலரசனுக்கு வேண்டிய வரங்களை யருளல் ]

579 பரவை மன்னவன் பத்திகண் டெம்பிரான்
வரம னைத்தும் மகிழ்ந்தருள் செய்தனன்
உரவு நீர்க்கடல் வேந்தனும் ஓடையாய்
விரவி நாற்றிசைக் கண்ணும் விளங்கினன். 11

---

576 சேவியா – வணங்கி, புளினம் – மணல்மேடு.

577 வைகல் – நாள், வாலுகம் – வெண் மணல், வண்செய்கை – கொடைச்செயல், சீர்த்தி – புகழ், ஈர்ம்புனல் – குளிர்ந்ததீர்த்தம், சங்கங்கள் – சங்குகள்.

578 மண்டுகாதலின் – நிறைந்த அன்பினால்.

579 பரவை – கடல், உரவு நீர் – வலிமை வாய்ந்த நீர். ஓடை – நீரோடை.

[ கடலரசன் அங்கு வதிந்ததற்கு அடையாளம் உண்டு எனல் ]

580 விளங்கி நாளும் விமலனைச் சேவியாத்
துளங்கு தோடங்கள் யாவும் துடைத்தனன்
உளங்கொ ளக்கடல் உற்றதற் குக்குறி
யளந்து காணில் முனிவிருண் டாகுமால். 12

[ உலகில் உற்பாதங்கள் ஏற்படுங்காலை அச்சிவலிங்கத்தைச் சுற்றிலும் சங்கு முதலியவை தோன்றி விளங்குமெனல் ]

581 அவனி மீதிலுற் பாத மடுக்குநாள்
நவையில் சுத்தி கணந்துக ளாதிய
தவறில் செய்கைத் தபோதனிர் ! கேளுமின்
சிவலிங் கத்திடைச் சேர்ந்திடு மென்பரால். 13

[ கடலரசன் இறைவனைப் பரவி விடைகொண்டு மீளுதல் ]

582 இத்தி றங்கள் பலவு மியற்றியே
தத்து தெண்டிரைத் தண்கடல் வேந்தனும்
மத்த வேணி வரதனை வந்தியா
வித்த கத்தின் விடைகொண்டு மீண்டரோ 14

[ இதுவுமது ]

583 சோலை சூழ்தரு சுந்தர வெற்பில்வந்
தால பாரணன் அம்புயத் தாண்மலர்
சீல மோடு பணிந்து செழுமணி
மாலை சூட்டி மகிழ்ந்து விடைகொண்டே 15

---

580 துளங்கு தோடங்கள் – விளங்குங் குற்றங்கள், குறி – அடையாளம்.

581 உற்பாதம் – தீநிமித்தங்கள், நவை – குற்றம், சுத்தி – கும்பிடு கிளிஞ்சில், நந்துகள் – சங்குகள், தபோதனிர் – முனிவர்காள் !

582 மத்தவேணி – ஊமத்தை மலர் விளங்கும் சடையுடைய சிவபெருமான், வித்தகம் – ஞானம்.

583 ஆலபாரணன் – ஆலகாலத்தை உணவாக உண்டவன், அம்புயம் – தாமரை.

[ இதுவுமது ]

584 தடங்க டற்கிறை தாதகி மாலையும்
முடங்கு திங்களும் மூதர வுஞ்செறிந்
தடங்கு வேணி யானரு ளாற்றன
திடங்கொ டெல்லையி னெல்லைசென் றுனரோ. 16

[ இரு பாடல்கள் மாசித்திங்கள் வைகறையில் சத்தசாகரத்தில் மூழ்கிப் பின் ஐயாறடைந்து இறைவனைப் பரவினுர் சிவகணங்களாகி வீற்றிருப்பாரெனல் ]

585 மாசித் திங்களின் வைகறைப் போதினிற்
றேசு லாஞ்சத்த சாகரத் தீர்த்தத்தின்
ஆசை யாற்படிந் தையாற் றமர்ந்தருள்
ஈச னையுச்சிப் போதிற்சென் றேத்தினுர். 17

586 கணங்க ளாகிக் கடவுளர் யாவரும்
வணங்கி யேத்த வனமுலை மாதுமை
அணங்கின் பாகன் அருட்சிவ லோகத்தின்
இணங்கு செல்வமுற் றென்று மிருப்பரால். 18

[ தீர்த்த யாத்திரை புரிய எண்ணுவார்க் கிறைவன் விரைந்தருளுவானெனல் ]

587 தொடங்கு கன்ம மெவைக்குந் துரிசுள
திடங்கொ டீர்த்தங்க ளாடுதற் கெண்ணுவோர்
முடங்க வேயிடை யூறுகள் மூண்டிடா
விடங்கொள் கண்டன் விரைந்தருள் செய்வனுல். 19

---

584 தாதகி – ஆத்திமலர், முடங்கு – வளைவு, ஒல்லை – விரைவு.

585 தேசு – ஒளி, ஐயாறு – திருவையாறு.

586 கணங்கள் – சிவகணங்கள், செல்வம் – முத்திப்பேறு.

587 துரிசுளது – குற்றமுள்ளது, விடங்கொள் கண்டன் சிவபெருமான்,

[ தீர்த்த யாத்திரை மேற்கொள்ள வேண்டுமெனல் ]

588 இன்ன தன்மையி னுற்றீர்த்த யாத்திரை
முன்னி யாரும் முயன்றிட வேண்டுமாற்
பன்ன கந்தனி தாங்குமிப் பாரிடை
யுன்னுங் காலதற் கொப்புமற் றில்லையே. 20

[ எல்லா நீரினும் கங்கை நீர்நலம் பெரிதாகுமெனல் ]

589 ஓடை கூபம் ஒலிபுனல் வாவியின்
ஆடும் புண்ணிய தீர்த்த மதிகமாம்
நீடும் அன்னவை தன்னிலும் நீர்கங்கை
நாடி மூழ்கின் நலம்பெரி தாகுமால். 21

[ மலை, தரு பசு, மந்திரம், மனிதர் இவ்வற்றுள் சிறந்தவை இது எனல் ]

590 வெற்பின் மேரு, விசிட்டத் தருக்களிற்
கற்ப கம், பசு விற்காம தேனு, மெய்ச்
சொற்ப யிற்றுஞ் சுருதியிற் காயத்ரி
மற்பு யத்து மனிதரி னந்தணர். 22

[ பாத்திரம், மலர், தெய்வம் இவற்றுள் சிறந்ததிவெனல் ]

591 வீறு பாத்திரத் தங்கி விசிட்டமாம்
நாறும் போதின் நளினஞ் சிறந்ததாம்
தேறுங் காலையெத் தேவினும் மேலவன்
ஆறு சூடும்நல் லூருறை யாதியே. 23

---

588 முன்னி – கருதி, பன்னகம் – பாம்பு (ஆதிசேடன்), உன்னும் – நினைக்கும்.

589 கூபம் – கிணறு, வாவி – குளம், நாடி – அடைந்து.

590 வெற்பின் – மலைகளுள், விசிட்டம் – மேலானது, தரு – விருட்சம், சுருதி – மந்திரம்.

591 பாத்திரத்துள் அங்கி விசேட மென்றது – பொருளை இடுகின்ற பாத்திரங்களுள் நெருப்பிலிடுதல் தெய்வங்களுக்கு அவிசாகச் சேருதலின் சிறந்ததென்பது கருத்து, நளினம் – தாமரை, தேவு – தெய்வங்கள், ஆறு – கங்கை, ஆதி – இறைவர்.

[ தலங்களில் நல்லூர் உயர்ந்ததெனல் ]

592 நீடும் பாரில் நிலவுந் தலங்களில்
நாடுங் காலையில் நல்லூ ரதிகமாம்
தேடி யந்நகர் சென்று வதிந்திடார்
ஆடல் செய்யும் களேபர மாவரால். 24

[ யாவரும் நல்லூர் சென்று வழிபடல் வேண்டுமெனல் ]

593 எத்தி றத்தும் இயம்புநல் லூரினைப்
புத்தி வேண்டுநர், பொன்றுத லின்றியே
முத்தி வேண்டுநர் மூதறி வாற்சென்று
பத்தி கூரப் பணிந்திடல் வேண்டுமால். 25

[ இச்சருக்கம் கேட்போர் கூறுவோருறும் பலன் கூறல் ]

594 கூறுமிக்கதை கோட்டமி லன்பினுற்
தேறு மாறு தெரிப்பவர் கேட்பவர்
ஆறு சூடிய வண்ண லருளினல்
ஈறி லாவின்ப மெய்தி யிருப்பரே. 26

சமுத்திரராசன் செப்பேசுரம் பணிந்து மீண்ட
சருக்கம் முற்றும்.

---

592 வதிந்திடார் – வாழாதவர், களேபரம் – உறுப்புக்கள் அமைந்த பொம்மை.

593 பொன்றுதல் – அழிதல், பத்தி – விருப்பம்.

594 கோட்டம் – திரிபு, தேறுமாறு – தெளியும் வண்ணம், ஈறிலா – முடிவில்லாத.

பன்னிரண்டாவது

# பிரமதேவர் வரம் பெற்ற சருக்கம்

**[ பிரமதேவன் இறைவன் முடியைக் கண்டதாகப் பொய்யுரைத்துச் சாபம் பெற்றுப் பின் இறைவனைப் பூசித்து வரம் பெற்ற வரலாற்றை முனிவர்கள் கேட்கச் சூதமுனிவர் கூறத் தொடங்குதல் ]**

*( அறுசீர் ஆசிரிய விருத்தம் )*

595 கண்டலம் போது மேனைட்
கரிபொய்த்த தீங்கி னேடு
புண்டரி கத்து மேலோன்
பொய்யுரைத் தவறும் தீர
அண்டர்நா யகனை ஏத்தி
அருச்சனை புரிந்த காதை
ஒண்டவர் வினவச் சூதன்
உள்ளவா றுரைக்க லுற்றான். 1

**[ ஐந்தாவது பிரமன் ஓர் ஊழிமுடிவில் விழித்தெழுந்து நோக்குதல் ]**

596 எங்கணு யகனைப் பூசித்
திராசத சாந்தி பெற்ற
பங்கயத் தவனுக் கைந்தாம்
பரியாயத் துற்ற வேதன்
அங்கண்மா ஞால மாதி
யடுக்கெலா மழிய வெய்தும்
கங்குல்போய் விடிந்த காலை
கண்விழித் தெழுந்து பார்த்தான். 2

---

595 கண்டலம்போது – தாழைமலர், கரி – சான்று (சாட்சி), புண்டரிகத்து மேலோன் – பிரமதேவன், ஒண்டவர் (ஒண் + தவர்) ஒள்ளியமுனிவர்.

596 எங்கணுயகனை – எங்கள் + நாயகனை, சாந்தி – இன்ப அமைதி, ஐந்தாம் பரியாயம் – ஐந்தாவது தலைமுறை, வேதன் – பிரமன். கங்குல் – இருள்.

[ ஊழியில் யாவும் அழிந்து மறைந்தமை கண்ட பிரமன் யாவும் தன் ஆற்றலால் விளைந்ததென இறுமாப்புக் கொள்ளுதல் ]

597 ஆறும்நீள் கடலும் பாரும்
அசலமு முதல வெல்லாம்
மாறுமா றாகித் தத்தம்
வரம்பிகந் தழிந்தொன் றாகி
நீறுநீ றன தன்றி
நின்றதொன் றினையுங் காணான்
வீறுமற் றெனதே யென்றவ்
விரிஞ்சனும் உளத்துட் கொண்டான். 3

[ செருக்குற்று நிற்கும் பிரமனின் முன்னர் திருமால் வந்து நிற்றல் ]

598 கொண்டவன் றருக்கி யாங்குக்
குலவினன் நிற்ற லோடு
வண்டுழாய்த் தொடையல் வேய்ந்த
மழைமுகில் நிகர்ப்ப மாயோன்
தொண்டைவாய் முகங்கண் கைகால்
துளைநெடு நாளம் பூத்த
புண்டரி கப்போ தொப்பப்
பொலிந்தெதிர் தோன்றி நின்றான். 4

[ பிரமன் திருமாலை நீ யார் என வினவ அவன் யான் உன்னை ஈன்றவன் எனக் கூறுதல் ]

599 நிற்றலு மவனை நோக்கி
நிறையிதழ்க் கமலப் புத்தேன்
மற்றெனக் கெதிர்யார் என்ன
மதித்தன னிருந்தே னென்னை

---

597 பாரும் - மண்ணுலகும், அசலமும் - மலைகளும், நீறு - சாம்பர், வீறு - ஆற்றல், விரிஞ்சன் - பிரமன்.

598 வண்டுழாய் - (வண் + துழாய்) வளமான துளசி, தொடையல் - மாலை, மழைமுகில் - கருமேகம், நிகர்ப்ப - ஒப்ப, நாளம் - தண்டு, புண்டரிகம் - தாமரை, பொலிந்து - விளங்கி.

இற்றைநா ளெதிர்ந்தாய் நீயார்
என்றலும் முகுந்தன் நோக்கி
உற்றுனை யீன்ற வென்னை
யுணர்ந்திலை போலும் என்றான். 5

[ யாவற்றையும் படைக்கும் என்னை நீ படைத்தாய் எனல் வியப்பென்று முகுந்தனைப் பிரமன் எள்ளி நகை செய்தல் ]

600 என்னைநீ யீன்ற தெங்ஙன்
எவற்றையும் யானே யீன்றேன்
உன்னிலை யுணராய் போல
உரைத்தனை இறும்பூ தென்னைப்
பொன்னணி மார்ப நாபிப்
போதினி லீன்றே னென்றான்
அன்னது கேட்டு வேதன்
அணியெயி றிலங்க நக்கான். 6

[ இருவரும் தம்முள் வாக்குவாதம் செய்து இகலும்போது இறைவன் சோதித் தூண் வடிவாகத் தோன்றுதல் ]

601 ஒருவருக் கொருவ ரிவ்வா
றுயர்ச்சியு மிழிபும் பேசி
இருவரு மிகலும் போதில்
ஈண்டெரிப் பிழம்பாய் ஆங்கு
வெருவர முதலு மீறும்
மேவுற வறிதல் தேற்றாத்
திருவநீள் தூண மொன்று
சேணிலத் தெதிர்ந்த தன்றே. 7

599 கமலப்புத்தேள் - பிரமன், முகுந்தன் - திருமால், ஈன்ற - பிறப்பித்த.

600 நாபிப்போது - உந்திக்கமலம், எயிறு - பற்கள், நக்கான் - சிரித்தான்.

601 இழிபு - தாழ்ச்சி, இகலும் போதில் - மாறுபட்டுப் போரிடுங்காலை, பிழம்பு - உரு, வெருவர - அஞ்சுமாறு, தேற்றா - இயலாத, தூணம் - தூண், எதிர்ந்தது - தோன்றிற்று, அன்றே அசை.

[ இருவரும் அதிசயத்து நோக்க இறைவன் தூணுக்குள் தோன்றிப் பேசுதல் ]

602 தூணமொன் றெழுத லோடும்
துண்ணென நடந்தன் ஞேர்கள்
மாணமுற் பிழம்பா யீங்கு
வயங்கிய தெவன்கொ லென்றே
காணுதல் புரிமார் நெஞ்சிற்
கவலையுற் றெண்ணுங் காலை
தாணுவு மதனுட் டோன்றிச்
சாற்றுதல் புரிய லுற்ருன். 8

[ தூண் வடிவாக நிற்கும் எனது அடியையும் முடியையும் கண்டு வந்தவரே பெரியவர் என இறைவன் கூறல் ]

603 வாருமின் நீவிர் வாளா
மலைவதேன் வயங்கா நின்ற
ஓருமிவ் விலிங்கத் துற்றேம்
ஒளிமுடி யடியுந் தேடிப்
பாருமின் கண்டு மீண்ட
பரிசினர் பெரியர் என்ருன்
நாரணன் ஒருலைந் தோட்டு
நளினனு மதற்கு நேர்ந்தார். 9

[ பிரமன் அன்னப் பறவையாகி முடியையும், திருமால் வராகமாகி அடியையும் காணப் புறப்படல் ]

604 தோலடிப் பவளச் செவ்வாய்த்
தூய்ச்சிறை யன்ன மாகி
மேலுடை முடியைக் காண்பான்
விரிஞ்சனும் விண்ணம் போந்தான்

---

602 துண்ணென – விரைவாக, வயங்கியது – விளங்கியது, புரிமார் – செய்யும் பொருட்டு, தாணு – சிவபெருமான், சாற்றுதல் – சொல்லுதல்.

603 வாளா – வீணுக, மலைவதேன் – போரிடுவதேன், ஓரும் அசை. பரிசினர் – தன்மையுடையவர், நேர்ந்தார் – உடன்பட்டார்.

...காலடிக் கிடையே யண்டம்
கடிப்பகைப் பொருவ வோங்கி
மாலுமம் புயத்தாள் காண்பான்
வராகமாய் மண்ணுட் புக்கான். 10

**[ பன்னாள் முயன்றும் காணாதவனாய்த் திருமால் திரும்ப, பிரமன் முடியைக் கண்டதாக வந்து பொய் கூறுதல் ]**

605 எண்ணிலாப் பெய்தப் பன்னாள்
இருவரும் துருவிச் செல்ல
மண்ணிடைக் கிளைத்துப் புக்கோன்
மலரடி காணே னென்னா
அண்ணலுக் கோதி நிற்ப
அன்னமாய் விண்ணிற் போந்தோன்
கண்ணெதிர்ப் பட்டு மீண்டேன்
கடவுணின் முடியை யென்றான். 11

**[ முடியைக் கண்டதற்குச் சான்று யாதெனப் பிரமனை இறைவன் கேட்க அவன் தாழம்பூவைச் சான்று கூறுக எனல் ]**

606 என்றலு முறுவல் கோட்டி
எம்பிரான், இலங்கு மோலி
சென்றுநீ கண்டே னென்று
செப்பினை யதற்குச் சான்றீங்
கொன்றுமா றுளதே லொப்பித்
துயர்ச்சிநீ பெறுதி யென்னா
நின்றநான் முகனும், கைதாய்!
நீகரி கூறு கென்றான். 12

---

604 மேலுடை முடி - மேலே உள்ள முடி, விண்ணம் - ஆகாயம், அண்டம் - உலகம், கடிப்பகை - கடுகு, மாலும் - திருமாலும், வராகம் - பன்றி.

605 எண் - எண்ணிக்கை, துருவி - ஆராய்ந்து, புக்கோன் - திருமால், போந்தோன் - பிரமன், கண்ணெதிர்ப்பட்டு - கண்டு.

606 முறுவல் கோட்டி - புன்முறுவல் செய்து, மோலி - முடி, சான்று- சாட்சி, ஒன்றுமாறு - பொருந்துமாறு, ஒப்பித்து - கூறிக்காட்டி, கைதாய் - தாழை மலரே, (கைதை - தாழை) கரி - சாட்சி,

[ தாழைமலர் பிரமன் கண்டதாகப் பொய்ச்சான்று கூற, இறைவன் தாழையையும் பிரமனையும் சபித்தல் ]

607 கூறலுங் கண்டற் போது
குலமணி வேய்ந்த மோலி
நாறுபூங் கமலத் தோனும்
நணுகினன் கண்டான் என்ன
ஆறுசூழ் சடையி னின்றும்
இழிந்தனை யாகி நீயும்
ஈறில்கற் பங்கள் வீழ்வாய்
இடைக்கண்டிங் கென்சொல் கின்றாய்? 13

608 கரிபொய்த்தாய் ஆத லாலே
கடவுள ரெவரும் சூடற்
குரியைநீ அல்லை யாகி
ஒழிகென வுருத்துக் கூறி
விரைகமழ் கமலப் போதின்
விதியையு முனக்குக் கோட்டம்
தரையினி இல்லை யாகிச்
சாம்புக நீயு மென்றான். 14

[ தனக்குக் கோயில் இல்லை எனச் சாபமேற்ற பிரமன் வருந்தி இறைவனை வழிபட்டுச் சாப நீக்கம் பெற எண்ணுதல் ]

609 இத்தகைச் சாப மேற்கொண்
டேகிய விரிஞ்சன் பார்மேல்
வித்தகக் கோயி லின்றாய்
மேவுதல் வீறன் றென்னாச்

---

607 கண்டற்போது - தாழம்பூ. இழிந்தனையாகி - நீங்கி, இடைக் கண்டு - இடையிலே பிரமனைக் கண்டு.

608 கரி பொய்த்தாய் - பொய்ச்சான்று கூறினாய், சூடற்கு - அணிவதற்கு, உருத்து - சினந்து, விதி - பிரமன், கோட்டம் - கோயில், சாம்புக - வாடி வருந்துக.

சித்தமா குலமுற் றன்ன
தீவினை யொழிப்பா னெண்ணி
மத்தம்வேய்ந் தவனைப் போற்றி
வழிபட மனத்துட் கொண்டான். 15

[ தலத்துள் சிறந்ததெதுவென ஆய்ந்து நல்லூரே தக்கதலம் எனப் பிரமன் நல்லூர் வந்து சேர்தல் ]

610 கொண்டவன் நமக்கு முன்னம்
குலவிய விரிஞ்சன் வைகும்
எண்டரு தவத்தா னந்தான்
யாதெனத் தேர்ந்து பார்மேல்
வெண்டிரை பசும்பொன் வீசும்
விருத்தகா விரியின் றென்பால்
பண்டைநான் மறைக ளேத்தும்
பரமன்வாழ் நல்லூர் புக்கான். 16

[ பிரமன் நல்லூர் இறைவனை வணங்கித் தான் வந்த நோக்கத்தைக் கூறி அருள வேண்டுதல் ]

611 புக்கநான் முகத்துப் புத்தேள்
புராந்தகன் சரணம் போற்றி
மிக்கபே ரன்பாற் பூசை
விதிமுறை புரிதற் குற்றேன்
நக்கன்நீ யருளு கென்ன
நம்பனும் நன்றென் றேவச்
செக்கர்மே னியனை யேத்தித்
திசைமுகன் இனைய செய்தான். 17

---

609 விரிஞ்சன் – பிரமன், வீறு – பெருமை, ஆகுலம் – துயர்.

610 தவத்தானம் – தவமிக்க தலம், தேர்ந்து – எண்ணிப் பார்த்து, விருத்தகாவிரி – மிக பழைய காவிரியாறு, புக்கான் – சென்று சேர்ந்தான்.

611 புத்தேள் – தேவன், புராந்தகன் – சிவபெருமான், சரணம் – பாதங்கள், நக்கன் – சிவன், நம்பன் – சிவன், திசைமுகன் – பிரமன்.

[ பிரமன் ஒரு தீர்த்தத்தை உண்டாக்கி லிங்கத்தை எழுந்தருளச் செய்தல் ]

612 வாயுதிக் கதனில் மூன்று
வாளிவீ ழெல்லை தன்னில்
ஏயுந்தன் கையிற் கொண்ட
இயல்புறு தண்டு தன்னாற்
றூயநீர்க் குண்டங் கண்டு
சுந்தர கிரியி னங்கண்
பாயொளி இலிங்க மொன்று
பாங்குறத் தாபித் தன்றே 18

[ பிரமன் தான் உண்டாக்கித் தாபித்த லிங்கத்தை வேதநூன் முறைப்படி அஞ்செழுத்தோதிப் பூசனை புரிதல் ]

613 கண்டவத் தடத்தின் மூழ்கிக்
காலைசெய் கடன்க ளாற்றி
முண்டகத் திறைவன் மெய்ந்நூன்
முறையுளி வழாத வண்ணம்
அண்டர்நா யகனைப் பூசித்
தஞ்செழுத் தெண்ணி யிவ்வா
றொண்டவம் புரிந்தங் குற்றான்
ஒருநூறு பருவ மாதோ. 19

[ இறைவன் பஞ்சாக்கர வடிவாய்ப் பிரமனுக்குக் காட்சி தரல் ]

614 வன்னமைந் தோதி வேதன்
வரதன்முன் வதிந்த வாற்றான்
முன்னவன் வண்ண மைந்தாய்
முறைமையின் விளங்கித் தோன்ற

---

612 வாயுதிக்கு – வடமேற்கு, வாளி – அம்பு, எல்லை – அளவு, ஏயும் – பொருந்திய, குண்டம் – குளம், கண்டு – உண்டாக்கி, பாயொளி – பரவும் சோதி, தாபித்து – எழுந்தருளச்செய்து.

613 காலை செய் கடன் – காலந்தொறும் புரியும் கடமைகள், முண்டகம்– தாமரை, மெய்ந்நூல் – வேதம், பருவம் – இருதிங்கள் கொண்டது.

அன்னமீ துயர்த்தோன் கண்டங்
கதிசயம் பெருகி யையன்
பொன்னந்தா மரைத்தாள் போற்றிப்
புளகம்பூத் துடல்பூ ரித்தான். 20

615 பங்கயத் தவிசின் மேலோன்
பத்தியி னுறுதி கண்டு
வெங்கள்விட் டலர்ந்த கொன்றை
விரிசடை மவுலி யெங்கோன்
மங்கையோர் பாக மாக
வயங்குலிங் கத்தி னின்றும்
செங்கண்வெள் விடைமேற் றேன்றித்
திசைமுகன் காண நின்றான். 21

[ இறைவனைக் கண்ட பிரமன் இறும்பூதெய்தி இறைவன் பேரருளைப் போற்றிக் கூறுதல் ]

616 நிற்றலுங் கமலப் புத்தேள்
நேசமுற் றிருந்து மல்கக்
கற்றையஞ் சடையோன் பாதம்
கைதொழு திறைஞ்சிப் போற்றி
இற்றைநா ளடியேன் பூசைக்
கிரங்கினை போலும் உற்றாய்
அற்றமில் பெரியோர்க் கென்றும்
அருள்வதே கடன்மற் றன்றே. 22

---

614 வன்னம் - எழுத்து, வேதன் - பிரமன், வண்ணம் - நிறம். அன்னம் மீது உயர்த்தோன் - அன்னக்கொடியை உடைய பிரமன், புளகம் - மயிர்ப்பொடிப்பு.

615 பங்கயத்தவிசு - தாமரைப்பீடம், விட்டு - நீங்கி, வெள்விடை - இடபம்.

616 மல்க - (உளம்) நிறைய, கடன் - கடமை, வேற்றுப்பொருள் வைப்பணி.

[ இறைவன் பிரமனை நோக்கிக் கூறத் தொடங்குதல் ]

617 இன்னன பலவுங் கூறி
எண்ணிப்பல் வேதஞ் சொல்லி
முன்னவன் பாதம் போற்றி
முறையுளி யிறைஞ்சி நிற்பக்
கன்னலுந் தேனும் பாலும்
கனைகட லமுதும் போலச்
சொன்னலங் கனிந்த நங்கைத்
துணைவனுஞ் சொல்ல லுற்றான். 23

[ உன் பூசனைக்கும் பத்திக்கும் மகிழ்ந்தேம் நீ வேண்டிய வரத்தைக் கேளென இறைவன் கூறுதல் ]

618 அன்பினாற் புரிந்த பூசைக்
ககமகிழ்ந் தருளி னேம்யாம்
இன்புகூர் வரங்க ளெல்லாம்
ஈகுதுங் கேண்மோ வென்னப்
பொன்குலாங் கமலத் தோனும்
புண்ணியன் பாதம் போற்றி
நின்பெருங் கருணை யல்லால்
நேசிப்ப தெவன்கொ லென்றான். 24

[ பிரமன் தான் பொய் கூறிய பாவத்தையும் தாழை பொய்க்கரி கூறிய குற்றத்தையும் பொறுத்தருள வேண்டுதல் ]

619 ஆயினு மைய நின்பே
ரருள்வழி நிற்ப தல்லாமல்
ஏயின வேறு முண்டோ
வென்னுமன் னதனாற் சொல்வேன்

---

617 கன்னல் – கரும்பு, கனைகடல் – ஒலிக்கும் கடல், நங்கை – உமையவள்.

618 ஈகுதும் – தருவோம், கேண்மோ – கேட்பாயாக, நேசிப்பது – விரும்புவது.

சேயொளி மவுலி கண்டேன்
என்றுபொய்த் தீங்காற், கைதை
மாயும்பொய்ச் சான்றால் வந்த
மாசிவை தவிர்த்தல் வேண்டும். 25

[ மேலும் தான் இயற்றிய தடாகத்தில் மூழ்கிப் பூசித்து வணங்கினோர்க்கு இன்ன அருள்செய்ய வேண்டு மெனப் பிரமன் கேட்டல் ]

620 தண்டினுற் றமியேன் கண்ட
தடத்திடை யுவாவின் மூழ்கின்
எண்டிசை வளாகத் துள்ளோர்
யார்க்குமைம் பாத கம்போய்
விண்டிடல் வேண்டும், பொய்ம்மை
விளம்பிய பாவத் தோடு
கண்டிடா துரைக்குஞ் சான்றின்
கரிசுதீர்த் திடுதல் வேண்டும். 26

[ மேலும் பஞ்சாக்கர வடிவாய் எனக்குக் காட்சிதந்து அருளியவறே எல்லோருக்கும் அருளவேண்டுமென அவன் கேட்டல் ]

621 ஐவகை வண்ண மாகி
அடியனேன் காணத் தோன்றி
உய்வகை புரிந்த வண்ணம்
உலகெலாம் காணு மாறும்
செய்வகை யளித்தல் வேண்டும்
திங்களங் குழவி யோடு
பைவரி யரவந் தாங்கும்
படர்சடை மவுலி யெந்தாய். 27

---

619 ஏயின - பொருந்தியன, சேயொளி - சிவந்த ஒளி, நீண்ட ஒளி, கைதை - தாழை, மாசிவை - குற்றமான இவற்றை

620 தடத்திடை - குளத்தின் கண், உவாவின் - அமாவாசையின் கண், வளாகம் - பூமி, ஐம்பாதகம் - பஞ்சமா பாதகங்கள், கரிசு - குற்றம்.

621 திங்களங்குழவி - பிறைநிலா, பைவரி அரவம் - படமும் கோடுகளும் பொருந்திய நாகம்,

[ மேலும் அவன் பற்பல குற்றம் செய்தவர்களும் இங்குவந்து வழிபட்டால் அவர் குற்றத்தை நீக்கி வீடருளுதல் வேண்டுமெனக் கேட்டல் ]

622 பிறன்பழி கூறுந் தீயோர்
பிறழ்ந்தபொய்க் குறளை சொல்வோர்
அறந்தப அருந்தா வுண்டி
அருந்துநர் படிறு சொல்வோர்
திறம்படக் கரிபொய்த் துள்ளோர்
தீம்பர்பா சண்ட ரேனும்
மறந்தப யான்செய் லிங்கம்
வணங்கின்வீ டடைதல் வேண்டும். 28

623 பெற்றிகூர் மாகத் திங்கட்
பிரமகுண் டத்தின் மூழ்கின்
எற்றுநீர்க் கடலந் தானை
யிருநிலத் தியாவ ரேனும்
கற்றையஞ் சடையும் மூன்று
கண்களும் மழுவும் மானும்
உற்றுநின் போல நாளும்
உறைந்திடல் வேண்டுமென்றான். 29

[ இறைவன் பிரமன் கேட்ட வரங்களை யெல்லாந் தந்து முன்னரிட்ட சாபத்தை மாற்றுதல் ]

624 என்றலும் அவைக ளெல்லாம்
இளம்பிறை முடித்த வெங்கோன்
நன்றென அளித்து முன்னம்
நாமுரைத் திட்ட சாபம்

---

622 குறளை – புறங்கூறல், அறந்தப – அறங்கெட, பொருந்தா உண்டிகள் புலால் முதலியவை, படிறு – வஞ்சனை, தீம்பர் – தீவினையாளர், மறத்தப - பாவம் நீங்க.

623 பெற்றி – தகவு, மாகத்திங்கள் – மாசி, கடலந்தானை – கடலாடை.

பொன்றுத லரிதாற் கோயிற்
பூசுரர் வதன மாக
ஒன்றுதி நீமற் றென்றான்
உளங்களித் தயனும் நின்றான். 30

625 கானலங் கைதைப் போதும்
காதலால் யாமே யன்றி
வானவ ரெவருஞ் சூட
வரங்கொடுத் தளித்தோ மென்று
தேனினு மினிய தீஞ்சொற்
றேவியோர் பாகங் கொண்ட
கூனலம் பிறைசேர் சென்னிக்
குழகனும் விங்கத் துற்றான். 31

[ பிரமனுக்கு அருளிய இத்தலத்தின் பெருமை முழுதும் ஆதிசேடனாலும் அறைய ஒன்றாதெனச் சூதமுனி கூறல் ]

626 வேதனும் விமலன் றன்னை
விடைகொண்டு மீண்டு சென்றான்
பூதலம் புகழு மந்தப்
புண்ணிய நகரின் மேன்மை
ஓதுமா றெளிதோ சேடன்
ஊழிபல் லூழி காறும்
காதலி னுரைசெய் தாலும்
கரைகாண லரிது மாதோ. 32

---

624 பொன்றுதல் – மறைதல், ஒன்றுதி – பொருந்துவாயாக, அயன் – பிரமன்.

625 கானல் – நெய்தல் நிலம், கூனலம் பிறை – வளைந்த பிறை நிலா,

626 சேடன் – ஆதிசேடன், காறும் – அளவும், கரை – எல்லை, மாதோ – அசை.

[ இச்சருக்கதைக் கூறுவோர் கேட்போர் எழுதுவோர்
எய்தும் பலன் கூறுதல் ]

627 இனையமாக் காதை சொல்வோர்
எழுதுவோர் இனிது கேட்போர்
முனைவன தருளி னாலே
முத்தார முடிமேற் கொண்டு
கனைகருங் கடலந் தானைக்
காசினி யாண்டுப் பின்னர்
நினைவரும் பெருமைத் தாய
நிகரில்வீட் டின்பஞ் சேர்வார். 33

பிரமதேவர் வரம்பெற்ற சருக்கம் முற்றும்.

---

627 இனைய - இத்தன்மைத்தாகிய, கனை - ஒலி, கருங்கடல் - நீலக் கடல், தானை - உடை (ஆடை), காசினி - உலகம், நிகரில் - ஒப்பில்லாத,

பதின்மூன்ருவது

# ஐராவத சாப விமோசனச் சருக்கம்

[ முனிவர்கள் ஐராவத சாப விமோசன வரலாறு கூறுகெனச் சூதனிடம் வேண்டல் ]

( கலி விருத்தம் )

628 நாகி ளம்பிறை நான்மருப் புப்பொருப்
பேக னைப்பணிந் தெய்திய சாபந்தீர்ந்
தோகை பெற்றமை யோதெனச் சூதனும்
பாகு போன்மெனப் பாங்குடன் கூறுவான் 1

[ பண்டு ஒருகால் மேருமலைச் சாரல் சோலையுள் ஐராவதம் தருக்கொடு சென்றது எனல் ]

629 பண்டு மேவிய பிரமகற் பத்தினில்
அண்டர் கோனயி ராவதம் மேருவிற்
கொண்டல் சூழுங் கொழுமலர்ச் சோலையுட்
டண்டொ ணாத தருக்கொடுஞ் சென்றதால் 2

[ அது நாவலந்தண் பொழில்புக்கு அலைத்தமை கூறல் ]

630 சாந்தம் வீசித் தடஞ்சினைக் குங்குமப்
பூந்தண் சோலை புகுந்தலைத் தாய்மலர்
ஏந்து நாவலந் தண்பொழி லெய்தி, வீழ்
சேந்த தீங்கனிச் சேறகம் பூசியே 3

---

628 வாகு - இளமை, பிறைபோலும் மருப்பு. பொருப்பு - மலை (மலை போன்ற யானை), ஏகன் - இறைவன், போன்ம் - போலும்.

629 பிரமகற்பம் - ஒரு பிரமாவின் வாழ்நாள் (ஆயிரங்கோடியாண்டு), அண்டர்கோன் - தேவேந்திரன், கொண்டல் - கார்மேகம்; தருக்கு - செருக்கு.

630 சாந்தம் - சந்தனமரம், அலைத்து - குலைத்து, சேந்த - சிவந்த; சேறு - [illegible].

[ அது அருவி முதலியவற்றிற்றிளைத்தாடித் தன் பிடியோடு திரிந்த தெனல் ]

631 அருவி யெற்றியும் ஆடகத் தோடவிழ்
மரும லர்ச்சுனை வாரித்தி ளைத்துமீத்
தருமி றால்நறாத் தன்பிடிக் கூட்டியும்
மருவு காதலி னொன் மகிழ் வெய்தியே 4

[ அது காம மயக்கத்தோடு தன் பிடி தழுவித் திரிந்ததெனல் ]

632 மையல் மும்மத வாரணம் மாரவேள்
எய்யும் வாளிக் கிலக்கம தாகியே
பெய்யுங் காதற் பிடியுடன் மேவித்தன்
கையி னாலணைத் துக்களித் தேகிற்றே 5

[ அது தன் பிடியொடு களித்துக் கிடந்தது எனல் ]

633 ஏகிச் சண்பக வீர்ந்தண் பொழிலிடைப்
பூக வேலிப் புடைசூழ் பளிக்கரைத்
தாகு மாதவிப் பந்தரின் அன்பொடும்
வேக மாமத வெற்பின்பங் கூர்ந்ததே 6

[ அக்காலை தேவர்கள் அசுரரோடு போரிட எண்ணுதல் ]

634 அம்பொன் மேரு வருவியஞ் சாரலிற்
கம்ப வேழங் களித்தங் கமர்வுழி
யும்பர் தானவ ரோடிகுத் தேகியே
வெம்பு பூசல் விளைப்பதற் கெண்ணினர் 7

---

631 எற்றி - காலால் இறைத்து, ஆடகத்தோடு – பொன்னிறமான இதழ்கள், மருமலர்ச்சுனை – மணம் பொருந்திய மலர்கள் நிறைந்த சுனை. இறால் – தேனடை, நறா – தேன், பிடி – பெண் யானை.

632 மையல் – மதக்களிப்பு, வாரணம் – யானை, மாரவேள் – மன்மதன், வாளி – மலரம்பு.

633 ஈர்ந்தண் – மிகக்குளிர்ந்த, பூகம் – பாக்குமரம், வேகம் – சினம், வெற்பு – மலை (யானையாம்),

634 கம்பவேழம் – பகையை நடுங்கச் செய்யும் யானை, உம்பர் தேவர்கள், தானவர் – அசுரர், வெம்புபூசல் – கொடியபோர்.

[ தேவர்கள் நால்வகைப் படைகளைக் கூட்டினர் என்பது ]

635 உச்ச யிச்சர வம்முடன் ரூர்த்தது
வச்சி ரப்படை வாளொளி வீசிய
தச்சு நீடிய ஆழியந் தேர்ப்படை
கச்ச மில்லன வெங்குங் கலித்தவே 8

[ இயங்குபடை அரவம் எங்கும் எழுந்ததெனல் ]

636 விண்ணு ளோர்கள் மகுட மிடைந்தன
வண்ண வார்கொடி யெங்கும் மலிந்தன
தண்ணந் தாமக் கவிகை தழைந்தன
எண்ணில் பல்லியம் எங்கணு மார்த்தவே 9

[ வில், வாள் முதலிய கருவிகள் எங்கும் ஒளிவீசித் திகழ்ந்தன எனல் ]

637 வில்லும் வாளும் விலக்கருஞ் சூலமும்
கொல்லும் வேலும் கொலைகெழு தண்டமும்
அல்லும் நண்பக லாக்குந் திகிரியும்
செல்லுந் தோமர முஞ்செறிந் திட்டவே 10

[ மாதவர் ஆசி கூற அரமகளிர் வாழ்த்தெடுத்தனர் எனல் ]

638 அரிய மாதவ ராசி விளம்பநீள்
வரிகொள் கண்ணியர் மங்கலங் கூறநேர்
பரவி நின்றுபல் லாண்டிசைப் பாங்கரின்
விரவி நீண்முடி விண்ணவர் வாழ்ந்தவே 11

---

635 உச்சைச்சிரவம் – இந்திரனுடைய குதிரை, ஆழி – சக்கரம், கச்சம் – அளவு.

636 மிடைந்தன – நெருங்கின, மலிந்தன – மிகுந்தன, கவிகை – குடை, பல்லியம் – வாத்தியம்.

637 அல் – இரவு, திகிரி – சக்கரம், தோமரம் – ஈட்டி.

638 பரவி – புகழ்ந்து கூறி, பாங்கர் – பக்கம், விரவி – [illegible]

[ இந்திரன் போர்க் கருவிகளுடன் வந்து நிற்றல் ]

639 எண்ணில் வந்தியர் ஏத்த அரம்பையர்
தண்ணென் சாமரை சார்ந்தனர் வீசவே
கண்ண கன்றவான் காத்தருள் வாசவன்
துண்ணெ னப்புறம் போந்திது சொல்லுவான் 12

[ தனது ஐராவதத்தினைக் கொணருமாறு வாதுவரிடம் இந்திரன் கூறல் ]

640 வெஞ்ச ரத்தின் விரைந்துடன் மும்மதக்
குஞ்ச ரத்தைக் கொணருமி னீண்டென
மஞ்சு வாகனன் கூறலும் வாதுவர்
அஞ்ச மென்றடி தாழ்ந்துசென் றூர்களே 13

[ வாதுவர் யானைக் கூடத்துச்சென்று அதனைக் காணுமையால் இந்திரனிடம் வந்து முறையிடுதல் ]

641 சென்ற வாதுவர் திண்டிறல் வாரணம்
நின்ற கூடத்து நேடினர் கண்டிலார்
வென்றி வாசவன் முன்னர் வெருக்கொடும்
இன்று காண்கிலம் எங்குற்ற தோவென்றூர் 14

[ யானை எங்குற்றிருக்கும் எனச் சினத்தோடு அவன் எண்ணுதல் ]

642 ஆனை கண்டில மென்னவா கண்டலன்
ஏனை நாளுற் றிறுதியிற் கைவிடும்
ஞான மில்லவர் நட்பெனப் போரிடை
ஊன யானையெங் கோடி யொளித்ததே! 15

---

639 வந்தியர் - புகழ்ந்து பாடுவோர், கண்ணகன்ற - இடம் விரிந்த, வாசவன் - இந்திரன்.

640 சரம் - அம்பு, இன் - உவம உருபு, மஞ்சுவாகனன் - இந்திரன் வாதுவர் - பாகர்.

641 திண்டிறல் - திண்மையான வலிய ஆற்றல், கூடம் - யானை கட்டுமிடம், நேடினர் - ஊன்றிப் பார்த்தனர், வெருக்கொடும் - அச்சத்தோடும்.

642 ஆகண்டலன் - இந்திரன், போரிடை - போர் வந்த இடத்து, [illegible] - [illegible]ற்றம்.

[ யானையின் நிலையை உணர்ந்த இந்திரன் அதனைச் சபித்தல் ]

643 என்ன கூறிய இந்திரன் சீற்றமிக்
கன்ன செய்கை யயிரா வதத்தினைப்
பொன்னம் பூமி விடுத்தப் புடவிமேல்
மன்னு கென்ன வலிதின்வை தானரோ 16

[ சாபம்வந்து தாக்கிய அளவில் வருந்தியிருக்கும் ஐராவதம் ஆங்கு வந்த நாரதரைக் காணல் ]

644 வைத வாறு மதித்தயி ராவதம்
வெய்து யிர்த்து வெருக்கொண் டயர்வுழிக்
கைத வத்தைக் கடிந்த மகதயாழ்
செய்த வப்பெரி யோனவண் சேர்ந்தனன் 17

[ ஐராவதம் நாரதரைப் பணிந்து நிற்க அவர் இரங்கி வினவத் தொடங்குதல் ]

645 சேர்த லோடுமச் சிந்தனை வாரணம்
நார தப்பெய ரோன்பத நாள்மலர்
ஒரு மன்பினங் குற்றுப் பணிதலும்
ஈர நெஞ்சத் தவனென் றியம்புவான் 18

[ யானைக்கடுத்த நிலையை நாரதர் வினவ அது கூறத் தொடங்குதல் ]

646 மதந்த விர்ந்தனை வாகையிற் றிர்ந்தனை
இதந்து றந்தனை யெய்தியதி யாதெனக்
கதங்க டிந்தவன் கேட்டலும் காய்கரி
பதந்தெ ரிந்திது பன்னிய தாமரோ 19

643 பொன்னம் பூமி – தேவலோகம், புடவி – மண்ணுலகம், மன்னுக-சென்று நிலைபெறுக, வைதான் – சபித்தான், அரோ அசை.
644 மதித்து – அறிந்து, அயர்வுழி – வருந்தும்போது, கைதவம் – வஞ்சனை, குற்றம், பெரியோன் – நாரதன், அவண் – அவ்விடம்.
645 ஓரும் அசை, ஈரம் – இரக்கம், அருள்.
646 வாகை – வெற்றி, இதம் – இன்பம், கதம் – சினம், காய்கரி – (பகைவரைக் காய்ந்து வெல்லும்) சினத்தையுடைய யானை (ஐராவதம்) பதம் – நற்காலம், பன்னியது – சொல்லியது.

[ தன்செயலையும் இந்திரன் தனக்குஇட்ட சாபத்தையும் அது அவரிடம் கூறுதல் ]

647 கற்ப கச்செழுங் கானகக் காவலன்
முற்ப கற்றனை வைத முறையெலாம்
விற்ப முத்துயர் மேனி முனிவற்கு
அற்பு தங்கொள மேவி யமைந்ததால் 20

[ நாரதர் அதன் துயரைத் தீர்ப்பதாகக் கூறுதல் ]

648 ஓத லோடு முறுதவ நாரதன்
போத கந்தனை நோக்கிப் புகலுவான்
ஏத மிக்க விடர்க்கடல் நின்றுனைத்
தீதிற் றீர்த்தெடுப் பேனெனச் செப்பினன் 21

[ புவியிலுள்ள தலங்களைப் பற்றியும் அவற்றுள் சிறப்புடையவை பற்றியும் நாரதர் நவிலல் ]

649 மாக்க டற்புவி மேல்வர மார்பதி
நோக்கிற் காசி முதல நூற்றெட்டே
தூக்கி னெட்டோ டறுபதும் சொல்வர்நேர்
தாக்கி லீரெட்டுச் சாற்றினெட் டாமென்பர் 22

[ அத்தலங்களுள் மூன்று மிகச் சிறப்புடையதென அவற்றைக் கூறல் ]

650 அவற்றின் மூன்றதி கம்மவை யாதெனிற்
சுவைத்த மிழ்பெறும் தொன்மது ராபுரி,
தவத்தின் மிக்கவர் தங்குமாலூர், கடற்
புவிக்கு ளாரும் புகழும்நல் லூரென்பார் 23

---

647 காவலன் - இந்திரன், வைத - சபித்த, விற்பமுத்து - ஒளி முதிர்ந்து (வில் - ஒளி), மேவி - கூறி என்றபடி.

648 உறுதவம் - மிக்க தவம், போதகம் - யானை, ஏதம் - துன்பம்.

649 வரமார்பதி - வரத்தால் நிறைந்த புண்ணியத்தலம், தூக்கின் - ஒப்பிட்டாராயின், தாக்கின் - கூறின், சாற்றின் - சொல்லின் நூற்றெட்டுள் எட்டுச் சிறந்ததென்பது கருத்து.

650 மதுரை, ஆலூர் (பசுபதீச்சரம்) நல்லூர் இம்மூன்றும் மிகச் சிறந்தலம் என்பது.

[ அவற்றுள் நல்லூர் சென்று இறைவனைப் பூசித்து உய்தி பெறு என அவர் கூறல் ]

651 திருத்த மாதவர் சேரும்நல் லூரது
விருத்த காவிரித் தென்கரை மேலது
அருத்தி கூரவாங் கெய்தினை யாயரன்
பொருத்து பூசை புரிந்தனை யுய்தியால் 24

[ மலரும் நீரும் ஐந்தெழுத்தும் இருக்க நீ வாடுதல் வேண்டா எனல் ]

652 திங்கட் கண்ணியான் சேவடிப் போதெனக்
கொங்க விழ்ந்தலர் கொய்ம்மலர் தானுண்டு
தங்கு மைந்தெழுத் துண்டுதண் ணீருண்டால்
இங்கு வாடி யிருப்பதென் னுங்கொலோ 25

[ அவர் விரைந்து சென்று நீ நல்லூரிறைவனை வழிபடுக எனல் ]

653 அஞ்ச லஞ்சல் அயிரா வதமினிச்
செஞ்செவ் வேகியத் தெய்வநல் லூரெய்தி
வஞ்சி பங்கனை வந்தனை செய்யெனா
விஞ்சை நாரதன் விண்ணிடை யேகினான் 26

[ ஐராவதம் நல்லூரை வந்தடைதல் ]

654 நார தன்செல நான்மருப் பியானையும்
பாரில் வந்துபைங் காவிரித் தென்பால்
நேரி லாதநல் லூரை நெறியினால்
ஆரு மாசைமீக் கூர வடுத்ததால் 27

---

651 விருத்தகாவிரி – பழமையான காவிரி, அருத்தி – ஆசை, கூர – மிக, எய்தினை, புரிந்தனை இரண்டும் முற்றெச்சங்கள்.

652 கண்ணி – முடிமாலை, கொங்கு – தேன், தண்ணீர் – தீர்த்தம், வாடி – வருந்தி.

653 வஞ்சிபங்கன் – சிவபெருமான், விஞ்சை – இசைக்கலை.

654 நேரிலாத – தனக்கு ஒப்பில்லாத, ஆரும் – நிறையும், மீக்கூர – மேலும் மேலும் மிக. அடுத்தது – அடைந்தது.

[ யானை பிரமதீர்த்தத்திலாடி இறைவனைப் போற்றிய நிலை கூறல் ]

655 அடுத்த குஞ்சரம் அம்புயத்தோன் கண்ட
மடுத்தி ளைத்தெழு வாரியின் மூழ்கியே
படுத்த தேகளிப் பாசாங்கு சன்றெடும்
கடுத்த தும்பிய கண்டனைப் போற்றியே 28

[ அஃது இறைவனைப் பூசித்து ஏனைத் தெய்வங்களையும் வழிபட்டு அருள்பெற்றதெனல் ]

656 அஞ்சி லோதி யணங்குமைச் சீறடி
கஞ்ச நாண்மலர் கைதொழு தன்பினல்
எஞ்சு தெய்வத மேனவும் வேண்டுபு
குஞ்ச ரம்பர மன்னருள் கொண்டரோ 29

[ ஐராவதம் ஆங்கோர் தீர்த்தத்தையும் லிங்கத்தையும் அமைத்ததெனல் ]

657 மங்கை பாகற்கு வாயுகோ ணத்தினில்
ஐங்க ணைக்கிடை யெல்லை யதனிடைத்
தங்க லிங்கமும் தீர்த்தமும் தாபித்துத்
துங்க வேழந் தொழுதவ னுற்றதால் 30

[ இறைவன் அதன் அருச்சனைக்குகந்து காட்சிதரல் ]

658 இனைய வண்ணம் பருவமீ ரறுநீர்க்
கனைக டற்கடு வுண்டருள் கண்ணுதல்
தனைய ருச்சிப்ப ..................ளத் தெதிர்
துனைவெள் ளேற்றின்மேற் றோன்றலும் தோன்றினன் 31

---

655 மடு – பிரம தீர்த்தம், திளைத்து – மூழ்கி, எழுவாரி – சத்தசாகரம், படுத்தது – வீழ்ந்து வணங்கியது, பாசாங்குசன் – விநாயகக் கடவுள், கடுத் ததும்பிய கண்டன் – விடம் பொருந்திய கண்டன் (சிவபெருமான்).

656 ஓதி – கூந்தல், கஞ்சம் – தாமரை (ஈண்டுப் பாதங்கள்), ஏனவும்– பிறவும்.

657 வாயுகோணம் – வட மேற்கு, கணை – அம்பு, தாபித்து – எழுந்தருளப்பண்ணி, வேழம் – ஐராவதம்.

658 கடு – ஆலாலவிடம், துனை – விரைவு, ஏறு – இடபம், தோன்றல் – சிவபிரான்.

[ ஐராவதம் பெருங்களிப்புற்று இறைவனை வணங்கிப் போற்றுதல் ]

659 தோன்றி நிற்றலுந் துங்கவெள் ளானையும்
மூன்று கண்ணுடை முன்னவன் சேவடி
ஊன்று பேரன்பு வட்டெடுத் தோடவே
ஏன்று போற்றி இறைஞ்சி யெழுந்ததால் 32

[ இறைவன் நீ வேண்டிய வரங்களைக் கேளெனல் ]

660 எழுத லோடும் இடந்தனை நோக்கியே
வழுவி லாதவன் பூசை மகிழ்ந்தனம்
முழுதும் நல்குதும் முன்னிய தியாதெனக்
குழகன் கூறலும் குஞ்சரங் கூறுமால் 33

[ஐராவதம் இறைவ நின் அன்பே வேண்டுமெனக் கூறித் தொடங்குதல் ]

661 புல்லி தாயவென் பூசனை தன்னையும்
வல்லி பாகநீ மகிழ்ந்தனை யாதலாற்
சொல்லும் நல்வரம் யாதுன் றுணையடி
அல்லி நாண்மலர்க் கன்பொன் றமையுமால் 34

[ தன் சாபத்தைப் போக்கியருள யானை வேண்டுதல் ]

662 காத ளந்து கணைபுறங் கண்டகண்
மாது பாக வரமெது வாயினும்
தீதி லிந்திரன் செப்பிய சாபந்தீர்ந்
தேத மின்றிவிண் ணெய்துதல் வேண்டுமால் 35

---

659 துங்கவெள்ளானை – மேன்மை பொருந்திய ஐராவதயானை, உவட்டெடுத்து – பொங்கி, ஏன்று – ஏற்றுக்கொண்டு.

660 இபம் – யானை (ஐராவதம்), முன்னியது – கருதியது, குழகன் – சிவபெருமான்.

661 வல்லி – உமையவள், அல்லி – அகவிதழ், அமையும் – சாலும் (நிறையும் என்றபடி).

662 காதளந்து – காதளவும் சென்று, கணை – அம்பு, புறங்கண்ட – வெற்றி கொண்ட, ஏதம் – குறைபாடு.

[ இறைவனின் பெயர் ஐராவதேசனென்று வழங்க வேண்டுமென அது கேட்டல் ]

663 அண்ணல் நாமம் அயிராவ தேசனென்
றுண்ண யந்துல கோதுதல் வேண்டுமால்
எண்ணும் நல்வரம் ஈதென வீசனுந்
திண்ண மாக வருளிச்சென் றுனரோ 36

[ இறைவனருள்பெற்று யானை இந்திரனை அடைந்து பழம் பெருமையோடு திகழ்தல் ]

664 வெள்ளை யானை விடைகொண்டு வேரியங்
கள்ளு லாமலர்க் கற்பகக் காவில்வாழ்
அள்ள ரும்புல வோர்க்கிறை யாகிய
வள்ள லூர்திய தாகி மகிழ்ந்ததால் 37

[ ஐராவத தீர்த்தத்தினில் ஆடுவோர் எய்தும் பலன் கூறுதல் ]

665 அன்பி னலவ் வயிரா வதங்கண்ட
நன்கு லாவுநன் னீர்த்தட மூழ்கியே
இன்பு கூரவ் விலிங்கத்தைப் போற்றினோர்
வன்கண் தீவினை யாவையும் மாய்ப்பரால்

[ இச்சருக்கம் ஓதுவார் கேட்பார் எய்துபலன் கூறல் ]

666 சொன்ன விக்கதை சொல்லுநர் கேட்குநர்
நன்ன யங்கொ டெழுதும் நலத்தினோர்
பின்னல் வெண்டிரைப் பேருல காண்டுபின்
பொன்னின் நாடு முழுதும் புரப்பரால் 39

அயிராவத சாபவிமோசனச் சருக்கம் முற்றும்.

---

668 நாமம் - பெயர், உண்ணயந்து - (உள் + நயந்து) உள்ளம் விரும்பி, திண்ணம் - உறுதி.

664 வேரி - தேன், கா - சோலை, புலவோர் - தேவர்கள், இறை - வேந்தன்.

665 தடம் - தீர்த்தம், இன்புகூர் - இன்பம் மிகும், வன்கண் - கொடிய, மாய்ப்பர் - நீங்குவர்.

666 நன்னயம் - மிக்க அன்பு, பின்னல் வெண்டிரை - (ஆகுபயர்) கடல், பொன்னின் நாடு - தேவருலகம்.

பதினொன்காவது

# சுமதி காந்தனையடைந்த சருக்கம்

**[ நாக அரசன் மகள் சுமதி கணவனைப் பெற்ற வரலாறு கூறுகெனச் சூதரை முனிவர்கள் வேண்டுதல் ]**

[ எழுசீராசிரிய விருததம் ]

667 வரியுடல் நாகக் கன்னிகை யொருத்தி
வந்துநல் லூரரன் பாதம்
விரிமலர் தூவி வணங்கியாங் கதனுல்
னிழைவுகூர் காந்தனை யடைந்த
அரியமாக் காதை புகலென உறுவர்
அறைதலுஞ் சூதமா முனியும்
தெரிவுற நோக்கிப் பரசிவ னருலாற்
றேறலும் உவட்டநன் குரைப்பான். 1

**[சுமதி சர்ப்பவேந்தன் புரிதவத்தால் தோன்றிய ஒப்பற்றவள் எனல்]**

668 உரைபெறு காந்த கற்ப மதன்கண்
உற்றிடு பாதிநல் லுகத்தின்
தரையக முழுதும் பணமிசைப் பரிக்கும்
சர்ப்பவேந் தன்புரி தவத்தால்
வருமெழிற் கன்னி சுமதியென் றொருபேர்
வாய்த்துளாள் மலர்ப்பொகுட் டிருக்கும்
திருவையும் வனப்பால் வென்றவள் (மாதர்)
திலகமே யனையமாட் சியினுள். 2

---

667 வரி – உடலிலுள்ள வரம்பு, விழைவு – விருப்பம், காந்தன் – கணவன், மா – பெரிய, உறுவர் – தவமுனிவர்கள், தேறல் – தேன், உவட்ட – தெவிட்ட.

668 உரை – புகழ், உகாந்த கற்பம் – உகமுடிவில் தோன்றிய கற்பம், ஆதிநல்யுகம் – கிருதயுகம், பணம் – படம் (தலையை உணர்த்திற்று), பரிக்கும் – சுமக்கும், சர்ப்பவேந்தன் – ஆதிசேடன், வனப்பு – அழகு,

[சுமதியின் பேரழகை முடிமுதல் அடிவரை விளக்கத்தொடங்கி அவள் கூந்தலும் நெற்றியும் கண்களும் பற்றி வருணித்தல்]

669 புயலெனக் கறுத்துக் காவெனத் தழைத்துப்
பூம்புகை யுண்டுபூ ரிக்கும்
இயனெடுங் கோதை பெற்றுளாள் வானத்
திளம்பிறை யனையவாள் நுதலாள்
கயலினைப் பழித்து வாளினை மருட்டிக்
கடைசிவந் தகன்றுகா தடர்த்தே
அயிலொடும் பழகி வரிபரந் தனங்கன்
அம்பலைத் தமர்த்தவாட் கண்ணாள். 3

[அவளின் மூக்கு கன்னம் வாயிதழ் பல் முகம் மொழி காது மிடறு இவற்றை வருணித்தல்]

670 ஒழுகுபொற் கொடிமுக் குற்றுளாள் அகம்போல்
ஒளிகெழு கண்ணடி யனையாள்
அழகுவீற் றிருக்கும் அதரஞ்செம் பவளம்
ஆயினாள் முத்தவெண் ணகையாள்
நிழல்மதி யனைய முகத்தினாள் அமுதை
நெட்டிலைக் கரும்புடன் பழித்த
மொழியினாள் வள்ளை வாட்டிய காதாள்
முத்தணி பணிலம்போல் மிடற்றாள். 4

[அவளின் தோள், முன்கை, அகங்கை, விரல், தனங்களை வருணித்தல்]

671 பச்சிள வேய்போற் பணைத்தமென் றோளாள்
பாடல்யாழ் அனையமுன் கையாள்
கைச்சரோ ருகத்தாள் கெளிறுபோல் விரலாள்
காதல்கூர் கிள்ளைவா யுகிராள்

---

669 புயல் – கார்மேகம், கா – கற்பகச்சோலை, புகை – மணப்புகை, கோதை – கூந்தல், நுதலாள் – நெற்றியை உடையாள், அடர்த்து– மோதி, அயில் – வேல், அனங்கன் - மன்மதன், அம்பு – மலர், வாள் – ஒளி.

670 கண்ணடி – வதனம், அதரம் – வாயிதழ், நகை – பற்கள், வள்ளை - வள்ளைப்பூ, பணிலம் – சங்கு.

செச்சையங் கலவைச் சேறகந் திளைத்துச்
சீதவெண் பிறைவடந் தாங்கி
வச்சிரத் திழைத்த வார்தொலைத் தொழுந்து
மருப்புநே ரருப்பிள முலையாள். 5

**[ அவளின் வயிறு, உந்தி, இடை தொடை தாள் முதலியவற்றின் வருணனை ]**

672 அங்கைபோ லுதரம் வாய்ந்துளாள் மும்மைத்
தாகிய வரைதிரை யனையாள்
கங்கையின் சுழிபோல் உந்தியாள் துடியுங்
கற்பகக் கொடியுநே ரிடையாள்
பொங்கர வனைய வல்குலாள் ரூபப்
பொருகரிக் கையெனத் திகழ்ந்தாள்
மங்கல முழந்தா ளலவனைப் பொருவ
வரிவரால் நிகர்கணைக் காலாள். 6

**[ காலின் பரடு புறவடி கால்விரல் நகம் முதலியவற்றின் வருணனை ]**

673 பொற்றரா சனைய பரட்டினாள் கமடப்
போத்தகம் போற்புற வடியாள்
உற்றசெம் பவளக் கடிகைபோல் விரலாள்
ஒளிகெழு நித்தில வுகிராள்
நற்றளி ரனுக்கி யிலவிதழ் கவற்றி
நான்கடி நடப்பினு மந்தோ
இற்றதென் றிரங்குந் தாமரைப் பதத்தாள்
இளம்பெடை யன்னம்நேர் நடையாள். 7

---

671 வேய் – மூங்கில், பணைத்த – பருத்த, சரோருகம் – தாமரை, கெளிறு – கெளிற்றுமீன், உகிர் – நகம், சீதவெண்பிறை – குளிர்ந்த பிறைச்சந்திரன், வச்சிரம் – வைரம், வார் – மார்புக்கச்சு, மருப்பு – யானைத்தந்தம், அருப்பு – அரும்புதல்.

672 உதரம் – வயிறு, வரை – மடிப்பு, நேர் – ஒத்த, கரிக்கை – யானைக்கை, அலவன் – நண்டு, பொருவ – ஒப்ப, நிகர் – ஒக்கும்.

678 பரடு – காற்பரடு, கமடம் – ஆமை, போத்து – ஆண், கடிகை – கொடி, நித்திலம் – முத்து. உகிர் – (கால்) நகம், கவற்றி – கவலையுறச்செய்து, பதம் – பாதம்.

[ சுமதி நல்லூர் வந்து இறைவனைப் பூசித்து உறைதல் ]

674 இன்னபே ரழகு வாய்ந்துளாள் சுமதி
யேந்திழை யென்னுமா ரணங்கு
முன்னவன் றனக்குப் பாவகன் றிசையில்
மொழியுமைங் கனைக்கிடை யதன்கண்
தன்னைமுன் னளித்த சேடனாற் கண்ட
தகைகெழு பலத்தினல் வந்து
பொன்னலர் தூவிச் சுந்தரே சுரனைப்
பூசனை யனுதினம் புரிவாள். 8

[ தனக்கு நல்ல கணவன் வாய்க்க வேண்டுமென்று இறைவனை வழிபடுமவள் ஒரு நாள் ஒரு சோலையின் கண் தனித்து நிற்றல் ]

675 பாசிழைச் சுமதி குணங்கெழு வரனைப்
பாங்கின லடைதற்கிவ் வண்ணம்
பூசனை யீசற் கியற்றிய முன்னைப்
புண்ணியப் பயத்தின லொருநாள்
வாசநாண் மலர்ப்பூஞ் சோலையின் மேல்
மரகதப் பாறையின் மருங்கின்
யோசனை கமழும் மாதவிச் சூழல்
ஒருமயி லாடல்கண் ணுற்றாள் 9

[ ஆங்கு மயில் முதலியவற்றின் ஆடல் பாடல்களைக் கண்டு களிப்புடன் அவள் நிற்றல் ]

676 புனமயி லாடல் கண்டவம் மடமான்
பூந்தளி ரசோகமொன் றெடுத்தே
இனமலர்ப் பசும்பூங் கொடியொரு கையால்
இயலுறப் பற்றினள் நோக்கி

---

674 பாவகன் - அக்கினி. கனைக்கிடை - அம்பின் அளவுள்ள எல்லையிடத்து, முன்னளித்த - பெற்றெடுத்த, சேடன் - ஆதிசேடன், பூசனை – வழிபாடு.

675 பாசிழை – பசும் பொன்னணிகலன், வரனை – கணவனை, யோசனை– யோசனை தூரம்.

மனமகிழ் தூங்க இருகணும் களிப்ப
வஞ்சியங் கொடியிடை துவளத்
தனதடஞ் சுமந்த வோவியப் பாவை
தன்னையொத் தொருபுடை நின்றாள். 10

[ அரித்துவசன் என்னும் சோழர்குல மன்னனைப் பற்றிய விளக்கங்கூறத் தொடங்கி அவன் படை முதலிய பெருமையைக் கூறல் ]

677 வளைகட லாடை யுலகெலாம் புரக்கும்
வளவர்வண் குலத்திடை யுதித்தோன்
தளையவிழ் பசும்பூந் தாதகி மாலை
தடம்புய வரைத்தலந் தரித்தோன்
களைகணைப் புடவி வெண்குடை நீழல்
காத்தருள் புரியுஞ்செங் கோலான்
உளைவயப் பரியான் கடக்களிற் றுழவன்
ஒலிகடல் பொருவுபோர்ப் படையான். 11

[ அவன் ஆற்றலும் வனப்பும் திறலும் கூறுதல் ]

678 விரவலர் மகுட கோடிக ளுரிஞ்சி
விழுத்தழும் பிருந்தபூங் கழலான்
மருவலர் பகழி யனங்கவே ளன்ன
வயங்குமெய் வடிவுபெற் றுள்ளான்
தருமமே யுருவ மாயதன் மையினன்
தருவென வுதவுகைத் தலத்தான்
அருளினுக் குறையு ளாயினன் வென்றி
அரித்துவ சனெனுமோர் வேந்தன். 12

---

676 மடமான் என்றது சுமதியை, ஒருபுடை - ஒரு பக்கம்.

677 வளைகடலாடை - சங்குகள் நிறைந்த கடலை ஆடையாக உடுத்த, தாதகி - ஆத்தி, களைகண் - பற்றுக்கோடாக, உளை - பிடரி மயிர், வயமான் - வெற்றி பொருந்திய பரிமா, பொருவு - ஒப்பு.

678 விரவலர் - பகைவர், உரிஞ்சி - தேய்த்து, மருவலர்பகழி - மணம் பொருந்திய மலரம்புகள், அனங்கவேள் - மன்மதன், தரு - கற்பகத்தரு.

[ அவன் நல்ல மனைவியைப் பெறுவான் வேண்டித் தீர்த்த யாத்திரை தொடங்கிப் பல பதிகளையும் கண்டு காவிரிக் கரையை வந்தடைந்தானெனல் ]

679 கூர்தவா தரவால் வனப்பினின் மிகுந்த
குணங்கெழு கன்னியை வேட்பான்
தீர்த்தயாத் திரைமேற் கொண்டகன் புவியிற்
றிவ்விய கங்கையே முதல
பார்த்தினி தாடிப் பரம்பர னுறையும்
பதிபல புகுந்துசே வித்துத்
தார்த்திரள் துயலும் புயத்தினன் பொன்னித்
தடங்கரைப் பாங்கர்வந் துற்றான். 13

[ அக்காலை அவன் சுந்தராசலத்தின் பெருமையைக் கேட்டு அங்கு வந்தடைந்தான் எனல் ]

680 பன்னீர்ப் புணரி விரித்தினி துடுக்கும்
பார்மகள் மங்கல வணிபோன்
றெள்ளரும் வளங்கள் பற்பல தழைத்தே
எண்டிசை வளாகமும் போற்றப்
பிள்ளைவெண் மதியும் அரவமும் நதியும்
பேழையஞ் சடைமுடிக் கணிந்த
வள்ளல்வீற் றிருக்கும் சுந்தரா சலத்தின்
மான்மியம் வினவியாங் கடைந்தான். 14

[ அவன் நல்லூரை அணுகிப் பார்மிசை வீழ்ந்து வணங்கிப் புக்குத் தீர்த்தமாடி இறைவனை வழிபட்டமை கூறல் ]

681 சேணிடைச் சிகரங் காண்டலும் தனது
சென்னிபார் மிசையுற வணங்கி
யாணர்நல் வளங்கூர் சவுமிய நகரை
யெய்தினன் மும்முறை சூழ்ந்து

---

679. கூர்த்த – மிகுந்த, ஆதரவால் – அன்பால், வேட்பான் – மணஞ் செய்து கொள்வதற்காக, பரம்பரன் – சிவபெருமான், தார்திரள் – மாலைகள், பொன்னி – காவிரி, பாங்கர் – பக்கம்.

680. புணரி – கடல், பார்மகள் – பூமிதேவி, வளாகம் – உலகம்.

பேணியந் தணர்தங் குழாத்துடன் புகுந்து
பிரமதீர்த் தப்புன லாடி
தாணுவா லயத்தை விதிமுறை சார்ந்து
தாண்மலர் வந்தனை புரிந்தே. 15

**[ உமையவள் ஐங்கரனாதிய தெய்வங்களை வழிபட்டுப் பின்னர் சுமதி நின்றிருக்கும் நந்தவனத்தை அடைந்தான் எனல் ]**

682 திருமலைச் சொக்கி யென்னுமா துமையின்
சீறடி யன்பினால் வணங்கிக்
கருமலைத் தருளுங் ஐங்கரன் முதல
கடவுளர் சரணங்கள் போற்றி
உருமலைத் திகழும் வென்றிமால் யானை
உழவனும் விழைந்தன வேண்டி
மருமலைத் தளிகள் கூட்டுணும் நந்த
வனத்திடைத் தனித்துவந் துற்றான். 16

**[ மன்னன் சுமதியைக் கண்டு அவள் பேரழகை வியந்து தன் மனத்து நினைத்தல் ]**

683 மேவியங் கவனும் விழைந்தன னுலாவும்
வேலையின் முன்செய்நல் வினையால்
பாவையங் கவளைக் கண்டனன் கண்கள்
படைத்ததற் குப்பயன் படைத்தான்
தூவியஞ் சிறைய வன்னமோ மயிலோ
தொண்டைவாய்க் கிள்ளையோ வனங்கன்
ஆவிமற் றதுவோ கற்பகக் கொம்போ
அரம்பையோ ஆர்என வயிர்த்தான். 17

---

681 சிகரம் – கோயிற் கோபுரம், சென்னி – தலை, யாணர் – புது வருவாய், சவுமியநகர் – அழகுமிக்க நகர், தாணு – சிவபெருமான்.

682 கருமலைத்தருளும் – பிறவிப் பிணியை நீக்கியருளும், மருமலைத்து அளிகள் – மணமலர்களைக் கோதும் வண்டுகள், கூட்டு – தேன்,

683 பாவை – சுமதி, சிறை – சிறகு, தொண்டை – கொவ்வைக் கனி, ஆவி – உயிர், அயிர்த்தான் – ஐயமுற்றான்.

[ பழவினைவயத்தான் வந்துற்ற மன்னவனைச் சுமதி கண்டு அவன் பேரழகினை வியந்து எண்ணுதல் ]

684 அன்னவள் தானும் இருகணுங் குளிர
ஆடவர் திலகனைக் கண்டாள்
பொன்னணி சுடர்வேல் முருகனோ வல்லாற்
பூங்கணைக் காமனோ வானின்
மன்னவ னுயிர்த்த குமரனோ வென்று
மனத்தினி லயிர்த்தன ளாகித்
தன்னிலை தளர்ந்து முகமதி கோட்டித்
தமனியக் கொடியினைல் கினளால். 18

[ இருவரும் ஒருவரை ஒருவர் நோக்கி உளத்தால் காதலுறுதல் ]

685 நாந்தகத் திறையுஞ் சுமதியுந் தமது
நயனபுண் டரிகநாள் மலரும்
ஏந்தெழிற் கண்கள் எனுமலர்க் குவளை
யிணைகளும் நார்கொடு தொடுத்தார்
பூந்துணர் வாளி காமனுந் தொடுத்தான்
புயத்தினும் வனமுலைத் தடத்தும்
தாந்தரித் தனரால் அன்னவர் மோகச்
சலதியார் கரைகண்டு சொல்வார். 19

[ இருவரையும் இணைக்கு முகத்தான் மன்மதன் தன் செயலைத் தொடங்கினன் எனல் ]

686 ஒருவருக் கொருவர் காதலங் கடலின்
ஊடுபுக் கழுந்தின ராகி
இருவரும் நின்றார் நிற்றலுங் காமன்
இவரையா ணிணக்குவ லென்னுப்

---

684 பூங்கணை - மலரம்பு, வானின் மன்னவன் - இந்திரன், கோட்டி - கவிழ்த்து, தமனியக்கொடி - பொற்கொடி.

685. நாந்தகத்திறை - வாட்படையை உடைய அரசன், புண்டரிகம் அரித்துவசன் கண்களுக்கும் குவளை சுமதி கண்களுக்கும் உவமையாகு பெயர்கள், நார் - கயிறு, அன்பு, வாளி - அம்பு, சலதி - கடல்.

பருவமங் கையினெஞ் சகத்தினிற் போந்தப்
பரிசெலாம் உணர்த்தும்பாங் குற்ற
திருவநீள் கழலான் சிந்தனைப் புகுந்தச்
செயல்கண்டு மங்கொடிங் குழன்றான். 20

[ மன்னவன் சுமதியை அணுகிப் பேசாதிருத்தல் ஏன் என வினவல் ]

687 கருங்கண்வே லினையென் மார்பகத் தெறிந்து
கமலநாண் மலர்முகங் கோட்டிப்
பொருந்துறு தவர்போல் நிற்குமா றும்மைப்
போல்பவர் தமக்கியல் பன்றால்
வருந்துறு தொழிவாய் என்றுசெம் பவள
வாய்திறந் தொருமொழி பகர்ந்தான்
திருந்துவாய் முத்தம் சிந்துமோ தான்நீர்
சென்றதிங் கேதெனப் பகர்ந்தான். 21

[ சுமதி நாண மீதூர மொழியவும் இயலாது பின் இறைவன் அருள் இது எனத்தெளிந்து பேசத் தொடங்கினாள் எனல் ]

688 காமநீள் கணிச்சி நாமத்தாழ் செறித்த
காண்வரும் நிறையெனுங் கதவைச்
சேமமற் றின்றி யுடைத்தலுஞ் சுமதி
சிவனரு ளீதெனத் தெளிந்து
நாமவே லிறைவன் றன்னொடொன் றுரையாள்
நணுகினள் உரைக்கவும் புகுவாள்
ஏமவூ ரலையொத் தலம்வரும் மனத்தாள்
எதிர்நின் றிங் கினையன பகர்ந்தாள். 22

686 இணக்குவல் – ஒன்றுபடுத்துவேன். பரிசு – தன்மை (உணர்வை உணர்த்திற்று).

687 பொருந்துறுதவர் – அயலார், சென்றது – இங்கு வந்துற்றது.

688 கணிச்சி – ஒரு படைக்கருவி, நாமத்தாழ் – அச்சமாகிய தாழ்பாள், சேமம் – பாதுகாப்பு, நாமவேல் – அச்சந்தரும் வேற்படை, அலம் வரும் – சுழலும்.

[ சுமதி தன் ஊர் பேர் முதலியவற்றைக் கூறி நீவிர் யார் இங்கு வந்த நோக்கம் யாது என மன்னவனை வினவுதல் ]

689 நம்பனை யருச்சித் திறைஞ்சுமப் பொருட்டால்
நாகலோ கத்தினை நீங்கி
இம்பர்வந் துதித்தேன் என்பெயர் சுமதி
எந்தையும் பணிக்கிறை யாமால்
உம்பரார் போற்றும் ஈசனைப் பூசை
உஞற்றிய பயனுமின் றடைந்தேன்
கம்பமா களிற்றோய் நின்குல முறையும்
கருதிய பரிசும்யா தென்றாள். 23

[ மன்னவன் தன் ஊர், பேர், நோக்கம் பற்றிக் கூறி மகிழ்தல் ]

690 என்றுகட் டுரைப்ப வேந்தலுங் குறுகி
என்பெய ரரித்துவ சனும்
மன்றலஞ் செழுந்தார் வளவர்தம் மருமான்
வையகம் முழுவதும் புரப்பேன்
ஒன்றிய வனப்பா லுயர்ந்தவோர் கன்னி
உறுவதை யுளத்திடைக் குறித்து
நன்றிகொள் தீர்த்த யாத்திரை படர்வான்
நணுகினன் அஃதுமின் றடைந்தேன். 24

[ தெய்வத்தால் ஒருவழியுற்ற நாம் யாழோர் மணம் புரிகுவம் என மன்னன் கூறலும் சுமதி மறுமொழி கூறத் தொடங்குதல் ]

691 ஊழினு லிவ்வா றிருவருங் கண்ணுற்
றொருவழி யுற்றன மிதுதான்
வீழிவா யணங்கின் பாகன தருளே
வேறினி யெண்ணுவ தெவன்கொல்

---

689 நம்பனை – இறைவனை, இம்பர் – பூவுலகம், பணிக்கிறை – நாகங்களுக்கு அரசன், உஞற்றிய – முயன்று செய்த, கம்பமாகளிறு – பகைவரை நடுங்கச் செய்யும் பெரிய யானை.

690 கட்டுரைப்ப – சொல்ல, குறுகி – நெருங்கி, மருமான் – வழி வந்தவன், உறுவதை – மணந்து கொள்வதை, குடர்வான் – செல்லும் பொருட்டு, அஃதும் – தான் புறப்பட்டு வந்த நோக்கத்தின் பயனையும்.

யாழினோர் மணம்யாம் புரிகுது மதனுக்
கிடமுமீ தாகுமா லென்னத்
தாழிவாய்க் குவளை யுண்கணு ளிசைந்து
தண்ணகை கோட்டின ளுரைப்பாள். 25

[ கந்தருவமணம் மறைவிதிக் கொத்ததெனினும் உலகியல் முறைப்படி பெற்றோ ருடன்பாடுபெற்று மணந்து கொள்வோமெனச் சுமதி கூறுதலும் அவன் உடன்படுதலும் ]

692 தந்திரி நல்யா ழினர்மண மதுதான்
சதுர்மறை விதியென்ப தேனும்
எந்தைமுன் னெய்தி யங்கிவேட் டுறுதல்
இறைவமற் றுலகிய லாமால்
சிந்தைநீ கவலேல் என்றன ளவனும்
தேறுதற் பொருட்டுநீள் முடிமேல்
கொந்தலர் தாமங் கழித்தவன் கொடுத்தான்
கோற்றொடி யவளுங்கைக் கொண்டாள். 26

[ சுமதி நல்லூர் இறைவனை வணங்கிக் காதலனோடு நாகருலகம் செல்ல முற்படல் ]

693 நாகர்தம் முலகிற் செல்லுதல் புவிமேல்
நரர்தமக் கியலுவ தன்றால்
ஏகுமா றெவ்வா றென்றவ னிசைப்ப
ஏந்திழை யிடர்ப்படா வண்ணம்
போகுதல் புரிவே னிறையரு ளதனாற்
புலம்பல்நீ யென்றவ னோடும்
மாகநீள் மதியம் முடித்தவன் பாதம்
வணங்கினள் விடைகொண்டு மீண்டாள். 27

---

691 ஊழினால் – விதிப்பயனால், பாகன் – சிவபெருமான், யாழினோர் மணம் – கந்தருவ மணம், தாழி – நீர்த்தாழி, தண்ணகை – முறுவல்.

692 தந்திரி – யாழ் நரம்பு முடுக்கும் உறுப்பு, அங்கி வேட்டு – வேள்விச் சடங்கினை செய்து, தாமம் – மாலை.

693 ஏகுமாறு – செல்லுதற்கு வழி, மாகம் – ஆகாயம்.

[ அரசன் பிலத்தின் வழியே செல்லுதற்குரிய உருவத்தையும், குளிகையையும் சுமதி அவனுக்களித்து இருவரும் நாகருலகம் அடைதல் ]

694 செல்லுமப் பிலத்தின் உருக்கொடுத் தவற்குச்
செங்கையிற் குளிகையொன் றளித்துப்
பல்லவங் கவற்றும் பதத்தினள் புகுந்தாள்
பார்த்திபத் திலகனு மாங்கு
வல்லிதிற் சென்றான் கன்னல்மூன் றதனில்
வாளரா வுலகினை யடைந்தார்
எவ்வொளி மணிப்பூண் பாங்கியர்க் கெல்லாம்
இசைந்தவா றிசைத்தன ளன்னோர். 28

[ சுமதி தன் தந்தையிடம் நிகழ்ந்ததைக் கூற அவன் தன் உரகச் சுற்றத்தோடு மன்னனை எதிர்கொள எழுதல் ]

695 செவிலியர்க் குரைப்ப வவரும்நற் றாய்க்குச்
செப்பினர் செப்பலு மவளும்
புவியினைப் பரிக்கும் உரகவேந் தனுக்குப்
புகன்றனள் புகறலும் ஆரம்
அவிரொளி மணிகள் ஆயிரம்.........
.........ஆதபர் கடுப்பத்
தவிசினின் றிழிந்து வாசுகி முதல
சர்ப்பவேந் தர்புடை சூழ. 29

[ ஆதிசேடனும் வளவனும் ஒருவரை ஒருவர் கண்டு வணங்கி மணத்திற்குடன்பட்டு ஓர் மாமணி மண்டபம் சேர்தல் ]

696 சென்றனன் பருதி குலத்தினி லுதித்த
திறல்கொள்வேந் தனையெதிர் கொண்டான்
ஒன்றிய வவனும் முறைபணிந் தெழுந்தான்
ஒருவருக் கொருவர்நன் குரையா

---

694 பாலம் – சுருங்கை வழி, உரு – வடிவம், குளிகை – மந்திரமணி, பல்லவம் – அசோகந்தளிர், கன்னல் – ஒருகால அளவு, வாளரா உலகு – நாகலோகம், எல் – சூரியன், இசைந்தவாறு – தங்கள் காதல் இயைந்த நிலை.

695 உரகவேந்தன் – நாக அரசன் (ஆதிசேடன்), ஆதபர் – சூரியர், தவிசு – ஆசனம், இழிந்து – இறங்கி, சர்ப்பவேந்தர் – நாக மன்னர்கள்.

இன்றுதா னன்றே எமக்குநன் ஞளென்
றிருவரு மன்பொடுந் தழுவி
மன்றலந் தொடையல் நான்றதோர் பசும்பொன்
மாமணி மண்டபம் புகுந்தார். 30

[ நாகராசன் தன் மகளை முறைப்படி மணவினை செய்தளித்து வேண்டும் வரிசைகளை யெல்லாம் நல்குதல் ]

697 அரியணை தன்மேல் அரசனை யிருத்தி
ஆங்குச்செய் வரிசைக ளியற்றிப்
புரிகுழல் மடந்தை மணவினை முடிப்பான்
பொருந்துதன் கிளைக்கெலாம் உணர்த்தித்
திருமகள் தன்னைப் பாற்கடல் மேஞட்
செங்கண்மா யனுக்களித் ததுபோல்
இருவருங் களித்து வாழுமின் என்று
இரும்புன லதனெடுங் கொடுத்தான். 31

[ பல்வகை மணி முதலிய செல்வங்களோடு தோழியர் பலரையும் சீதனமாக அவன் வழங்குதல் ]

698 பாயிருள் பருகிப் பகலெதி ரெடுக்கும்
பன்மணிப் பேழைகள் பலவும்
ஏயின மணிப்பொன் மகுடமே முதல
இலகொளிப் பணிகளெவ் வெவையும்
தூயமென் றூசின் றொகைகளும் வாசச்
சுண்ணமே முதலிய வனைத்தும்
சாயலி னெழுகுஞ் சேடியர் பலரும்
தையலுக் கடுத்துமுன் விடுத்தான். 32

---

696 பருதி – கதிரவன், உரையா – உரைத்து (நன்மொழி கூறி), மன்றல் – நறுமணம், நான்ற – தொங்கவிடப்பட்ட.

697 வரிசை – சடங்குகள், கிளை – சுற்றம், மாயன் – திருமால், இரும்புனலை தனெடுங் கொடுத்தான், தாரைவார்த்து மக்கள் மணம் செய்து தந்தான் என்றபடி.

698 பாயிருள் – பரந்த இருள், பகலெதிரெடுக்கும் – சூரியனுக்கு ஒப்பாக விளங்கும், ஏயின – பொருந்திய, பணிகள் – அணி கலன்கள், தூசு – ஆடை, தையல் – சுமதி.

[ நாகலோகத்தில் இருவரும் எட்டுநாளிருந்து பின் நிலவுலகத்திற்கு வரக் கருத சேடன் குளிகை கொடுத்துச் செல்ல உடன்படுதல் ]

699 மணவினை முடித்த பின்னர்நா ளிரண்டு
வைகலும் மனமகிழ் தூங்கப்
பணமணி நாகர் உலகினில் வாழ்ந்தார்
பாரினே குதுமினி யென்ன
நிணமலி வேற்கை நிருபனும் உரைப்ப
நீளரா வேந்தனு மிசைந்து
குணமிகு வரிசை யாவையும் புரிந்து
குளிகையும் ஒன்றுகை கொடுத்தான். 33

[ சுமதியும் வளவனும் பிலத்தின் வழியே புக்குநல்லூர் புக்கு இறைவனை வணங்கிப் பின் கோயிற்றிருப்பணி புரிய எண்ணுதல் ]

700 கொடுத்தவன் விடுப்ப விருவரு மன்பாற்
குரவரைப் பணிந்தனர் விடைகொண்
அடுத்தவப் பிலத்தின் வழியினல் நல்லூர்
அடைந்தைய்யன் சேவடி பணிந்தார்
கடுத்ததும் பியமைக் கண்டனு மவர்க்குக்
கருணைபூத் தனன்கயிங் கரியம்
தொடுத்தனன் கோயில் புதுக்குவ னென்னத்
தொடுகழல் வேந்தனுங் குறித்தான். 34

---

699 நாவிரண்டுவைகல் – எட்டுநாள், ஏகுதும் – செல்வோம், நிணம் – கொழுப்பு, நிருபன் – மன்னன், வரிசை – சீதனப்பொருள்.

700 குரவரை – தந்தை தாயரை, கடுத்ததும்பியமைக்கண்டன் – விடம் விளங்கும் கரிய கண்டத்தையுடைய சிவபெருமான், கயிங்கரியம் – நற்பணிகள், குறித்தான் – எண்ணினன்.

**[ மன்னன் இறைவனுக்குத் திருக்கோயிலை நாவல் கிளிச்சிறை முதலிய பொன்னால் எடுத்து மணிகளால் தூபியமைத்துத் தன் பெயரால் ஒரு மதாணியும் அமைத்தளித்தல் ]**

701 நாவலம் பொன்னால் கிளிச்சிறை யதனால்
நலங்கெழு மாழைபொன் போல
மேவரு மொளிசே ராடக மதனால்
விளங்கிய நவமணி யவற்றால்
தூவியே முதல வாகிய பணிகள்
சுந்தர நாயகர்க் கியற்றிக்
காவலன் தன்பேர் பொறித்ததோர் மதாணி
கருணைகூர் நடேசனுக் களித்தான். 35

**[ அவன் பல ஊர்களையும் பசுக்களையும் நாடகக் கணிகையரையும் இறைவனுக்கு மானியமாக அளித்தான் எனல் ]**

702 பொன்விளை கழனி யூர்பல சேர்த்துப்
பொழியும்பாற் குடம்நிறை செருத்தல்
நன்னிறக் கபிலை யாயிரம் உதவி
நாடகக் கணிகையர் அனேகர்
சன்னிதிச் சிறப்ப மகிழ்ந்தன னருளித்
தாழ்வியா னூன்விதி முறையால்
மன்னிய பூசை யியற்றுபு விசேட
வகைமுறைத் திருவிழா நடாத்தி 36

**[ சோழ மன்னன் ஆங்குத் தன் மனைவியோடு அரசு வீற்றிருந்தான் சுமதி ஆங்கோர் புண்ணிய தீர்தமமைத்தாள் எனல் ]**

703 எந்தையெம் பெருமான் சுந்தர நாதன்
இணையடி யிறைஞ்சிவேல் வேந்தன்
நந்தலி லன்பால் அப்பதி யதன்கண்
அரசுவீற் றிருந்தன னவளும்

---

701 நாவல், கிளிச்சிறை, மாழை இவை பொன்னின் வகைகள், ஆடகம் – பொன், தூவி – ஸ்தூபி (கோபுரம்), பொறித்த – எழுதிய, மதாணி – பதக்கம்,

702. கழனியூர் – வயல்கள் நிறைந்த ஊர், செருத்தல் – பால்மடி, கபிலை – பசு.

சிந்தையன் புடன்மூன் றம்பிடை யிறைக்குத்
தென்திசை மருங்கினோர் தீர்த்தம்
தந்தனள் புரிந்து மகிழ்ந்தன ளாகித்
தன்பதி யவனொடு மமர்ந்தாள். 37

[ பல்லூழி இருவரும் அந்நல்லூரில் வாழ்ந்து பின் தேவ லோகத்திற் பதினாயிரமாண்டுறைந்து இறுதியில் வீட்டுலகெய்தினர் எனல் ]

704 அன்னக ரதன்கண் ஊழிபல் காலம்
அகமகிழ்ந் திருவரு மமர்ந்து
பொன்னக ரதனிற் கற்பமோ ரயுதம்
புரந்தரச் செல்வமுற் றுறைந்தே
பின்னலஞ் சடிலத் திறையரு ளதனாற்
பேரின்ப வீட்டுல கெய்தி
மன்னிவீற் றிருந்தார் அன்னவர் பெருமை
வகுத்துரைப் பதனையார் வல்லார். 38

[ சுமதி கண்ட கன்னி தீர்த்தத்தில் மூழ்கி வழிபட்டோர் எய்தும் பலன் கூறுதல் ]

705 மேவுகார் திகைநற் றிங்களின் வெள்ளி
விரும்புவா ரத்தினச் சுமதி
ஆவலாற் கண்ட கன்னிகா தீர்த்தத்
தாடுநர் நினைத்தவை யெல்லாம்
தாவிலா தடைந்து தராதல முழுதும்
தண்குடை நீழலிற் புரந்தே
ஓவிலா மரபாற் கற்பக நீழல்
உற்றுவீற் றிருப்பது சரதம். 39

---

703 நந்தவில் – குறைதலில்லாத மூன்று வில்லளவு, புரிந்து – உண்டாக்கி.

704 பொன்னகர் – துறக்கம், அயுதம் – பதினாயிரம், புரந்தரச் செல்வம் – இந்திரனுடைய செல்வம்.

705 வாரம் – கிழமை, தாவிலாது – குறையாது, ஓவிலா – நீங்குதலில்லாத, சரதம் – உண்மை.

[ இச்சருக்கம் ஓதுவார் கேட்பார் எய்துப் பலன் கூறுதல் ]

706 சொற்றவிக் காதை யெழுதுநர் கேட்போர்
தொல்லை வல்வினைச்சிமிட் பொருவிக்
கற்றையஞ் சடிலத் தெம்பிரானமருங்
கயிலையங் கிரியில்வீற் றிருப்பார்
பொற்றளிர் கவற்றி யனிச்சமென் போதைப்
புறங்கண்டு தூவிபோன் றுள்ள
சிற்றடி யுமையாள் பங்கினன் நல்லூர்
சேர்ந்துளார் பெருமையா ருரைப்பார். 40

( சுமதி காந்தனையடைந்த சருக்கம் முற்றும் )

---

706 சிமிட்பு - அகப்படுதல், ஒருவி - நீங்கி, தூவி - அன்னத்தின் மயிர்.

பதினைந்தாவது

# சங்கு கன்னச் சருக்கம்

**[ சங்கு கன்னன் வரலாற்றைச் சூத முனிவரிடம் முனிவர்கள் கூறுமாறு வேண்டல் ]**

( கலி விருத்தம் )

707 வில்லெயினர் தங்கள்விறல் வேந்தனிறை யோனை
வல்லியுமை நங்கையுடன் வந்தனைபு ரிந்தே
நல்லகுண மக்கள்பெறு நற்கதையை மேலோர்
சொல்லுகென லும்பெரிய சூதமுனி சொல்வான். 1

**[ மாளவநகரை யாடண்ட வேடர்குல வேந்தன் சங்குகன்னன் எனல் ]**

708 நாளவன சத்திருந யந்தினிது வைகும்
மாளவமெ னும்பெரிய மாநகரி யாள்வோன்
மீளிவிற லானடல்செய் வேடர்குல வேந்தன்
ஆளியனை யானடையா ரையமரில் வென்றான். 2

**[ சங்குகன்னன் சிறப்புக் கூறுதல் ]**

709 பன்னகமெ டுத்தபுவி பாங்கொடுப ரிக்கும்
பொன்னணி வயங்குபுய பூதரன் நுடங்கும்
மின்னவிரும் வாளுழவன் மேதகைய சங்கு
கன்னனெனும் நாமனெழிற் காமனை நிகர்த்தோன். 3

---

707 எயினர் – வேடர், வேந்தன் – சங்குகன்னன்.

708 நாளவனசம் – தண்டினையுடைய தாமரை, திரு – இலக்குமி, நகரி – நகரம், அடல் செய் – போர் புரியும், ஆளி – சிங்கம். அடையாரை – பகைவரை.

709 பன்னகம் – பாம்பு (ஆதிசேடன்), பரிக்கும் – தாங்கும், பூதரன் – மன்னன்,

[ அவன் மகப்பேறு வேண்டி மூன்று மனைவியரை மணந்தான் எனல் ]

710 புத்திரன்றி மித்தம்வளர் பூவையர்கள் மூவர்
முத்தகமு ரிஞ்சுமுலை மொய்குழலின் நல்லார்
உத்தமம ணத்தொழி லுவப்புடன் முடித்தான்
அத்தகைபு ரிந்தும்மக வின்றியயர் கின்றான். 4

[ மகப்பேறுவேண்டி பல்வகைத் தானங்கள் புரிந்தான் அவன் எனல் ]

711 அந்தணர் தமக்கும்வரும் ஆதுலர்த மக்கும்
சிந்தனை மகிழ்ந்துநிதி சிந்தியுல கின்கண்
இந்திர தருத்தனையு மீகையினில் வென்றே
முந்துமுயர் தானவகை முற்றவு முடித்தான். 5

[ அவன் தீர்த்த யாத்திரை செய்து வருங்காலை நாரதமுனிவரைக் காணல் ]

712 கங்கைமுத லாயநதி காதலுட னாடி
எங்கள்பெரு மானுறையும் எப்பதியும் நாடிப்
பங்கய மலர்க்கழல் பணிந்துசெலும் நாளில்
மங்கலநல் யாழ்மகதி மாமுனி யெதிர்ந்தான். 6

[ சங்குகன்னன் நாரதரை வேண்டுதல் ]

713 கானவர்கு லக்குரிசில் கானமுனி வன்றாள்
ஊனமில தாமுவகை யுற்றுடன்வ ணங்கி
வானமுனி வோர்தலைவ மக்களையி லாவென்
ஈனமது தீரவினி யின்னருள்செய் யென்றான். 7

---

710 முத்தகம் – முத்துமணிகள், மகவின்றி – மக்கட் பேறின்றி.

711 ஆதுலர் – இரவலர், சிந்தி – அளித்து, இந்திரதரு – கற்பக விருட்சம்.

712 மகதியாழ் முனி – நாரதன்.

718 கானவர் – வேடர், கானமுனிவன் – நாரதன், ஈனம் – குறை இழிவு.

[ நீ முற்பிறவியில் அந்தணனுயிருந்து ஒரு பசுவைக் கோல் கொண்டு புடைத்தனை என நாரதர் கூறல் ]

714 நாரதனு மவ்வுரை நயந்துமகிழ் வெய்தி
வீரமிகு வேடர்குல வேந்தவிது கேளாய்
ஓரின்முனம் நீ பனவன், ஓர் பசுவை மேனுள்
ஈரம திலாதுகழை யேந்தினையொ றுத்தாய். 8

[ அதனுல் நீ வேடர்குலத் துதித்தாய் அன்றியும் கன்றிற்குப் பால் விடாது கறந்தனை யாதலின் மகப்பேறின்றி உழல்கின்ருய் எனல் ]

715 அன்னபரி சாலெயினர் ஆதிபதி யானுய்
பின்னிலுமவ் ஆனினிது பெற்றகுழக் கன்றிற்
கின்னலுறப் பால்விடுத லின்றி நனிகொண்டாய்
மன்னவத னுன்மகவி லாதவகை கண்டாய். 9

[ அத்தீவினைகள் அகல உபாயங் கூறுவேன் கேள் என நாரதர் கூறல் ]

716 அவ்வகைய தீவினை யகற்றியினி துய்யச்
செவ்விய உபாயமது செப்புது முவப்பால்
எவ்வமதி லாதவகை கேட்டிடுதி என்று
மவ்வல் நகை பங்கனை வணங்கிமொழி கின்ருன். 10

( கலித்துறை )

[ காவிரித் தென்கரையில் ஒரு புண்ணியத் தலமுளது எனல் ]

717 பரவு தீம்புனற காவிரித் தென்கரைப் பாங்கில்
அரவ நீண்முடி யெம்பிரா னினிதமர்ந் துறையக்
குரவு பாடலங் கும்மஞ் சாந்தமுங் குலவி
விரவு சோலைசூழ் சவுமிய நகரொன்று விளங்கும். 11

---

714 ஓரின் – ஆராய்ந்தால், பனவன் – அந்தணன், ஈரமதிலாது – இரக்கமில்லாமல், கழை – மூங்கில், ஒறுத்தாய் – அடித்துத் துன்புறுத்தினுய்.

715 ஆதிபதி (அதிபதி) – தலைவன், அரசன்.

716 எவ்வம் - குறை, மவ்வல் – முல்லைமலர்

717 குரவு முதலியவை - மலர் மரங்கள்.

[ அத்தலத்திற் சென்று பிரமதீர்த்தமாடி அந்தணர்க்கு பசுக்களைத் தானம் செய் எனல் ]

718 அத்த லத்தினைச் சென்றுநீ யன்பொடும் வணங்கி
முத்த வண்டுறை பிரமகுண் டந்தனில் மூழ்கி
நித்தன் சேவடி நேரிழை தன்னொடும் பணிந்தே
உத்த மக்குலத் தோர்க்கொரு நூறுகோ வுதவின் 12

[ அத்தலத்து இறைவனை வணங்கிப் புத்திரர்களைப் பெறுக என அவன் நல்லூர் வருதல் ]

719 புரிந்த தீவினை தவிரும்நீ புத்திரற் பெறுவை
விரைந்து செல்கென நாரதன் விடுத்தயல் சென்றான்
நரந்த நாறுபூங் குஞ்சியா னத்தலம் நாடி
இரங்கு வார்கழ லெயினரோ டங்குவந் திறுத்தான். 13

[ சங்குகன்னன் நாரதர் கூறியவாறே இறைவனை வழிபட்டுத் தானங்களைச் செய்தல் ]

720 வந்தவ் வேட்டுவத் தலைவனும் வளங்கெழு நல்லூர்
அந்த மில்புகழ்ப் பிரமகுண் டத்தினி லாடி
எந்தை யெம்பிரான் சேவடிக் கமலங்க ளிறைஞ்சி
முந்து வேதியர்க் கான்பல முறையினிற் கொடுத்தான். 14

[ ஒரு திங்கள் பட்டினி விரதமிருந்து இறைவனைப் பூசித்துப் பின் அவன் தன் பதி வந்தடைந்தான் எனல் ]

721 மாத மொன்றவன் உண்டிநீத் தப்பதி வைகித்
தாத கித்தொடை சூடிய சவுமிய நாதர்க்
கேத மின்றிய வன்பினாற் பணிபல வியற்றி
வேத நாதனை விடைகொண்டு தன்பதி மீண்டான். 15

---

718 நித்தன் – நிலைபேறுடைய கடவுள், நூறுகோ – நூறு பசுக்கள்.

719 தவிரும் – நீங்கும், குஞ்சி – தலைமயிர், இரங்குவார்கழல் – ஒலிக்கின்ற நீண்ட கழல்.

720 பிரமகுண்டம் – பிரமதீர்த்தம், வேதியர்க்கு ஆன்பல கொடுத்தான், ஆன் – பசு.

721 உண்டிநீத்து – உணவு இன்றி (உபவாசம்), வைகி – தங்கி, தாதகி – ஆத்தி, தொடை – மாலை, பணி – தொண்டு.

[ அவன் மனைவியர் மூவரும் மூன்று மக்களைப் பெற்றனர் எனல் ]

722 மீண்டு தன்பதி வந்தருள் வேடர்தம் பெருமான்
ஆண்டொ ரெல்லையின் மனைவியர் மூவர்க்கு மன்பாற்
றூண்டு தீபமொத் தொளிதரு தோன்றலார் மூவர்
ஈண்டுதன் குலச் செல்வமே யென்னவீன் றெடுத்தான். 16

723 ஆளி மொய்ம் பிஞெளிவனென ... ... ... ... ... ...
... ... ... ... மோர் ... ... மதலைக் கணித்தான் ...
மீளியேனையா ... தமை ... விட்ட ... ... நீடென்று
... ... ... ... ... சொலக் குணித்தான். 17

724 திங்களங் கொழு ... ... ... ... ... ... ... ... ... ...
பங்கன தடியினை வந்தனை புரிவான் ... ... ... ...
வெங்கள்விட ... ... தர்க ளோடுமவன் ... ... ...
... ... ... ... மீளவு மடைந்தான் ... ... ... ... ... 18

725 அடை ... ... ... ... ... ... ... ... ... ந்து மூழ்கியே...
... ... யானடி குடந்தம்பட்டேத்தி ... ... ... ... ...
மிடைந்த ... ... ... டங்கொள் அந்நகரிருந்தனன்
... ... ... ... ... ... யாண்டு மூன்றெல்லை. 19

726 போந்த வேட்டுவ ... ... ... ... ... ... ... ...
வேந்தனும் புரிந்தன ஞைகு ... ... ... ... ... ... ...
யேந்துபூண் முலைபங்க ... ... ... ... ... ... ... ...
... ... ... கயிலைமால் வரையினை யடைந்தான். 20

727 அடைதலோடுமச்சி ... ... ... ... திக்கேதகியே
... ... ... ... ... ... ... ... ... யுரிமைபூண் டுயர்ந்தார்
விடையுயர்த்தவனருளி ... ... ... ... ... ... ... ...
... ... ... ... கற்பகக் கயிலைசார்ந் திருந்தான். 21

---

722 ஆண்டோரெல்லையின் - ஓராண்டளவில், தோன்றலார் - புத்திரர்கள்.

723 ஆம்பாடல் முதல் 727 ஆம் பாடல் வரையுள்ளவை ஏட்டில் சிதைந்து விட்டன. இவற்றுள் சங்குகன்னன் தன் மக்களோடு நல்லூரடைந்து மங்கை பாகனையும் மற்றுள்ள தெய்வங்களையும் வழிபட்டுப் பற்பல தானங்கள் செய்து ஆண்டுள்ள தீர்த்தங்களிற் படிந்து ஒழுகிக் கயிலைமால் வரை சென்று இறைவனை வணங்கி இருந்தமை கூறப்பெற்றுள.

[ சங்குகன்னன் துறக்கத்திற் பல்வேறு நலங்களை எய்திப் பின் அந்தணர் குலத்தில் பிறந்து இறைவனை வழிபட்டுச் சிவகதியடைந்தான் எனல் ]

728 பின்னர் வேட்டுவத் தலைவனும் பிறங்குநல் லூரிற்
பன்ன வக்குலத் தவதரித் தெழுகடற் படிந்தே
முன்ன வன்கழல் முறைமையில் வணங்கியாங் குறைந்து
தன்னை யொப்பதோர் சிவகதி சார்ந்து வீற்றிருந்தான். 22

[ இச்சருக்கம் சொல்லுவோர் கேட்போர் எய்தும் பலன் கூறுதல் ]

729 கூறுமிக்கதை சொல்லுநர் கேட்குநர் குறிக்கொண்
டீறி லன்பினொ லெழுதுநர் இப்புவி புரந்தே
யாறு சூடிய வண்ணல தருளினொ லழியாப்
பேறு பெற்றிருப் பாரிது சரதமே பெரிதும். 23

( சங்குகன்னச் சருக்கம் முற்றும் )

---

728 பன்னவகுலம் – அந்தணர் குலம், ஏழுகடல் – சத்தசாகரத் தீர்த்தம்.

729 ஈறில் அன்பு – முடிவில்லாத பக்தி, புரந்து – ஆண்டு, சரதம் – உண்மை.

பதினொருவது

# கிராத மோட்ச சருக்கம்

[ முனிவர்கள் ஒரு வேடன் மோட்சம் பெற்ற வரலாற்றைச் சூத முனிவரிடம் கேட்டல் ]

( கலி விருத்தம் )

730 மாத போதனர் வள்ளலை யேத்தியே
ஓத நீருலகத் திலோர் வேட்டுவன்
தீதி லாக்கதி சேர்ந்தமை செப்பெனச்
சூத மாமுனி சொல்லத் தொடங்கினன். 1

[ கவுடதேசத்து ஓர் அந்தணன் தன்குல ஒழுக்கத்தோடு வாழ்ந்தான் எனல் ]

731 கவுட தேசத்தோர் காண்டகு மந்தணன்
அவனி போற்றும் அரிக்கு லத்தினன்
தவறி லக்கினி சாலைவ ளம்பதி
உவகை கூர வுறைந்தனன் வாழும்நாள். 2

[ அவன் தவறான ஆசையினால் பிதிரர்களுக்களிக்கும் பொருள்களை ஒரு மறையவனில்லதினின்றும் கவர்ந்தான் எனல் ]

732 தென்பு லத்தவர்க் கூட்டுந் திரவியம்
தன்க ணாசையி னாற்றவ றாகியே
வன்க ணுற்றொரு மாமறை யோனிலத்
தின்க ணெய்தியெல் லாங்கவர்ந் தேகினன். 3

---

730 தபோதனர் - முனிவர்கள், வள்ளல் - இறைவன், ஓதம் - அலை.

731 அரிக்குலம் - அக்கினிக்குலம், அரி - நெருப்பு, கூர - மிக.

732 தென்புலத்தவர் - பிதிரர், திரவியம் - எள்ளு கொள்ளு முதலிய தானியங்கள், கவர்ந்தேகினன் - திருடிச்சென்றான்.

[ உழுந்து முதலாய பொருள்களைக் கவர்ந்துண்டு வாழ்ந்து பின் இறந்து கூற்றுவனுல கெய்தினனெனல் ]

733 உழுந்துக் தேனும் உணக்குந் துவரையும்
செழுந்துப் போடு திலமும்பாற் சாடியும்
அழுந்து மின்னவை யாதி கவர்ந்துதீக்
கொழுந்து போற்றுய்த் துக் கூற்றுல கெய்தினன். 4

[ பதினாயிரம் ஆண்டு அவன் நரகத்திற் கிடந்து பின் வேடர் குலத்தில் பிறந்தான் எனல் ]

734 எய்தி யோரயு தம்மெரி மூண்டெழும்
வெய்ய தீநர கத்திடை வீழ்ந்தவன்
உய்தி பெற்றிவ் வுலகத் துருத்தெழும்
மையல் வேடர் மரபினுட் டோன்றினன். 5

[ இது முதல் ஒன்பது கவிகள் இன்னின்ன தீவினைகளைச் செய்வோர் வேடராகப் பிறந்துழல்வார் எனச் சூதன் விளம்புதல் ]

735 இல்லத் தங்கி யிடுபவன், றீவிடங்
கொல்ல வுய்க்குங் குணமிலி, நான்மறை
வல்ல வர்க்கு வழிபிழைக் கின்றவன்,
வெல்லும் வாட்படை யேந்திய வேதியன், 6

736 அன்னம் விற்கும் அறிவிலி, நான்மறை
சொன்னம் வாங்கி கொடுக்குஞ் சுமடன் ஈண்(டு)
இன்ன தீயென் றிசைவுகொண் டாதிநூல்
தன்னை யோதுவிக் கின்ற தகவிலி, 7

---

733 உணக்கும் – காயவைத்திருக்கும், துப்பு – உணவுப் பண்டங்கள், திலம் – எள்.

734 ஓரயுதம் – பதினாயிரம் ஆண்டுகள், உருத்தெழும் – சினந்து வேட்டைக்கு எழும், மையல் – கள்ளுண்ணும் செருக்கு.

735 இல்லத்தங்கியிடுபவன்–குடியிருக்கும் வீட்டைத் தீயிட்டு அழிப்பவன், குணமிலி – உணவில் விடமிட்டுக் கொல்லும் குணக்கேடன், போர்க் கருவிகளை ஏந்தும் வேதியன்.

736 அன்னம் – உணவு, சொன்னம் – பொன் (பொருள்), கொடுக்கும் – கற்பிக்கும், சுமடன் – அறிவில்லாதவன், ஈ – கொடு, ஆதிநூல் – வேதம்.

737 அந்த ணாளரை நிந்தித் தறைபவன்
சந்த மாமறை தன்னைப் பழிப்பவன்
முந்து தாய்தந்தை தம்மை முனிபவன்
வந்து தானங்கொ டாவகை மாற்றுவோன், 8

738 அறங்கெ டுப்பவன் ஆய்மலர்த் தோட்டத்தோ
டிறங்கு நீர்க்குள மீடழிக் கின்றவன்
மறங்கொள் நெஞ்சின் மரங்குறைத் திட்டவன்
உறுந்த ணீர்ப்பந்த ரூறுப டுத்தினோன், 9

739 தேவ கோட்டம் சிதைக்கும் பொறியிலி
மேவு நல்விழா வீட்டும் விரகிலி
ஏய வெள்ளுக்கொண் டெந்திரத் தாட்டிய
பாவ காரிப் பனவப் படிற்றினோன், 10

740 ஆற்று மேற்பா சனமிலி யந்தணன்
மாற்று வேந்து வசியஞ்செய் கிற்பவன்
போற்றுங் கந்தங் கவருமப் புன்குணன்
கோற்றொ டிக்குரு பன்னியைக் கூடினோன், 11

741 தாரந் தன்னைத் தணந்து பிறனுக்கு
வாரம் பூண்டவள் மாணெழில் வேண்டினோன்
பேரு மன்பிற் பிதிர்க்கட னாற்றிலான்
பாரிற் றீர்த்தம் படிதற்கெய் தாதவன், 12

---

737 நிந்தித்து - பழித்து, சந்தம் - ஓசை, முனிபவன் - சினந்து வைபவன், தானம் - தருமம்.

738 அறம் - தருமங்கள், ஒழுக்கம், மரம் - பச்சைமரம், பயன் தரும் மரங்கள், உறும் - வேட்கையாற் செல்லும், ஊறு - கெடுதல்.

739 கோட்டம் - கோயில், பொறி - ஞானம், விழா - தேவர் விழா, எந்திரம் - செக்கு முதலிய கருவிகள், பனவப்படிற்றினோன் - அந்தணனுக விருந்து பொய் பேசுபவன்.

740 ஏற்பாசனம் - தகுந்த இருக்கை (பலகை, தர்ப்பை ஆசனம்), கந்தம் - நறுமணப் பொருள், குருபன்னி - குருபத்தினி.

741 தணந்து - கைவிட்டு நீங்கி, வாரம் - உரிமை, எழில் - பெண்மை நலம், படிதற்கு - சென்று மூழ்குதற்கு.

742 ஆனி னங்களுக் கல்லல் இழைப்பவன்
ஈன மில்குடித் தோன்றி யிழிந்துளோன்
ஊன மில்விர தங்க ளுஞற்றுபு
தான முய்த்தல்செய் யாத தவறினேன், 13

743 பிறர்தொ டுத்த விரதம் பெயர்ப்பவன்
இறைவன் நல்விழா வெய்திப் பணிந்திலான்
அறைக டற்புவி மேலிவ ராதியோர்
தறுகண் வேட்டுவ ராகிச் சனிப்பரால். 14

[ வேடனாகப் பிறந்த அவன் களவு முதலிய செய்து வாழ்ந்து வந்தான் எனல் ]

744 ஆத லாலவ் வறிவறை போகிய
வேத பாரகன் வேட்டுவ னாகியே
மாதர் மக்கள்தம் வன்பசி யாற்றுவான்
காதன் மிக்குக் களவுகொண் டுய்க்குநாள் 15

[ வேடன் அந்தணர் வேடம் பூண்டு தீர்த்த யாத்திரை செல்லும் அந்தணர்களோடு சென்று களவு புரிதல் ]

745 முன்ன ராற்றிய நல்வினை மூண்டெழ
அன்ன வேட்டுவ னந்தணர் வேடங்கொண்
டுன்னு தீர்த்தங்க ளாடற் குகந்துளார்
பின்னெ டேகிப் பிறன்பொருள் வவ்வுவான் 16

---

742 ஆனினம் – பசுக்குலம், அல்லல் – துன்பம், ஈனமில்குடி – உயர் குடி, உஞற்றுபு – மேற்கொண்டு செய்து, தானம் – கொடை.

743 பெயர்ப்பவன் – மாற்றுபவன், அறைகடல் – ஒலிக்கும் அலைகடல், தறுகண் – அஞ்சாமை, கொடுமை, சனிப்பர் – பிறப்பார்கள்.

744 அறைபோகிய – கெட்டழிந்த, வேதபாரகன் – அந்தணன், உய்க்கும் – வாழும்.

745 முன்னர் – முற்பிறப்பில், உன்னுதீர்த்தங்கள் – நினைக்கத்தக்க தீர்த்தங்கள், வவ்வுவான் – திருடுவான்,

[ அவ்வாறு செல்லுங்காலை அவன் காஞ்சி நகரடைந்து அவ்விறைவனை அவர்களோடு வழிபட்டுச் சென்று களவு புரிதல் ]

746 சோர்ச்சி பார்த்துத் தொடர்ந்தவர் தம்முடன்
தீர்த்த யாத்திரை செல்பவன் போலவன்
கார்த்த தும்பிய கண்டனைக் காஞ்சியின்
வார்த்த டங்கொங்கை மாதுடன் சேவித்தே 17

[ அவன் காவிரிநதிக் கரையில் விளங்கும் நல்லூரை யடைதல் ]

747 பாலின் மாநதி யாடிப் பரனன்பான்
ஆலுங் கூத்துடை யம்பலஞ் சேவித்தே
சேலு லாம்பொன்னித் தீர்த்தம் படிந்துராய்
ஞாலம் போற்றும்நல் லூரைவந் தெய்தினன். 18

[ வேடதாரியான வேடன் ஆதிரைநாளில் அவ்வந்தணர்களோடு தானும் மந்திரங்களை உடன் கூறியிருத்தல் ]

748 ஆதி யாதிரை நாளஃ தாதலால்
வேத வேதியர் மிக்கொருங் கெய்தினர்
ஏத மின்றியற் றுந்திறம் யாவையும்
போத மொன்றிலான் தானும் புரிந்தரோ 19

[ அவன் அவர்களோடு திருக்கோயில் புக்கு இறைவனைக் கண்டு வேடத்திற்காகத் தரிசித்தல் ]

749 கோயி லெய்திக் குடந்தம்பட் டெம்பிரான்
மேய சன்னிதி வேட்டுவன் சார்ந்துடன்
ஆய மூல பலத்துடன் அண்ணலை
நேய முற்றவர் போனின்று நோக்கினன். 20

---

746 சோர்ச்சி - மறதி (அயர்ச்சி), கார்த்ததும்பிய - கருமை நிறம் விளங்கும், கண்டன் - சிவபெருமான்.

747 பாலின்மாநதி - பாலாறு, ஆலும் - அசைந்தாடும், அம்பலம் - சிதம்பரம், உராய் - மூழ்கித்தோய்ந்து, ஞாலம் - மேன்மக்கள்.

748 ஆதி - இறைவன், ஆதிரைநாள் - திருவாதிரை விண்மீன் நாள், திறம் - பூசனை வழிபாடு மந்திரம் முதலியவை, போதம் - அறிவு.

749 குடந்தம் - நால்விரல் மடக்கிப் பெருவிரலை நெஞ்சிற் பதித்தல்.

[ பொய் மெய்யாகிப் பாசமோங்க அவன் அவ்விறைக் காட்சியைப் பிரிய மனமில்லாதவனாய் நீங்கிச் செல்லல் ]

750 நோக்கி யங்கண் நுவலரும் வைபவம்
பாக்கி யம்மிது வென்றவன் பார்த்தொரு
தாக்குங் கன்ன றணப்பில னாகிநின்
றேக்க முத்தொடவ் வெல்லையி னீங்கினான். 21

[ நல்லூரில் மூன்று நாள் தங்கியிருந்தபோது ஆயுள் முடிந்து அவன் உயிர் விட்டானெனல் ]

751 நீங்கி மூன்று தினமந் நீள்நகர்ப்
பாங்கு வைகியப் பட்டிமை வேடத்தான்
தாங்கு தன்னுடல் தான்விடுத் தான்,விட
ஆங்கு நண்ணி யவன்செவி யூடரோ 22

[ அக்காலை அவன் செவியூடே இறைவன் திருமந்திரத்தை ஓத அவன் வெள்ளிமலையை அடைந்தான் எனல் ]

752 நாதன் திவ்விய மந்திரம் நன்குற
ஓதல் செய்தனன் ஓதலும் மற்றவன்
ஏதம் நீங்குவி மானம்வந் தெய்தலும்
மீதி வர்ந்துயர் வெள்ளிவெற் பெய்தினான். 23

---

750 நுவலரும் - சொல்லுதற்கரிய, வைபவம் - வரலாறு, கன்னல் - நாழிகை, ஏக்கமுத்தம் - பெருமிதச் செருக்கு.

751 பட்டிமை - வஞ்சனை, நண்ணி - நெருங்கி வந்து.

752 திவ்விய - மேலான, இவர்ந்து - ஏறிச் சென்று, வெள்ளிவெற்பு - கைலாயமலை.

[ இறைவன் இயக்கர் முதலியோர் வியக்க அவனுக்கு கணாதிபப் பதவியளித்தலைக் கூறுகின்றன, ]

753 இயக்கர் கின்னரர் யாழிசை வல்லவர்
மயக்க மின்றிய வானவர் தானவர்
புயற்கு நேர்பவன் புண்டரி கத்தினேன்
கயற்கண் மாதுமை யாவருங் காணவே. 24

754 ஐயன், எய்திய வன்னவன் சென்னிமேற்
செய்ய கைத்தலஞ் சேர்த்திக் கருணைபூத் (து)
உய்யு மாறு கணாதிப னையுறும்
நையொ ணாத பதவிகள் நல்கியே. 25

[ இறைவன் அவனுக்கு ஞானதரிசனன் எனப் பெயர் கொடுத்தல் ]

755 நன்ன யங்கள் பலவு நவிற்றுபு
பின்னும் ஞான தெரிசியென் றேபெயர்
அன்ன வற்குக் கொடுத்தனன் ஆங்கது
தன்னை நோக்கி உமையவள் சாற்றுவாள். 26

[ இவன் இப்பதவி பெறக் காரணம் யாதென உமையவள் இறைவனிடம் வினவுதல் ]

756 இத்தி றம்பெறற் கின்னவன் செய்திடும்
அத்தி றம்பகர் கென்னலும் அண்ணல்தான்
முத்த மென்முலை மொய்குழல் கேட்டியாற்
பத்த ருள்ளிவன் போலெவர் பாரின்மேல். 27

---

753 இயக்கர், கின்னரர் காந்தருவர் – தேவசாதியர், புயற்கு நேர்பவன்– திருமால், புண்டரிகத்தினேன் – பிரமதேவன், கயற்கண் – மீன்போலும் கண்களையுடைய.

754 எய்திய வன்னவன் – விமானத்தை யூர்ந்து வந்தடைந்த அந்த வேடன், சென்னி – தலை, கணாதிபன் – கணங்களுக்குத் தலைவன், நையொணாத – வருத்தமில்லாத, தாழாத.

755 நவிற்றுபு – சொல்லி, அங்கது தன்னை – இறைவன் வேடனுக்கு அளித்த கருணையை, சாற்றுவாள் – வினவுவாள்.

756 இத்திறம் – கணாதிபப் பதவி முதலியவை, அத்திறம் – அத்தகைய செயல்கள், கேட்டியால் – கேட்பாயாக, பாரின்மேல் – மண்ணுலகத்தில்.

[ இதுவும் அடுத்த செய்யுளும் திரு ஆதிரைநாளில் மந்திரமோதி மூலபலத்தொடு இறைவனைக் கண்டு அத்தலத்திலேயே மரித்ததன் பயன் எனக் கூறுதல் ]

757 உற்ற வாதிரை நாளி னுவந்து நாம்
முற்றும் வாழும் முடிவில்நல் லூர்வயின்
மற்றின் னேன்எய்தி மாலயன் காணுறைப்
பெற்றி சேரெமை மூலப லத்தொடும் 28

758 கண்டு சேவித்துக் காயமும் அவ்வுழி
விண்டு நீக்கினன் வேறெவன் வேண்டுமால்
வண்டு லாங்குழ லாயந்த வாய்மையால்
அண்டர் போற்றவிவ் வாறளித் தாமரோ. 29

[ எவராயினும் மூல பலத்தொடு தன்னைத் தரிசித்தவர் இப்பதவி அடைவாரென இறைவன் தெளிவுறுத்தல் ]

759 மூர்க்க ரேனுநம் மூலப லத்தொடு
கூர்க்குஞ் சோதி குலவிய லிங்கத்தைச்
சேர்க்கும் நல்வளச் செல்வநல் லூரெய்திப்
பார்க்கி லின்ன பரிசளிப் போமென்றான். 30

[ உமையவள் இறைவன் கருணையை வியந்து போற்றுதல் ]

760 அனைய தன்மையை யாமே யறிகுவம்
வனைக ருங்குழல் மாதுகேண் மோவென
முனைவன் கூறலும் முற்றிழை நங்கையும்
தனையொப் பாமவன் தண்ணளி வாழ்த்தினள். 31

---

757 முடிவில் – அழிவில்லாத, பெற்றி – தன்மை.

758 காயம் – உடம்பு, குழல் – கூந்தல், வாய்மை – தவம், அண்டர் – தேவர்கள்.

759 மூர்க்கரேனும் – அறிவில்லாத துட்டர்களாயினும், கூர்க்கும் – மிகுந்தோங்கும், குலவிய – விளங்கும், பரிசு – தன்மைப் பேறு.

760 வனைகருங்குழல் – அழகுறுத்தப்பட்ட கூந்தலையுடைய, மாது – உமையவள்.

[ ஒருகற்பகாலம் அவன் கயிலையில் வீற்றிருந்து பின்னர் மோட்சமடைந்தான் எனச் சூதன் கூறுதல் ]

761 கற்ப மொன்று கயிலையின் மற்றவன்
பொற்ப வீற்றிருந் தப்புறம் பொய்யிலாத்
தற்ப தப்பொரு ளாயவன் றூண்மலர்
நற்ப தத்தினை நண்ணியுற் றனரோ. 32

[ இச்சரிதம் கூறுவோர் கேட்போர் எய்தும் பலன் கூறுதல் ]

762 தெரித்த விக்கதை செப்புநர் கேட்குநர்
பரித்த பாதகம் யாவையும் பாழ்பட
முரித்து மூதுல காண்டு முறைமையால்
அருத்தி கூர்சிவ ரூப மடைவரால். 33

கிராத மோட்ச சருக்கம் முற்றும்.

---

761 கற்பம் - ஒரு பிரமனுயுட் காலம், பொற்ப - பொலிவுடன், நற்பதம் - வீடுபேறு.

762 தெரித்த - தெரியக்கூறிய, பரித்த - தாங்கிய (செய்த) பாதகம் - பாவங்கள், முரித்து - அழித்து, அருத்தி - விருப்பம், சிவரூபம் - சாருபப்பதவி.

பதினேழாவது

# தருமசேனச் சருக்கம்

[ தருமசேனன் மகப்பேறுற்று அசுவமேத யாகம் புரிந்த வரலாற்றைக் கூறுகெனச் சூதமுனியைத் தவசியர் வேண்டுதல் ]

( கலி விருத்தம் )

763 அரிய மாதவ ரண்ணல் சேவடி
தரும சேனன்முன் தாழ்ந்து வாழ்த்தியே
புரவி மாமகம் புதல்வ ரோடுறும்
பரிசு சொல்கெனச் சூதன் பன்னுவான் 1

[ மாளவபுரத்தை யாண்ட மன்னன் இவன் எனல் ]

764 விரை செறிந்தசந் தனமும் வேழமும்
கரைதி ரைத்தெறி கவுத மைக்கரை
புரையி லாதமா ளவபு ரத்தில்வாழ்
அரசர் தம்பிரான் அவனி காவலன். 2

[ தருமசேனனுடைய ஆட்சி முதலிய சிறப்பு ]

765 செய்ய கோலினன் சிறந்த வெண்குடை
வய்ய மெங்கணும் கவித்த மாண்பினன்
பெய்யு மாரியே யனைய பெற்றிசால்
கையி னன்சிலைக் காமன் எய்தினன். 3

---

763 அண்ணல் – இறைவன், புரவிமாமகம் – அசுவமேத யாகம், பரிசு– வரலாறு.

764 விரை – நறுமணம், திரைத்து – அலைவீசி, கவுதமை - கவுதமை நதி, புரை – குற்றம், அவனி – பூமி,

765 செய்ய கோலினன் – செங்கோன்மையன், வய்யம் – (வையம்) உலகம், மாரி – மழை, பெற்றி – குணம், சால் – நிறைந்த, காமன் எய்தினன் – மன்மதனைப் போற்ற வடிவமுடையவன் என்பது கருத்து,

[ அவன் மறம் வீரம் கொடை பற்றிய சிறப்பு ]

766 அறத்தின் வேலியாய் அருளின் ஆழியாய்
மறத்தின் கூற்றமாய் வாய்மைக் கெல்லையாய்
திறத்தின் வெள்ளிலைச் செய்ய வேலனாய்
பொறைக்குப் பூமியாய் பொலியும் பொற்பினன். 4

[ அவன் வெற்றிச் சிறப்பு முதலியன கூறல் ]

767 எண்ண லார்முடி யிடறுந் தாளினன்
வண்ண மாலைசூழ் வாகை வாளினன்
அண்ணல் யானைபோ லமர்செய் தோளினன்
தண்ணந் தாரினன் தரும சேனனே. 5

[ நாரதமுனிவர் இவ்வரசனிடம் வருதல் ]

768 வார்க டற்புவி முற்றும் மற்றவன்
ஓரும் ஆழியொன் றுருட்டி வாழும்நாள்
நேருங் கோதமுன் நீத்த மாதவன்
நார தப்பெயர் முனிவன் நண்ணினன். 6

[ மன்னன் நாரதரை வரவேற்றுப் போற்றுதல் ]

769 வந்த யாழ்முனி மகிழும் மாண்பினால்
சிந்தை யன்பொடுஞ் சென்று தாழ்ந்தவன்
முந்து பாத்திய முதல யாவையும்
தந்தொ ராசனந் தழைய வேற்றினன். 7

---

766 ஆழி – கடல், மறம் – போர் வீரம், கூற்றம் – யமன், திறம் – ஆற்றல்.

767 எண்ணலார் – பகைவர், வாகைவாள் – வெற்றியே தரும் வாட்படை, தண்ணந்தார் – குளிர்ந்த மலர் மாலைகள் (அணிந்து விளங்கும்) தருமசேனன்.

768 வார்கடல் – நீண்ட பெரிய கடல், ஆழி – ஆணைச் சக்கரம், கோதம் – குற்றம்.

769 தாழ்ந்து – வணங்கி, பாத்தியம் – பாதபூசை, ஏற்றினன் – அமரச் செய்தான்,

[ நாரதர் வரப்பெற்றது தன் தவமே என அவன் மகிழ்தல் ]

770 இன்று நீவர யான்செய் மாதவம்
ஒன்று சாலுமோ ஊழி யூழியும்
துன்று மென்குலத் தொல்லை யோரெலாம்
நின்று செய்தவ நிலைமை யாகுமால். 8

[ நாரதர் உன் விருப்பம் யாதென அவனை வினவுதல் ]

771 இனைய நன்னலக் கிளவி யெண்ணில
கனைக ருங்கழற் காவல் மன்னவன்
நனை துளித்தென நவில நாரதன்
நினைவு யாதென நீசொல் கென்றனன். 9

[ அரசன் அசுவமேதம் புரிய வேண்டுமெனத் தன் விருப்பத்தைக் கூறுதல் ]

772 வீணை மாமுனி தாளை மீளவும்
யாணர் வைப்பினன் இறைஞ்சி யேத்தியே
கோணை வாம்பரி வேள்வி கோலுகேன்
ஆணை நீயதற் கருள வேண்மால். 10

[ நீ உன் மைந்தரைக் கொண்டு அவ்வேள்வியியற்றுக என நாரதர் கூறல் ]

773 வேந்த னித்திறம் புகல வீணைகை
ஏந்து மாதவ னிஃதி யம்பினன்
மாந்தர் நாதநின் மைந்த ரான்மகம்
போந்த வாமுடித் திடுதி போலுமால். 11

---

770 சாலுமோ - நிறையுமோ, தொல்லையோர் — முன்னோர்கள்.

771 கிளவி — நன்மொழி, நனை துளித்தென — மலர்கள் தேனைச்சிந்துவது போல, நினைவு — விரும்பிய எண்ணம்.

772 யாணர்வைப்பு - புதிய வருவாயையுடைய ஊர்கள், கோணை — குதிரைக்கு இடும் அணிகள், கோலுகேன் - செய்ய விழைகின்றேன்.

773 மைந்தரால் — புத்திரர்களைக் கொண்டு, போந்தவா — முறைப்படி.

[ மகப்பேறில்லாத யான் அதனை எங்ஙனம் ஆற்றுவேனெனக் கவன்று கூறுதல் ]

774 என்ன நாரதன் சொல்லு மெல்லையின்
மன்னர் மன்னவன் மதிம யங்கியே
பொன்ன லங்கொளும் புதல்வரின்மையேற்
கன்ன மாமகம் ஆற்றல்யாண் டென்றான். 12

[ நாரதர் நீ புத்திரப்பேறடையும் வழி கூறுவேன் எனல் ]

775 மைந்தர் நீபெறும் வாய்மை சொல்லுகேம்
சிந்தை நீங்கெனத் தெருட்டிக் கூறிமற்
றந்த மில்புக ழரச ரேறனுக்கு
எந்தை பின்னரும் இவைவி யம்புவான்.

[ இதுமுதல் நான்கு கவிகள் மகப்பேறில்லாதவர் குறைகளைப் பல உவமைகள் மூலம் நாரதர் கூறுதல் ]

776 சிந்து வெங்கதிர் தீர்ந்த வானமும்
இந்து மண்டில மிழந்த மீனமும்
முந்து சீற்றத்தோ னுற்ற ஞானமும்
மைந்த ரில்லவர் மனையும் மானுமே. 14

777 பெற்ற தாமரை துறந்த பொய்கையும்
கற்றுளோ ரிலாக் கழக மும்பொரும்
வெற்றி யொன்றிலான் வேலும் பாலரைப்
பெற்று ரூதவர் பீடு மொக்குமே. 15

---

774 மயங்கி - வருந்தி, இன்மையேற்கு - இல்லாத எனக்கு, ஆற்றல் - செய்தல், யாண்டு - எவ்வாறு.

775 வாய்மை – வழி, தெருட்டி – வருந்தத்தை நீக்கித் தெளிவித்து, எந்தை – நாரதர்.

776 கதிர் – கதிரவன் திங்கள் விண்மீன்கள், இந்து – சந்திரன், மீனம் – விண்மீன்கள், முந்துசீற்றம் – முன் கோபம், மானும் – ஒக்கும்.

777 துறந்த – இல்லாத, பொய்கை – தடாகம், கழகம் – அவை, (மன்றம்), பாலர் – புத்திரர், பீடு – பெருமை.

778 மிக்க நீரிலா வெறிய பூமியும்
தொக்க போதிலாச் சோலை சூழலும்
மிக்கு நெல்விளை விகந்த செய்களும்
மக்க ளையிலா மனையு மானுமே. 16

779 அங்கி வேட்டுண வந்த ணாளரும்
மங்க லத்திரு வாங்கு மாதரும்
தங்கு நீதியிற் றவறும் வேந்தரும்
செங்கைச் சேயுறார் திருவு மானுமே. 17

[ புதல்வரில்லாக் குறை நீங்க உறுதி கூறுவேன் என நாரதர் அவனுக்குக் கூறுதல் ]

780 ஆத லான்மக வடைந்து ளதவர்
பூத லத்திடை புன்க ணாரால்
ஏதம் நீங்கநின் எண்ணம் முற்றுமா
றோது வாமென வுறுதி யோதுவான். 18

[ அவர் காவிரிக் கரையில் சுந்தராசலத்தலம் உள்ளமை கூறல் ]

781 பொன்னி மாநதி பொருதென் கூலத்தின்
துன்னு சோதிகூர் சுந்த ராசலம்
மன்னு மாங்கதன் மருங்கிற் றூயன
பன்னு தீர்த்தங்கள் பலவு முண்டரோ. 19

---

778 நீர் – நீர் நிலைகள், வெறிய – வெறுமையான, போது – மலர், இகந்த – நீங்கிய, செய் – வயல்.

779 அங்கிவேட்டு – அக்கினியில் வேள்வி செய்து, மங்கலத்திரு – மங்கல நாண், வாங்கும் – கழித்து நீங்கும், சேய் – மக்கள்.

780 புன்கணர் – பாவம் செய்தவர், உறுதி – உண்மைச் சொற்கள்.

781 தென்கூலம் – தெற்குக்கரை, மருங்கில் – பக்கங்களில், அரோ அசை.

[ ஐந்து வண்ணத்தோடு இறைவன் ஆண்டுறையும் மாண்பு கூறுதல் ]

782 ஐந்து வண்ணமா மரியலிங் கமொன்
றிந்த மாநிலம் ஏத்த வைகுமம்
முந்து லிங்கத்தின் மூல வான்பலம்
பந்தி பந்தியாய்ப் பாங்கிற் றோன்றுமால். 20

[ அங்குச் சென்று விழிபடின் வேண்டும் சித்திகள் எய்தலாமெனல் ]

783 அந்த மூலவான் பலத்தை யன்பினால்
எந்தை தன்னொடும் இறைஞ்சி யேத்துவோர்
முந்து சித்திகள் முறையி னெய்தியே
பந்த மின்றிய பதமும் சேர்வரால். 21

[ மனைவியோடு ஆண்டுள்ள சூரிய குண்டத்தில் முதற்கண் நீராடுக எனல் ]

784 சத்த சாகரம் தனக்குப் பாவகன்
வித்த கத்திசை யதன்கண் வெய்யவன்
உத்தம மத்தடம் ஒன்றுண் டாலதின்
மத்த யானையாய் மனைவி தன்னொடும் 22

[ ஆண்டுள்ள வேதபுட்கரணியில் மூழ்கி எழுக எனல் ]

785 பூச நாளுறும் பூர ணைதனில்
நேச மாகநீ நெறியின் மூழ்கியே
மாசை யீந்துராய் மத்தி யானத்தின்
காசில் வேதபுட் கரணி யாடியே 23

---

782 வான் பலம் – தூய பலம், பந்தி – வரிசை, கூட்டம்.

783 சித்திகள் – வேண்டியவற்றை யடைதல், பந்தம் – பாசம், வினை, பதம் – வீடு பேறு.

784 பாவகன் திசை – அக்கினித்திசை, வெய்யவன் – கதிரவன்.

785 பூசநாள் – பூச நட்சத்திரத்து நாள், பூரணை – பௌர்ணமி நாள், மாசை – பொன், காசில் – குற்றமில்லாத, வேதபுட்கரணி – பிரம தீர்த்தம்.

**[ பின்னர்க் கன்னிகா தீர்த்தமாடி இறைவனை வழிபட்டுப் பூசனை புரிக எனல் ]**

786 கன்னி யந்தடத் தோடுங் காதலான்
மன்னுங் கோவில்மூ வலஞ்செய் துட்புகுந்
தன்னை மாதுமை யணங்கொ டையனைப்
பொன்னின் மாமலர் பொழிந்து போற்றியே. 24

**[ மூலபலத்தோடு இறைவனைக் காட்சியிற்கண்டு வழிபடுக எனல் ]**

787 மூல வான்பல மதனை முந்துறக்
கோலக் கண்மலர் குளிர நோக்கியே
ஏல வார்குழ லிறைவி தன்னைவை
வேலின் மன்னவ மீண்டும் போற்றியே. 25

**[ அவ்வாறு வழிபடின் மக்கள் மூவரைப் பெறுவாய் எனல் ]**

788 பிறைமு டித்தபெம் மானுக் கன்பினுற்
றிறல்கொள் வேந்தநீ சிறப்புஞ் செய்தியேல்
இறைவ னுள்மகிழ்ந் திலவச் செய்யவாய்
முறையின் மக்கள்மூ வரைய ளிப்பனுல். 26

**[ அம்மகளைக்கொண்டு பரி வேள்விபுரிக எனச் சொல்லி நாரதர் செல்லுதல் ]**

789 அந்த மைந்தரா லசுவ மேதமும்
சிந்தை யன்புறச் செய்து முற்றுவாய்
மைந்த னேயென வகுத்து மாதவன்
புந்தி யார்தரப் புசித்துப் போயினுன். 27

---

786 கன்னியந்தடம் – கன்னிகா தீர்த்தம், பொழிந்து – தூவி அருச்சித்து.

787 வைவேல் – கூரியவேல்.

788 சிறப்பு – விழாக்கள், இலவச் செய்யவாய் – இலவ மலர்போலுஞ் சிவந்த வாய், முறையின் – வரிசையாக.

789 மாதவன் – நாரதன், புந்தி – உள்ளம், ஆர்தர – நிறைய.

[ தருமசேனன் தன் மனைவியோடும் புரோகிதர்களோடும் புறப்படல் ]

790 வீணை மாமுனி விடுத்துப் போயபின்
கோணை மாகளிற் றுழவன் கோற்றொடி
மாண லந்தரும் மனைவி தன்னொடும்
பூணு நூற்புரோ கிதரும் போதவே. 28

[ மன்னவன் சோணை முதலிய தீர்த்தங்களாடி விருத்தாசலம் வந்தடைதல் ]

791 சோணை மாநதி முதல (தூய்மை சேர்)
யாணர் வண்புன லெவையு மாடிப்போய்
தாணு வங்கியஞ் சைய மேத்துபு
கோணி லாமுது குன்றம் போற்றியே. 29

[ பின்னர்க் காவிரிப்புனலாடி குடந்தைமாநகர் வந்துற்றுச் சுந்தராசலத்து வந்து சார்ந்தான் எனல் ]

792 தடங்கொள் காவிரி தன்னி லாடிவண்
குடந்தை மாநகர் கும்பிட் டேத்தியே
மடந்தை பங்கினன் வாழுஞ் சுந்தரத்
திடங்கொள் வெற்பணித் தாகச் சார்ந்தனன். 30

[ அவன் தன் பாரியோடு சூரிய தீர்த்தமாடுதல் ]

793 சார்ந்து மன்னவன் தலையி னாற்பணிந்
தார்ந்த சிந்தையி னன்பு வட்டெழச்
சேர்ந்து சூரிய தீர்த்தம் மூழ்கினான்
வார்ந்த கூந்தலின் மனைவி யோடுமே. 31

---

790 களிற்றுழவன் – மன்னவன், போத – உடன்வர.

791 சோணை – நதியின் பெயர், புனல் – தீர்த்தங்கள், வங்கியஞ்சையம்– விந்தியமலை, ஏத்துபு – ஏத்தி, முதுகுன்றம் – விருத்தாசலம்,

792 சுந்தரத்திடங்கள்வெற்பு – சுந்தராசலம்.

[ அந்தணர் முதலானோர்க்குத் தானங்களீந்து ஆண்டு ஓர் பர்ணசாலையும் அமைத்தான் எனல் ]

794 அந்த ணாளருக் களவி லாநிதி
சிந்தி யத்தடத் தீரப் பாங்கினிற்
பந்த ரோடுநீள் பன்ன சாலையுந்
தந்து தீயையுந் தாபித் தானரோ. 32

[ நாரதர் கூறிய வண்ணம் பிரமதீர்த்தம் முதலியவற்றிற் படிந்து முற்றினான் எனல் ]

795 பின்னை யன்னவன் பிரமதீர் த்தத்திற்
பன்னி தன்னொடும் பனவர் தன்னொடும்
துன்னி யாடுபு தூய வன்சொலும்
அன்ன வாறெலாம் அடைவி னாற்றினான். 33

இறைவன் மகிழ்ந்து அவனுக்கு மக்கட் பேறருளினான் எனல் ]

796 அரச னாற்றலும் அரவுந் திங்களும்
விரவச் சூடிய வேணி நாயகன்
கருணை கூர்ந்துமுக் காதன் மக்களை
ஒருவ யிற்றொருங் குயிர்ப்ப நல்கினான். 34

[ தருமசேனன் இறைவனுக்கு நீராட்டு, விழா முதலிய நிகழ்த்திப் போற்றினானெனல் ]

797 அண்ணல் யானையான் அன்பு மீக்கொள
எண்ணெய் நல்விழா இனிதி யற்றுபு
நண்ணும் ஏனைய சடங்கும் நன்குறப்
பண்ணி நம்பனைப் பணிந்து போற்றியே. 35

---

794 சிந்தி - வழங்கி, திரப்பாங்கினில் - கரையிலோர் புறத்தில், தந்து - அமைத்து, தீ - வேள்விக்குண்டம், தாபித்தான் - நிலை பெறச் செய்தான்.

795 பன்னி - மனைவி, பனவர் - வேதியர், துன்னி - கலந்து, ஆடுபு - ஆடி, தூயவன் - நாரதன், அடைவின் - முறையாக, ஆற்றினான் - செய்தான்.

796 வேணி - சடைமுடி, உயிர்ப்ப - பிறக்குமாறு.

797 எண்ணெய் நல்விழா - அபிடேக விழா, இயற்றுபு - இயற்றி.

[ மக்கள் மூவர்க்கும் அரசன் பேரிட்டு வளர்த்தமை கூறல் ]

798 உறுதி யக்கினி வண்ண னூழியும்
இறுதி யின்றிய வேம வண்ணனோர்
மறுவில் ரெத்தின வண்ண னென்றுபேர்
சிறுவர் மூவர்க்கும் செப்பி னனரோ. 36

[ மக்களோடு இறைவனைப் பூசித்து ஆங்கு உறைந்தானெனல் ]

799 செப்பி வேந்தனும் தெரிவை பங்கினர்க்கு
ஒப்பி லாதன சிறப்பு ஞற்றியே
இப்பெ ரும்பபுவி யினிதி னேத்துமா
றப்ப திக்கணுற் றமர்ந்திட் டானரோ. 37

[ பின்னர்ப் பரி மாமகம் புரிய அந்தணரோடு கூறி நிகழ்த்துதல் ]

800 அரசன் சில்பகற் செல்ல வன்பினல்
புரவி மாமகம் புதல்வர் தம்மொடும்
விரைவி னற்றுவான் வேத வேதியர்க்
குரைசெய் தன்னவ ரோடும் முற்றினன். 38

[ அந்தணர்களுக்கு பசுக்களைத் தானம் செய்து இறைவனுக்குப் பற்பல அணிகளைச் செய்தான் எனல் ]

801 சுரபி கோடிகள் சுருதி வாணருக்
கரச னல்கியே அமலற் கன்பினல்
பரவு பன்னிரு பதிகொ டுத்தொளிர்
விரவு பொற்பணி விழைவினுய்த்தரோ. 39

---

798 அக்கினி வண்ணன், ஏமவண்ணன் இரத்தினவண்ணன் இவை தருமசேனனின் மக்கள் மூவரின் பெயர்கள். செப்பினன் - பெயரிட்டான்.

799 தெரிவை பங்கினர் – சிவபெருமான், அப்பதி – நல்லூர்.

800 புரவிமாமகாம் – அசுவமேத யாகம், முற்றினன் – முடிவு செய்தான்.

801 சுரபி – பசு, சுருதிவாணர் - அந்தணர்கள், அமலற்கு - இறைவனுக்கு, பதி – ஊர்கள், பொற்பணி - பொற்கலன்கள்.

[ அவன் பன்மணி மாலைகள் பலவும் பரமனுக்கு அளித்துக் களித்து மகிழ்தல் ]

802 முத்த மாலையும் முழுத்த சோதிய
வித்துரு மத்தால் விளைத்த மாலையும்
பத்தி பத்திசேர் பதுமரா கத்தின
கொத்து மாலையும் கொடுத்துக் காவலன் 40

[ அவன் பல்வேறு வண்ணப் பட்டாடைகள் தந்து போற்றுதல் ]

803 பொன்னந் தானையும் பூம்பட் டாடையும்
மின்னும் நித்தில விளிம்பு போக்கிய
வன்னச் செல்வமும் வகைவ கைபெறப்
பன்னு சித்திரப் படமும் ஈந்தரோ 41

[ அவன் பூசைப் பாத்திரங்களும் வாகனாதிகளும் வழங்கி மகிழ்தல் ]

804 செம்பொன் வள்ளமும் சிறந்த வேள்வியின்
அம்பொன் வள்ளமும் அனைய வேனமும்
பைம்பொன் வாகனம் பலவும் பாங்கினால்
உம்ப ரும்பருக் குதவிப் பார்த்திபன் 42

---

802 முழுத்த – முழுமையான, வித்துருமம் – பவழம், பத்தி – வரிசை, பத்தி – பக்தி,

803 பொன்னந்தானை – பொன்னாடைகள், விளிம்பு – கரை, செல்வம்– ஆடைகள்.

804 வள்ளம் – பாத்திரங்கள், ஏனம் – பெரிய பாத்திரங்கள், உம்பர் உம்பர் – தேவ தேவர்,

[ இறைவனுக்கு நல்விழாக்கள் எடுத்து மகிழ்ந்தான் எனல் ]

805 அண்ண லார்தமக் கன்பு மீக்கொள
எண்ணி லாப்பணி யின்ன வாறுசெய்
துண்ண யந்துநல் விழவு முய்த்தவன்
விண்ண வர்க்குத் தென்மேற்குத் திக்கினில் 43

[ தென்மேற்குத் திசையில் ஒரு தீர்த்தவாவியை அவன் உண்டாக்கினான் எனல் ]

806 செருவ வாளிமூன் றிடையிற் றிவ்விய
உருவ லிங்கமாங் கொன்று தாபித்துத்
தரும தீர்த்தமென் றொருத டாகமும்
சுருதி வாய்மையாற் றொட்டிட் டானரோ. 44

[ தைப்பூச நாளில் அதிற்படிந்து வழிபடுவார் எய்தும் பலன் கூறல் ]

807 மகரத் திங்களின் வாய்ந்த பூசநாட்
பகரு மத்தடம் படிந்த மேலவர்
புகர னைத்தையும் போக்கிப் பொன்றுறா
நிகரில் மெய்க்கதி நெறியி னெய்துவார். 45

---

805 மீக்கொள – பெருக, உள்நயந்து – சிந்தை விரும்பி, விழவும் – விழாக்களும், விண்ணவர்க்கு – இறைவன் திருக்கோயிலுக்கு.

806 வாளிமூன்றிடையில் - மூன்று வில்லளவையான இடத்தில், தடாகம் – குளம், சுருதி – வேதம், தொட்டிட்டான் – தோண்டியமைத்தான்.

807 மகரத்திங்கள் – தைத்திங்கள், படிந்த – மூழ்கிய, புகர் – குற்றங்கள், பொன்றுறா – இறவாத, மெய்க்கதி – வீடுபேறு.

[ வைகாசிப் பூரணையில் அதிற்படிந்து வழிபடுவார் எய்தும் பலன் கூறல் ]

808 இடபத் திங்களின் எய்தும் பூரணைத்
தடம திற்படிந் தாடித் தாபித்த
கடவு ளாவலங் கனிவிற் சூழ்வந்தோர்
புடவி சூழ்பயன் பொருந்தி வாழ்வரால். 46

[ சுந்தராசலம் பூலோக கயிலாயமென அதன் சிறப்புக் கூறல் ]

809 நேச முற்றுயர் நினைந்து பற்பல
பேச லொன்கொலாம் பிஞ்ஞு கன்னுறை
மாசில் சுந்தர சயிலம், வாரிசூழ்
காசி னிக்குள்வண் கயிலை யாகுமால். 47

[ இச்சருக்கத்தை ஓதுவார் உரைப்பார் உணர்வார் எய்தும் பலன் கூறுதல் ]

810 விளம்பு மிக்கதை பகரும் மேலவர்
உளங்க னிந்துகேட் டுருகுந் தூயவர்
வளங்கொள் பூதலம் மரபின் ஆண்டுபின்
களங்க னிக்களன் கயிலை சேர்வரால். 48

தருமசேனச் சருக்கம் முற்றும்

---

808 இடபத்திங்கள் - வைகாசித்திங்கள், பூரணை - பௌர்ணமி நாள் (விசாகம்), கனிவின் - அன்பினால், புடவி - உலகம்,

809 உயர் - உயர்வை, சயிலம் - மலை, வாரி - கடல், காசினி - உலகம்.

810 பகரும் - உரைக்கும், களங்கனிக்களன் - களங்கனி போலும் கண்டத்தையுடைய சிவபெருமான்.

பதினெட்டாவது

# தீர்க்க துண்டச் சருகம்

[ முனிவர்கள் தீர்க்க துண்டன் வரலாற்றைச் சூதரிடம் வினவல் ]

811 அலகில் கேள்வி யருந்தவ ரன்பினால்
உலக மேத்தும் உறுதவச் சூதனை
திலக மாகிய தீர்க்கதுண் டன்செயல்
குலவு மாக்கதை கூறெனக் கூறுவான். 1

[ இரண்டு பாக்கள் ஈசானதிக்கில் அமைந்த பன்னசாலையில்
நாடொறும் வழங்கும் பலிக்கொடை பற்றிக் கூறும் ]

812 அளக்க ருண்ட வருந்தவன் கற்பினிற்
றுளக்க மின்றிய தூமொழி தன்னுடன்
களக்க ளிக்களத் தானுக்கீ சானத்தின்
விளக்க மெய்திய வேதியர் சூழவே. 2

813 பன்ன சாலை யமைத்துப் பரிவினால்
அன்ன நல்லூர் அமர்ந்தன னந்நாள்
துன்னு திங்கட் சுடரவ னோடெய்தி
மன்னு வைகலின் வாய்ந்த வான்பலி. 3

---

811 உறுதவம் - மிக்க தவம், குலவும் – புகழ் பெற விளங்கும்.

812 அளக்கர் – கடல், உண்டவன் - அகத்தியன், தூமொழி – உலோபா முத்திரை.

813 திங்கள் சுடரவனோ டெய்திமன்னு நாள் – அமாவாசை நாள், வான்பலி – படையல்.

[ அப்பலியைப் பெற ஒரு காக்கை அங்கமர்ந்திருந்து அப்பலியைக் கௌவிக்கொண்டு ககனத்திற் பறந்தது எனல் ]

814 இடுதல் நோக்கி யிருந்ததோர் வாயசம்
செடிகொள் மென்சிறை தீர்க்கதுண் டன்னெனப்
படியிற் பேர்பெறும் பான்மைய தப்பலி
கடிதின் வவ்விக் ககனத் தெழுந்ததே. 4

[ அப்பலியை மற்றொரு காகம் பெறத் தொடர்ந்து அதன் பின் பறந்து வர அது அதனை நழுவ விடுதல் ]

815 எழுந்து தென்திசை யேகிய தேகலும்
அழுந்த வவ்விய வப்பலி தன்னையோர்
செழுஞ்சி றைக்கொடி சென்று தொடர்ந்திடப்
புழுங்கி வீழ்த்திப் புறம்புக்க தாமரோ. 5

[ அப்பலியானது ஓர் இரவலன் பிச்சைப் பாத்திரத்தில் வந்து வீழ்ந்ததெனல் ]

816 வீழு மப்பலி வீதியி னெய்திய
தாழும் மூப்பிற் றளர்ந்தவோ ராதுலன்
காழி லாத கடிஞைக் கலத்தினில்
ஊழின் வீழ்ந்தது வீழவு வந்தவன் 6

[ அவன் அப்பலியை உண்டு பசி நீங்கினான் எனல் ]

817 எந்தை நல்லரு ளாலிஃ தெய்திய
துய்ந்த னம்மினி யென்ன வொருங்குடன்
அந்த வன்னத்தை யாழ்புன லோடளாய்
சிந்து றாதருந் திப்பசி தீர்ந்தனன். 7

---

814 வாயசம் – காக்கை, செடி – கருமை, வவ்வி – பற்றிக்கொண்டு, ககனம் – ஆகாயம், எழுந்தது – பறந்து சென்றது.

815 கொடி – காக்கை, புழுங்கி – வெகுண்டு, வீழ்த்தி – நழுவவிட்டு.

816 அப்பலி – தீர்க்க துண்டப் பலியாகிய உணவு, ஆதுலன் – இரவலன், கடிஞைக்கலம் – பிச்சைப் பாத்திரம், ஊழின் – விதியினால்.

817 ஒருங்குடன் – அப்பலி முழுதையும், ஆழ்புனலோடு – நீரோடு கரைத்து, சிந்துறாது – சிந்திச் சிதறாமல்.

[ பறந்து சென்ற காகத்தை ஒரு வேட்டுவன் வீழ்த்தல் ]

818 பலியை வீழ்த்துப் பறந்தப் புறஞ்செலும்
ஒலிசெய் காகத்தை யுற்றவோர் வேட்டுவன்
வலிதின் எய்தனன் எய்தலும் மற்றது
மெலிய மண்ணிடை வீழ்ந்தது வாமரோ. 8

[ காகத்தின் உயிர் நீங்கியபோது தேவ விமானம் வந்து அதனைத் தூக்கிச் சென்றதெனல் ]

819 வெள்ளை யானை விதிமுறை தாபித்த
தெள்ளு சோதிச் சிவலிங்க மேற்றிசைத்
துள்ளி யாருயிர் சோர்ந்தது சோர்தலும்
எள்ளொ ணுதவி மானம்வந் துற்றதால். 9

[ தேவர்கள் புடைசூழ அவ்விமானம் சென்றதெனல் ]

820 முத்த நீள்வடந் தூக்கி முறைமையால்
வித்துரு மம்வியன் கானி றுவிய
தத்து சோதியத் தாவில்வி மானத்தின்
வித்த கத்திமை யோர்புடை மேவவே. 10

[ தேவமாதர்கள் போற்றச் சென்றது அக்காகம் எனல் ]

821 வீசு சாமரை விண்ணக மாதரார்
நேச மேவி நெறியி னிரட்டநீள்
வாச மாமலர் தூவி மணிமுடித்
தேசு லாமிமை யோர்திசை போற்றவே. 11

---

818 ஒலிசெய் காகத்தை – கரைந்து ஒலியெழுப்பிய அக்காக்கையை.

819 வெள்ளையானை - ஐராவதம், சோர்ந்தது – விட்டது.

820 வியன்கால் நிறுவிய விமானம், வித்தகம் - ஞானம், புடை - பக்கம்.

821 தேவமாதர் சாமரையிரட்ட மலர்தூவித் தேவர்கள் போற்றக் காக்கை விமானத்திற் சென்றது என்பது கருத்து.

[ தேவகணங்கள் அதனைக் கயிலைக்குக் கொண்டு சென்றதெனல் ]

822 தீர்க்க துண்டன் சிறந்தமெய்த் தேவனாய்
மேற்கொள் சோதி விமானத்தின் மீதிவர்ந்
தேற்கும் வண்ணம் இருங்கயி லைப்புறம்
பாற்க ணங்கொணர்ந் தேகப் படர்ந்ததே 12

[ காகம் கயிலைநாதனைக் கண்டு வணங்கலும் இறைவனருளல் ]

823 படர்ந்து சென்று பரன்கழல் போற்றுபு
திடங்கொள் காகம் சிறந்தயல் நிற்றலும்
நடங்கொள் நாதன் நயப்புடன் நோக்கியே
தொடர்ந்து காதலின் இன்னணஞ் சொல்கிறான். 13

[ நல்லூரில் நீ அன்னதானம் புரிந்தமையால் கணங்கட்கு
அரசாய் வாழ்க என இறைவன் கூறுதல் ]

824 பொன்னு லாம்நம் பொருவில்நல் லூரில்நீ
அன்ன தானம் இயற்று மமைதியான்
மன்னு கின்ற கணங்கட்கு மன்னனாய்
துன்னி வாழ்கெனச் சொற்றனன் சொற்றலும் 14

[ மண்ணுலகில் இக்காக்கை செய்த செயல் யாதெனத் தேவர்கள்
இறைவனை வினாவுதல் ]

825 அம்பொற் சேவடி போற்றி யவணின்ற
உம்ப ராரைய வோதுக வத்திறம்
இம்பர் நாட்டி லிதுசெய்த வாறென
நம்பன் நோக்கி நகைத்திது சொல்லுவான். 15

---

822 **கணங்கள்** - பூதகணங்கள், கொணர்ந்தேக - அழைத்துச் சொல்ல.
828 **போற்றுபு** - போற்றி, நாதன் - இறைவன், காதலின் - அன்பினால்.
824 **அமைதியால்** - முறைமையால், துன்னி - அமைந்து.
825 **அவண் நின்ற** - ஆங்கிருந்த, உம்பரார் - தேவர்கள், இது - காகம்.

[ காசந்தான் பற்றிச் சென்ற பலியை ஒரு இரவலன் கலத்திலிட்டமையைக் கடவுள் கூறுதல் ]

826 பலிக வர்ந்து படரவோர் வாயசம்
மெலிவு செய்யலும் வீழ்த்த வியன்பலி
கலியி ளுேனூர் கடிளைக் கலத்தினில்
நலியு மாறின்றி நன்குற வுற்றதே. 16

[ அவன் அதனை உண்டு பசி தீர்ந்தாளுகலின் காகம் இப்பதவி அடைந்ததென இறைவன் விளக்குதல் ]

827 உற்ற பிண்டத்தை யுண்டவன் தீப்பசி
முற்றும் நீங்கும் முறைமையி ளுலிந்தப்
பெற்றி யெய்திய தாலெனப் பிஞ்ஞகன்
சொற்ற லோடுந் தொழுது வியந்தனர். 17

[ நல்லூரில் அன்னதானம் செய்தவர் தம் பலன் கூறலரிதெனச் சூதன் உரைத்தல் ]

828 ஆத லாற்பரன் நல்லூ ரகவயின்
காத லாலன்னங் காண்வர வீந்துளோர்
கோதி லாத பயனைக் குறித்துயான்
ஓது மாறெளி தோவென வோதுவான். 18

[ நல்லூரிற் காகம் வீழ்ந்து உயிர்விட்ட இடம் தீர்த்தமாகிச் சிறந்தது என விளம்பல் ]

829 தந்தி போற்றிய தாணுவின் சன்னிதி
முந்தை யக்கொடி வீழ்ந்த முறைமையால்
அந்தத் தானம் அகன்றட மாகுபு
சிந்து சூழ்புவி போற்றச் சிறந்ததே. 19

---

826 பலி – தீர்க்கதுண்டப் பலி, வாயசம் – காக்கை, கலியினன் – பசி வறுமையுற்றவன். நலியுமாறின்றி – குற்றப்படாமல், உற்றது – வீழ்ந்தது.

827 பெற்றி – பதவி, தொழுது – காக்கையைத் தொழுது,

828 அகவயின் – இடத்தில், அன்னம் – உணவு, கோது – குற்றம், பயன் – புண்ணிய பலன்.

829 தந்தி – யானை (ஐராவதம்), அக்கொடி – அந்தக் காக்கை, அகன்றட மாகுபு – அகன்ற தீர்த்தமாகி, சிந்து – கடல், புவி – உலகம்.

[ அந்தந்தடம் தேவதீர்த்த மென்னும் பெயர் பெற்றுத்
திகழ்கின்றதெனல் ]

830 தேவ னுய்க்கொடி சென்ற திறத்தினன்
மேவு மத்தடம் மேதினி மேலென்றும்
ஓவில் கேள்வி யுறுதவத் தந்தணீர்
தாவில் தேவதீர்த் தம்மெனச் சாற்றுவார். 20

[ அத்தீர்த்தத்தில் ஆண்டுதோறும் மூழ்கி இறைவனை
வழிபடுவோர் எய்தும் பலன் கூறுதல் ]

831 ஆண்டு தோறும் அதிலெய்தி யன்பினுற்
சேண்ட லம்புகழ் தீர்க்கதுண் டன்படிந்
தீண்டு தர்ப்பண மாதி யெவைகளும்
காண்ட குந்திறஞ் செய்து கனிந்தரோ 21

[ இதுவுமது ]

832 ஐய னைந்தெழுத் தோதி யவணமர்ந்
துய்யும் வண்ணம் உவப்புடன் போற்றியோன்
செய்ய சோதி விமானத்திற் சென்று, மான்
கையன் வாழுங் கயிலையைச் சேர்வனால். 22

[ தையமாவாசையில் அதிற்படிந்து அன்னதானம் செய்வோர்
எய்தும் பலன் கூறுதல் ]

833 மருவு தையமா வாசியி னத்தடத்
துருகு மன்பி னுவப்புட னுடியே
பொருவி லாவன்ன தானம் புரிந்துளோர்
தெரிவை பாகன் கயிலையைச் சேர்வரால். 23

---

830 காக்கை வீழ்ந்த இடத்தில் தோன்றிய தடம் தேவதீர்த்தம் என வழங்குகின்றது என்பது கருத்து. தீர்க்க துண்டத் தீர்த்தமென்பதும் அதன் பெயர்,

831 ஈண்டுதர்பணம் - நிறைவுடைய தர்பணாதி கருமங்கள், கனிந்து - அன்புற்று.

832 ஐந்தெழுத்து - பஞ்சாக்கரம், அவண் - அவ்விடம், மான்கையன் - மானேந்திய சிவபெருமான்.

833 பொருவிலா - ஒப்பிலாத, தெரிவை - உமையம்மை.

**[ அத்தீர்த்தத்திலாடி யானைமுகனை வணங்கி வழிபடுவோர் எய்தும் பலன் கூறுதல் ]**

834 சொற்ற வைகலிற் றூய்தட மாடுபு
கற்றை வேணிக் கசேசுரன் சன்னிதிக்
குற்று தீப வுகளங்க ளேற்றினர்
மற்றவ் வானவன் வான்பதஞ் சேர்வரால். 24

**[ இக்கதை கேட்டோர் கூறினோர் எய்தும் பலன் கூறல் ]**

835 இப்பெ ருங்கதை கேட்குமி யல்பினோர்
செப்பு கின்ற திறனுடை மேலவர்
ஒப்பில் போகம் உலப்பில வெய்திப்பின்
அப்பு லாஞ்சடை யானடி சேர்வரால். 25

*தீர்க்க துண்டச் சருக்கம் முற்றும்.*

---

834 ஆடுபு – ஆடி (மூழ்கி), கசேசுரன் – ஐராவதம், **தீப உகளம்** – இரட்டை விளக்கு, வான்பதம் – வீடுபேறு.

835 **உலப்பில** – அழியாதவை, அப்பு – நீர் (கங்கை), **உலாம்** – **விளங்கும்**, **சடையான்** – சிவபெருமான்.

பத்தொன்பதாவது

# எக்கிஞு குத்தச் சருக்கம்

[ முனிவர்கள் யக்ஞுகுப்தன் வரலாற்றைக் கூறுக எனச் சூதரிடம் கேட்க அவர் சொல்ல முற்படுதல் ]

( அறுசீர் விருத்தம் )

836 சொற்றவத் தீர்க்க துண்டன்
தோமிலாக் காதை கேட்டோர்
நற்றவ வணிகன் உய்ந்த
நாடருஞ் சரிதை யிப்பால்
உற்றுநீ கூறு கென்ன
உறுதவர் வினவ லோடும்
தெற்றெனச் சூத னைந்து
சிந்தையன் பொழுகச் சொல்வான். 1

[ சுந்தராசலத்திற்கு ஈசான திசையில் ஒரு சிறந்த பதியுண்டு அதன் கீர்த்தி பெரிது எனல் ]

837 சுந்தர கிரிக்கீ சானத்
தூயநற் றிசையி னங்கட்
கந்தமா புரம தென்னக்
காவிரி வடக்க தாக
அந்தமில் பதியொன் றேங்கும்
அப்பதி மேன்மை தன்னை
எந்தையே யுரைப்ப தல்லால்
யாவரே யுரைக்க வல்லார். 2

---

886 **தோமிலாக்** – குறையில்லாத, (தோம் – குற்றம்), **நாடரும்** – ஆய்ந்துணர்தற்கரிய, **உற்று** – மனம் பொருந்தி, **உறுதவர்** – மிக்க தவமுடையவர், **தெற்றென** – தெளிவாக.

887 **கந்தமாபுரம்** – முருகத்தலங்களில் ஒன்று, **பதி** – புண்ணியத்தலம், **எந்தை** – இறைவன்.

**[ அந்நகர் முருகன் கோயிலுக்கு வடக்கில் ஒரு தீர்த்தமுண்டு அது எல்லா நோய்களையும் போக்கவல்லது எனல் ]**

838 அத்தகை நகரி னங்கண்
அவுணரை யடர்த்த வேலோற்
குத்தர திசையிற் கூபம்
ஒன்றுள ததனி னாடிற்
குத்திர மெவையுந் தீரும்
குமரகண் டமும்போ மாங்கே
சத்திய விரதன் சித்தி
சார்ந்ததோர் தடமு முண்டால். 3

**[ அக்கினித் திசையில் ஒரு பிரம தீர்த்தமும் உண்டு அந்நகரின்கண் எக்கியகுப்தன் என்னும் வணிகன் ஒருவன் வாழ்ந்தான் எனல் ]**

839 பாவகன் றிசையி னோர்வண்
பலாசின்கீழ்ப் பிரம தீர்த்தம்
மேவர விளங்கு மந்த
மேதகு பதியில் வாழ்வோன்
தாவிலா வணிகர் கோமான்
தனபதி நிகர்த்த செல்வன்
ஏவுமா றெக்கிய குத்தன்
எனுமபி தான முற்றோன். 4

**[ அவன் ஒரு திருவாதிரைத் திருநாளில் நல்லூரில் வந்து வாணிகஞ் செய்யும் பொருட்டுப் பண்டங்களோடு வந்து தங்கினன் எனல் ]**

840 பரமனா திரைநன் னாளில்
பண்டங்க ளெவையுங் கொண்டே
மருவிய நல்லூ ரெய்தி
வாணிகஞ் செய்வா னண்ணி

---

838 அவுணர் – சூரபத்மன் முதலானோர், உத்திர திசை – வடக்குத்திக்கு, கூபம் – கிணறு, ஈண்டுத் தீர்த்தவாவியைக் குறித்தது, குத்திரம் – கொடுமை, குமரகண்டம் – மிக்க வலியைச் செய்யும் ஒரு வலிப்பு நோய், சித்தி – மோட்சம்.

839 பாவகன் – அக்கினிதேவன், பலாசின் – பலாசமரத்தின், மேவர- பொருந்தி, தனபதி – குபேரன், ஏவுமாறு – அழைக்கப்படுதற்கு என்பது கருத்து.

பிரமதீர்த் தத்தின் கீழ்ப்பாற்
பிறங்குமப் பண்ட மெல்லாம்
ஒருமையி னுய்த்துக் காவல்
ஓம்பின னுவகை பூப்ப 5

[ அவ்விழாவில் ஓர்பால் நடைபெறும் விஞேதக் கூத்துக்களைக் காண எண்ணி வருபவன் அம்பாள் சந்நிதியை வந்தடைந்தான் எனல் ]

841 விடர்பல ரோடுங் கூடி
விஞேதங்க ளவையுஞ் செய்து
மடநடை மடந்தை நல்லார்
வண்முலைப் போகம் வேண்டி
நடனமூர்த் திக்கு முன்செய்
நாடகம் பார்க்கச் செல்வான்
தடவரை யுயர்த்த பாவை
சன்னிதி சார வந்தான். 6

[ அங்கு நிகழ்ந்த தீர்க்கதுண்டன் புராணத்தைக் கேட்டு மகிழ்ந்து நேரே தன் இருப்பிடம் வந்து சேர்ந்தான் ]

842 வந்தவ னுங்கு விஞ்சை
மாதவர் பலருங் கூடிச்
சிந்தனை செய்து கூறும்
தீர்க்கதுண் டன்பு ராணம்
புந்தியின் மகிழ்ச்சி கூரப்
பொருள்சில வினவி யன்ஞேன்
அந்தமி லந்த ணுளர்
அடிதொழு தகன்று மீண்டான். 7

---

840 ஆதிரை நன்னுளில் - திருவாதிரைத் திருவிழாவில், பிறங்கும் - விளங்கும்.

841 விடர் - காமத்தைக் கருதும் இளையோர், நடனமூர்த்திக்கு முன் - வீதி விடங்கர் மண்டபத்திற்கு முன்னர், நாடகம் - நாட்டியநிகழ்ச்சி, தடவரை - இமயம், பாவை - உமையவள்.

842 விஞ்சை - வேதமந்திரக் கலைகள், புந்தி - சிந்தனை, கூர - மிக, பொருள் - மெய்ப்பொருள், வினவி - கேட்டுத் தெளிந்து.

[ அன்றிரவு பாலடிசில் உண்ணும்போது விக்கல் காரணமாக உயிர் நீத்தான் எனல் ]

843 படுங்குடி லதனுட் புக்குப்
பண்டங்கள் பலவும் நோக்கி
இடம்பெறு கலத்தி லேந்தும்
இனியபா லடிசி லுண்ண
அடைந்தன னயிலுங் காலை
அன்னமன் னவன்கண் டத்தில்
மிடைந்திட வுடலஞ் சோர்ந்து
வீய்ந்தனன் கணத்து மாதோ. 8

[ அவனைச் சிவகணங்கள் விமானத்திலேற்றிக் கைலை கொண்டு சென்றன. காலதூதர்கள் இயமனிடம் சென்று முறையிட்டனர் எனல் ]

844 வீதலுஞ் சிவக ணங்கள்
விமானத்தி லவனை யேத்திப்
பூதலத் தெவரும் போற்றப்
பொன்னக ரிமையோர் சூழ
நாதன்வாழ் கயிலை வெற்பில்
நண்ணினர் நண்ணக் கால
தூதரு மதனை நோக்கித்
தொழுதுதம் மிறைக்குச் சொற்றார். 9

[ கைலை சென்ற அவ்வணிகனை இறைவன் அழைத்துத் தன்னொத்த உருவத்தை அருளினான் எனல் ]

845 சொற்றலுங் கூற்று மஞ்சித்
துணுக்கமுற் றமல னற்றும்
பெற்றியா ரறிவா ரென்னப்
பேசித்தன் னகரத் துற்றான்

---

843 படுங்குடில் – தான் தங்கியிருக்கும் குடில், பாலடிசில் – பாற்சோறு, அயிலுங்காலை – உண்ணும்போது, மிடைந்திட – அடைத்துக் கொள்ள, வீய்ந்தனன் – இறந்தான்.

844 பொன்னகர் – தேவலோகம், நண்ணினர் – அடைந்தனர், தம் இறை – யமன்.

மற்றவன் றன்னை யீசன்
வருகென வருளித் தன்போல்
உற்றதோ ருருவ மன்னேற்
குதவின னுவகை பூத்தான். 10

**[ தீர்க்கதுண்டன் சரிதையைச் செவிமடுத்த காரணத்தால் வணிகன் இறைவன் வடிவுபெற்றுச் சிறந்தான் எனல் ]**

846 பண்டங்கள் பகர வந்தோன்
பண்ணவன் சரிதை கேட்டுக்
கொண்டனன் வடிவம் அம்ம
குழகன்போ லென்று சொன்னற்
றெண்டர்தஞ் செயலை நல்லூர்
துளக்கில்மேன் மையுமெங் கோமான்
தண்டலில் அருளும் யாரே
சாற்றுதல் புரிய வல்லார். 11

**[ இத்தகுசரிதங் கேட்கும் நல்லோர் இறைவனை எய்தி இன்புறுவர் எனல் ]**

847 ஆதலா லினைய காதை
அன்புடன் வினவும் நல்லோர்
ஓதநீர் கடலந் தானை
உலகெலா மினிதி னண்டு
வேதனும் முகுந்தன் றானும்
விண்ணவ ரெவரும் போற்ற
நாதனர் தாளி லென்றும்
நண்ணிவீற் றிருப்பர் திண்ணம். 12

( எக்கினு குத்தச் சருக்கம் முற்றும். )

845 கூற்றும் அஞ்சி – யமதர்மன் அச்சமுற்று, பெற்றி – கருத்து, மற்று அவன் – அந்த வணிகன், உருவம் – உருத்திர வடிவம்.

846 பண்ணவன் – தீர்க்கதுண்டனைக் குறித்தது, குழகன் – சிவபிரான், துளக்கில்–நடுக்கமில்லாத, தண்டலில் – தாழ்வில்லாத, சாற்றுதல் – சொல்லுதல்.

847 கடலந்தானை – கடலை ஆடையாக உடைய, வேதன் – பிரமன், முகுந்தன் – திருமால்.

இருபதாவது

# கோபிதாரத்துவாசச் சருக்கம்

**[ முனிவர்கள் கோவிதாரத்துவசன் வரலாற்றைக் கூறியருள்க எனச் சூதர் கூறத் தொடங்குதல் ]**

( எழுசீர் ஆசிரிய விருத்தம் )

848 முண்டகத் தவிசில் விரிஞ்சனை யனைய
முதுணர் மாதவ ரெவரும்
எண்டிசை வளாகம் முழுவதும் புரப்போன்
இயற்றமிழ் நாட்டினுக் கிறைவன்
தண்டமிழ் முனிவன் வைதவச் சாபம்
தணந்தமை சாற்றுக வெனலும்
துண்டமா மதியம் முடித்தவன் பாதம்
தொழுதுசூ தனுந்தொகுத் துரைப்பான். 1

**[ கௌதமை நதிக்கரையில் வாழும் காவலன் ஒரு நாள் தேவதுதி என்னும் முனிவர் வர அவரை வரவேற்று மகிழ்ந்தான் எனல் ]**

849 சீலமா தவத்தோன் ஐந்தழல் நாப்பண்
சேர்ந்துசெய் கொள்கைபெற் றுள்ளோன்
காலவ னென்னும் பெயரினன் செழுநீர்க்
கவுதமைக் கரையினி லுறைவோன்
ஏலவார் கூந்தல் மனையொடும் மேவி
இல்லறை மியற்றுமக் காலை
ஞாலமுற் றேகி வருந்தேவ துதியாம்
நாமனோர் முனிவனைங் குற்றான். 2

---

848 **விரிஞ்சன்** – பிரமதேவன், வளாகம் – பூமி, இயற்றமிழ்நாடு – மதுரை, தண்டமிழ் முனிவன் – அகத்தியன், தணந்தமை – நீங்கினமை, துண்டமாமதி – பிறைச்சந்திரன்.

849 ஐந்தழல் – பஞ்சாக்கினி, நாப்பண் – நடுவிடத்தில், கவுதமை – நதியின் பெயர், நாமன் – பெயரையுடையவன், அங்கு – அவனிடம்.

[ காலவன் முனிவரை இங்கு எழுந்தருளிய காரணம் என்ன
எனப் பணிவுடன் கேட்டான் எனல் ]

850 உற்றமா முனியை எதிர்ந்துமற் றன்னோன்
உவப்பினுற் பாத்திய முதல
பெற்றியி னுதவி ஆசனத் திருத்தி
பிறங்குமா தித்தியம் புரிந்து
கற்றவ ரிருவ ரளவளா யுறையுங்
காலையில், யாங்குசென் றுற்றாய்
தெற்றெனப் பகர்தி யென்றவ னுரைப்பத்
திகழ்தேவ துதியுஞ்செப் புவனல். 3

[ தேவதுதி தான் தீர்த்த யாத்திரை மேற்கொண்டு வந்தமை கூற
அவற்றின் சிறப்புக்களைக் காலவன் உரைக்க
என வேண்டல் ]

851 வடாதுகே தாரந் தொடங்கியெம் பெருமான்
வாழுமெய்த் தலமுமத் தலத்திற்
றடாகமும் நதியும் ஓடையும் முதல
தண்புனற் றீர்த்தங்க ளெவையும்
விடாதுசென் றாடி மீண்டன னென்ன
மேதகு காலவன் நோக்கிக்
கடாவுதல் புரிந்தான் அப்பெருந் தகைமை
கட்டுரை செய்கென மாதோ. 4

[ இப்பாடல் முதல் பத்தாம் பாடல் வரை பல தலங்களையும்
அவற்றின் தீர்த்தங்களையும் குறிப்பிடுகிறார். கேதாரம்,
காசி, பிரயாகை, கயை ஆய பதிகளில் உள்ள
தீர்த்தங்களிற் படிந்து வந்தமை கூறல் ]

852 போற்றுகே தாரத் திருமலை யதனிற்
புட்கரங் காசிமா நகரின்
ஏற்றுயர் கொடியோ னருளென விளங்கும்
இயன்மணிக் கன்னிகைத் தீர்த்தம்

---

850 ஆதித்தியம் – அதிதிபூசனை, தெற்றென – தெளிவாக, பகர்தி – கூறுவாயாக.

851 வடாது – வடதிசையின்கண் உள்ள, மேதகு – சிறந்த, கடாவுதல் – வினவுதல், தகைமை – சிறப்பு, கட்டுரை செய்க – சொல்லுக.

நாற்றிசை புகழும் பிராகையி னதன்கண்
நளிபுனற் றிருவேணி தீர்த்தம்
ஆற்றல்சால் கயையின் றென்புல வாணர்க்
கரும்புனற் றீர்த்தமற் றுமால். 5

[ அம்புசம், மணிகடம், சத்தாரணியம் காளத்தி ஆயதலங்களின் தீர்த்தங்களைக் கூறுதல் ]

853 வயங்கலம் புசத்தின் வன்னிநற் றீர்த்தம்
மணிகூட மென்னுமத் தலத்தின்
நயங்கெழு திரிபுட் கரச்செழுந் தீர்த்தம்
நாடுசத் தாரணி யத்தின்
பயங்கெழு பிரம தீர்த்தம்போல் முகரி
பரவுகா ளத்திமால் வரையில்
வியந்திடும் வளங்கூர் பிரசமற் றதன்கண்
மேதகு வருணமெய்த் தீர்த்தம். 6

[ மாளவம், வடாரணியம், காஞ்சி, சிதம்பரம் ஆய இடங்களில் உள்ள தீர்த்தங்களைக் கூறல் ]

854 மாளவ மதனிற் சூரிய தீர்த்தம்
வடாரணி யத்தல மதன்கட்
கோளுலாங் கதிர்வேற் குகனெடுந் தீர்த்தம்
குலவுசீர் காஞ்சிமா நகரின்
தாளதா மரைகள் ஏடவிழ்ந் தலரும்
சருவதீர்த் தஞ்சிதம் பரத்தின்
பூளைவே ணியனவன் தாளெனப் பொலியும்
புகழ்சிவ கங்கையந் தீர்த்தம். 7

---

852 புட்கரம், மணிக்கன்னிகை, திருவேணி, தென்புனல் இவை ஆங்காங்குள்ள தீர்த்தங்கள், ஏற்றுயர்கொடி – இடபக்கொடி, பிராகை – பிரயாகை, தென்புலவாணர் – பிதிரர்கள்.

853 வன்னிநற்றீர்த்தம் – அக்கினி தீர்த்தம், திரிபுட்கரம் – தீர்த்தத்தின் பெயர், சத்தாரணியம் – சப்தாரண்யம், முகரி – நதியின் பெயர் (பொன்முகரி), பிரசம் - தேன்.

854 மாளவ்ம் – தேசத்தின் பெயர், கோள் – ஒளி, தாளதாமரை – தண்டுகளோடு விளங்கும் தாமரை மலர்கள், ஏடு – இதழ், பூளை – பூளைப்பூ, வேணி – சடைமுடி.

[ திருவெண்காடு, சாயாவனம், இடைமருது, குடந்தை ஆய தலங்களின் தீர்த்தங்களைக் கூறுதல் ]

855 பரவுவெண் காட்டின் முக்குளத் தீர்த்தம்
பிரமன்சா யாவன மதன்கண்
உரவுநீர்ப் பொன்னித் தடங்கட லதனுள்
உற்றிடும் சங்கம தீர்த்தம்
கருவினை யகற்றும் இடைமரு ததன்கண்
காருண்ய வமிர்தநற் றீர்த்தம்
தரைபுகழ் கும்ப கோணமற் றதன்கண்
தண்புனல் மாமகத் தீர்த்தம். 8

[ மதுரை, தனுக்கோடி, பொதியமலை, சேரநாடு இவற்றில் உள்ள தீர்த்தங்களைக் கூறல் ]

856 மதுரையிற் பொற்றா மரைராமீச் சரத்தின்
மறிகடல் பொருதனுக் கோடி
முதுதமிழ் மலையத் தடவரை யதன்கண்
முத்தெறி தரங்கநீர்ப் பொருனை
புதுமலர்ச் சோலை யவ்வரைப் பாங்கிற்
பொலிபுன லத்திமா தீர்த்தம்
கதிர்விடு சுடர்வேற் சேரநன் னாட்டிற்
கரைபொரு வானிமா நதியே. 9

[ வஞ்சுளேசுரம், எற்கமாபுரம், கூர்மபுரம் சுந்தராசலம் ஆய இடங்களினமைந்த தீர்த்தங்களைக் கூறுதல் ]

857 வஞ்சுளே சுரத்தின் மேற்றிசை யதன்கண்
வயங்கொளிக் கெற்கமா புரமற்
றெஞ்சலில் புகழ்கூர் மபுரம தன்கண்
இரும்புனற் கேற்கவான் குண்டம்

---

855 உரவு - வலிமை, கருவினை - பிறவித்துன்பம்.

856 மறிகடல் - அலை மடிந்து வீழும் கடல், மலையம் - பொதியமலை, தரங்கம் - அலை, பொருனை - தாமிரவருணிநதி, அத்திமாதீர்த்தம் - குஞ்சரதீர்த்தம்.

அஞ்சன மிடற்ருன் அருளினல் நினைந்தேன்
ஆழ்புனற் காவிரி நாட்டிற்
பிஞ்சுமா மதிதோய் சுந்தரா சலத்திற்
பிரமநற் றீர்த்த மொன் றுளதால். 10

**[ சுந்தராசலத்தில் மூன்றுநாள் தங்கியிருந்தபோது ஓர் அதிசயம் நிகழ்ந்தது அதனைக்கேள் எனத் தேவதுதி காலவனிடம் கூறல் ]**

858 அப்பெருந் தீர்த்தத் தங்கியந் திசையின்
அலர்கதிர்த் தீர்த்த மொன் றுளதால்
இப்பெரும் புவனம் முழுவதும் போற்றும்
இயல்பின தத்தடத் தீரத்
தொப்பரு முவப்பான் மூன் றுநாள் வதிந்தேன்
உற்றதோ ரதிசயங் கண்டேன்
கப்பறு மனத்தாய் அன்னது புகல்வேன்
காதலாற் கேண்மதி யென்ருன். 11

**[ வைகைக் கரையில் உள்ள விசாலைநகரை ஆண்டு வந்தவன் கோவிதாரத்துவசன் என்னும் பாண்டிய மன்னன் எனல் ]**

859 தாளதா மரையின் வனமலைத் தெற்றித்
தடஞ்சினை வருக்கைமேற் ருவி
நாளிகே ரத்தின் முப்புடைக் குடக்காய்
நளிபுனல் வீழ்ந்துகப் புடைத்து
வாளைபாய்ந் துழக்கும் வைகையந் துறையின்
வளங்கெழு விசாலைமா நகராள்
கோளுலா மாளி யனைய திண் டிறலான்
கோவிதா ரத்துவச னென்போன். 12

---

857 எற்கமாபுரம், கூர்மபுரம் இவை தலத்தின் பெயர்கள், அஞ்சனம் - மை, அஞ்சனமிடற்ருள் - நீலகண்டன், பிஞ்சுமாமதி - பிறைச் சந்திரன்.

858 அங்கியந்திசை - அக்கினித்திக்கு, கதிர்த்தீர்த்தம் - சூரியதீர்த்தம், தீரத்து - கரையினில், கப்பு - கவலை.

859 வனம் - குளம், அலைத்தெற்றி - புறத்தே எற்றி, தடஞ்சினை - பெரிய கிளைகள், வருக்கை - பலாமரம், நாளிகேரம் - தென்னை மரம், முப்புடைக்குடக்காய் - தேங்காய், வாளை - வாளை மீன் விசாலை - நகரின் பெயர், ஆளி - சிங்கம், கோவிதாரத்துவசன்- அரசன் பெயர்.

[ அவன் சோழனை வென்று மிகச் சிறப்பாக ஆண்டுவரும் நாளில் ஒருநாள் அகத்தியர் அவனிடம் வந்தார் எனல் ]

860 வளவர்தம் பெருமான் தன்னொடும் பொருது
வாகை கொண் டவன்மணித் தோளிற்
களபவா சனைதோய் தாதகி மாலை
கவர்ந்துதன் கயனெடுங் கொடியின்
உளமலி பெய்த வெழுதிமே லுயர்த்தே
யொன்னலர்க் கடந்துவாழ் நாளில்
தளவவான் நகையாள் பாகனே யனைய
தமிழ்முனி யவன்மருங் குற்றான். 13

[ ஊழ்வினைப் பயனால் அவன் அவரை மதியாதிருக்கத் தன் மாணுக்கனை நோக்கி அவனைச் சபிப்பாயக எனத் தமிழ் முனிவன் கூறுதல் ]

861 மேலைநாட் புரிந்த தீவினை யுருப்ப
மெய்த்தவன் தனக்குப சாரம்
மாலைவே லுழவன் இழைத்தில னாகி
மதித்திடா திருத்தலை நோக்கி
நீலமாக் கடலை யருந்தியோன் றன்பால்
நின்றமா ணுக்கனை நோக்கி
ஆலமே யனைய செயலுடை யிவனை
அழன்றுநீ வைதியென் றறைந்தான். 14

[ அகத்தியரின் மாணுக்கன் உடனே அம்மன்னனை வெகுண்டு தொழுநோயாற்றுன்புறுக எனச் சபித்தான் எனல் ]

862 கும்பமா முனிவன் ஆணையா லவனும்
கொதித்துடன் எழுந்துவெய் துயிர்த்து
வெம்பியின் னுடலம் முழுவதும் குட்ட
வியாதியிற் குளித்தியென் றுரைத்தான்

---

860 வளவர் - சோழர், பொருது - போரிட்டு, களபம் - சந்தனச் சாந்து, தாதகி - ஆத்திமலர்., கயனெடுங்கொடி - மீன்கொடி, மலிபெய்த - உவப்பெய்த, ஒன்னலர் - பகைவர், கடந்து - வென்று, தளவம் - முல்லை மலர், வாள் - ஒளி, தளவவான் நகையாள்பாகன் - சிவபிரான், தமிழ்முனி - அகத்தியன்.

861 உருப்ப - வந்துசூழ, வேலுழவன் - மன்னன், ஆலம் - நஞ்சு, அழன்று - சினந்து, வைதி - சபிப்பாயாக, அறைந்தான் - கூறினன்.

நிம்பமா லிகையான் நடுநடுக் குற்று
நின்றனன் நிற்றலும் விரைவில்
இம்பரா னைத்துக் கண்புதைத் தகல
எய்திய தப்பிணி மாதோ. 15

[ அவ்வரசன் தன் நிலையைக் கருதியும் தனக்கு மகவின்மை கருதியும் வருந்தினான் எனல் ]

863 தேசுடைப் பசும்பொன் ஒளிதவிர்ந் தன்னான்
திவ்விய வுருவமும் கருகி
மாசுடைத் தொழுநோய் வலியினா லழுங்கி
மனந்தளர்ந் திரங்கிமா ழாந்து
நேசமுந் திறலும் உலகெலாஞ் செலுத்தும்
நிகரில்செங் கோலும்வெண் குடையும்
நாசமா யினவால் சிறுவரு மின்றால்
நன்றுநன் றாழ்வினை யென்றான். 16

[ பெரியோரை அவமதித்தோர் பெருந்துன்பமடைவர் என மேற்கோள்காட்டி இப்புராண ஆசிரியர் கூறுவது ]

864 விரிதலைப் பசும்பொன் னுலகொருங் காளும்
வேந்தனும் வேற்றுரு வடைந்தான்
குரைகடல் முழுதாள் நிருபரி லொருவன்
கொலைத்தொழிற் புலையனே யானான்
வரையினை யெடுத்த இலங்கைய ரிறையும்
மவுலிபத் திழந்துமாய்ந் தனனால்
பெரியவர் தம்மை யவமதித் தொழுகும்
பேதைய ருய்தல்மற் றுளதோ. 17

---

862 கும்பமாமுனி – தமிழ்முனி, குளித்தி – மூழ்குவாயாக, நிம்பமாலிகை – வேப்பமாலை, இம்பர் – இவ்வுலகத்தவர், அப்பிணி– சாபத்தால் நேர்ந்த குட்டநோய்,

863 தேசு – ஒளி, திவ்விய – மேலான, மாசு – குறை, மாழாந்து – மயங்கி, சிறுவருமின்றால் – ஆட்சிபுரிதற்குப் புத்திரரும் இல்லையே, நன்று நன்று – குறிப்புமொழி தீது தீது என்றபடி அல்லது, நன்று – பெரிது என்றுமாம்.

864 விரிதலை – விரிந்த இடத்தையுடைய, வேந்தன் – இந்திரன், பேதையர் – அறிவிலிகள்.

[ மன்னன் அகத்தியரிடமே பணிந்து பொறுத்தருள வேண்டுதல் ]

865 சிறியவர் பிழைத்தல் பொறுத்திடல் பெரியோர்
செய்தியென் பதுதிண்ண மாமால்
உறுதவன் றவனைக் குறுகிநாம் வணங்கி
உய்வகை புரிதியென் றிரப்பின்
மறைவலா னவனே யிரங்கியிப் பிணிக்கு
மாற்றுமின் றுரைப்பனென் றடுத்து
நறுமலர் தூவி அடிபணிந் திடலும்
நற்றவன் றண்ணளி சுரந்தே. 18

[ நல்லூரில் உள்ள சூரிய தீர்த்தத்தில் மூழ்கி இறைவனை வழிபடின் இச்சாபம் நீங்குமென அவர் அருளல் ]

866 பொன்னிமா நதிக்குத் தென்கரை யதன்கண்
பொருந்திய சுந்தரா சலத்திற்
றுன்னிய சோதிக் கதிரவன் றீர்த்தந்
துலங்கிய தத்தட மதனின்
மன்னிநீ மூழ்கி யிறைவனைப் போற்றின்
மாசெலாந் தவிர்ந்துறு நோயும்
நின்னைவிட் டகலும் மேனியும் பசும்பொன்
நிறமுமுன் போல்வரு மன்றே. 19

[ மன்னவன் நல்லூர் சென்று கதிர்த்தடத்தில் மூழ்க இறைவன் அவனுக்கு அருள் புரிதல் ]

867 என்றவ னியம்ப வரசனும் வணங்கி
ஏந்தலை விடைகொண்டவ் வாறு
சென்றனன் இரவி தீர்த்தநீர்ப் படிந்து
சிற்பரன் றுளினைப் போற்றி

---

865 செய்தி – செயல், திண்ணம் – உறுதி, உறுதவன்றவன் – முனிவரின் முனிவனாகிய அகத்தியன், புரிதி – அருள்வாயாக, மறை – வேதம், நற்றவன் – அகத்தியன்.

866 மன்னி – நிலைத்து, மாசு – பெரியாரைப் பிழைத்த குற்றம், மேனி – உடம்பு.

நின்றனன் நிற்ப நிருமல னருளி
நின்னுடை மாசெலாந் தவிர்த்தேம்
பொன்றுத லிகந்த காஞ்சன மென்னப்
பொலிகநின் னுருவெனப் புகன்றான். 20

**[ ஆகலின் இரவிதீர்த்தத்தின் பெருமை கூற ஒண்ணாது எனத் தேவதுதி கூறுதல் ]**

868 தம்பிரான் புகலு மக்கண மன்னோன்
சார்ந்தவன் பிணியெலாம் நீங்கி
உம்பராற் போற்றும் உருவமாங் கெய்தி
உய்ந்தன னத்தலம் போல
இம்பர்மீ துளதோ இரவிபுட் கரணி
யென்னவோர் தீர்த்தமொன் றுளதோ
நம்பனார் கருணை யளவையா ருரைப்பார்
நான்முகற் குஞ்சொல வரிதால். 21

**[ இச்சரிதம் கேட்டவர் அத்தடத்திற்படிந்த பலனைப் பெறுவர் எனல் ]**

869 இன்னணந் தேவ துதிதுதித் திரவி
யிரும்புனற் றீர்த்தமாக் காதை
தன்னிகர் தவத்துக் காலவற் குரைத்தான்
சாந்தமா ரம்முனி வரனும்
பின்னலஞ் சடிலத் திறைவன தருளின்
பெற்றியை நினைந்தக மலர்ந்தான்
பன்னுமிச் சரிதங் கேட்பினும் அந்நீர்
படிந்துளோர் பதம்பெறு குவரால். 22

கோவிதாரத்துவசச் சருக்கம் முற்றும்

---

867 சிற்பரன் - சிவன், நிருமலன் — இறைவன், பொன்றுதல் — அழிதல், இகந்த - நீங்கிய, காஞ்சனம் - பொன், பொலிக — விளங்குக.

868 வன்பிணி - குட்ட நோய், உம்பர் - தேவர்கள், நம்பனார் - இறைவன்.

869 பெற்றி - அருள் அந்நீர் — இரவிதீர்த்தம், பதம் — புண்ணிய பலன்.

இருபத்தோராவது

# பிரமதேவர் நாரதர்க்குத் தலவிசிட்ட முரைத்த சருக்கம்

[ பிரமன் நாரதற்கு நல்லூர் மான்மியங்கூறிய வரலாற்றை முனிவர் கேட்கச் சூதன் கூறல் ]

( *சந்தக்கலித் தாழிசை* )

*870 பண்டைச்சதுர் மறையோரிசை*
*பயில்நாரத முனிவர்க்*
*கண்டர்க்கிறை நல்லூரியல்*
*அயனேதிய சரிதங்*
*கொண்டிப்பொழு துரைசெய்கெனக்*
*கோதந்தவிர் சூதன்*
*துண்டப்பிறை முடியானடி*
*தொழுதன்பொடு சொல்வான்.* 1

[ நல்லூரில் நிகழும் அதிசயங்களைக் கண்ட நாரதன் அத்தலத்தின் சிறப்பைப் பிரமனிடம் கேட்டுத் தெளிய எண்ணுதல் ]

*871 விண்ணம்புவி தலமெங்கணும்*
*மேவுந்தவ முனிவன்*
*நண்ணுந்தல நதியாதிய*
*நாடித்தொழு தாடி*
*எண்ணந்தரு மிறும்பூதொன்று*
*கண்டிதெனத் தேர்வான்*
*தண்ணங்கம லத்தோனடி*
*சார்ந்தான் நெறிசேர்ந்தான்.* 2

---

870 அண்டர்க்கு இறை – சிவபிரான், அயன் – பிரமன், கோதம் – குற்றம்.

871 விண்ணம் – தேவ உலகம், புவி – மண்ணுலகம், ஆதிய – முதலியவற்றை, இறும்பூது – வியப்பு, தேர்வான் – தெரிந்து கொள்ள, கமலத்தோன் – பிரமன்.

[ நாரதர் பிரமதேவரிடம் சென்று வணங்கிக் கூறுதல் ]

872 வீணைத்தவ முனிவேதியன்
வேரிக்கம லத்தாள்
யாணர்க்கொழு மலர்தூவியி
றைஞ்சிப்புக ழேத்திச்
சேணிற்பொலி பொன்னிக்கரை
தென்பாங்கரின் வரையொன்
றாணிக்கன கச்சோதிய
தாகிப்பொலி தருமால். 3

[ இதுவுமது ]

873 அதன்மீதொரு லிங்கஞ்சுவை
யமுதத்துரு வாகி
விதமைந்துடை நிறமொன்றுவி
ளங்கித்தனி வைகும்
புதுவேரிம ணக்குந்தெளி
புனல்வாவியு மொன்று
முதுவானவ! வுளத்தாலதின்
மூழ்கிச்சில தூயோர் 4

[ பிரமதேவர் நாரதரிடம் நல்லூர்ச் சிறப்பைக் கூறத் தொடங்குதல் ]

874 மன்னுஞ்சிவக் குறியன்னதை
வந்தித்திசை பாடித்
துன்னும்படி வத்தோடுமத்
துறக்கம்புகு கின்றூர்

---

872 வேரிக்கமலம் – தேனிறைந்த தாமரை, யாணர் – புதிய, சேண் – நெடுந்தூரம், வரை – சுந்தராசலம், ஆணிக்கனகம் – ஆணிப்பொன்.

873 விதம் – வன்ண வகை, புதுவேரி – புதுத்தேன், முதுவானவ – தேவர்களுள் மூத்தவனே! உளத்தால் – உண்மைப் பற்றோடு,

பொன்னங்கம லத்தோயிறும்
பூதங்கது புகல்வாய்
என்னும்பொழு தவனப்பதி
இயல்கேளென விசைப்பான். 5

[ அவுணர்கள் போருக்கெழுந்தபோது தேவர்கள் திருமாலிடம் குறையிரப்பச் சென்றதைப் பிரமன் கூறுதல் ]

875 விம்மாவிகல் புரியாவரும்
விறல்வாட்படை யவுணர்
தம்மோடமர் மலைந்தேவலி
சாய்ந்தோடிய வானோர்
எம்மாதிர மும்போய்நமை
எய்திக்குறை யிரப்ப
அம்மாமுடி யிமையோரொடும்
அரிதன்னுல கடைந்தோம். 6

[ திருமால் வீற்றிருக்கும் சிறப்பு ]

( அறுசீர் ஆசிரிய விருத்தம் )

876 நஞ்சரா வணையிற் றிம்பால்
நளிகடல் நாப்பண் ணீடும்
விஞ்சுபே ருலக மீன்ற
மேதகு நாபி யோடும்
தஞ்சம்யா வர்க்கு மாகும்
தாளுங்கைத் தலமுங் கண்ணும்
கஞ்சநாட் போது பூத்த
கருங்கடல் தன்னைக் கண்டோம். 7

---

874 சிவக்குறி – சிவலிங்கம், படிவம் – சிவருபம், இயல் – மாண்பு.

875 விம்மா – விம்மி (தளர்ந்து), இகல்புரியாவரும் – போரிடவரும், விறல் – வெற்றி, மலைந்து – போரிட்டு, வலி இழந்து, சாய்ந்து – தோற்று, மாதிரம் – திக்கு, குறையிரப்ப – வேண்ட, அரி – திருமால், உலகு – வைகுந்தம்.

876 நஞ்சரா – நஞ்சுடைய நாகம் (சேடன்), விஞ்சு – மேலான, நாபி – உந்தி, கஞ்சநாட்போது – தாமரைப் புதுமலர், கருங்கடல் போலும் திருமால்.

[ வணங்கி நின்ற தேவர்களை வந்த காரணத்தை திருமால் வினவுதல் ]

877 காண்டலும் வணங்கிப் போற்றிக்
கரகம லங்கள் கூப்பி
வேண்டியாம் நிற்கும் ஏல்வை
வெள்வளை யேந்தும் மாயன்
ஈண்டுவந் தடுத்த தென்கொல்
இமையவர் யாரு மென்று
மூண்டவான் கருணை தன்னன்
மொழிந்தனன் மொழித லோடும் 8

[ தேவர்கள் அவுணர்களை வெல்லுதற்குரிய சூழ்ச்சியை அறிவிக்க வேண்டுமென அரியிடம் கேட்டல் ]

878 வண்ணவன் பவளச் செவ்வாய்
வார்கடல் வயிறு வாய்த்த
பெண்ணமு துகந்த மாயன்
பேரருள் முகத்தை நோக்கி
விண்ணவர் குழாங்க ளெல்லாம்
வெய்யகா ரவுணர் போரிற்
றுண்ணென வுடைந்தார் வெல்லும்
சூழ்ச்சிநீ சொல்வா யென்றே. 9

[ திருமால் பூவுலகில் தென்கயிலாயம் என்னும் சிறந்ததோர் தலமுண்டெனக் கூறல் ]

879 நிலம்புகழ் பொன்னித் தென்பால்
நிலவளங் கனிந்து மல்கும்
வலஞ்சுழி யதற்குக் கன்னி
வான்றிசை மருங்கி னுகை

---

877 கரகமலம் - கைத்தாமரை, ஏல்வை - எல்லை (காலம்), வளை - சங்கு, யாரும் - யாவரும், வான் - தூய சிறந்த.

878 கடல் வயிறு வாய்த்த பெண்ணமுது - இலக்குமி, வெய்ய - கொடிய, கார் - கரிய, துண்ணென - விரைவாக, உடைந்தார் - தோற்றார்.

நலந்தரு காசி யென்றோர்
நற்றல மதன்கண் உற்றோர்
சிலம்புள் தாகுங் கேண்மின்
தெக்கணக் கயிலை யென்றே. 10

[ ஆண்டு இறைவன் லிங்கமூர்த்தியாய் எழுந்தருளியுள்ளான் எனல் ]

880 காசியே யனைத்து நல்குங்
கயிலையு மவனே யாகிற்
பேசுவ தெவன்கொ லெல்லாப்
பேறும்நீர் பெறுதல் திண்ணம்
மாசினை யெவர்க்குந் தீர்க்கும்
வகையின லெங்கோ னங்குத்
தேசுடை யிலிங்க மாகிச்
சேர்ந்தினி துறைவ னன்றே. 11

[ இறுதிக் காலத்தில் ஆண்டுள்ள உயிர்கட்கு இறைவன் பிரணவ மந்திரத்தை ஓதி ஆட்கொள்வான் எனல் ]

881 மரணகா லத்தி னங்கு
வைகுமன் னுயிர்கட் கெல்லாம்
பிரணவ மனுவை யையன்
பெற்றியி னுபதே சிப்பான்
திரமது வாகை யாலே
செய்தவர் பலரு மந்தப்
புரமதி லுற்று வாழ்வார்
புகலுவ தினிமற் றுண்டோ. 12

---

879 வலஞ்சுழி - திருவலஞ்சுழித் தலம், உற்றோர் - (உற்று + ஒரு) பொருந்திய ஒரு, சிலம்பு - மலை, தெக்கணம் - தெற்கு.

880 அனைத்து (அனையது) - ஒத்தது, அவனே - அவ்விடத்ததே, பேறும் - செல்வமும், எங்கோன் - சிவபிரான்.

881 வைகும் - வாழ்கின்ற, மனு - மந்திரம், பெற்றி - கருணை, திரம் (ஸ்திரம்) நிலைபேறுடையது, செய்தவர் - செய்யும் தவமுடையவர் (செய்தவர் வினைத்தொகை) புரம் - ஊர்.

[ இரணியனை வெல்ல யான் அங்குச்சென்று அவ்விறைவனை வழிபட்டமையைக் கூறுதல் ]

882 வெய்யபே ரிரணி யன்றன்
வெற்றியை வேண்டி யாமங்
கையனை வணங்கிப் போற்றி
ஆற்றல்பெற் றவனை வென்றோம்
உய்யுமா றும்பர் நீரும்
ஓங்குகா விரியின் மூழ்கித்
துய்யவத் தலத்தின் மேவித்
தோன்றலை யருச்சித் தேத்தி 13

[ நீவிர் ஆங்குச்சென்று வழிபடின் வேண்டியதை யடைவீர் எனத் திருமால் கூறல் ]

883 மும்முறை வலங்கொண் டையன்
முளரியங் கழல்சே வித்துச்
செம்மையின் நந்தி முன்னம்
சேர்ந்தெழுத் தைந்தும் ஓதின்
நும்மனத் துவந்த வெல்லாம்
நொடிவரை யடைவி ரென்ன
எம்மையீன் றெடுத்தோன் கூறி
இனையன பலவுஞ் சொற்றான். 14

[ என்னென்ன வேண்டுமோ அதற்கு வேண்டிய மந்திரம் இது எனத் தேவர்களுக்கு அவன் விளக்குதல் ]

884 வாகையுந் திருவும் வேண்டின்
மாயாபீ சத்தி னேடும்
ஓகைகூர் வசியம் வேண்டின்
உறுங்காம பீசத் தோடும்

---

882 வெய்ய – கொடிய, ஆற்றல் – வலிமை, துய்ய – தூய்மையுடைய.
883 முளரி – தாமரை, கழல் – பாதங்கள் (அகுபெயர்), எழுத்தைந்து – பஞ்சாக்கரம், நொடிவரை – நொடிப்பொழுது, எம்மை என்றது பிரமதேவன்.

மோகந்தீர் விஞ்சை வேண்டின்
மொழியும் வாங்மயபீ சத்தோ
டேகமா னதரே யாயும்
இயம்புமைந் தொழுத்தே யென்றான். 15

[ அவற்றைக் கேட்டுக்கொண்டு தேவர்கள் விடைபெற்றார்கள் எனல் ]

885 என்றவன் பகர யாமும்
இமையவ ரோடு மீண்டு
நன்றறி புலவிர் நல்லூர்
நாதனை வணங்கி யேத்திக்
குன்றெனத் திரண்ட திண்டோட்
கொலைத்தொழி லவுணர் தம்மை
வென்றுநீர் வாழ்திர் என்றேம்
விண்ணவர் விடைகொண் டாரால். 16

[ தேவர்கள் நல்லூரையடைந்து இறைவனை வழிபட்டு அவுணர்களை வென்று இன்புற்றார்கள் எனப் பிரமன் கூறுதல் ]

886 மணமலி சோலை சூழ்ந்த
வளங்கெழு நல்லூ ரெய்திக்
கணமலை யரசன் பாவைக்
கணவனைத் தொழுது போற்றி
இணையெரி யிமையோ ரெல்லாம்
மீண்டுபோ ரவுணர் தம்மை
நிணமலி படையால் வென்று
நிகரிலாச் செல்வ முற்றார். 17

---

884 வாகை – வெற்றி, திரு – செல்வம், மாயா – சக்தி, பீஜம் – பீஜாட்சரம், மோகம் – பற்று, மானதர் – மனத்திலுச்சரிப்பவராய ஞானியர்.

885 பகர – சொல்ல, புலவிர் – ஞானமுடையீர் ! என்றேம் – என்று கூறினோம்.

886 மலி – மிக்க, கணமலை – இமயமலை ஈண்டு – ஈண்டும் – நெருங்கிக் குழுமிய, நிணம் – கொழுப்பு, படை – போர்க்கருவி.

[ நல்லூரின் பெருமை அளவிட முடியாதகலின் ஆண்டுச்
சென்று வழிபடுவோர் பொன்னுலகெய்துவதில்
வியப்பில்லை எனல் ]

887 இன்னன வரங்க ளெல்லாம்
எய்துமத் தலத்தின் மேன்மை
முன்னவ னன்றி யாரோ
மொழிவரத் தலத்தி னங்கண்
மன்னிய தீர்த்த மாடி
வள்ளலை வணங்கும் மாந்தர்
பொன்னுல கெய்துமாறு
புதுமைத்தோ புகழ்மைத் தன்றால். 18

[ நாரதன் நல்லூரின் பெருமையறிந்து மகிழ்ந்து சென்றான் எனல் ]

888 மலர்மிசை யுறைவோன், ஏந்தும்
மகதயாழ் முனிவர்க் கிவ்வா
றலர்தரு கருணை தன்னால்
அடைவுறப் பகர்ந்தா னன்னோன்
தலமுழு தளித்தோன் செய்ய
சரணபங் கயங்கள் போற்றி
இலவவா யுமையாள் பங்கன்
இன்னருள் வியந்து சென்றான். 19

[ இச்சரிதம் கேட்டோர் எய்தும் பலன் கூறுதல் ]

889 படித்தவிச் சரிதந் தன்னை
பகர்ந்துளோர் இருந்து கேட்டோர்
அடுத்தபே ரன்பினாலே
யகலத்தில் வரித்தல் செய்வோர்
கொடைத்திற லரச ராகிக்
குவலயம் முற்றுங் காத்துச்
சுடர்படைக் குலிசன் போலத்
துறக்கநா டாள்வ ரன்றே. 20

பிரமதேவர் நாரதர்க்குத் தலவிசிட்ட முரைத்த சருக்கம் முற்றும்.

---

887. மன்னிய - நிலைபெற்று விளங்கும், வள்ளலை - இறைவனை.
888 முனிவர் - நாரதர், அடைவுற - முறையாக, தலம் - உலகம்.
889 அகலத்தில் வரித்தல் செய்வோர் - உள்ளத்தில் நிலைபெறச்செய்து கொண்டோர், அகலம் - நெஞ்சு, குலிசன் - இந்திரன்.

இருபத்திரண்டாவது

## மாயவனருச்சனைச் சருக்கம்

**[ இரணியனை வெல்லத் திருமால் இத்தலத்தில் வழிபட்ட வரலாற்றைக் கூறுகென முனிவர் வேண்டச் சூதமுனிவர் கூறத் தொடங்குதல் ]**

( *கலித்துறை* )

*890* வேதன் றனையருள் மலர்நா
பியினன் விறல் கூறும்
கோதந் தருமிர ணியனைப்
பொருது குமைத் தெற்றும்
நாதன் பதமலர் பரவுஞ்
சரிதம் நவிற்றென்னச்
சூதன் பழமையர் மகிழும்
படியது சொல்கின்றான். *1*

**[ தேவர்களை வென்று அவர்களஞ்சுமாறு விளங்கினான் இரணியன் எனல் ]**

*891* கடல்சுற் றியபல வுலகும்
மலர்கற் பகநாடும்
உடன்மொய்த் தடிதொழ அமரிற்
பகைஞர் உடைந்தோடச்
சுடர்விட் டெரிமணி மவுலிக்
கடவுளர் தொழநாளும்
அடல்பெற் றிகல்புரி யிரணியன்
என்றோர் அசுரேசன். 2

---

890 வேதன் - பிரமன், மலர்நாபி - தாமரை போன்ற உந்தி, விறல் - வெற்றி, கோதம் - துன்பம், குமைத்து - அழித்து, அது - அவ்வரலாற்றை.

891 கற்பகநாடு - தேவலோகம், அமரில் - போர்க்களத்தில், அடல் - வலிமை.

[ தன்னுடைய நாமமே மந்திரமாக யாவரும் தன்னையே வழிபட வேண்டுமென ஆணையிட்டு இரணியன் கொடுங்கோல் புரிந்தான் எனல் ]

892 மறையிற் புகல்தரு மனுவெத்
துணையும் மறந்தேகப்
பறையிட் டுலகுத னாமம
தொன்றே பகர்கென்ன
முறையிட் டறநெறி பிறழக்
குவலயம் மூன்றுந்தாம்
திறையிட் டமரா நெடிது
கொடுங்கோல் செயுநாளில் 3

[ தேவர்கள் திருமாலிடம் சென்று முறையிடல் ]

( அறுசீர் விருத்தம் )

893 நிரந்தர மவுணர் தம்மால்
நிலைதொலைந் திடுக்க ணெய்திப்
புரந்தரன் முதல தேவர்
புலம்பினொந் திரங்கி யேங்கி
அரந்தைவேர் களைந்து போக்கி
யஞ்சலென் றுலகங் காக்கும்
வரந்தரு மாயன் றன்பால்
வந்தனர் வருத லோடும். 4

[ இதுவுமது ]

894 செங்கண்மா லருளின் நோக்கித்
தேவரை வருக வென்று
இங்குநீர் வந்த தென்கொல்
இயம்புமின் என்று கூற

---

892 மனு - மந்திரங்கள், பறையிட்டு - முரசடித்து முழக்கி, தன் நாமம் - இரணியன் என்னும் பெயர், பகர்கென்ன - மந்திரமாகச் சொல்லுக என்று, முறை - கட்டளை, திறையிட்டு - அடிமைப் படுத்தி, அமரா - அமர்ந்து.

893 புரந்தரன் - இந்திரன், அரந்தை - துயரம், மாயன் - திருமால்.

அங்கண்வா னுலக மாதி
உலகங்கள் அனைத்து மேலாம்
பொங்கிமீ தெழுந்தா லென்னப்
பொருதிர ணியன்கைக் கொண்டான். 5

[ இதுவுமது ]

895 வெய்யபோ ரவுணன் நாமம்
அல்லது வேறு நாங்கள்
அய்யவோ துதலுக் கஞ்சி
யலமந்து திரிந்தோ மென்ருர்
பையரா வணையிற் றுஞ்சும்
பண்ணவ வெண்ணில் காலம்
நையுமா றவன்செய் தீமை
நாவினல் நவிலற் பாற்ருே. 6

[ தேவர்களின் குறையைக் கேட்ட திருமால் விளம்பத்
தொடங்கல் ]

896 விண்ணுல கிழந்து நாங்கள்
மெலிந்திடு மிடும்பை தீர
அண்ணலங் கலுழப் பாக
அருள்சுரந் தளிக்க வென்னுப்
பண்ணவர் மவுலி சாய்த்துப்
பதயுகம் வணங்கிப் போற்ற
வண்ணப்பூந் துளவத் தாமன்
வாய்மலர்ந் திணைய சொன்னன். 7

---

894 என்னு - என்று கூறி.

895 அலமந்து - மனந்தடுமாறி, பையரா - படங்களை உடைய பாம்பு, பண்ணவ - தேவனே !

896 இடும்பை - துன்பம், கலுழப்பாக - கருடனை வாகனமாகச் செலுத்துபவனே ! பதயுகம் - இணையடிகளை, துளவத்தாமன் - துளசிமாலையணியும் திருமால்.

**[ நான் இறைவனருள் பெற்று நரசிங்கமாய்ச் சென்று இரணியனை யழிப்பேன் எனத் திருமால் கூறல் ]**

897 பரசிவ னருளி னாலே
பண்ணவர் கேண்மி னின்னே
நரசிங்க ரூபமெய்தி
நாமவன் றன்னை வீட்டி
விரைசெறி தருவின் நீழல்
மேவிநீர் மெலிவொன் றின்றி
அரசுவீற் றிருக்கும் வண்ணம்
அருளுதும் அஞ்ச லென்றான். 8

**[ தேவர்கள் மகிழ்ந்து செல்லத் திருமால் நல்லூரை எய்தினான் எனல் ]**

898 என்றது மிமையோ ரெல்லாம்
இணையடிக் கமலம் போற்றிச்
சென்றனர் மகிழ்ச்சி பூத்தார்
தேசுலாந் திகிரிச் செங்கை
பொன்றிக ழாகத் தாலும்
புராந்தக னருளி னாலே
வென்றிகொண் டடுவ னென்னா
விளங்குநல் லூரில் வந்தான். 9

**[ நல்லூரிறைவனைத் திருமால் ஆயிரம் ஆண்டுகள் அருச்சித்து வழிபட்டமை கூறல் ]**

899 வந்தமால் பிரம தீர்த்த
வண்புன லதனில் மூழ்கிச்
சுந்தரே சனைவந் தித்துச்
சுருதிநூல் சொன்ன வாற்றால்

---

897 வீட்டி – வீழ்த்தி அழித்து, விரைசெறி – மணம் நிறைந்த, தரு – கற்பகத்தரு.

898 திகிரி – சக்கரம், பொன் – இலக்குமி, திகழ் ஆகம் – விளங்குகின்ற மார்பு, புராந்தகன் – திரிபுரத்தை அழித்தவனாகிய சிவபிரான், அடுவன் – கொல்லுவேன்.

புந்தியின் மகிழ்ச்சி பொங்கப்
பூசனை தேவ யாண்டில்
அந்தமில் பதிற்று நூறாண்
டருச்சனை புரிந்தான் மன்னோ. 10

[இறைவன் அவனுக்கு மகிழ்ந்து காட்சிதரமாலவன் போற்றுதல்]

900 அருச்சனை புரியுங் காலை
அங்கணன் விடைமேற் றோன்ற
வரிச்சிறைத் தும்பி பாடும்
வண்டுழாய் முகுந்தன் நோக்கி
பொருப்புவிற் குழைத்து வெய்ய
புரம்பொடித் துலகங் காத்த
மருப்பொலி கொன்றை வேணி
வானவ போற்றி யென்றே. 11

[நீ வேண்டும் வரங்களைக் கேளென்று இறைவன் கூறுதல்]

901 செய்யபூங் கமலத்தாள்கள்
சென்னியால் வணங்கி நிற்ப
ஐயனும் இன்று நீசெய்
அருச்சனைக் குகந்தேம் வேண்டும்
துய்யநல் வரங்கள் கேண்மோ
வென்றலும் சுருதி போற்றும்
மெய்யநின் னன்பே யல்லால்
வேண்டுவ பிறிது முண்டோ. 12

---

899 சுருதிநூல் - வேதம், பதிற்றுநூறு - ஆயிரம்.

900 அங்கணன் - சிவபிரான், விடை - இடபம், சிறை - சிறகு, பொருப்புவில் - மேருமலையாகிய வில், குழைத்து - வளைத்து, புரம் - முப்புரம், மரு + பொலி - மணம் கமழ்கின்ற.

01 கேண்மோ - கேட்பாயாக, மெய்ய - மெய்ப்பொருளானவனே!

[ இரணியனை வெல்லுதற்குரிய நரசிங்க வடிவத்தைத் தந்தருள அவன் வேண்டுதல் ]

902 ஆயினு மண்ட வாணர்க்
கருந்துய ரியற்று நிற்கும்
தீயினும் வெய்ய வெஃபோர்த்
திறலிர ணியனை வெல்ல
நாயக தமியேற் காற்றல்
நரசிங்க ரூப நல்கி
ஏயுநீ ளுகிர்வா ளாக
இன்றுதந் தருள வேண்டும். 13

[ மேலும் யான் அமைத்து வழிபட்ட தீர்த்தம் சக்கர தீர்த்தமென வழங்க வேண்டுமெனல் ]

903 மிக்கவித் தீர்த்த நாமம்
மேதினி யோர்க ளெல்லாம்
சக்கர தீர்த்த மென்றே
சாற்றுதல் வேண்டு மீண்டு
மிக்குள புனலின் மூழ்கி
எந்தையைத் தமியேன் றன்னை
தொக்கவன் பொடுசே வித்தார்
துயர்களைந் திடுதல் வேண்டும். 14

[ இறைவன் திருமால் கேட்டவற்றை யெல்லாம் அருளி இலிங்கத் துறைதல் ]

904 என்றலும் செங்கண் மாயன்
இயம்பிய வரங்க ளெல்லாம்
குன்றவிற் குழைத்த பெம்மான்
குறைவிலா மகிழ்ச்சி பூத்து

902 அண்டவாணர் - தேவர், வெய்ய - கொடிய, ஏயும் - பொருந்தும், உகிர்வாளாக - நகங்களே வாளாயுதமாக.

903 இத்தீர்த்தம் - திருமால் உண்டாக்கிய தீர்த்தம், தொக்க - நிறைந்த.

நன்றுநன் றென்று நல்கி
நலங்கெழு மிலிங்கத் தூடு
சென்றனன் பரனைப் போற்றித்
திகிரிமா லவனும் சென்றான். 15

**[ திருமால் நரசிங்கமாய் இரணியனைக் கொன்று வெற்றி பெற்றார் தேவர்கள் இன்புற்றனர் எனல் ]**

905 சீற்றமுற் றெழுந்து வெய்ய
தீத்தொழில் அவுணர் தம்மை
ஆற்றல்சா லிரணி யப்பேர்
அசுரனை அமரின் ஏற்றுக்
கூற்றென உருத்தவ் வாறு
கூருகி ரதனாற் கொன்றான்
நாற்றிசைப் புவியி லோரும்
நலிவுதீர்ந் தின்ப முற்றார். 16

**[ திருமால் நரசிங்கரூபமாக நல்லூரில் விமானத்தில் விளங்குகின்றான் எனல் ]**

906 வலம்புரித் தடக்கை மாலும்
வளங்கெழு நல்லூர் தன்னில்
பொலங்குழை பங்க னார்க்குப்
பொருந்துமேற் றிசையி னங்கண்
நலங்கொளும் விமானந் தன்னில்
நரசிங்க ரூப மாகிப்
பலங்கொடுத் துறைவன் நாளும்
பச்சிம முகமா யன்றே. 17

---

904 குன்றவில் – மேருமலையாகிய வில்லை.

905 ஏற்று – எதிர்கொண்டு, உருத்து – கோபித்து, கூருகிர் – கூரிய நகங்கள்.

906 வலம்புரி – சங்கு, பொலங்குழை – உமாதேவி, பலங்கொடுத்து – வரப்பலன்களையருளி, பச்சிமமுகம் – மேற்குத்திசை,

[ இந்த நரசிங்கத்தை வழிபடுவோர் அச்சம் நீங்கி ஆற்றலோடு வாழ்வார் எனல் ]

907 நச்சியா தரவா லந்த
நரசிங்க மூர்த்தி தன்னை
நிச்சமும் மனத்தி லெண்ணும்
நெறியுடை யாள ரெல்லாம்
அச்சமொன் றுனு மின்றி
அளவிலா வாற்ற லெய்தி
முச்சகத் தவரும் போற்ற
முறையுளி வாழ்வர் மாதோ. 18

[ வைகாசிச் சதுர்த்தசி நாளில் உபவாசமிருந்து திருமாலை வழிபடுவோர் உயர்கதியடைவாரெனல் ]

908 துன்னிய இடப மாதச்
சுக்கில பக்கந் தன்னில்
மன்னிய பன்னுன் கென்னும்
வகுத்திடு திதிய மர்ந்தும்
அன்னம தொழிந்தி ராவில்
அமலனை, யாழி மாலை
நன்னயத் தொடும்வந் தித்தோர்
நற்கதி சேர்வ ரன்றே. 19

[இவ்வரலாற்றைச் சொல்வோர் கேட்போர் எய்தும் பலன் கூறுதல்]

909 உரைத்தவிச் சரிதந் தன்னை
உள்ளுவந் தினிது கேட்போர்
வரித்துளோர் படிக்கும் நல்லோர்
வாகைவே லரச ராகித்
தரைத்தலம் முழுதுங் காத்துத்
தம்மனத் தச்சந் தீர்ந்து
மருப்பொலி கோதை பாகன்
மலரடி நீழல் சேர்வார். 20

மாயவனருச்சனைச் சருக்கம் முற்றும்.

---

907 நச்சி – விரும்பி, ஆதரவால் – அன்பால், நிச்சமும் – நாள்தோறும், முச்சகம் – மூவுலகம்.

908 இடபமாதம் – வைகாசித் திங்கள், ஆழிமாலை – சக்கரத்தையுடைய திருமாலை, நன்னயம் – விருப்பம், வந்தித்தோர் – வணங்கி வழிபட்டோர்.

909 வாகைவேல் – வெற்றிவேல், மருப்பொலி கோதை – மணம் கமழும் மாலை போலும் உமாதேவி.

இருபத்துமூன்றாவது

# தேவர்கள் அருச்சனைச் சருக்கம்

[ அவுணரை வெல்லத் தேவர்கள் அருச்சனை புரிந்த வரலாறு கூறுகென்ற முனிவர்க்குச் சூதன் கூறத் தொடங்குதல் ]

( எழுசீராசிரிய விருத்தம் )

910 மைந்துடை யவுணர்க் கொடுஞ்சமர்க் கிடைந்து
மாலவ னேவலால் வந்த
இந்திரன் முதல வானவ ரெல்லாம்
இறைவனை யமிழ்தினு லாட்டிச்
சிந்தனை மகிழ்ந்து பூசனை புரிந்த
செயலினை விரித்துரை யென்ன
அந்தமி லுவகை பூத்தருட் சூதன்
அப்பெருங் காதைசொல் குவனால். 1

[ தேவர்கள் அமிழ்தகலசங்கள் கொண்டு நல்லூர் வந்தடைந்தமை கூறல் ]

911 கொந்தவிழ்ந் தலர்மந் தாரநாண் மலர்கள்
கொய்தனர் ஒருவழித் தொகுத்து
மந்தரப் பொருப்புப் பாற்கடல் நடுவண்
மத்தென நிறுவிவா சுகிநாண்
சந்திர நெடுந்தூ ணதனொடுங் கொளுவித்
தடங்கையாற் கடைந்தனர் முகந்த
அந்தமி லமிழ்த கடம்பல வேந்தி
அணிகொள்நல் லூர்வயி னுற்றார். 2

---

910 மைந்து - வலிமை, இடைந்து - தோற்று, ஆட்டி - அபிடேகம் செய்து.

911 பொருப்பு - மலை, நிறுவி - நிறுத்தி, வாசுகிநாண் - வாசுகியாகிய பாம்பையே நாணாக்கி, கொளுவி - நாட்டி, கடம் - குடம்.

**[ அவர்கள் காவிரியில் நீராடிச் சக்கர தீர்த்தத்தில் மூழ்கி உவந்து நல்லூரின் வளங்கண்டு மகிழ்ந்தமை கூறல் ]**

912 உற்றவர் பொன்னி மாணதி யாடி
யுவந்து சக்கரதீர்த் தத்திற்
பெற்றியின் மூழ்கித் தென்கயி லாயப்
பிறங்கலே காசிமா நகரை
மற்றவர் நோக்கி வளமெலாங் கண்டு
மனத்திடை யதிசய மல்கிப்
புற்றர வணிந்த நம்பனைப் போற்றிப்
பூசனை புரிவதற் கமைந்தார். 3

**[ அமிழ்தத்தால் அபிடேகஞ் செய்து பூசித்து அவர்கள் வழிபடுதல் ]**

913 சதுமறை தொகுத்த விதியினு லமரர்
தற்பரன் ருளிணை போற்றி
விதுவினிற் பொழியும் அமிழ்தெனக் கடத்தின்
மேவுபுத் தமிழ்தினு லாட்டி
மதுமலர் சிதறி வந்தனை புரிந்தே
வரன்முறை வழாதருச் சித்துப்
பதுமவாண் முகத்தின் உமையையு மிறைஞ்சிப்
பாங்கினுன் நந்திமுன் னெய்தி. 4

**[ ஐந்தெழுத்தோதி தேவர்கள் புரிந்த அருச்சனைக்கு மகிழ்ந்து இறைவன் காட்சி தரல் ]**

914 நாரணன் பகர்ந்த வாறெழுத் தைந்தும்
நவின்றன ராயிரம் பருவம்
தாரணி மவுலி யிமையவ ருறைந்தார்
தாணுவு மாங்தற் குவந்தே

---

912 மாண் + நதி - மாட்சி பொருந்திய ஆறு, பிறங்கல் - மலை.

913 விதி - முறை, விது - சந்திரன், மதுமலர் - தேனிறைந்த மலர்,

ஆரணம் பழிச்ச விடையின்மேற் றோன்றி
யன்னவர் காணவந் நின்றான்
கூரணி சுடர்வாட் குலிசனை முதலோர்
குறுகினர் வணங்கியேத் தெடுத்தார். 5

[ தேவர்கள் இறைவனைப் போற்றி வணங்கி ஏத்துதல் ]

915 மங்கைபங் குடைய வள்ளலே வாழி
வண்ணமைந் துடையனே வாழி
கங்கையஞ் சடிலத் தண்ணலே வாழி
கண்ணுதற் கடவுளே வாழி
அங்கையி னெல்லிக் கனியிடை யமுதா
யடியவர்க் கெளிவந்தாய் வாழி
துங்கவெள் விடையின் பாகனே வாழி
சுந்தர நாதனே வாழி ! 6

[ இதுவுமது ]

916 காலனைக் காய்ந்த காலனே வாழி
கடம்பனை யீன்றவா வாழி
ஆலமுண் டிருண்ட கண்டனே வாழி
ஆலமர்ச் செல்வனே வாழி
பாலனுக் கொருபா லாழிதந் தருளும்
பரமனே வாழிமுத் தலைய
சூலவே லேந்து மமலனே வாழி
சுந்தர நாதனே வாழி ! 7

---

914 பகர்ந்தவாறு - கூறிய முறைப்படி, தாரணி - மாலையணிந்த தாணு - இறைவன், ஆரணம் - வேதம், ஏத்தெடுத்தார் - போற்றி கூறினர்.

915 சடிலம் – சடைமுடி, துங்க – மேலான.

916 காலனை – கூற்றுவனை, காய்ந்த – வெகுண்ட, காலனே – பாதங்களை உடையவனே, கடம்பன் - முருகன், ஆலம் - ஆலாலவிடம், பாலன் - அபிமன்னியு முனிவர்.

**[ இறைவன் தேவர்களை வேண்டும் வரங்களைக் கேண்மின் எனல் ]**

917 இன்னன துதிக ளெடுத்தெடுத் தோதி
இமையவ ரிறைஞ்சினர் நிற்பப்
பொன்னெடுஞ் சிகரம் குழைத்தகைத் தலத்துப்
புனிதனுங் கருணைபூத் தருளி
உன்னிய வரங்கள் வேண்டுவ கேண்மின்
உம்பர்கா ளெனவுரை செயலும்
அன்னவர் நின்பாற் பத்திமை யன்றி
அளியம்யாம் குறிப்ப தொன்றுளதோ? 8

**[ அவுணர்களை வெல்லவும், பிரமதீர்த்தம் அமிழ்தத் தடமென வழங்கவும் வேண்டுமென அவர்கள் வரங் கேட்டல் ]**

918 வேண்டுவ ததுவே யாயினு மைய!
வெய்யகா ரவுணரை வீட்ட
மூண்டெழுந் திண்டோள் மதவலி வேண்டும்
முன்னம்யாம் ஆட்டுமின் னமிழ்தம்
ஈண்டலிற் பிரம தீர்த்தமிப் புவிமேல்
இன்னமிழ் தத்தட மென்றே
ஆண்டக விளங்கல் வேண்டும் நின் பெயரும்
அமிழ்தலிங் கம்மெனல் வேண்டும் 9

**[ இறைவன் அவர்கள் கேட்டவாறே யருளுதல் ]**

919 இத்தகை வரங்கள் வேண்டுமென் றமரர்
இணையடி வணங்கின ரிசைப்ப
முத்தலைச் சூல மேந்துமெங் கோனும்
முறைமையா லாங்கவர்க் குதவி

---

917 பொன்னெடுஞ்சிகரம் – மேருமலை, உன்னிய – கருதிய.

918 மதவலி – பேராற்றல், ஆட்டும் – அபிடேகித்த, ஆண்டக – ஆளுதல்தக.

வித்தக லிங்கத் தூடுசென் றுறைந்தான்
விடைகொண்டு விண்ணவர் அவுணர்
கொத்தெலா மறுத்து நூழிலாட் டயர்ந்து
குறைவிலா வின்பமுற் றிருந்தார். 10

[ தேவர்களுக்கு வெற்றிபெற வரங் கொடுத்தமையால் இறைவன் பெயர் விசயநாயகர் என வழங்கலாயிற்று எனலும் இவ்வரலாறு கேட்போர் எய்தும் பலனும் கூறுதல் ]

920 விண்ணவர் தமக்கு விசயம்நல் குதலால்
விசயநா யகனெனப் புவிமேல்
அண்ணல்பேர் பெற்றான் உரைத்தவிக் காதை
அன்பினா லோதுவோர் கேட்போர்
நண்ணலார் சாய ஞாட்பிடைப் பொருது
நனந்தலை யுலகெலாம் பரவ
எண்ணரும் விசய மெய்திவீற் றிருந்தே
யிமையவர்க் கதிபரா குவரே. 11

தேவர்கள் அருச்சனைச் சருக்கம் முற்றும்.

---

919 கொத்து – கூட்டம், அறுத்து – கொன்று, நூழிலாட்டயர்ந்து – கொன்று குவித்து ஆடும் ஆட்டம்.

920 விசயம் – வெற்றி, அண்ணல் – நல்லூர் இறைவன், நண்ணலார் – பகைவர், ஞாட்பு – போர்க்களம், நனந்தலை – இடமகன்ற, விசயமெய்தி – வெற்றியடைந்து, அதிபர் – அரசர்.

இருபத்துநான்காவது

# பிரமதேவர் நாரதர்க்குத் தீர்த்த விசிட்ட முரைத்த சருக்கம்

**[ நாரதருக்குப் பிரமன் தீர்த்த விசேட முரைத்த வரலாற்றை முனிவர்கள் வேண்டச் சூத முனிவர் கூறத் தொடங்கல் ]**

( அறுசீராசிரிய விருத்தம் )

921 வளிதட வரினும் பாடும்
மகதயாழ் முனிவன் கேட்ப
நளினநாண் மலரின் வைகும்
நான்முகத் தொருவன் சொற்ற
தெளிபுனல் தீர்த்த மேன்மை
செப்புகென் றறவோர் கூற
அளிபெறு சூத னவ்வா
றருந்தவர்க் கியம்பு கின்றான். 1

**[ நல்லுரை எய்தி வழிபட்டு வந்த நாரதர் கேட்கப் பிரமன் அத்தலத்துத் தீர்த்தங்களின் மாண்புகூறத் தொடங்கினான் எனல் ]**

922 எண்டிசை வளாகத் துள்ள
இரும்புனல் தீர்த்தமாடித்
துண்டவெண் மதியந் தோயும்
சுந்தர கிரியின் வைகி
விண்டிட லரிதா மன்பின்
மீண்டநா ரதர்க்குப் பின்னும்
முண்டகன் தீர்த்த மேன்மை
முகமலர்ந் துரை செய்தானால். 2

---

921 வளிதடவரினும் - யாழ்நரம்பைக் காற்றுத் தடவினாலும், நளின நாண்மலர் - தாமரைப்புதுமலர், அறவோர் - முனிவர்கள், அளி பெறு - கருணை பெறும்.

922 வளாகம் - உலகம், தோயும் - வந்துபடியும், விண்டிடல் - கூறுதல், முண்டகன் - பிரமன்.

[ உலகத்தில் உள்ள தீர்த்தங்களின் பயனைப் பிரம தீர்த்தத்தில் ஆடுவதாற் பெறலாம் எனல் ]

923 தரைமிசை யலகி லாத
தண்புனற் றீர்த்தம் யாவும்
ஒருமையின் மூழ்கித் தம்பால்
உற்றமா சொழிப்பான் எண்ணிப்
பிரமதீர்த் தத்தி னெய்திப்
பிறங்குமொவ் வொருகூ றென்றூற்
பரமனே யலதத் தீர்த்தப்
பான்மையா ருரைக்க வல்லார். 3

[ எட்டுத் திசைகளிலும் உள்ள தீர்த்தங்களின் பெயரும் அவற்றின் நிலையும் கூறுதல் ]

924 குணதிசை யதிற் பிராகை
கோதில்தென் திசையினங்கண்
மணமலி கயை வடக்கின்
வான்புனற் கங்கை, மேற்பால்
தணவுத லிகந்த மேன்மை
தருமணி கன்னி கைப்பேர்
இணையில்மெய்த் தீர்த்தம் தென்கீழ்
இடவயின் தேவ தீர்த்தம் 4

[ இதுவுமது ]

925 நிருதியின் நாக தீர்த்தம்
நிலவுமா ருதவான் றிக்கின்
பொருவிலா ஞான தீர்த்தம்
போற்றுமீ சான திக்கின்

---

923 அலகிலாத - அளவில்லாத, மாசு – பாவம், ஒரு கூறு – ஒரு பகுதி.

924 குணதிசை – கிழக்குத்திக்கு, தணவு தலிகந்த – நீங்குதலில்லாத.

மருவுமா னதநற் றீர்த்தம்
வாசவ னங்கி நாப்பண்
கருதிய விருக்கு வேதக்
கவின்பெறு தீர்த்த மாமால் 5

[ இதுவுமது ]

926 அந்தக னிருதி நாப்பண்
அணியெசுர் வேத தீர்த்தம்
நந்தலில் வருண வாயு
நாப்பணிற் சாம தீர்த்தம்
சந்திர மவுலி நண்பன்
சாற்றுமீ சான னுப்பண்
சிந்தைசெய் ததர்வ ணப்பேர்
சிறந்தமெய்த் தீர்த்த மாமால் 6

[ இதுவுமது ]

927 ஏனைய கோணத் தின்கண்
இரும்புனல் நதிக ளாதி
ஊனமில் தீர்த்த நாப்பண்
ஒலிபுனல் பிரம தீர்த்தம்
ஆனசக் கரநற் றீர்த்தம்
அதன்வயி னுபவீ தத்தின்
மானவொவ் வொருமெய்த் தீர்த்தம்
மற்றவைக் களவை யின்றே 7

---

925 நிருதி - நிருதிதிசை, தென்மேற்கு, மாருதம் - காற்று (வாயுதிசை) வடமேற்கு, வாசவனங்கிநாப்பண் - இந்திர அக்கினிதிசைகட்கு நடுவே, இருக்கு வேதத்துறை தீர்த்தம்.

926 அந்தகன் நிருதிநாப்பண் - யமன் நிருதிதிசைகட்குநடுவே, யசுர் வேதத்துறைத் தீர்த்தம், வருணவாயு நாப்பண் - வருணவாயு திசைகட்கு நடுவே, சாமவேதத்துறைத் தீர்த்தம், சந்திரமவுலி - சிவபிரான், நண்பன் - குபேரன், குபேர ஈசான திசைகட்கு நடுவே, அதர்வண வேத தீர்த்தம் இவை நான்கும் கோணத் திசைகட்கு இடையே உள்ளவை.

927 இரும்புனல் - ஓடைகள் முதலியவை, உபவீதம் - பூணுநூல், மான - ஒப்ப.

[இத் தீர்த்தங்களிற்படிந்து வழிபடுவோர் எய்தும் சிறப்பும் பயனும் கூறுதல்]

928 சொல்லுமித் தீர்த்த கோடி
தோய்ந்துளார் தொடர்ந்து நீங்காப்
பல்பெரும் பிறந்தை யாற்றும்
பாவவேர் களைந்து போக்கி
மல்லலம் புவனத் தின்கண்
மன்னவ ராகி வைகிச்
செல்லுநற் கதியிற் சேர்வார்
தேவரும் பரவ மாதோ 8

[பிரம தீர்த்தத்தில் எக்காலத்தும் கன்னிகா தீர்த்தத்தில் உச்சியிலும் சாமவேதத் துறையில் கேட்டை நாளிலும் மூழ்குதல் சிறப்பெனல்]

929 திங்கள்முன் றன்கும் தூய
திவ்வியப் பிரம தீர்த்தத்
தங்கணுற் றூடல் நன்றால்
அணிமணிக் கன்னி கைக்கண்
பங்கமி லுச்சி வேளை
படிதல்நன் றிரண்டாம் வேதப்
பொங்குநற் றீர்த்தந் தன்னில்
பொருந்து கேட்டையின் கணன்றால் 9

[ஞானதீர்த்தத்தில் ஆடிப்பூரத்தில் ஆடி ஆவணித் திங்களில் கங்கை தீர்த்தமாடி இறைவனை வழிபட இறைவன் காட்சி தந்தருள்வான் எனல்]

930 ஆடிப்பூ ராடந் தன்னில்
அரும்பெறல் ஞான தீர்த்தம்
நாடிச்சென் றாடி லுண்மை
ஞானமுண் டாங்கங் கைக்கண்

---

928 தோய்ந்துளார் - மூழ்கி ஆடினவர், பிறந்தை - பிறவி, ஆற்றும் - செய்கின்ற, மல்லலம்புவனம் - தெய்வ உலகங்கள், நற்கதி - வீடுபேறு, பரவ - வணங்க.

929 நன்றால் - நலமாகும், கன்னிகை - கன்னி தீர்த்தம், இரண்டாம் வேதம் - யசுர்வேதத்துறை, கேட்டை - கேட்டை விண்மீன் நாள்,

தேடிச்சென் றரிமா தத்திற்
திளைத்துகாந் தத்தின் காறும்
நீடற்பூம் புனலு ளாழ
நின்றையன் றனைநி னைந்தே 10

[ ஆயிரம்முறை பஞ்சாக்கரத்தை ஓதித் தீர்த்தமாட இறைவன் வேண்டுவன அருள்வான் எனல் ]

931 எழுத்தஞ்சைஞ் ஞூற்றி ரட்டி
யெண்ணுபு மாதாந் தத்திற்
றெழத்தகு மாபோ லெய்திச்
சுந்தரே சனைக்கண் ணுற்றாற்
குழைப்புறத் துருவும் வேற்கட்
கொம்பொடுங் குழகன் றோன்றித்
தழைத்தருள் பூத்து வேண்டும்
தகையன நல்கு மன்றே 11

[ புரட்டாசியில் இத்தீர்த்தங்களிற்படியினும் உவாநாளில் தென்புலத்தார் கடன்புரியினும் எய்தும் பலன் கூறல் ]

932 கன்னிமா தத்திற் றாய
கங்கையின் மூழ்கி யன்பால்
மன்னிய சோமன் வெய்யோன்
மருங்குசேர் திதியி னங்கண்
துன்னுதென் புலத்து ளோர்க்குச்
சொற்றவா பிண்டம் நல்கின்
அன்னவர் பூரித் தோராண்
டகமகிழ்ந் தருள்வ ரன்றே 12

---

930 அரிமாதம் - ஆவணித்திங்கள், உகாந்தத்தின் காறும் – யுகம் முடியுமளவும்.

931 நூற்றிரட்டி – இருநூறு (பதினாயிரமுமாம்) ஆபோல் – பசுவினைப் போல. அன்பிற் சிறப்புடையது வாத்சல்யமாதலின் ஆபோல் எனப் பட்டது. குழை – காதணி. உருவும் – சென்றுமீளும், கொம்பு என்றது உமா தேவியை.

932 திதி ஈண்டு அமாவாசையைக் குறிக்கும். தென்புலத்துளோர் – பிதிரர்கள்.

[ தென்புலத்தார் தங்கள் குலத்துள்ளோர் வந்து இத் தீர்த்தங்களில் ஆடுதலை எதிர்நோக்கியிருப்பார்கள் எனல் ]

933 தங்குலத் துள்ளோர் வந்தித்
தண்புனல் தீர்த்தந் தன்னுள்
அங்கம்நீர் தோய வெஞ்ஞான்
றாடுவ ரென்ன நோக்கிப்
பொங்குநீர்க் கூலந் தன்னிற்
பொருந்தித்தென் புலத்தோ றுற்றால்
எங்கணு யகனே யல்லால்
யாரதன் பெருமை சொல்வார் 13

[ஐப்பசியில் தேவதீர்த்தத்திலும் காவிரியிலும் மூழ்குவோர் எய்தும் பலன் கூறல் ]

934 ஐப்பசித் திங்கள் தன்னில்
அரும்பெறற் றேவ தீர்த்தம்
ஒப்பில்கா விரிநற் றீர்த்தத்
துண்மையி னாடி னன்னோர்
எப்பெரும் பவங்க ளெல்லாம்
ஈறுகண் டறி லாத
செப்புலா முலையாள் பாகன்
சேவடி நீழல் சேர்வார் 14

[ கார்த்திகைத் திங்கள் கார்த்திகைநாளில் ஆடுவோர் எய்தும் பலன் கூறல் ]

935 மிக்ககார்த் திகைமா தத்து
மேவுகார்த் திகைநன் னாளில்
தக்கவை கறையின் முன்னர்
சாற்றதர் வணதீர்த் தத்தின்

---

933 உற்றால் - கருதி வந்திருப்பார் எனின்.

934 பவம் - துன்பம், பாவம், ஈறுகண்டு - முடிவாகி, ஈறிலாத - அழியாத.

நக்கனை நினைந்து மூழ்கின்
நலியுநோய் முழுதும் நண்ணுத்
தொக்கபா வங்கள் தீரும்
துறக்கமு மெய்த லாமால் 15

[ மார்கழித் திங்கள் ஆதிரைநாளில் மூழ்குவோர்
எய்தும் பலன் கூறுதல் ]

936 மார்கழி மதியி னங்கண்
மன்னுமா திரைநன் னளில்
ஏர்கெழு சாம தீர்த்தத்
திரும்புனல் படிந்து கொன்றைத்
தாரணி சுந்த ரேசர்
தாள்பணிந் தைந்தெ ழுத்தும்
சீர்கெழு நந்தி முன்னர்ச்
செபித்துளோர் பவத்திற் செல்லார் 16

[ மாசித் திங்களில் இங்குள்ள பிரயாகையில் படிந்தோர்
உறும் பலன் கூறல் ]

937 மாசிநற் றிங்கள் தன்னில்
வருபுனற் பிராகை யாடின்
பாசவே ரரிந்து வெய்ய
பஞ்சபா தகத்தி னுய்வார்
தேசுலா முனிவர் தேவர்
தென்புலத் தவரும் மூழ்கி
ஈசனைப் போற்றி வேண்டும்
இன்பமுற் றினிது வாழ்வார் 17

935 நக்கன் - சிவபிரான். கழுது - பேய். தொக்க - பிறவிதோறும் தொடர்ந்த

936 ஏர்கெழு - அழகு பொருந்திய. தார் - மாலை. பவம் - நரகம்.

937 பிராகை - பிரயாகை தீர்த்தம். தேசுலாம் - ஒளிவீசுகின்ற.

[ இதுவுமது ]

938 மக்களில் லாத மாந்தர்
மக்களைப் பெற்று வாழ்வார்
மிக்கதோர் கல்வி யில்லார்
விஞ்சைபெற் றுண்மை தேர்வார்
தொக்கதீப் பிணிக ளுற்றோர்
சூழ்ந்தநோ யனைத்துந் தீர்ப்பார்
கைக்கிரு நிதியி லாதார்
கவின்பெறு குபேர னுவார் 18

[ மாசித் திங்கள் மகநாளில் நீராடுவோர் எய்தும் பலன் கூறுதல் ]

939 மாசிநன் மகத்திற் கீழ்ப்பால்
மன்னிய பிராகை யாடி
ஓசைகூர் சிந்து தீர்த்தத்
துவந்தனர் மூழ்கி யன்பால்
ஈசனை யேத்திப் பின்னர்
இந்திர தீர்த்தத் தாடி
ஆசிலவ் வரனைப் போற்றின்
அம்பொனு டாள்வ ரன்றே 19

[ அக்கினிதீர்த்த மாடினோர் எய்தும் பலன் கூறல் ]

940 அங்கியந் தீர்த்த மாடி
யத்திசை யமலற் போற்றின்
வெங்களே முதலா யுள்ள
விலக்குதீ யுண்டி யெல்லாம்

---

938 விஞ்சை – கலைஞானம். இருநிதி – தாவர சங்கமங்கள்.

939 மன்னிய – நிலைத்துள்ள. சிந்து தீர்த்தம் – ஐராவத தீர்த்தம்.
ஆசில் – குற்றமில்லாத. அம்பொன்னுடு – இந்திர லோகம்.

நுங்கிய பாவந் தீர்வார்
நோன்மைசே ரிமதிக் கின்கண்
தங்கிய அவமி ருத்துத்
தவிர்ந்திடும் தீர்த்தந் தன்னில் 20

[நிருதி தீர்த்தத்தில் மூழ்கினோர் எய்தும் பலன் கூறல்]

941 ஆடியத் திசையி னுற்ற
அவமிருத்துக் கரனைப் போற்றின்
வீடுத லரிய வாகி
மேவவ மிருத்து நீங்கும்
நீடிய நிருதி தீர்த்தம்
நேசித்து மூழ்கி யந்தப்
பீடுயர் சிவனைப் போற்றின்
பிஞ்ஞக னருளி னாலே 21

[வருண தீர்த்தத்திலானோர் பெறும் பலன் கூறல்]

942 பிறமனை நயந்த தீங்கு
பெயர்த்திடும் வருண தீர்த்தத்
தறவினை யாளர் மூழ்கி
யத்திசை யரனைப் போற்றின்
உறுபிணி மகோத ரந்தான்
ஒல்லையில் நீங்கும் வாயுத்
திறனுறு தீர்த்தந் தோய்ந்தத்
திசையுறு சிவனைப் போற்றின் 22

---

940 அங்கி – அக்கினி. அமலன் – இறைவன். வெங்கள் – தீதாகியமது. தீயுண்டி – புலால் முதலியவை. நுங்கிய – விழுங்கிய இமதிக்கு – யமன்திசை (தெற்கு) அவமிருத்து – அகால மரணம்

941 மேவு + அவமிருத்து – பொருந்திய அகால மரணம். கரன் – அழிப்பவன்,

942 நயந்த – விரும்பிய. அரனை – சிவபெருமானை,

[ குபேர தீர்த்தத்தில் மூழ்கினோர் உறும் பலன் கூறுதல் ]

943 எத்துணைப் பிணியும் நீங்கும்
இன்பமும் எளிதிற் சேர்வர்
பத்தியாற் குபேர தீர்த்தம்
படிந்தந்தத் திசையெங் கோணச்
சித்தமின் புறச்சே வித்தோர்
செல்லல்தீர்ந் தின்ப மேவி
முத்தியும் வினையின் நீங்கி
முறையுளி யடைவ ரன்றே. 23

[ ஈசான தீர்த்தமாடினோர் எய்தும் பலன் கூறல் ]

944 ஈசான தீர்த்த மாடி
யீசானத் திறைவற் போற்றின்
மாசான அவிச்சை நீங்கி
வரகதி பெற்று வாழ்வார்
தேசான மீனத் திங்கட்
சேர்ந்தவுத் திரநன் னாளில்
ஏசாத விருக்கு வேதத்
தீர்ம்புனற் றீர்த்தம் மூழ்கின். 24

[ வைகாசி விசாகநாளில் உரகதீர்த்தம் படிந்தாடுவோர்
பெறும் பலன் கூறுதல் ]

945 குட்டரோ கத்திற் றீர்வர்
கோதில்வை காசித் திங்கள்
ஒட்டிய விசாகந் தன்னில்
உரகதீர்த் தத்தின் மூழ்கின்

---

943 செல்லல் – துன்பங்கள். வினையின் நீங்கிமுத்தியும் அடைவர் என்க.

944 அவிச்சை – அறியாமை, (மும்மலம்). மீனத்திங்கள் – பங்குனி மாதம்.

நெட்டுடற் சர்ப்ப பீதி
நீங்குமற் றதனான் மாய்ந்தோர்க்
கிட்டமாய்ச் சிரார்த்தஞ் செய்யின்
இன்பவீ டடைவ ரன்றே. 25

[ இத்தீர்த்தங்களின் பெருமை முற்றும் கூறக் காலம் போதாதெனல் ]

946 உரைத்திடு மித்தீர்த் தங்கட்
குள்ளமான் மியங்க ளெல்லாம்
தரைத்தலை யூழிக் காலம்
சாற்றினும் முடிவு றாதால்
குரைத்தலைத் திரைக்குங் கங்கை
குழவிவெண் மதியோ டேந்தும்
வரைத்தனு வல்லா னல்லால்
வகுத்தெவ ருரைக்க வல்லார். 26

[ இவற்றையெல்லாங் கேட்ட நாரதர் மகிழ்தல் ]

947 திசைமுக னினைய வண்ணம்
தீர்த்தமான் மியங்க ளெல்லாம்
வசைதவிர் மகத நல்யாழ்
மாமுனிக் கோத வன்னோன்
அசைவிலா வுள்ளத் தோடும்
அயன்கழல் சென்னி சூடி
இசைவினால் மகிழ்ந்து பெம்மான்
இன்னருள் வியந்தன் புற்றான். 27

---

945 உரகதீர்த்தம் – ஆதிசேடன் உண்டாக்கிய தீர்த்தம். பீதி – அச்சம். அதனான் மாய்ந்தோர் – பாம்பு தீண்ட இறந்தவர்கள்.

946 சாற்றினும் – கூறினாலும். குழவிவெண்மதி – பிறைச்சந்திரன். வரைத்தனு – மலையாகிய வில். வல்லான் – சிவபிரான்.

947 வசை – குற்றம், பழி. பெம்மான் – சிவபிரான்.

[ இச்சருக்கம் கேட்டோர் எய்தும் பயன் கூறுதல் ]

948 செப்புமித் தீர்த்த மேன்மை
தெரித்தவிச் சரிதஞ் சொல்வோர்
தப்பிலா தெழுதுந் தூயோர்
தகுதியாற் கேட்கும் நல்லோர்
இப்பெரும் புவியிற் றீர்த்தம்
யாவையு மெய்தி யாடும்
அப்பெரும் பயன்க ளெய்தி
அழிவில்வீ டடைவ ரன்றே. 28

( பிரமதேவர் நாரதர்க்குத் தீர்த்த மான்மியம் உரைத்த சருக்கம் முற்றும் )

948 தப்பிலாது – தவறாமல்,

## இருபத்தைந்தாவது

# கழுகு விமோசனச் சருக்கம்

[கழுகு விமோசன வரலாற்றைக் கூறுகென முனிவர் கேட்பச் சூதன் தொடங்குதல்]

(எழுசீராசிரிய விருத்தம்)

949 பங்கயத் தவிசி லிருக்கும்நான் முகத்தோன்
பண்ணமை யாழ்முனி கேட்பக்
கங்கமாம் வடிவம் நீங்கிய காதை
கருணையா லுரைத்தவா றெமக்குப்
பொங்கமு தனைய புனிதமா தவத்தோய்
புகலென முனிவரர் வினவ
அங்கணன் பாதம் தொழுதருட் சூதன்
அக்கதை கூறுத லுற்றான். 1

[வேதநிதி யென்னுமோர் அந்தணன் மாளவதேசத்தின் கண் வாழ்ந்தான். அவனுக்குச் சத்தியவிரதன் என்றோர் மகன் பிறந்தான் எனல்]

950 மாளவ தேச மதன்கணுற் றிருப்போன்
மறையெலாந் தெரிந்தமாட் சியினால்
நாளுமே வேத நிதியெனப் புவியோர்
நவிலுநா மத்தினை யுடையோன்
கேளெலாம் மகிழ்ச்சி பூப்பவெண் வகைய
கேடில்செல் வத்தின னவன்பால்
வேளென வனப்புப் பொருந்திய சத்திய
விரதனென் றொருவன்வந் துதித்தான். 2

---

949 தவிசு – ஆசனம் (இருக்கை) கங்கம் – கழுகு. அங்கணன் – சிவபிரான்.

950 நாமத்தினை – பெயரினை. கேள் – உறவினர், வேள் – மன்மதன்

**[ வேதநிதி யிறந்தபின் சத்தியவிரதன் தீநெறியாளர்களின் உறவால் குலமரபு நீங்கி யொழுகினுன் எனல் ]**

951 அன்னவன் காத லரும்பெறற் றூதை
ஆயுளின் எல்லேகண் டதன்பின்
முன்னவ னீட்டும் நிதியெலா முகந்து
முறைபிறழ் விடமருள் ளிட்ட
சென்னியர் கூத்தர்க் களித்தவ ரோடு
சேர்ந்தற நெறியினை நோக்கான்
பின்னலங் கோதை மாதரார் மோகப்
பெருக்கினில் மூழ்கிவீழ்ந் தனனுல். 3

**[ அவன் படிப்படியாக ஐவகைப் பாதகங்களும் புரிந்து திரிந்தான் ஒருகால் ஓர் உத்தம வைணவனைப் பகைத்தான் எனல் ]**

952 பிறர்மனே விழைந்தும் குலமில்மா ணிழையார்
பெண்மையை நயந்துமா ழாந்தும்
அறவினை துறந்தும் குலநெறி பிறழ்ந்தும்
அந்தணர் தம்மொடு பகைத்தும்
திறனிலே வகைய பாதக மிழைத்தும்
திரீந்தனன் திரியுமந் நாளில்
மறைவலா னொருவன் மாலிடத் தன்பு
வைத்துளா னவனொடும் பகைத்தான். 4

**[ சத்திய விரதன் அவ்வைணவன் மீது புலாலே வீசி யிகழ அவன் இவனை கழுகாகச் சபித்தான் எனல் ]**

953 பகைத்தனன் தருக்கி யிகல்புரிந் தவன்மேற்
பற்றியோ ருழைத்தசை வீச
மிகைத்தவ றில்லான் தூய்மையில் தசையை
வீழ்த்தலான் கழுகுரு வாகி

---

951 விடமர் - துர்த்தர். சென்னியர் கூத்தர் - பாடுவோர் ஆடுவோர். குலமில் மாணிழையார் - தாழ்குலத்தவர், பரத்தையர். மாழாந்து - மயங்கி

952 மறைவலான் - வேதியன். மாலிடத்தன்புவைத்துளான் - திருமாலடியான்,

உகைத்திடு குணபஞ் சுவைத்துநீ திரியென்
றுருத்தவன் சபித்தலு மன்னேன்
தகைத்திடல் தேற்ருன் தோட்டியங் கூர்வாய்த்
தடஞ்சிறைக் கழுகுரு வடைத்தான் 5

[கழுகுருவடைந்து திரிந்து ஒருநாள் மீனைக் கவர்ந்துண்ணும் பொருட்டுப் பிரம தீர்த்தத்துள் பாய்ந்தான் எனல்]

954 கழுகுரு வடைந்து திசைதொறும் படர்ந்து
களேபரம் நுகர்ந்துசெல் காலை
பழுதினல் வினையின் பான்மையால் விண்ணம்
படர்ந்துதென் றிசைமுக நோக்கி
மழுவலா னல்லூர் எல்லைவந் தடுத்து
மறைவலான் தீர்த்தவா வியினேர்
இழுதுடை மீனின் ஊன்கவர்ந் துண்பான்
இரும்புனற் குத்திய தன்றே 6

[அத்தீர்த்தத்தில் வீழ்ந்து மூழ்கிய சிறப்பால் கழுகுரு நீங்கித் தேவ வடிவம்பெற்றுப் பொன்னுலகெய்தினன் எனல்]

955 குத்தலும் பிரம தீர்த்தநீர்த் திவலை
கொடியவெஞ் சிறைக்கழு கதனை
பொத்துதல் செயவக் கணத்திவ் வுருவம்
போயது தேவனுய்ப் பின்னர்

---

953 இகல்புரிந்து – சண்டையிட்டு. உழைத்தசை – மானினது தசையை குணபம் – பிணம். உருத்து – வெகுண்டு, தகைத்திடல் – தடுத்தல் தேற்ருன் – தெரியாதவனுய். தோட்டி – ஒருபடைக்கருவி

954 களேபரம் – (உயிரில்லாத) உடல். மழுவலான் – மழுவாயுதத்தை யுடைய சிவபிரான். இழுது – கொழுப்பு. உண்பான் – உண்ணும் பொருட்டு. குத்தியது – நீருள் பாய்ந்தது.

எத்திசையவரும் காணநீள் சோதி
யிலங்கொளி விமானத்தி னேறி
முத்தம துரிஞ்சும் அரமட மகளிர்
முகிண்முலைத் தடத்தின்மூழ் கியதால் 7

**[தாழ்ந்த கழுகும் அத்தடச் சிறப்பால் தேவனாயிற்று எனின் இத்தீர்த்தத்தின் பெருமை கூறப்போமோ எனல்]**

956 புல்லிய கழுகும் தேவனாய் வானோர்
போற்றவீற் றிருந்தது வென்றால்
நல்லிசை வல்லாய் உளங்களித் தந்நீர்
நாடியே யாடுதல் புரிந்தோர்
எல்லையில் வினையின் சிமிழ்ப்பெலாம் ஒருவி
ஈறிலா வின்பவீ டதனை
ஒல்லையி னடைதல் அதிசய மோவென்
றோதிம வூர்தியாங் குரைத்தான் 8

**[நாரதன் இறைவன் பெருமையை எண்ணி மகிழ்ந்து போதல்]**

957 உரைத்தலும் மகிழ்ச்சி பூத்துநா ரதனும்
ஒண்ணுத லுமையொரு பாகன்
அருத்திகூர் கருணைக் களவைமற் றுளதோ
ஐயன்நல் லூரினைப் போல
தரைத்தல மதன்கட் டலம்பிறி துண்டோ
சத்தசா கரத்தடம் போலத்
திரைப்புனற் றடம்வே றுளதுகொ லென்னாத்
திசைமுகற் பணிந்துசென் றனனால் 9

---

955 திவலை – நீர்த்துளி. பொத்துதல் – நனைத்தல், அரமடமகளிர் – தேவமகளிர்.

956 நல்லிசை – நற்புகழ். சிமிழ்ப்பு – கட்டு. ஒருவி – நீங்கி. ஒல்லை – விரைவு. ஓதிமவூர்தி – அன்ன வாகனத்தையுடைய பிரமன். ஓதிமம் – அன்னப் பறவை.

957 அருத்தி – விருப்பம். தரைத்தலம் – உலகம்.

[ இக்காதை கேட்டோர் கூறினோர் எய்தும் பலன் ]

958 மொழிந்தவிக் காதை எழுதுநர் கேட்போர்
முறைவிரித் தெழுதுமே தகவோர்
அழுந்துபா தகங்க ளனைத்தையு மொருவி
யகலிடத் தரசுவீற் றிருந்து
தொழுந்தகை யமரர் தொழுதனர் போற்றத்
துறக்கநா டெய்திவெண் டிங்கட்
கொழுந்தணி மவுலிப் பரம்பரன் பதுமக்
குரைகழல் நீழல்வாழ்ந் திருப்பார் 10

(கழுகு விமோசனச் சருக்கம் முற்றும்.)

958 அழுந்து பாதகம் – பற்றியிருக்கும் பாவங்கள். அகலிடம் – பூவுலகம்

இருபத்தாறாவது

# வீதிவிடங்கச் சருக்கம்

**[ வீதிவிடங்கர் மான்மியம் கூறுகென வேண்டிய முனிவர்கட்குச் சூதன் கூற முற்படுதல் ]**

( *கலி விருத்தம்* )

*959* வானி னின்றும் வருமரு மைத்திரு
மேனி யாரருள் வீதி விடங்கனூர்
நானி லத்துநல் லூர்வைகும் மான்மியம்
தானி யம்பெனச் சூதனுஞ் சாற்றுவான். *1*

**[ கிருதயுகத்தில் முசுகுந்தன் வாழ்ந்தான் எனல் ]**

*960* அருந்த வத்தினீர் ஆதியு கத்தினிற்
திருந்து கோலெண் டிசையுஞ் செலுத்தியே
பொருந்த லாரைப் புறங்கண் டரசுசெய்
திருந்து ளான்முசு குந்த னிணையிலான். *2*

**[ அசுரர்களின் துன்பத்தால் அதனை நீக்க இந்திராதி தேவர்கள் முசுகுந்தனிடம் வந்து முறையிடல் ]**

*961* அன்ன வேந்த னவனி புரக்குநாள்
இன்னல் செய்யு மசுர ரிடுக்கணுல்
பொன்னின் நாட்டிற் புரந்தர னாதியோர்
துன்னி யன்னவற் கின்னணஞ் சொல்கிறார். *3*

---

**959** வான் - இந்திரலோகம்.

**960** ஆதியுகம் - கிருதயுகம். பொருந்தலார் - பகைவர். முசுகுந்தன் - சோழமன்னன்.

**961** அவனி - பூவுலகம். பொன்னின்நாடு - தேவலோகம். புரந்தரன் - இந்திரன். துன்னி - நெருங்கிவந்து.

[ நீ அசுரர்களை வென்று எம்மைக் காக்க வேண்டுமெனல் ]

962 சீற்ற முற்றெழு தீய அவுணரால்
ஆற்றல் போய்மிக அல்லலுற் றேமெமைப்
போற்றல் செய்து புரத்தற்கு நீ யவர்
கூற்ற மாகிக் குமைத்திடல் வேண்டுமால். 4

[ முசுகுந்தன் தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்குதல் ]

963 என்ன விண்ணோர் இரத்தலும் வாட்படை
மன்னர் மன்னவன் மற்றிது வேலது
சொன்ன வாறு தொலைத்தசு ரேசரைச்
சின்ன பின்னஞ்செய் வேனென்று சென்றனன். 5

[ முசுகுந்தன் அசுரரை வென்று இந்திரன் வாகைசூடச்
செய்தான் எனல் ]

964 சென்று வேந்தனத் தேவர்கு ழாத்தொடும்
நின்று தானவர் நீள்குலம் யாவையும்
கொன்று விண்ணங் குடியேற்றி வாசவன்
வென்றி சூட விறல்புரிந் தானரோ. 6

[ இந்திரன் முசுகுந்தனுக்கு முகமன் கூறிப் போற்றுதல் ]

965 மற்பு யத்திகல் வாட்படை மன்னனை
கற்ப கத்திரு நாட்டுயர் காவலன்
பொற்பு றத்தழு விப்புகழ்ந் தேத்திநீ
எற்ப தத்தர சின்றுதந் தாயென்றான். 7

---

962 புரத்தற்கு – காப்பதற்கு. கூற்றமாகி – யமனாகி, குமைத்திடல் – அழித்திடல்.

964 தானவர் – அசுரர். குலம் – கூட்டம். வாசவன் – இந்திரன். விறல் – வெற்றி.

965 இகல் – போர், எம்பதத்தரசு – என்னுடைய பதவியாகி அரசினை

[ இந்திரன் முசுகுந்தனுக்குக் கைம்மாருக வேண்டுவது தருவேன் எனல் ]

966 இன்று நீசெய் யுதவிக்கி யான்பிறி
தொன்று கைம்மா றுதவுவ தென்கொலாம்
வென்றி வேலவ வாயினும் வேண்டுவ
நன்று கேளது நல்குவ னீங்கென்ருன். 8

[ முசுகுந்தன் இந்திரனிடமுள்ள உமையோடுங் கந்தனோடும் விளங்கும் மூர்த்தியைத் தருகவெனக் கேட்டல் ]

967 உம்பர் நாயக னவ்வண மோதலும்
எம்பி ரானருளாலிகல் வேந்தனும்
அம்பை வேலவ ஞேடு மமர்ந்தவின்
னம்ப ஞர்தமை நல்கென் றியம்பினன். 9

[ திருமால் தனக்கு அளித்த அந்த மூர்த்தியைக் கேட்டலும் இந்திரன் செய்வதறியாது சிறிது தடுமாறுதல் ]

968 மன்னன் சொற்றலும் வாசவன் மாலவன்
முன்னம் நல்கிய மூர்த்தி யிவரெனப்
பின்னை யொன்றுரை யான்பெரி தேங்குபு
தன்னை யும்மறந் தான்றடு மாறினன். 10

[ தன்னுயிரைத் தருதல் போல ஒன்றும் பேசாமல் அவன் அளித்தான் எனல் ]

969 கொள்ளு கென்னுமக் கூற்றுடன் ஆருயிர்
விள்ளு மாலென விம்மித முற்றவன்
தள்ளு மாலுரை யென்னுமத் தன்மையால்
வள்ளல் பன்னவன் கொள்ளவ ழங்கினன். 11

---

967 அம்பை – அம்மை – உமையவள். வேலவன் – முருகன். நம்பனுர் – இறைவன்,

968 மாயவன் – திருமால். மூர்த்தி – முசுகுந்தன் கேட்ட இறைவன் படிவம்.

969 கூற்றுடன் – உரையுடன், விள்ளுமால் – நீங்கிவிடுமே. தள்ளு மால் உரை – தான்கொடுத்த வாக்குத் தவறுமே என்று கருதி. வழங்கினன் – வீதிவிடங்க மூர்த்தியை அளித்தான்.

[ முசுகுந்தன் நன்றிப்பெருக்கால் இந்திரனைத் துதித்தானெனல் ]

970 வழங்க லோடும் மகிதல மன்னவன்
அழுந்து மன்பினோ டாகம் புளகித்தே
விழுந்து போற்றி விமலனைக் கைக்கொண்டு
தொழுந்த கைமக வானைத் துதித்தரோ. 12

[ முசுகுந்தன் அந்த மூர்த்தியைப் பெற்றுக்கொண்டு திருவாரூர் செல்லப் புறப்பட்டான் எனல் ]

971 புற்றி டங்கொண்ட பூரணன் ஆரணன்
அற்றந் தீர்ந்தன் றரும்பெறல் மாமணம்
முற்று ருமுலை முண்டகம் பூமகட்
குற்ற வாறுசெ யாரூரில்வந் தெய்துவான். 13

[ வரும் வழியில் நல்லூரையடைந்தான் எனல் ]

972 விண்ணம் நீங்கி விரைமலர்ச் சோலைவாய்த்
தண்ணந் தாது தவழ்பொன்னி நாடெய்திக்
கண்ண கன்ற கடிமதில் சூழ்வரும்
அண்ணல் நல்லூ ரடைந்தன னென்பவே. 14

[ அமராவதி போல விளங்கும் நல்லூரைக் கண்டனன் அவன் எனல் ]

973 பூம லர்ந்த புதுமலர்ச் சோலைவான்
காவெ னுந்தகை காட்டவிண் ணுட்டகத்
தேவ விந்திர னெய்தம ராவதித்
தேவ நன்னகர் போன்றதச் சீர்நகர். 15

---

970 மகிதலம் - பூவுலகம். புளகித்து - மயிர்க்கூச்செறிந்து. மகவான் - இந்திரன்.

971 ஆரணன் - வேதமாயிருப்பவன். எய்துவான் - சென்று சேர்தற் பொருட்டு.

972 கண்ணகன்ற - இடமகன்ற.

973 வான்கா - கற்பகச்சோலை. தகை - ஒப்பு. சீர்நகர் - நல்லூர்.

[ முசுகுந்தன் மூன்று நாள் அங்குத் தங்கியிருந்தபோது இங்கே எழுந்தருளச் செய்க என ஆகாயவாணி எழுந்தது எனல் ]

974 அன்ன வண்ண மணிவளம் நல்குபு
துன்னு மந்தநல் லூரெல்லை தோன்றலும்
முன்ன வன்றினம் மூன்றிவண் வைகவே
மன்னச் செய்கென்றோர் வாணி யெழுந்ததால். 16

[ வானொலி கேட்டமன்னன் இஃது இறைவன் கட்டளையே எனத் தெளிந்து அவ்வறே செய்ய முற்பட்டான் எனல் ]

975 வாணி வானத்தில் வண்ண மெழுதலும்
ஆணிச் செம்பொன் னவிர்மணி மோலியான்
தாணு வின்னருள் தானது வேலது
பேணிச் செய்குவன் பெற்றியின் யானென்றே. 17

[ இந்திரன் செய்திருந்ததைக் காட்டிலும் ஏழு மடங்குச் சிறப்போடு வீதிவிடங்கரை நல்லூரிற் பிரதிட்டை செய்தான் எனல் ]

976 இந்தி ரன்செய் சிறப்பி னெழுமடங்
கந்த மின்றியே அன்புடன் மன்னவன்
சுந்த ராசலத் தொன்னக ரந்தனில்
எந்தை வீதி விடங்கர்க் கியற்றினன். 18

[ இறைவன் மகிழ்ந்து அந்த பீடத்திலிருந்து நடம் புரிந்தருளினன் எனல் ]

977 திறல்கொள் மன்னவன் செய்த சிறப்புவந்
திறைவன் பீடத் திருந்தசைந் தாடினன்
நறைகொள் பூமழை நானிலம் போர்ப்பவான்
உறையுந் தேவரும் உய்த்துநின் றாடினர். 19

---

974 அணிவளம் - அழகுச்செல்வம், நல்குபு - நல்கி வைக - தங்கியிருக்க. மன்னச்செய் - பிரதிட்டை செய்க! வாணி – ஆகாய வாணி

975 தாணு – இறைவன். பேணி – மதித்துப் போற்றி

977 சிறப்பு - மண்டபமமைத்து எழுந்தருளச் செய்த செயல். நறை – தேன்,

[ அந்தணர் முதலானோர் எழுப்பிய ஆரவாரம் எழுகடல் ஒலியினும் மிக்கெழுந்ததெனல் ]

978 அந்த ணாளர் அருமறை யோசையும்
தொந்த மாமன்பர் தோத்திர வோசையும்
முந்து பல்லியம் மூண்டெழு மோதையும்
சிந்து வேழுமுன் சேர்ந்தென வார்த்தரோ. 20

[ அது முதல் இறைவன் சித்திர வீதிவிடங்கன் என்ற நாமத்தோடு நல்லூரில் விளங்குகிறான் எனல் ]

979 ஊறி லாவளம் உற்றநல் லூரிலோர்
கூறு நம்பன் குவலயம் போற்றவே
வீறு சித்திர வீதிவி டங்கனென்
றீறில் பேர்பெற் றிருந்தன னென்பவே. 21

அமராவதியினும் இறைவன் நல்லூரை உவந்து தங்கினானாதலின் அப்பதிக்கு ஒப்பாவது வேறில்லை எனல் ]

980 வான நாட்டின் மணிமுடி யிந்திரன்
தான மாமம ராபதி தன்னிலும்
ஞான மூர்த்திநல் லூர்கண் டுறைவனேல்
ஏனை வான்பதி யாதிதற் கொப்பதே. 22

[ முசுகுந்தன் மூன்று நாளிருந்து பல பணிகளைச் செய்தான் எனல் ]

981 மூன்று நாளவண் முற்றலுங் கோமகன்
ஊன்று காதலி னேங்குநல் லூர்வயின்
தோன்று சோதிச் சுயம்புலிங் கம்பணிந்
தேன்று வான்பணி யாதுமி யற்றியே. 23

---

978 தொந்தம் – அடிமையுறவு. பல்லியம் – பல்வகை இசைக்கருவிகள் சிந்து – கடல்

979 ஊறிலா – குற்றமில்லாத

980 தானம் – இடம்.

981 பணி – திருப்பணி,

[ தண்ணடையும் பூசனைக்குரிய மற்ற யாவையும் மன்னன் வழங்கினன் எனல் ]

982 கரும்புஞ் செந்நெலும் காய்க்கமு கும்மிடைந்
தரும்புந் தண்ணடை யாதியும் ஆதிக்கு
விரும்பு பூசைக்கு வேண்டுவ யாவையுஞ்
சுரும்பு லாந்தொடை யான்நல்கிச் சூழ்வந்தே. 24

[ பல்வேறு தானங்களைப் புரிந்து பின் மன்னன் திருவாரூர் சென்றனன் எனல் ]

983 எந்தை வீதி விடங்கரை யெண்டிசை
வந்து வந்து வழியிடை வந்திப்பக்
கொந்து லாமல ரோடு கொழும்பொனும்
சிந்தி யாரூர்த் திருநக ருய்த்தனன். 25

[ இவ்வுலகம் உய்ய முசுகுந்தன் இவ்வாறு செய்தான் எனச் சூதன் மகிழ்ந்து கூறுதல் ]

984 செம்பொற் கோயிலுட் டேவசிங் காதனத்
தும்பர் கோனை யுவப்பொடுந் தாபித்து
நம்ப னுக்கு நயந்தவை யாவையும்
இம்பர் நாடுய்ய ஏந்தல்செய் தானரோ. 26

[ ஆரூர் எய்தும் வழியில் இறைவன் நல்லூரில் அமர்ந்தான் ஆதலின் எல்லாப் பகுதிகளுக்கும் இதுவே தலையாயது என்பது பெறப்படுமெனல் ]

985 அந்த ணாரூர் அதற்கெய்துங் காலையில்
எந்தை நல்லூ ரிடத்தமர்ந் தானென்றாற்
சுந்த ராசலந் தொல்பதி யாவைக்கும்
முந்து மாறு மொழியவும் வேண்டுமோ. 27

---

982 மிடைந்து – நெருக்கி. தண்ணடை – மருதநிலம். ஆதிக்கு – இறைவனுக்கு.

983 கொழும்பொன் – திரண்ட பொற்காசுகள். சிந்தி – வழங்கி.

984 உம்பர்கோனை – சிவபெருமானை. ஏந்தல் – முசுகுந்தன்.

985 முந்துமாறு – தலைமை பெறுந்தன்மையை.

[ இக்காதை கேட்போர் கூறுவோர் எய்தும் பலன் கூறுதல் ]

986 சாற்று மிக்கதை தன்னைப் படித்துளோர்
ஏற்ற மாக வினிதுடன் கேட்டுளோர்
நாற்றி சைப்புவி யாண்டு நயப்புடன்
வீற்றி ருப்பர்பொன் மேதினி மீதரோ. 28

வீதிவிடங்கச் சருக்கம் முற்றும்

★★★
★★★
★★★

986 பொன்மேதினி – பொன்னுலகம்,

இருபத்தேழாவது

# அமர்நீதிச் சருக்கம்

( அறுசீராசிரிய விருத்தம் )

[ அமர்நீதி நாயனார் வரலாற்றை
முனிவர்கள் வேண்டச் சூதர் கூறத் தொடங்குதல் ]

987 பாந்தளா பரணம் பூண்ட
மரம்பரன் கருணை தன்னாற்
சாந்தமார் புலிக்கால் மேலோன்
றனையன்முன் சாற்று நின்ற
ஏந்தலா ரமர்நீ திப்பேர்
இசைந்துளார் சரித மிப்பால்
ஆய்ந்துரை யென்னச் சூதன்
அருந்தவர்க் குரைக்க லுற்றான் 1

[ வணிகர் குலத்திற் றோன்றிப் பழையாறையில்
அமர்நீதியார் வாழ்ந்து வந்தார் எனல் ]

988 பொங்குநீர்ப் பொன்னி நாட்டிற்
போதவிழ்த் தளிபண் பாடும்
பங்கயப் பழன வேலிப்
பழையாறைப் பதியின் வாழ்வார்
மங்கல மிகுந்த செல்வ
வணிகர்தங் குலத்தில் வந்தார்
அங்கணார்க் கன்பு மிக்கார்
அமர்நீதி யென்னும் பேரார் 2

---

987 பாந்தள் - பாம்பு. புலிக்கால்மேலோன் - வியாக்கிரபாத முனிவர் தனயன் - உபமன்யு முனிவர், எந்தலார் - தலைவர் (நாயனர்)

988 அளி - வண்டு, பழனவேலி - வயலாகிய வேலி,

[ தான் ஈட்டும் செல்வத்தை அடியார்களுக்கு உண்டி உடை முதலியவாக அளித்து மகிழ்ந்து வருகிறார் எனல் ]

989 எந்தையா ரடியார்க் கென்றும்
ஈறில்பே ரன்பு தன்னாற்
பந்திபந் திகளாய் வைத்துப்
பாங்குட னன்ன மிட்டுக்
கந்தைகோ வணங்க ளீவார்
காலினுங் கலத்தி னானும்
வந்தநீள் நிதிக ளுய்த்து
வான்கதிப் பயனைக் கொள்வார் 3

[அடியார்கட்கு உணவு வழங்க அமர்நீதியார் நல்லூரில் ஒரு மடத்தை அமைத்து ஆண்டுத் தங்கினார் எனல் ]

990 அண்ணலா ரடியா ருண்ண
வறுசுவை யடிசி லீவான்
நண்ணவா தரவால் நல்லூர்
நகரினோர் மடமுண் டாக்கி
எண்ணிலாச் சுற்றத் தோடும்
எந்தைநல் விழவு காணத்
தண்ணந்தார் வணிகர் கோமான்
சார்ந்தன னுறையுங் காலை 4

இறைவன் அவர் பெருமையை உலகுக்குத் தெரிவிக்க எண்ணி ஒரு பிரமசாரியாக எழுந்தருளினான் எனல் ]

991 அங்கண்மா ஞால மெல்லாம்
அவரன்பு விளங்கச் செய்வான்
சங்கரன் பிரம சாரி
தன்னுடைக் கோலங் கொண்டு

---

989 பந்தி – வரிசை, கூட்டம். கந்தை – ஆடை. காலினும் கலத்தினும்– பண்டிகளிலும் கப்பல்களினும். உய்த்து – தருமம் புரிந்து.
990 அடிசில் – உணவு. வணிகர் கோமான் என்றது அமர்நீதியாரை.

சிங்கவே றனையான் முன்னஞ்
சேர்தலும் வணங்கி யெந்தாய்
இங்குவே தியரா லட்ட
இன்னமு தருந்திப் பின்னர் 5

[ அமர்நீதி அவரை வேற்று உணவளித்துப் போற்றி இறைவன் திருவிழா முடியும்வரை இங்குத் தங்கியிருக்க வேண்டுதல் ]

992 அடியனே னுய்ய வாட்கொண்
டங்கணர் திருநாள் முற்றும்
ஒடிவிலா நேயத் தோடும்
உறைந்துபின் னகல்வீ ரென்ன
நெடியமா லறியா வெங்கோன்
நேர்ந்தன னுவகை பூத்துப்
படிமிசை யேவர் நின்போல்
பத்திமை புரிவா ரென்றே 6

[ இறைவன் அதற்கு ஒப்பித்தான் நீராடச் செல்வதாகக் கூறித் தன் கோவணத்தில் ஒன்றை ஒப்படைத்துக் காக்குமாறு கூறிச் செல்லுதல் ]

993 கரதலத் திருக்குந் தண்டிற்
கட்டுகோ வணமி ரண்டின்
ஒருதனிக் கோவ ணத்தை
ஒப்பிலான் கையில் வாங்கி
இருநிலத் திதனுக் கொப்ப
தில்லையா லரிதிற் காத்துத்
தருகென வைத்து மூழ்கும்
தன்மையன் போலச் சென்றான் 7

---

991 சங்கரன் - சிவபிரான். அட்ட - சமைக்கப்பெற்ற. அமுது - உணவு.

992 ஒடிவிலாது - தவிராது. உறைந்து - தங்கி. படி - பூமி

993 தண்டு - கோல். வாங்கி - எடுத்து. மூழ்கும் - தீர்த்தமாடும்.

[புனலாடி வந்து இறைவன் கோவணத்தைக் கேட்க அது வைத்த இடத்திற் காணுமையால் அவர் அஞ்சுதல்]

994 சென்றவர் புனலி னாடிச்
திரும்பிவந் தவரைப் போல
நின்றுகோ வணத்தைக் கேட்ப
நிகரிலா வன்ப ரோடி
அன்றுகோ வணங்கொண் டுய்த்த
அறைபுக்குக் காணு ராகி
இன்றிதற் கென்செய் கோவென்
றில்லொடு மிரங்கிச் சோர்ந்தார் 8

[கோவணம் மறைந்தமைகூறி வேறு பட்டுக்கோவணம் தருவதாக இறைவனிடம் அமர்நீதியார் கூறுதல்]

995 கோவண மொளித்த கள்வர்
குரைகழற் சரணம் போற்றி
காவல்கொண் டுய்த்தி யென்னக்
கருணையா லென்கை தந்த
தாவில்கோ வணத்தைக் காணேன்
தமியனேன் தவறெண் ணாது
பூவ்ணப் பட்டு நூலாற்
புனைந்தகோ வணங்கொள் கென்றார் 9

[இறைவன் சினந்து என் கோவணத்திற்கு யாதும் ஒப்பாகாது அதனை மறைத்துக் கொண்டாய் எனப் பழிகூறுதல்]

996 என்றலுஞ் சினந்து பெம்மான்
எரியெழ விழித்து நோக்கி
நின்றவர் தம்மைச் சீறி
நிகரில்கோ வணங்கள் கொள்வான்

---

994 அரை - சரக்கறை, இல்லொடும் - மனைவியோடும், இரங்கி - வருந்தி,

995 உய்த்தி - தருவாயாக. தாவில் - குற்றமில்லாத.

ஒன்றிய வன்பன் போல
உலகினை மருட்டு கின்றாய்
சென்றது கொணர்தி யுன்பொய்ச்
சிமிழ்ப்பினிற் படேன்யா னென்றார் 10

[ அமர்நீதியார் அஞ்சி வணங்கிக் கண்ணீர் சோர
மீண்டும் தேடிக் கிட்டாமையால் இறைவனிடம் வேண்டுதல் ]

997 அளவிலா மாயை வல்ல
அண்ணலிவ் வாறு கூற
உளநடுக் குற்றுக் கண்ணீர்
ஒழுகநெட் டுயிர்த்துப் பின்னும்
தளவவாள் நகையா ளோடுஞ்
சரக்கறை புகுந்து தேடி
விளையுமா றென்னோ வென்று
மீண்டடி வீழ்ந்து சொல்வார் 11

[ எண்ணில் ஆடைகள் தருவேன் என்ற அமர்நீதியாரிடம்
இக்கோவணத்திற்கு ஒத்த பொருள் கொடுப்பின்
கொள்வேன் என இறைவன் கூறல் ]

998 தந்தகோ வணத்தைக் காணேன்
தமியனேன் பொய்த்த தில்லை
எந்தைநீ பொறுத்தி வெவ்வே
றெண்ணில்கோ வணங்க ளீவேன்
சிந்தனை செய்யே லென்னத்
தீயெழ நகைத்துக் கொண்டு
உந்துகோ வணத்துக் கொப்ப
தொன்றெமக் கமையு மென்றான் 12

---

996 நின்றவர் – அமர்நீதியார். கொள்வான் – அபகரித்து கொள்ளு தற்காக. சிமிழ்ப்பு – அகபடுத்தும் வலை.

997 தளவவாள் நகை – முல்லையரும்பு போலும் ஒளியுடைய பற்கள்.

998 ஒப்பதொன்று – ஒத்த வேறு பொருள். அமையும் – கொடுத்தாற் போதும்.

[ஒரு கோவணத்தைத் துலையில் இட்டு அதற்கு ஒத்த பொருளை நிறுத்துத்தர நாயனார் முற்படுதல்]

999 ஒப்பதிங் குளதே லைய
உறுந்துலை யிடுதி நேர
வைப்பனேர் உள்ள தெல்லாம்
மற்றிஃ துடன்பா டென்னக்
கைப்பது மத்திற் கொண்ட
கவின்கொள்கோ வணத்தை யன்னோன்
செப்பிய வாறே உய்த்தான்
தெருமர லொழிந்து செல்வர் 13

[துலையில் கோவணத்திற்கு நிகராகத் தன் பொருளை எல்லாம் துலையில் வைக்கின்றமை கூறுதல்]

1000 திவ்விய வடிவங் கொண்டோன்
சேர்ந்தகோ வணத்திற் கொப்ப
ஒவ்வொரு கோவ ணங்கொண்
டுய்த்தலும் நிறைநில் லாமல்
எவ்வமுற் றுயர நாய்கர்
இஃதிறும் பூதென் றெண்ணி
அவ்வியந் தீர்ப்பார் வல்லே
அறையிடைப் புகுந்து வாரி 14

[ஆடையணிமணிகள் யாவற்றையும் துலையிலேற்றியும் துலை சமனாகவில்லை எனல்]

1001 தூயகோ வணத்தின் சும்மை
தூசுடைப் பொதிக ளிந்த
மாயிரு ஞாலம் விற்கும்
மணிவிளிம் பெறிந்த வாடை

---

999 துலை – தராசு. உடன்பாடு – ஒப்பந்தம். தெருமரல் – மனமயக்கம்
1000 நாய்கர் – வணிகர் (அமர் நீதியார்) அவ்வியம் – பொய்மை, வஞ்சனை.
1001 தூசு – ஆடை. பொதி – மூட்டை. விளிம்பெறிந்த – கரையிட்ட மேவர – (தராசு சமமாகப்) பொருந்தி நிற்க, பணி – அணிகலன்.

மேயபூம் பட்டு மிட்டும்
மேவரக் காணார் பின்னும்
பாயொளிப் பணியும் பொன்னும்
பல்பண்டத் தொகையு மிட்டார் 15

[ துலை சமனாகாமையானும் இடுதற்கு வேறு பொருளின்மையானும் நாயனார் தன் மனைவி மக்களோடு துலையில் ஏறச் சமனாயிற்று எனல் ]

1002 இடுதலுஞ் சமனி லாமல்
எந்தையார் தட்டுத் தாழ
உடையதோர் பொருள்மற் றின்றி
உத்தம மனைவி யோடும்
மடநடை மகாருந் தாமும்
மகிழ்ந்தன ரேறுங் காலை
விடையவர் தட்டி னோடும்
மேவர நின்ற தன்றே 16

[ அடியார் பெருமை உலகறிய அத் துலைத்தட்டே விமானமாகமாற இறைவன் உமையோடு காட்சிதந்து அவர்கட்கு வீடுபேறளித்தான் எனல் ]

1003 நிற்றலும் ஏறுந் தட்டே
நீடொளி விமான மாக
வெற்றிமால் விடைமே லேறி
விளங்கிழை யொருபால் வைகக்
கற்றையஞ் சடையா ரன்னோர்
கண்களி கூரத் தோன்றி
முற்றுபே ரின்ப வீடு
முறைமையா லடையச் செய்தார் 17

---

1002 விடையவர் – இடபவாகனத்தையுடைய இறைவன். தட்டு – கோவணத்தை இட்டுள்ள தராசுத் தட்டு.

1003 ஏறுந்தட்டு – அமர்நீதியார் தன் மனைவி மக்களோடு ஏறிநின்ற தட்டு. விளங்கிழை – உமையவள்.

[நல்லூர் இறைவனின் அருட்பெருமையைக் கூறலரிது எனல்]

1004 ஆதலான் நல்லூர் மேய
அண்ணலா ரருளின் தன்மை
ஓதுமா றெளிதோ யார்க்கும்
ஊழிதோ றுரை செய்தாலும்
மாதவர் கேண்மி னந்த
வண்ணமப் பதியின் மேவிப்
பூதலம் புகழ வின்பம்
பொருந்தின ரனேகர் மாதோ 18

[இக்காதையைக் கற்றவர் கேட்டவர் உரைத்தவர்கள்
எய்தும் பலன் கூறல்]

1005 கற்றவர் கேட்போ ரிந்தக்
காதையைக் காதல் கூர
முற்றவும் விரித்தல் செய்வோர்
மூதுல காண்டுப் பின்னர்
பெற்றமீ துயர்த்த பெம்மான்
பேரரு ளதனு லென்றும்
உற்றபே ரின்ப வீட்டி
னுகந்துவீற் றிருப்ப ரன்றே. 19

[சூதன் சவுனகாதி முனிவர்க்கு இவ்வாறு நல்லூர் மான்மியங்
கூற அனைவரும் மகிழ்ந்தார் எனல்]

1006 இப்பரி சுகந்து சூதன்
எம்பிரா னருளி னலே
தப்பிலா விரதம் பூண்ட
சவுனகன் முதலி யோர்க்குச்
செப்பின னவரும் நல்லூர்த்
திருமலைச் சொக்கி பாகன்
ஒப்பருங் கருணை வாழ்த்தி
உளங்களித் துவகை பூத்தார் 20

1005 விரித்தல் – விளங்க உரைத்தல். பெற்றம் – இடபம்.

[ முனிவர்கள் சூதமுனிவரைப் போற்றிப் புகழ்ந்தார் எனல் ]

1007 சூதமா தவனை நோக்கித்
தொழத்தகு முனிவ ரெல்லாம்
முதுணர் வியாதன் சொன்ன
( முறைமையால் ) நல்லூர் மேன்மை
ஆதரம் பெருகத் தேனும்
அமுதமும் போலச் சொற்றாய்
நீதியா ( லுலவும் மேலோய் )
நின்னையார் நிகர்ப்ப ரென்றார் 21

[ நல்லூர் மான்மியங் கேட்ட அனைவரும் பெருமகிழ்வுற்றார் எனல் ]

1008 வன்ளலா ருகந்த நல்லூர்
மான்மிய மிருந்த (வாறும்)
(தெள்ளு) நீர்த் தீர்த்தம் யாவும்
செழித்தவண் சிறந்த வாறும்
உள்ளினோர்க் (கெல்லா மின்பம்)
ஒப்பிய வாறும் நோக்கித்
தள்ளருந் தவத்தோ ரெல்லாம்
தமதுடல் பூரித் தாரால் 22

[ எல்லோருமகிழ்ந்து இறைவனை வாழ்த்தினார்கள் எனல் ]

1009 (நறவுமிழ்) சோலை சூழ்ந்த
நல்லூரி லாண்டார் செய்யுந்
திறல்கெழு கருணை வாழ்த்தித்
( திருமலைச் சொக்கி ) யென்னும்
பிறைநுத லிமைய வல்லி
பேரருள் வாழ்த்தி நாளும்
உறுதவ ருவகை பூத்தார்
( உய்ந்த திவ் வுலக ) மெல்லாம்

[ இப்புராண ஆசிரியர் இறுதியாக வாழ்த்துக் கூறுதல் ]

1010 திருமலைச் சொக்கி வாழி
தேக்களி விநாய கன்றன்
மருமலர்த் தா ( ள்கள் வாழி )
( மணவாளக் ) கோலம் வாழி
வெருவுதல் தவிர்க்கும் காசி
விநாயகன் முதலோர் வாழி
( முருகொளி விளங்குந் ) திவ்விய
மூர்த்திக ளெவரும் வாழி 24

[ இதுவுமது ]

1011 அந்தணர் வாழி நல்லூர்
அணிவளம் வாழியோ ( ங்கும்
சுந்தரச் ச ) யிலம் வாழி
சுயம்புநல் லிங்கம் வாழி
சந்ததந் தலத்தோர் வாழி
தானிகர் முதலோர் வாழி
செந்தமிழ்ப் புராணம் வாழி
செப்பினோர் வாழி வாழி 25

[ இதுவுமது ]

1012 திருப்பணி செய்வோர் வாழி
திருமலைச் சொக்கி பாகர்
மருப்பொலி பாதத் தன்பு
வைத்துளோர் வாழி யென்றும்
விருப்பமீ தூரப் பூசை
விழாவணி புரிவோர் வாழி
தரைத்தலம் புரக்கும் வேந்தர்
சந்ததம் வாழி வாழி 26

---

1010 வெருவுதல் — அஞ்சுதல்
1011 சயிலம் - மலை. தானிகர் - கோவில் ஸ்தானிகர்.

[இப்புராணத்தைச் செய்தார் இவர் எனல்]

(ஏழுசீராசிரிய விருத்தம்)

1013 பொன்னெடுஞ் சடிலத் தெம்பிரான் நல்லூர்ப்
புராணமாக் காதைசெந் தமிழாற்
கன்னலுந் தேனு மமுதமும் மதுரக்
கனியும்போற் கட்டுரை செய்தான்
பன்னுமெய்ப் புகழான் தவவணை முதல்வன்
பாரெலாம் வணங்குதென் கமலை
மன்னவன் கல்விக் கடலெனச் செழித்த
வைத்திய நாததே சிகனே 27

அமர்நீதி நாயனர் சருக்கம் முற்றும்.

---

[இப்புராணத்தின் அமைப்பும் சுவையும்பற்றிப் பாராட்டுச் செய்யுள்]

(கட்டளைக்கலித்துறை)

1014 தவிப்பார்க் குறுதுணை வன்மீக நாதன்
தனய னிந்த
புவிப்பாற் புலவன் வைத்திய நாதன்
புகன்ற செஞ்சொற்
கவிப்பாகந் தேவர்க் கவிப்பாகம் போலின்பம்
காட்டுங் கற்றோர்
செவிப்பாலு ளேசென்று சித்தத்தி லேநின்று
தித்திக் குமே.

நல்லூர்ப் புராணம் முற்றும்.

---

1018 தென்கமலை – திருவாரூர்.

# நல்லூர்ப் புராணச் செய்யுள்

## முதற் குறிப்பு அகரவரிசை


**அ**

அக்கமாமணி 124
அக்கினிக்கோத்திர 125
அக்கினியாதிய 125
அக்குவட்டினரும் 83
அங்கண்மாஞால 328
அங்கணன் இனைய 95
அங்கணுற்றதிறம் 81
அங்கியந்தீர்த்தம் 309
அங்கிவானவன் 127
அங்கிவேட்டுணை 251
அங்கைபோலுதரம் 217
அஞ்சலஞ்சல் 211
அஞ்சிலோதிய 212
அடியர்கண்மழை 58
அடியனேன்கண்ட 97
அடியனேனுய்ய 329
அடுத்தகுஞ்சரம் 212
அடுத்த செந்தளிர் 17
அடுத்திடும் பன்னகேசன் 73
அடுபகையதனுற் 27
அடை 286
அடைதலோடுமச் 236
அண்டகூடத்தை 76
அண்டகூடமலை 79
அண்டகோடிகளை 73
அண்ணல்நாமம் 214
அண்ணல் யானையின் 255
அண்ணலவ்வரங்கள் 98
அண்ணலன்புறு 15
அண்ணலாரடியா 328
அண்ணலார்தமக் 253
அணுவிற்கணுவாய் 94
அணுவினுக்கணுவாய் 151
அத்தகைத்தேனு 162
அத்தகைப்பெருமையா 100
அத்தகைநகரின 268
அத்தகைவளங்கொள் 34
அத்தலத்தினைச் 235
அத்திறம்நோக்கி 158
அத்திறம்மேரு 77
அதன்மீதொரு 282
அந்தகனிருதிநாப்பண் 304
அந்தணர்த்தப்பினோர் 101
அந்தணர்தமக்கும் 288
அந்தணர்வாழிநல்லூர் 336
அந்தணரில்லமெங்கும் 41
அந்தணாளர் அருமறை 324
அந்தணாளர்கள் 7
அந்தணாளர்தம் 180
அந்தணாளருக்களவி 255
அந்தணாளரை 240
அந்தணூர் 325
அந்நாள்முதல் 182
அந்தமாக்கதை 66
அந்தமூலவான்பலத் 252
அந்தமைந்தரா 253
அந்நகரின்ஒரு 181
அப்பதிக்குநீ 145
அப்பெருந்தீர்த்தத் 276
அம்புயப்பொகுட் 122
அம்பொற்சேவடி 263
அம்பொன்மேரு 206

| | |
|---|---|
| அமரும் ஏல்வையின் | 59 |
| அமிழ்துசூற்கொண்ட | 112 |
| அமைதலுமன்னே | 75 |
| அரசன்சில்பகற் | 256 |
| அரசனுற்றலும் | 255 |
| அரத்தமுட்டியதென | 16 |
| அரவவேந்தையும் | 80 |
| அரவுபூண்டருள் | 183 |
| அரவுபூண்டவன் | 99 |
| அரியணைதன்மேல் | 227 |
| அரியமாதவரண்ணல் | 247 |
| அரியமாதவராசி | 207 |
| அருச்சனைபுரியும் | 293 |
| அருணமால்வரை | 173 |
| அருந்தவத்தினீரா | 319 |
| அரும்பெறற்சிறு | 169 |
| அரும்பெறற்சேயொ | 134 |
| அருவியெற்றியும் | 206 |
| அலகில்கேள்வி | 260 |
| அலகில்வேத | 114 |
| அலைத்தலும்மேரு | 78 |
| அவ்வகையதீவினை | 284 |
| அவமதித்திடலும் | 156 |
| அவற்றின்மூன்ற | 210 |
| அவனிமீதிலுற் | 187 |
| அழிவிலாதவலி | 11 |
| அழிவிலாவட | 172 |
| அழுதுபாற்கடற் | 71 |
| அள்ளிருட்படல | 128 |
| அள்ளிவாரித்தன் | 112 |
| அளக்கருண்ட | 260 |
| அளவிலாப்பெருமை | 24 |
| அளவிலாமாயை | 331 |
| அளிபயின்றதி | 15 |
| அறங்கள் எண்ணான்கு | 52 |
| அறங்கெடுப்பவன் | 240 |
| அறஞ்செய்கிற்பவும் | 86 |
| அறத்தின்வேலியாய் | 248 |
| அறிதொறும்பெறல் | 54 |
| அறிந்தியற்றிய | 142 |
| அன்பினலவ் | 214 |
| அன்பினற்புரிந்த | 200 |
| அன்புகூரவ | 186 |
| அன்புமீக்கொள | 93 |
| அன்னகரதன்கண் | 230 |
| அன்னகாலையி | 147 |
| அன்னகுன்றத் | 82 |
| அன்னதன்மையி | 185 |
| அன்னதாகிய | 170 |
| அன்னதீமையின் | 140 |
| அன்னபரிசா | 234 |
| அன்னம்விற்கும் | 239 |
| அன்னவண்ண | 323 |
| அன்னவர்க்காணி | 106 |
| அன்னவள்தானும் | 222 |
| அன்னவன்காத | 315 |
| அன்னவாச்சிரம | 137 |
| அன்னவேந்தன | 319 |
| அன்றுதொட்டுல | 154 |
| அனையகுன்றமர் | 82 |
| அனையதன்மைய | 13 |
| அனையதன்மையை | 245 |
| அனையதீமை | 167 |
| அனையமாதவத் | 66 |
| அனையவாகிய | 55 |


## ஆ


| | |
|---|---|
| ஆகையாற்றலம் | 185 |
| ஆங்கதன்நடுவில் | 100 |
| ஆசில்வண்டமிழ் | 8 |
| ஆடிப்பூராடந்தன் | 305 |
| ஆடியத்திசையினுற்ற | 310 |
| ஆடும்நல்லவரா | 144 |
| ஆடுவார்சிலர் | 58 |
| ஆண்டுதோறும் | 265 |
| ஆதலாலத்தல | 108 |
| ஆதலாலவ்வழி | 241 |

| | |
|---|---|
| ஆதலாலரனம்பு | 115 |
| ஆதலாலிணைய | 271 |
| ஆதலாலுளம் | 88 |
| ஆதலாலுனதா | 20 |
| ஆதலாற்பரன் | 264 |
| ஆதலான் நல்லூர் | 334 |
| ஆதலான்மகவ | 251 |
| ஆதலானவை | 148 |
| ஆதியாதிரை | 242 |
| ஆதியூழிதனில் | 108 |
| ஆமினேயியடுத் | 12 |
| ஆயிரம்பகுவாய் | 75 |
| ஆயினுமண்டவா | 294 |
| ஆயினுமையநின் | 158 |
| ஆயினுமையநின்பே | 200 |
| ஆயுள்விஞ்சை | 85 |
| ஆரமாமுலையங் | 38 |
| ஆரல்பண்டிதன் | 118 |
| ஆலயத்தினை | 148 |
| ஆலயத்தெய்தி | 145 |
| ஆலுமாதரார் | 80 |
| ஆலைபாயுநர் | 80 |
| ஆவினைத்தெய்வ | 142 |
| ஆள்வினைக்குய் | 41 |
| ஆளிமொய்ம்பினு | 286 |
| ஆளியேற்றின | 138 |
| ஆற்றுமேற்பாசன | 240 |
| ஆறும் நீள் கடலும் | 192 |
| ஆனினங்களுக் | 241 |
| ஆனினுக்கழிவு | 102 |
| ஆனைகண்டிலமென | 208 |

## இ

| | |
|---|---|
| இக்கதைக்கணெ | 84 |
| இக்கதைபடிப்பவர் | 109 |
| இக்கதைபடிப்போர் | 154 |
| இசைத்தலும் அனந்தன் | 75 |
| இட்டபோரமித் | 88 |
| இடபத்திங்களின் | 259 |
| இடபமாதத்தினில் | 105 |
| இடபமீதுறப் | 57 |
| இடுதல்நோக்கி | 261 |
| இடுதலும் சமனி | 333 |
| இண்டையும் சூட்டும் | 47 |
| இத்தகைச்சாப | 196 |
| இத்தகைவரங்கள் | 300 |
| இத்தலத்துறையும் | 97 |
| இத்தலத்தைந்தெழுத் | 124 |
| இத்திருநல்லூர் | 48 |
| இத்திறங்கள்பல | 187 |
| இத்திறம்பழிச்சி | 95 |
| இத்திறம்பற்பல | 122 |
| இத்திறம்பெறற் | 244 |
| இந்திரத்திசை | 100 |
| இந்திரன்செய்சிறப் | 328 |
| இப்பரிசுகந்து | 334 |
| இப்பரிசெந்தஞான் | 96 |
| இப்பெருங்கதைகே | 266 |
| இப்பெருங்கதையை | 129 |
| இப்பெரும்பதியி | 129 |
| இமையமால்வரை | 157 |
| இமையவர்கோயி | 42 |
| இயக்கர்கின்னரர் | 244 |
| இயம்புசித்தவி | 142 |
| இயம்புமிக்காதை | 98 |
| இருநிதியைந்தரு | 182 |
| இருவினைவெண் | 1 |
| இல்லத்தங்கி | 289 |
| இல்வாழ்க்கைநிலை | 131 |
| இழிவசிற்சில | 88 |
| இளைக்குநுண்ணுசு | 38 |
| இறங்கவேற்றுஞ் | 79 |
| இன்பமெய்துவ | 87 |
| இன்றுநீசெய்யுதவி | 321 |
| இன்றுநீவரயான் | 249 |
| இன்னணந்தேவ | 280 |
| இன்னதன்மைநிய | 149 |

இன்னதன்மை இமையவர் 113
இன்னதன்மைமலய 189
இன்னதன்மைமுனி 12
இன்னதன்மையினை 189
இன்னதொன்மை 71
இன்னநல்வளம் 18
இன்னநீள்வளம் 48
இன்னபேரழகு 218
இன்னவாறெம்பிரான் 127
இன்னன துதிகள் 152
இன்னனதுதிகள்கூறி 119
இன்னனதுதிகள் 300
இன்னன பலவும் 200
இன்னனவரங்கள் 288
இனையகாதையை 188
இனைய நன்னல 249
இனையமாக்கதை 204
இனையவண்ணம் 212

ஈ

ஈசானதீர்த்தமாடி 311
ஈர்ந்தவெண்பனிக் 156
ஈறில்நம்மடி 64
ஈறில்போகம் 114
ஈறிலன்பர்க் 88

உ

உச்சயிச்சரவம் 207
உச்சிப்போதிடை 141
உச்சியம்போதினில் 106
உடைதிரைக்கடல் 110
உண்டிகாய்கிழங் 11
உண்ணிவின் 79
உம்பர்நாயகன் 321
உம்பர்யாவர்க்கும் 110
உயிர்த்தபாலனை 168
உரகர்கின்னரர் 92
உரியமுப்புரி 91
உருகுமந்தணனை 158
உரைத்தலுமகிழ்ச்சி 317
உரைத்தலோடும் 185
உரைத்தவிச்சரிதம் 296
உரைத்திடுமித் 312
உரைபெறுகாந்த 215
உலகநன்னடை 68
உலகெலாம்படை 2
உலகமுன்றையும் 59
உலகிலுள்ளதீர் 182
உழவர்சும்மையும் 82
உழவரோதையும் 80
உழுந்துந்தேனும் 289
உற்றபிண்டத்தை 264
உற்றமாதவத் 175
உற்றமாமுனியை 278
உற்றவர்பொன்னி 298
உற்றவாதிரைநா 245
உற்றுநேசம் 147
உறுதியக்கினி 256
உறுதியாவு 114
உறுபசிஓவாப் 27
உன்னிவிண்ணே 79

ஊ

ஊழிஞெலிவ்வா 224
ஊறிலாவளம் 324
ஊன்கவைத்துணும் 64

எ

எக்கதியிற்புக்கு 5
எக்காலத்தினும் 6
எங்கணையகனை 191
எங்கள்நாயகனே 118
எண்டருசிகரத் 87
எண்டிசாமுகத் 88

எண்டிசையுலக 161
எண்டிசைவளாகத் 302
எண்ணலார்முடி 248
எண்ணிருதிறத்த 51
எண்ணில்வந்தியர் 208
எண்ணிளைப்பெய்த 195
எண்வகைச்சித்தியும் 128
எத்தகைக்கால 106
எத்தகைத்தேவரும் 129
எத்திறத்தும் 190
எத்துணைப்பிணியும் 311
எந்தைஎம்பிரான் 179
எந்தைதோன்றலும் 117
எந்தைநல்லருளா 261
எந்தைநின்வடிவ 97
எந்தையாரடியார் 328
எந்தையெம்பெரு 229
எந்தைவீதிவிட 325
எம்பிரான்சன்னிதி 99
எய்தியோரயிதம் 239
எய்திவானவர் 116
எருமைப்போத்துடன் 32
எவராலும்செயற் 6
எழுத்தைஞ்ஞாற்றி 306
எழுதலோடும் 218
எழுந்தனன்புழுங்கி 78
எழுந்தழுந்தியும் 171
எழுந்துதென்திசை 261
எழுவகைமுனிவர் 157
என்மதிக்கிசைந்த 58
என்றதுமினமையோர் 292
என்றலுஞ்சினந்து 330
என்றலுஞ்செங்கண் 294
என்றலும்அவைக 202
என்றலுமுறுவல் 195
என்றவன்பகர 287
என்றவனியம்ப 279
என்றவனிரங்க 158
என்றுகட்டுரை 224
என்றுகூறலும் 60
என்றுபின்னுமினி 141
என்றுமாக்கடல் 185
என்றுமீளவும் 176
என்றுமுக்கனி 65
என்னகூறிய 209
என்னநாரதன் 250
என்னநான்முகன் 114
என்னமாதவச் 21
என்னவன்னவ 148
என்னவாங்கவள் 179
என்னவிண்ணோ 320
என்னையீன்றசெங் 198
என்னையீன்றமு 115

ஏ

ஏகிச்சண்பக 206
ஏய்ந்தகாதலால் 86
ஏற்றல்விதியே 186
ஏற்றவனும்அவ் 188
ஏற்றுவெம்பனை 111
ஏனையகோணத்தின் 304

ஐ

ஐங்கரத்தினேன் 91
ஐங்கரத்தொரு 117
ஐந்தருநீழலின் 127
ஐந்துவண்ணமா 252
ஐப்பசித்திங்கள் 307
ஐயன்எய்திய 244
ஐயனைந்தெழுத் 265
ஐவகைவண்ணமாகி 201

ஒ

ஒப்பதிங்குளதே 382
ஒப்பரும்பஞ்சி 120
ஒருகணமித்தலத் 126
ஒருவருக்கொருவர் 193
ஒருவருக்கொருவர் 222
ஒருவழிப்பட்டே 98

ஒழுக்கமோம்பும் 63
ஒழுகுசெய்யதே 70
ஒழுகுபொற்கொடி 216
ஒளிக்கவின்பெறு 16

ஓ

ஓகரைவகைகள் 48
ஓடைகூடபம்ஒலி 189
ஓதலோடுமுறு 210
ஓதவேண்டுமங் 115
ஓதுமங்நகர் 21
ஓதுவேதங்க 42

க

கங்கைகாளிந்தி 28
கங்கைநெடும்புனல் 2
கங்கைமுதலாய 288
கங்கைவந்திழி 171
கங்கைவாழ்சடை 149
கஞ்சமாமலர்க் 89
கடல்சுற்றிய 289
கடவுளர்க்கமுத 85
கடவுளுண்டெனக் 62
கண்டலம்போது 191
கண்டவத்தட 198
கண்டவர்வெருக் 150
கண்டுகும்பமுனி 140
கண்டுசேவித் 245
கணங்களாகிக் 188
கணங்கொள் 188
கணிப்பிலின்னன 59
கதங்கடிந்தவர் 64
கதிர்கொள்மாமணி 15
கர்தனத்தியுங் 126
கயலுற்றேடரி 29
கரதலத்திருக்குங் 329
கரிபொய்த்தாய் 196
கருங்கடலாடை 74
கருங்கண்வேலினை 223
கரும்புஞ்செந்நெலும் 325
கரும்புமென்றதை 117
கலிகொள்வண் 31
கவுடதேசத்தோர் 288
கழுகுருவடைந்து 316
கள்ளுலாமலர் 68
கற்பகச்செழுந் 112
கற்பகச்செழு 210
கற்பமொன்றுகயிலை 246
கற்பின்மிக்க 61
கற்றவர்கேட்போ 334
கன்மபேதத்திறற் 124
கன்னலுங்காய் 89
கன்னிமாதத் 306
கன்னியந்தடத் 258
கன்னியம்பருவ 175
கன்னியர்நூற்ற 46

கா

காசிபன்கும்ப 118
காசியிற்றமது 126
காசியேயனைத்து 285
காசியைங்கரன் 149
காடுகொள்வன 17
காண்டலும்வணங் 284
காணிற்காணருஞ் 173
காதளந்துக 213
காமநீள்கனிச்சி 228
காயும்வெங்கலி 19
காலனைக்காய்ந்த 299
காழிமாநகர் 178
காளகண்டமு 128
கானலங்கைதை 203
கானலம்புசெங் 31
கானவர்குலக் 288

கு

குங்குமக்கலவை 47
குஞ்சராரணியம் 22
குட்டரோகத்திற் 311
குடங்கையினடக் 159

| | |
|---|---|
| குடம்புரைசெருத்தல் | 49 |
| குடம்புரையும்செரு | 134 |
| குண்டமொன்றிற் | 87 |
| குண்டுநீர்ச்சுனை | 189 |
| குணங்களைந்துடன் | 69 |
| குணதிசையதிற் | 303 |
| குத்தலும்பிரம | 316 |
| குந்தியித்திறங் | 169 |
| கும்பமாமுனி | 277 |
| குய்யர்சாரணர் | 112 |
| குரம்பிற்காந்துவ | 32 |
| குரவம்பாடலம் | 57 |
| குரவன்கூறிய | 175 |
| குரவன்மைந்தனுற் | 171 |
| குருதிகொப்பளி | 111 |
| குலவுவான்முடி | 31 |
| குறுமுனியென்று | 164 |
| குறளையோடுபய | 63 |

கூ

| | |
|---|---|
| கூர்த்தவாதர | 220 |
| கூற்றுயிர்குடித்த | 77 |
| கூற்றெனவுருத் | 78 |
| கூறலுங்கண்டற் | 196 |
| கூறலோடுங்குழ | 184 |
| கூறலோடுங்குறி | 116 |
| கூறுகூறின | 36 |
| கூறுமிக்கதை | 190 |
| கூறுமிக்கதைசொல் | 287 |

கொ

| | |
|---|---|
| கொடிவிடுபா | 133 |
| கொடுத்தவன்விடுப்ப | 228 |
| கொண்டலைத் | 36 |
| கொண்டவன்நம | 197 |
| கொண்டவன்றரு | 192 |
| கொந்தவிழ்ந் | 297 |
| கொந்துலாமலர் | 28 |
| கொம்பெனநுடங் | 48 |
| கொழுங்கதிர் | 25 |
| கொள்ளுகென்று | 321 |
| கொற்பயிலும் | 4 |

கோ

| | |
|---|---|
| கோயிலெய்திக் | 242 |
| கோலுநீர்த்தீர் | 52 |
| கோவணமொளித்த | 330 |

ச

| | |
|---|---|
| சங்கமேந்திய | 14 |
| சங்கமேவுதலாற் | 28 |
| சங்கராசியும் | 179 |
| சங்குசூலுலைங் | 82 |
| சண்டவாயுவின் | 115 |
| சண்டவாயுவும் | 80 |
| சத்தகோடிமகா | 121 |
| சத்தசாகரந்தன | 252 |
| சதுமறைதொகுத் | 298 |
| சந்தநீடுவ | 28 |
| சந்தமார்காவிரி | 128 |
| சந்தமோடுதமிழ் | 187 |
| சந்தனக்குறடும் | 22 |
| சந்திரகாந்த | 89 |
| சம்புத்தீவில் | 65 |

சா

| | |
|---|---|
| சாந்தம்வீசி | 205 |
| சாந்திராயண | 50 |
| சார்ந்தகுதனை | 18 |
| சார்ந்துமற்றதின் | 172 |
| சார்ந்துமன்னவன் | 254 |
| சாலநம்முடை | 62 |
| சாற்றுநான்மறை | 148 |
| சாற்றுமச்சுந்தர | 143 |
| சாற்றுமிக்கதை | 326 |

சி

| | |
|---|---|
| சிந்தர்சாரணர் | 148 |
| சிந்துவெங்கதிர் | 250 |

சிந்தையின்புற 176
சிறந்தவான்பசி 140
சிறியவர்பிழை 279

சீ

சீதமாமதி 14
சீலம்வாய்மை 113
சீலமாதவத்தோன் 272
சீற்றமுற்றெழுந் 295
சீற்றமுற்றெழு 320
சீற்றமோடயி 182

சு

சுந்தரகிரி 267
சுந்தரநாதர்க் 44
சுந்தரநாதர்வைகும் 50
சுரபிகோடிகள் 256
சுரர்க்கமுதளித்த 38
சுருதிபாடல்செய் 69
சுழிக்குந்தெண் 143

சூ

சூதமாதவனை 335
சூதமுனிவரன் 7

செ

செங்கண்மாலருளி 290
செஞ்சடாமவுலி 160
செப்பிவேந்தனும் 256
செப்புமித்தீர்த்த 318
செம்பொன்மால்வரை 161
செம்பொற்கோயி 325
செம்பொன்வள்ள 257
செய்தநன்றிமறந் 61
செய்தநன்றியறி 68
செய்யகோலினன் 247
செய்யதாமரை 90
செய்யதேனுடன் 141
செய்யமால்வரை 21
செய்யுபூங்கல 293
செருவவாளி 258
செல்லுமப்பிலத்தின் 226
செவிலியர்க்குரை 226
செற்றம்நீங்கிய 9
செற்றமில்லது 13
சென்றபின்னவள் 177
சென்றவர்புனலி 330
சென்றவாதுவர் 208
சென்றனன்பருதி 226
சென்றுவேந்தனத் 320
சென்னியினெற்றி 125
சென்னியைந்து 151

சே

சேணிடைச்சுந்தர 126
சேணிடைச்சிகரம் 220
சேர்தலோடுமச் 209
சேர்ந்துமுக்கணன் 89

சை

சையம்யாவைக் 118
சைமெனப்பணை 131

சொ

சொல்லுமாறுதொழு 145
சொல்லுமித்தீர் 305
சொற்றஇன்ன 62
சொற்றலுங்கூற்று 270
சொற்றலுநெட்டு 135
சொற்றவத்தடங் 144
சொற்றவத்தீர்க் 267
சொற்றவிக்கதை 84
சொற்றவிக்காதை 281
சொற்றவைகலிற் 266
சொன்னவிக்கதை 214

சோ

சோணமாநதி 254

சோர்ச்சிபார்த்து 242
சோருநீர்அருவி 44
சோலைசூழ்தரு 187

ஞா

ஞாயிருட்சியின் 102
ஞாளிமுத்தமிழ் 146

த

தக்கணாமூர்த்தி 123
தங்கடற்கிறை 188
தங்குலத்துளோர் 307
தஞ்சம்நீயெனப் 56
தடங்கொள்காவிரி 254
தண்டினுற்றமியேன் 201
தணப்பில்சுந்தர 81
தணவுதலரிய 25
தத்தம்பேரினால் 116
தந்தகோவணத் 331
தந்திபோற்றிய 264
தந்திரிநல்யாழ் 225
தம்பிரான்புக 280
தம்பிரானருளா 184
தமரவேலைதனை 70
தமிழ்மணந்தரு 146
தருமனாதிய 166
தரைமிசையலகி 303
தலவிசிட்டத்தி 145
தலவிசிட்டமும் 65
தவவினைபுரிதல் 153
தவிப்பார்க்குறு 337
தன்னையேகோவண 6

தா

தாரந்தன்னைத் 240
தாயைத்தந்தையை 61
தாவிலாவங்கவர் 107
தாழ்ந்துபோற்றுவ 87
தாளதாமரை 276

தி

திக்குநான்கினா 101
திங்கட்கண்ணி 211
திங்கண்முந்நான் 305
திங்கள்மாசு 10
திங்கள்மோலி 178
திங்களங்கொழு 236
திங்களஞ்சடில 159
திங்களும்மதியும் 77
திசைமுகனினைய 312
திருத்தமாதவர் 211
திருந்தியகல்வியும் 40
திருந்தியவிஞ்சை 121
திருப்பணிசெய்வோர் 336
திருமலைச்சொக்கி 221
திருமலைச்சொக்கிவாழி 336
திவ்வியவடிவங் 332
திறல்கொள்மன் 323

தீ

தீர்க்கதுண்ட 263
தீர்த்தநீர்வாவி 45
தீற்றுவெண்சுதை 36

து

துங்கவாரிதி 19
துறந்தமேலவர் 62
துன்னியஇடப 296
துனிவின்மெய் 20
துனிவுதீர்க்கு 147

தூ

தூசுநல்லனகள் 46
தூண்டுவாம்பரி 165
தூணமொன்றெழு 194
தூமலர்மழை 37
தூயகோவணத்தின் 332

தெ

தெண்டிரைக்கடல் 186

தெரித்தவிக்கதை 246
தெள்ளுபூந்தரங்கம் 23
தென்புலத்தவர் 238
தென்புலத்தவரை 51
தென்றலஞ்சிறு 29
தென்றிசைநுனி 103

தே

தேசுடைப்பசும் 278
தேவகோட்டம் 240
தேவதுந்துமி 92
தேவபாடையிற் 84
தேவர்கின்னரர் 83
தேவர்சாரணர் 57
தேவனைக்கொடி 265
தேன்கனூறிய 31
தேன்முகத்த 14

தொ

தொடங்குகன்ம 188
தொடுத்ததேன் 158

தோ

தோகைபங்கினன் 69
தோகையன்னவள் 178
தோட்டிளம்பூ 3
தோலடிப்பவளச் 194
தோற்றமேழென 87
தோன்றலுமங் 152
தோன்றலேயுமது 163
தோன்றிநிற்றலு 218
தோன்றிநின்ற 148

ந

நக்கனரருள் 10
நங்கைகுந்திநல் 174
நங்கைமாரோதி 38
நச்சியாதரவா 296
நஞ்சராவணை 283
நண்ணுமோர்தலம் 65
நம்பன்பஞ்சநத 146
நம்பனார்தமை 56
நம்பனையருச்சித் 224
நல்லசொற்பொருள் 8
நலஞ்செய்கின்ற 82
நலஞ்செயும்நல் 52
நலந்தருகாசி 285
நவமணிமய 96
நற்றவத்தினீர் 21
நறவுமிழ்சோலை 335
நன்றுநன்றுநீர் 12
நன்னயங்கள்பல 244
நனிபெயல்பெயல் 26

நா

நாகர்தம்முலகிற் 225
நாகிளம்பிறை 205
நாடகக்கணிகை 48
நாதன்திவ்விய 243
நாந்தகத்திறை 222
நாரணன்பகர்ந்த 298
நாரதன்செல 211
நாரதனுமவ்வுரை 284
நாலுதிக்கெவரும் 45
நாவலஞ்செழுந்தீவு 81
நாவலம்பொன் 229
நாவின்பாடலும் 189
நாளவனசத்திரு 232
நாளைமாசிமாமகம் 176

நி

நியமமுற்றி 116
நிரந்தரமவுணன் 290
நிருதியின்நாக 303
நிரையவுலகது 187
நிலஞ்செய்மாதவ 20
நிலத்துவாலூன்றி 76
நிலம்புகழ்பொன்னி 284

| | |
|---|---|
| நிற்றலுங்கமலப் | 198 |
| நிற்றலுங்கும்ப | 162 |
| நிற்றலும்ஏறும் | 333 |
| நிற்றலுமவனை | 192 |

நீ

| | |
|---|---|
| நீங்கிமூன்று | 243 |
| நீங்கியந்தணர் | 13 |
| நீடும்பாரில் | 190 |
| நீதியான்முற்று | 128 |
| நீபமல்கியநீள் | 69 |
| நீர்த்தடம்பணை | 34 |

நே

| | |
|---|---|
| நேசமுற்றுயர் | 259 |
| நேர்ந்தபின்னர்க் | 135 |

நோ

| | |
|---|---|
| நோக்கியங்கண் | 248 |

ப

| | |
|---|---|
| பகைத்தனன்தருக்கி | 315 |
| பங்கயத்தவிசிலி | 314 |
| பங்கயத்தவிசின்மேய | 155 |
| பங்கயத்தவிசின்மேலோ | 198 |
| பச்சிளவேய்போற் | 216 |
| பஞ்சமுத்தினும் | 10 |
| படர்ந்துசென்று | 263 |
| படித்தவிச்சரிதந் | 288 |
| படுங்குடிலதனுட் | 270 |
| படைப்புப்பூண்டுழல் | 86 |
| பண்டங்கள்பகர | 271 |
| பண்டுமேவியபிரம | 205 |
| பண்டைச்சதுர்மறை | 281 |
| பண்டையொரு | 130 |
| பண்பயிலுமேழிசை | 130 |
| பத்திசெய்மணிப் | 39 |
| பத்திவந்துபணைத்தெழ | 67 |
| பரசிவனருளின் | 292 |
| பரம்பரன்றனை | 131 |
| பரமனுதிரைநன் | 268 |
| பரவுகுந்திதன் | 68 |
| பரவுதீம்புனற் | 284 |
| பரவுமதடம் | 144 |
| பரவுவெண்காட்டின் | 275 |
| பரவைமன்னவன் | 186 |
| பரவையேழையும் | 165 |
| பருகுவாரிற்பரன் | 11 |
| பருவமாயிரங் | 89 |
| பருவமாறுந்தம் | 16 |
| பரையாகி | 2 |
| பலிகவர்ந்துபட | 264 |
| பலியைவீழ்த்து | 262 |
| பவுடிகோத்திரம் | 55 |
| பழங்கொள்பண்டி | 38 |
| பள்ளநீர்ப்புணரி | 220 |
| பள்ளநோக்கியபுனல் | 20 |
| பளிங்குபோழ்ந்தடுக்கிய | 38 |
| பற்பலபருவ | 44 |
| பறத்தல்செய்கலா | 17 |
| பன்னகமெடுத்த | 232 |
| பன்னசாலை | 260 |
| பனிச்செழுந்துணர் | 90 |

பா

| | |
|---|---|
| பாசவேரறியும் | 19 |
| பாசிழைச்சுமதி | 218 |
| பாசிழைப்பரவை | 120 |
| பாட்டளிதுதைந்தன | 37 |
| பாடினன்மறை | 93 |
| பாதிமாமதி | 54 |
| பரந்தளாபரணம் | 327 |
| பாயிருள்பருகி | 227 |
| பாரும்விண்ணும் | 9 |
| பாலலோசனனே | 150 |
| பாலின்மாநதி | 242 |

| | |
|---|---|
| பாவகன்றிசை | 268 |
| பாவபுண்ணிய | 60 |
| பாளைவாய்க்கமுகு | 24 |

பி

| | |
|---|---|
| பிஞ்சுமாமதியம் | 119 |
| பிடுங்கலோடும் | 80 |
| பிரமதீர்த்தர் | 108 |
| பிறப்பவாயிரம் | 88 |
| பிறமனைநயந்த | 310 |
| பிறர்தொடுத்த | 241 |
| பிறர்மனைவிழைந் | 315 |
| பிறன்பழிகூறும் | 202 |
| பிறைமுடித்த | 258 |
| பின்னர்வேட்டுவ | 287 |
| பின்னையன்னவன் | 255 |

பு

| | |
|---|---|
| புக்கநான்முகத் | 197 |
| புகுதலோடுந்தன் | 180 |
| புடைதவழ்மதி | 89 |
| புத்திரன்நிமித்தம் | 233 |
| புந்தியாரப் | 141 |
| புயலெனக்கறுத்த | 216 |
| புரிந்ததீவினை | 235 |
| புருவநாப்பணிற் | 11 |
| புல்லிதாய | 213 |
| புல்லியகருகும் | 317 |
| புள்ளுலாவுமலர் | 107 |
| புற்றிடங்கொண்ட | 322 |
| புனமயிலாடல் | 218 |

பூ

| | |
|---|---|
| பூசநாளுறும் | 252 |
| பூசல்வண்டுமு | 38 |
| பூசுவெண்ணீறு | 160 |
| பூத்தகோங்கமும் | 16 |
| பூதிகண்டிகை | 125 |
| பூமலர்ந்தபுது | 322 |
| பூரணப்பொருள | 118 |
| பூரித்தமுனியை | 162 |
| பூவைவண்ணன் | 67 |

பெ

| | |
|---|---|
| பெண்ணலங் | 165 |
| பெற்றதாமரை | 205 |
| பெற்றபின்னரென் | 167 |
| பெற்றிகூர்மாகத் | 202 |

பே

| | |
|---|---|
| பேதையேன்மதித் | 168 |
| பேறுபூத்தபிற | 10 |

பொ

| | |
|---|---|
| பொங்குநீடொளி | 111 |
| பொங்குநீர்ப்பொன்னி | 327 |
| பொருவேலைக்கடல் | 5 |
| பொற்றராசனைய | 217 |
| பொன்விளைகழனி | 229 |
| பொன்றிரண்டனை | 154 |
| பொன்னந்தானை | 257 |
| பொன்னலரிதழி | 119 |
| பொன்னித்தென் | 82 |
| பொன்னிமாநதிக் | 279 |
| பொன்னிமாநதி | 251 |
| பொன்னுலாங்கொ | 68 |
| பொன்னுலாம்நம் | 263 |
| பொன்னெடுஞ் | 337 |

போ

| | |
|---|---|
| போதுலாவும் | 68 |
| போந்தவேட்டுவ | 236 |
| போற்றிநிற்றலும் | 12 |
| போற்றிவந்திடும் | 113 |
| போற்றுகேதாரத் | 273 |
| போற்றுநற்றரு | 25 |

ம

மக்களில்லாத 309
மகதயாழ்முனி 70
மகரத்திங்களின் 258
மகிழடியிற்றவம் 113
மங்கலப்பெருக் 33
மங்கைபங்குடைய 299
மங்கைபாகற் 212
மட்டகலுந் 279
மடல்விரிந்தலர் 17
மடுத்துநோக்கிய 29
மண்டதின்தூம 62
மணக்கும்ஓதியர் 30
மணந்துவாழ்வன 87
மணமலிச்சாலை 287
மணவினைமுடித்த 228
மணவினைமுற்றிய 230
மதந்தவிர்ந்தனை 209
மதுரையிற்பொற்ற 275
மந்தரப்பொருப்பை 74
மந்தராசலம 90
மந்தாரநறுந் 3
மந்திரத்தொகை 167
மரணகாலத்தினும் 285
மருங்குவீழ்திரை 36
மருவுதையமாவாசி 265
மலர்மிசையுறை 268
மற்புயத்திகல் 320
மறிகடற்கிறை 127
மறுவில்வெண் 14
மறுவிலாமதி 174
மறையிற்புகல் 290
மறையொலிவளமனை 40
மன்னன்சொற்றலும் 321
மன்னுஞ்சிவக்குறி 282
மனமொழிமெய்கள் 53

மா

மாக்கடற்புவி 210
மாகமாதத்தினில் 104
மாகயிலாயநீள் 123
மாங்குயிற்குலம் 29
மாசித்திங்களின் 188
மாசிநற்றிங் 308
மாசிநன்மகத் 309
மாதபோதனர் 288
மாதமொன்றவன் 235
மாதராள்மணி 181
மாதவர்குறுமுனி 155
மார்கழிமதி 308
மாளவதேச 314
மாளவமதனிற் 274
மானினங்களும் 18
மானுடச்சிவ 142

மி

மிக்ககார்த்திகை 307
மிக்கநீரிலா 251
மிக்கவித்தீர்த்த 294

மீ

மீண்டுதன்பதி 236

மு

முட்டுமாறின்றி 66
முண்டகத்தவிசி 272
முண்டகாசனன் 68
முண்டகாசனன்முறை 89
முத்தநீள்வடம் 262
முத்தமணிமுக 133
முத்தமாலையும் 257
முத்தவெண்மணி 34
முத்திநன்முனி 104
முந்தைநாளின் 66
முப்புரிநூலினோர் 104
மும்முறைவலங் 286
முரணின்மிக்க 70
முருகனூர்தி 188
முள்ளரையமுரலி 4
முன்னராற்றிய 241

மூ

மூர்க்கரேனு 245
மூலகாரணனும் 156
மூலகாரணனே 150
மூலவான்பல 253
மூவாமுதலே 95
மூன்றுநாளவண் 324

மே

மேடமாதத்தினில் 105
மேதகுசிறப்பின் 49
மேயநம்மாற்றலும் 121
மேருமால்வரைச் 35
மேருமால்வரைப் 91
மேலைநாட்புரிந்த 277
மேவிநான்முகன் 88
மேவியங்கவ 221
மேவுகார்த்திகை 280

மை

மைக்கட்கொடி 93
மைந்தர்நீபெறும் 250
மைந்தரைவாக்கும் 181
மைந்துடையவுணர் 297
மையல்மும்மத 206

மொ

மொழிந்தவிக்கதை 318

வ

வச்சிரமிழைத்தன 37
வஞ்சுளேசுர 275
வடாதுகேதாரம் 273
வண்டுழாயணி 72
வண்டுமுகோதை 42
வண்ணமைந்து 151
வண்ணவன்பவள 284
வந்தசூதமாமுனி 19
வந்தடைந்தருள் 68
வந்தமால்பிரம 292
வந்தயாழ்முனி 248
வந்தவ்வேட்டுவத் 235
வந்தவன்பிரம 160
வந்தவனுங்கு 269
வந்துநீதமியனே 163
வந்துவ 'னவர் 80
வந்துவைகிய 138
வயங்கலம்புச 274
வரியுடல்நாக 215
வலங்கொண்டன்ன 144
வலம்புரித்தடக்கை 295
வழங்கலோடும் 322
வழுவில்வென்றி 140
வழுவிலாஎண்வகை 121
வள்ளலாருகந்த 385
வளப்பமார்நல்லூர் 58
வளவர்தம்பெரு 277
வளிதடவரினும் 302
வளைகடலாடை 219
வளையறையனைய 40
வன்பராய்முருடு 122
வன்னமைந்தோதி 198

வா

வாகைமாயனு 15
வாகையுந்திருவும் 286
வாசவார்குழல் 139
வாணிவானத்தில் 323
வாயுதிக்கினில் 198
வாயுவாற்றலும் 79
வாயுவேகத்தான் 81
வார்கடற்புவி 248
வாருமின்நீவிர் 194
வாலகில்லிய 128
வாலஞாயிற்றின் 147
வாளராவரசு 72
வானநாட்டின 324
வானளப்பன 28
வானினின்றும் 319

வி

விடமாரமுதா 94
விடர்பலரோடு 269
விடைநெடுங்கொடி 117
விண்ணந்தாவும் 111
விண்ணம்நீங்கி 322
விண்ணம்புவி 281
விண்ணவர்தமக்கு 301
விண்ணினுமகன்ற 41
விண்ணுலகிழிந்து 291
விண்ணுளோர்கள் 207
விதித்துமாதுநீ 177
விதுச்சிலாவட்டம் 41
விந்தவெற்பை 67
விப்பிரனுமணா 135
விம்மாவிகல் 288

விரவலர்மகுட 219
விரிகடற்கிறை 184
விரிதலைப்பசும்பொன் 278
விருச்சிகத்திங்கள்நாள் 102
விருச்சிகத்திங்களின் 124
விரும்புவெள்ளி 35
விரைகொள்தாமரை 67
விரைசெறிந்த 247
வில்லும்வாளும் 207
வில்லெயினர்தங் 232
விலகிவில்லுமிழ் 35
விழுத்தவக்கிழவோர் 110
விள்ளருஞ்சுருதி 69
விளங்கிநாளும் 187
விளங்குநீள்குடி 71
விளம்புமிக்கதை 259

வீ

வீசுசாமரை 262
வீணைத்தவமுனி 282
வீணைமாமுனி 249
வீணைமாமுனிவிடுத் 254
வீதலுஞ்சிவகண 270
வீழுமப்பலி 261
வீறுசுந்தர 84
வீறுபாத்திரத் 189
வீறுயாவும் 122

வெ

வெஞ்சரத்தின் 208
வெண்டயிர்நறு 46
வெண்ணிலாச் 108
வெம்பிணியிலா 27
வெய்யபேரிரணியன் 286
வெய்யபோரவுணன் 291
வெய்யவேனில் 9
வெள்ளவாய்க்கமலம் 112
வெள்ளவேலை 111
வெள்ளியங்கிரி 92
வெள்ளைநீற்றொளி 18
வெள்ளைநீறுதம் 64
வெள்ளையானைவிடை 214
வெள்ளையானை 262
வெற்பின்மேரு 189

வே

வேண்டுநல்லுணவு 26
வேண்டுவததுவே 300
வேதநிந்தனை 61
வேதப்பொருளாய் 94
வேதமேமுதல் 170
வேதன்றனையருள் 289
வேதனுவிமலன் 208
வேதியனும் 136
வேந்தர்தேர் 40
வேந்தனித்திறம் 249
வேரிநாண்மலர் 70
வேனில்வந்திறு 50

வை

வைகல்தோறுமவ் 186
வைகும்நாளிற் 149
வைகுமந்தமகா 82
வைதவாறுமதி 209
வையமாநதியாடி 146

ள

...ளணிமறுகலங் 52

முதற்குறிப்பு அகரவரிசை

முற்றிற்று

# நல்லூர்ப்புராணம்

## சருக்கங்களின் அகரவரிசை


| | பக்கம் |
|---|---|
| அக்கினி தீர்த்தச் சருக்கம் | 130 |
| அகத்தியர்க்கு மணவாளக் கோலங் காட்டின சருக்கம் | 155 |
| அமர்நீதிச் சருக்கம் | 327 |
| எக்கிஞுகுத்தச் சருக்கம் | 267 |
| ஐராவத சாப விமோசனச் சருக்கம் | 205 |
| கழுகு மோசனச் சருக்கம் | 314 |
| கிராத மோட்ச சருக்கம் | 238 |
| கைலாயச் சருக்கம் | 56 |
| கோபிதாரத்துவாசச் சருக்கம் | 272 |
| சங்கு கன்னச் சருக்கம் | 232 |
| சத்தசாகரம் வரவழைத்த சருக்கம் | 165 |
| சமுத்திரராசன் செப்பேசுரம் பணிந்து மீண்ட சருக்கம் | 184 |
| சுந்தராசலச் சருக்கம் | 72 |
| சுமதி காந்தனை அடைந்த சருக்கம் | 215 |
| தருமசேனச் சருக்கம் | 247 |
| தீர்க்க துண்டச் சருக்கம் | 260 |
| தேவர்கள் அருச்சனை புரிந்த சருக்கம் | 298 |
| நைமிசாரண்யச் சருக்கம் | 9 |
| பஞ்சாக்கரச் சருக்கம் | 110 |
| பாயிரச் சருக்கம் | 1 |
| பிரமதீர்த்தச் சருக்கம் | 99 |
| பிரமதேவர் அருச்சனை புரிந்த சருக்கம் | 86 |
| பிரமதேவர் நாரதர்க்குத் தலவிசிட்ட முரைத்த சருக்கம் | 281 |
| பிரமதேவர் நாரதர்க்குத் தீர்த்த விசிட்ட முரைத்த சருக்கம் | 302 |
| பிரமதேவர் வரம்பெற்ற சருக்கம் | 191 |
| மாயவனருச்சனைச் சருக்கம் | 289 |
| வீதிவிடங்கச் சருக்கம் | 319 |